மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)
தொலைநிலைக் கல்வி இயக்ககம்



www.mkudde.org

# எம்.காம்

## இரண்டாம் ஆண்டு




S 1094

# உயர் கணக்கியல் - தொகுதி II

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

தொலைநிலைக் கல்வி இயக்ககம்



www.mkudde.org

வணிகவியல்

# எம்.காம்.

இரண்டாம் ஆண்டு

பிரிவு – ஏ

## உயர் கணக்கியல்

தொகுதி – II

பாடம் 5–16

S 1094

© பதிப்புரிமை: தொலைநிலைக் கல்வி இயக்ககம்

**Sai Graphs - July -2012 - Copies 500**

# பாடம்—6

# கம்பெனிக் கணக்குகள்

கட்டமைப்பு

6.0அறிமுகம்

6.1 கற்றல் நோக்கங்கள்

6.2 பங்குமுதல் வெளியீடு

6.2.1. முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்தல்

6.2.2. கடன் பத்திரங்களை வெளியிடல் மற்றும் மீட்டல்

6.2.3. இலாப ஈவு – முடிவுக் கணக்குகள்

6.3. தொழில் நிறுவனத்தை வாங்குதல்

6.4. இணைப்பு, ஈர்ப்பு மற்றும் மறு அமைப்பு

6.5. உள் மறு அமைப்பு

6.6. கலைப்பு

6.7 அருஞ்சொற்கள்

6.8. தொகுத்தறிவோம்

6.9 உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

6.10. மாதிரி வினாக்கள்

## 6.0அறிமுகம்:

இன்றைய பொருளாதார வளர்ச்சியில், வரையறு பொறுப்பு உள்ள நிறுவனங்களின் பங்கு முக்கியமானவை. பேரளவு தொழில் தொடங்க, இதுவே பல முனைவோர்களுக்கு ஊக்கமளித்து பேரளவு உற்பத்திக்கு வழி வகுக்கின்றது. தொழில் அமைப்புக்களின் பரிணாம வளர்ச்சியில், தனியார்வணிகம், கூட்டாண்மை வணிகத்திற்கு அடுத்தபடியாக, நிறுவனம், வளர்ச்சியின் மூன்றாவது படியாக கருதப்படுகிறது. இதன் முக்கியம்சம்,

நிர்வாகம், மற்றும் உரிமை இரண்டும் பிரிக்கப்பட்டுள்ளதுதான். வரையறு பொறுப்பு ஒரு வரப்பிரசாதம். பேரளவு மூலதனம் திரட்ட இது உதவுகின்றது. மேலும் சாதாரண நடுத்தர மக்கள் கூட தொழிலில் முதலீடு செய்ய முடிகின்றது. இன்று, எல்லா தொலைக்காட்சி செய்திகளிலும், தமிழ்ச் செய்திகளில் கூட, பங்கு வர்த்தகம் பற்றி செய்தி சொல்லப்படுகிறது. இதற்கு உதாரணமாகும். மொத்தப் பங்குகள் சிறு சிறு துளிகளாகப் பிரிக்கப்பட்டு, பங்குகள் என அழைக்கப்பட்டு, முதலீட்டாளர்களால் வாங்கப்படுகின்றது. இந்தியாவில், இந்திய நிறுமச் சட்டம் 1956 மூலம் அனைத்து நிறுமங்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

## 6.1 கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பிரிவைப் படித்தபின்பு நீங்கள்

- பங்குகளை முனைமம், மற்றும் பங்கு பட்டியல் வெளியிடவுடம், பறிமுதல் செய்து மறு வெளியீடு செய்யும் முறைகளையும், விளக்கி அதற்கான பதிவுகளை எழுத முடியும்.
- முன்னுரிமை பங்குகளை பல்வேறு முறையில் மீட்பு செய்து அதன் பின்பு இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கவும் முடியும்.
- பல்வேறு வகையான கடன்பத்திரங்கள் வெளியீடு மற்றும் மீட்பு சம்பந்தமான கணக்குகள் தயாரிக்க முடியும்.
- வரையறுக்கப்பட்ட நிறும இறுதி கணக்குகளை தயாரிக்க முடியும்.
- நிறுமங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் ஈர்ப்பு சம்மந்தமாக, கலைக்கப்படும் நிறுமங்கள், வாங்கும் புதிய நிறுமத்தின் ஏடுகள் ஆகியவற்றில் பேரேட்டு கணக்குகள் எழுதிட முடியும்.
- அகச்சீரமைப்பு சம்மந்தமான பல்வேறு முறைகளையும், சரிக்கட்டுகளை கையாளும் முறைகளையும் புரிந்து சீரமைப்புக்குப்பின் இருப்பு நிலைக் குறிப்பைத் தயாரிக்க இயலும்.

குறிப்பு

சில பெரும் வியாபார நிறுவனங்களை நிறுவ வேண்டுமெனில் இலட்சக்கணக்கான அல்லது கோடிக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். இது போன்ற பெரும் வியாபார நிறுவனங்களைத் தனிநபரோ அல்லது சில நபர்கள் சேர்ந்து கூட்டாகவோ நிறுவுவது என்பது மிகவும் கடினமான காரியமாகும். மேலும் தனிநபர் நிறுவனங்களில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. எனவே வியாபாரத்தில் பெரும் நட்டம் ஏற்படின் தனிமனிதரே நட்டத்தை ஏற்கவேண்டிய நிலை உள்ளது. கூட்டு வணிகத்திலும் இதுபோன்ற நிலையே உள்ளது என்பதை மறுக்க முடியாது. இவ்வியாபார அமைப்புகளில் உள்ள இதுபோன்ற இடர்பாடுகளை நீக்கும் முகமாகவே சட்டத்தால் கூட்டுபங்கு கம்பெனியில் ஏதாவது நட்டம் ஏற்பட்டு அதனால் கம்பெனியின் கடனைத் தீர்க்க அதனுடைய சொத்துக்கள் போதுமானதாக இல்லை எனினும் கூட, உறுப்பினர்கள் தாங்கள் முதலீடு செய்வதாகக் கூறிய தொகையைக் காட்டிலும் அதிகமான தொகை செலுத்தும் படி கோரப்படமாட்டார்கள். அதனைத்தான் உறுப்பினர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டது எனக் கூறுகிறோம். இதனால் கம்பெனி உறுப்பினர்களின் தனிப்பட்ட சொத்து பாதுகாப்பாக உள்ளது. எனவே மூன்று வகையான தொழில் அமைப்புகளில் (தனி ஆள் வணிகம், கூட்டு வணிகம், கூட்டுப்பங்கு வணிகம்) கூட்டுப் பங்குக் கம்பெனி நவீனமானது மட்டுமல்லாது மற்ற இருவகையான தொழில் அமைப்புகளைக் காட்டிலும் பிரபலமானதாகும். முன்பு துவக்கப்பட்ட தொழில் அமைப்புகளின் குறைகளை எல்லாம் கூட்டுபங்கு கம்பெனி நிவர்த்தி செய்யப்பட்டது. மேலும் மிகப்பெரும் தொழில் அமைப்புகளை ஸ்தாபனம் செய்ய கூட்டுப் பங்கு கம்பெனிகள் அமைப்பதற்க அடிகோலியது எனக் கூறலாம். பிரிட்டனில் தோன்றிய தொழில் புரட்சிக்கு பின்பே இவ்வமைப்பானது தோன்றியது.

நம் நாட்டில் கூட்டுப் பங்குக் கம்பெனிகளை இருவழிகளில் அமைக்கலாம். அதாவது பாராளுமன்றம் அல்லது சட்டப்பேரவைகளில் தனிச்சட்டம் ஒன்றை இயற்றி அல்லது கம்பெனிச் சட்டம் 1956ன் கீழ்

பதிவு செய்வதின் மூலம் கூட்டுப் பங்குக் கம்பெனிகளை அமைக்கலாம். பெரும்பான்மையான கம்பெனிகள் இரண்டாவது முறைப்படியே அமைக்கப்படுகின்றன.

கூட்டுப்பங்குக் கம்பெனியை அமைக்க விரும்பும் நபர்கள் "அமைப்புப் பத்திரம்" என்று சொல்லக்கூடிய ஆவணம் ஒன்றை தயாரித்து அதில் கையொப்பமிடவேண்டும். அப்பத்திரத்தைப் பதிவாளரிடம் பதிவு செய்தவுடன் கம்பெனி தோன்றுகிறது. கம்பெனியின் உள்நிர்வாகத்தை முறைப்படுத்துவதற்காக "சங்க நடைமுறை விதிகள்" என்ற மற்றொரு ஆவணமும் மேற்படி நபர்களால் கையொப்பமிட்டு பதிவாளரிடம் பதிவு செய்யப்படுகிறது.

கம்பெனிப் பதிவாளர் கம்பெனிச் சான்றிதழ் ஒன்றை அளிக்கின்றார். இச்சான்றிதழே கம்பெனியின் தோற்றத்திற்கு ஆதாரமாகும். கம்பெனியின் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாயிருந்தால் கம்பெனியின் பெயருடன் "வரையறுக்கப்பட்டது" (Ltd) என்ற சொல்லையும் சேர்க்க வேண்டும். ஆனால் கலை, விஞ்ஞானம் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்துடன் கம்பெனிகள் அமைக்கப்பட்டால் வரையறுக்கப்பட்டது என்ற சொல்லை கம்பெனியின் பெயருடன் சேர்க்காமல் கூட கம்பெனியைப் பதிவு செய்யலாம். தன் நடைமுறை விதிகளால் (Articies of Association) (அ) பங்கு மாற்ற உரிமையை மறுக்கும (ஆ) உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐம்பது மிகக்கூடாது என்று வரையறுக்கும் (இ) தன் பங்குகள் அல்லது கடன் பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களை அழைப்பதைத் தடை செய்யும் கம்பெனி தனிக்கம்பெனி எனப்படும். இதர கம்பெனிகள் பொதுக்கம்பெனிகள் எனப்படும்.

கம்பெனியின் தோற்றுவிப்பாளர்கள் மட்டுமில்லாமல் பிறரும் கம்பெனியில் உறுப்பினர்கள் ஆகலாம். எடுத்துக்காட்டாக, கம்பெனியில் பங்குகள் கேட்டு மனுச் செய்பவர்களுக்கு முறைப்படி பங்குகள் ஒதுக்கப்பட்டால் அவர்கள் உறுப்பினர்களாக கருதப்படுவார்கள். மேலும்

ஏற்கனவே உறுப்பினராய் உள்ள ஒருவரிடமிருந்தும் பங்குகளை மாற்றம் செய்து பெறுவதன் மூலமும் உறுப்பினராகலாம்.

கம்பெனி என்பது சட்டத்தினால் உருவாக்கப்படுகிறது. சட்டத்தின் பார்வையில், கம்பெனி செயற்கையான தனிநபராகக் கருதப்படுகிறது. அது உறுப்பினர்களிடமிருந்து வேறுபட்டுத் தனித் தன்மையுடன் செயல்படுகிறது. ஒரு உறுப்பினர் கம்பெனியின் கடனாளியகக் கூட் இருக்கலாம். அதுபோல் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். உறுப்பினரின் இறப்பு அல்லது விலகல், நொடிப்பு கம்பெனியைப் பாதிப்பதில்லை. சட்டத்தினால் மட்டும் கம்பெனியைக் கலைக்க முடியும்.

அ) முதல் அல்லது மூலதனம்.

கம்பெனியைத் துவக்குவதற்கு முன்பாக தோற்றுவிப்பார்கள் நிதிப் பிரச்சனையைப்பற்றி சிந்திக்க வேண்டும். கம்பெனியைத் துவக்கிய பின்பு அதை நடத்துவதற்காக எவ்வளவு முதல் தேவைப்படும் என்பதையும் தோற்றுவிப்பாளர்கள் முடிவு செய்ய வேண்டும். கம்பெனி தோற்றுவிப்பதைப் பற்றி ஆராய்வதற்கும் நிறையப் பணம் தேவைப்படலாம். கம்பெனியைப் பதிவு செய்வதற்கு முன்பே இத்தொகையை தோற்றுவிப்பாளர்கள் அளிக்கின்றனா. மேலும் இயந்திரம், கட்டடம் போன்ற நிலைத்த சொத்தக்களை வாங்குவதற்கு ஏற்படும் செலவுகளையும், அமைப்புச் செலவுகளையும், கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதையே 'அசையா முதல்' (Block Capital) என்று கூறுகிறோம். இதைப்போன்றே கச்சாப் பொருள் வாங்க, திரும்பத் திரும்ப ஏற்படக்கூடிய செலவுகளைச் செலுத்துவதற்காக தேவைப்படும் 'நடைமுறை முதல்' (working Capital) தொகையையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் மதிப்பிடப்படும் தொகை, அமைப்புப் பத்திரத்திலுள்ள மூலதனச் சரத்தில் குறிக்கப்படுகிறது.

இத்தொகையே, கம்பெனியின் 'பதிவான' அல்லது 'அனுமதித்த' முதலாகக் கொள்ளப்படும். அதாவது பங்குகளை வெளியிட்டு பொது மக்களிடமிருந்து பெறும் பணம், இத்தொகையைக் காட்டிலும் அதிகம் இருக்கக் கூடாது. எனவே, அமைப்புப் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள இத்தொகையானது பதிவான முதல் (Registered Capital) அல்லது அனுமதித்த முதல் (Authorised Capital) அல்லது பெயரளவு முதல் (Nominal Capital) என்று அழைக்கப்படும்.

கம்பெனியின் முதலானது பங்குகள் என்று அழைக்கப்படும் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு கம்பெனியானது ரூ 50 லட்சத்தை முதலாகத் திரட்டவேண்டும் என நினைக்கிறது என்று கொள்வோம். அப்பொழுது, அக்கம்பெனியானது மொத்த முதலாகிய ரூ 50,00,000 யை சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கலாம். அதாவது ஒவ்வொரு பகுதியிலும் ரூ 100 இருக்குமாறு 50,000 பகுதிகளாக பிரிக்கலாம். ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாக விற்கலாம். 50,000 பகுதிகளும் விற்கப்பட்டால் ரூ. 50,00,000 கம்பெனிக்கு கிடைக்கும். அதுபோன்ற சிறுசிறு பகுதிகளே பங்குகள் என்றழைக்கப்படுகின்றன.

சட்டப்படி ஒரு கம்பெனியானது தனது சங்க நடைமுறை விதி அல்லது தகவலறிக்கையில் குறைந்த அளவு பங்கெடுப்பு (Minimum Subscription) எனக் குறிக்கப்பட்ட தொகை (நிலைத்த சொத்துக்கள் வாங்குவதற்கு, அமைப்புச் செலவுகளுக்கு மற்றும் நடைமுறை முதல்) ஒப்புதலாயிருக்க வேண்டும். மேலும், பங்குகளின் இயல்பு மதிப்பில் குறைந்தது 5% ரொக்கமாக செலுத்தப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் அனைத்தையும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள (Scheduled) வங்கி ஒன்றில் கம்பெனியின் பெயரில் செலுத்த வேண்டும். தொழில் தொடங்கச் சான்று பெறும் வரையில் இப்பணத்தை வங்கியிலிருந்து எடுக்கக் கூடாது.

சாதாரணமாக கம்பெனிகள் பங்கின் மீதான மொத்தத் தொகையையும் ஒரே நேரத்தில் செலுத்துமாறு பங்கெடுக்க ஒப்புக் கொண்டவர்களை கோருவதில்லை. கம்பெனியின் தேவைக்கேற்றபடி பங்கின் ஒரு பகுதியை தனியாக அழைக்கலாம். எடுத்துக்காட்டாக ரூ 100 மதிப்புள்ள பங்கு ஒன்றினை வாங்க வேண்டி விண்ணப்பம் செய்யும் நபர் விண்ணப்பத்துடன் ரூ20ஐ அனுப்பும்படி கோரப்படலாம். இவ்விதம் முதலில் செலுத்தப்படும் தொகையை "பங்கு விண்ணப்ப பணம்" (Share Application Money) என்று அழைக்கிறோம். பங்கு விண்ணப்ப தொகை பங்கின் இயல்பு மதிப்பில் 5% க்கும் குறைவாக இருக்கக்கூடாது.

பங்கு வேண்டி விண்ணப்பம் செய்துள்ள பொதுமக்களுக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டால் கம்பெனியிடமிருந்து பங்கு ஒதுக்குதல் கடிதம் (Share Allotment Letter) என்று சொல்லக்கூடிய கடிதம் ஒன்று அனுப்பப்படும். அக்கடிதத்தில் குறிப்பிட்ட நபருக்கு எவ்வளவு செலுத்த வேண்டும் என்ற விவரமும் குறிக்கப்பட்டிருக்கும்.

இவ்விதம் பங்கு ஒதுக்கல் கடிதம் வந்தவுடன் செலுத்தப்படும் பணத்திற்கு "பங்கு ஒதுக்கல் பணம்" (Share Allotment Money) என்று பெயர். பங்குகளின் மீது செலுத்தப்பட வேண்டிய மீதிப்பணம் பல தவைணைகளாகப் பிரிக்கப்பட்டு முதல் அழைப்பு (First Call) என்று சிறு சிறு தவணைகளாக வசூலிக்கப்படும். ஒப்பிய முதலின் ஒரு பகுதியை செலுத்துமாறு கோரப்படும் தொகை அழைக்கப்பட்ட முதல் (Called up Capital) என்று சொல்லப்படுகிறது.

ஒரு விண்ணப்பதாரருக்கு எவ்விதமான பங்கையும் ஒதுக்கமுடியாத பட்சத்தில் அவருடைய பங்கு விண்ணப்பப் பணத்தையும், அத்துடன் வருத்தக்கடிதம் (Letter of Regret) ஒன்றையும் கம்பெனி அனுப்பும்.

பிரபலமாய் உள்ள கம்பெனிகள் பங்குகளை வெளியிடும்பொழுது பொதுவாக ஒதுக்கப்பட வேண்டிய பங்குகளைக் காட்டிலும் விண்ணப்பங்கள்

அதிகம் வரும். இம்மாதிரி நிலையில் குறைந்த அளவு பங்குகள் வேண்டி விண்ணப்பித்திருப்பவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சார முறைப்படி (Pro rata) ஒதுக்கல் செய்யப்படும். அவ்விதம் அதிக பங்கு வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு குறைந்த அளவு விண்ணப்ப பணம் பெரும்பாலும் திருப்பித் தரப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அவர்கள் செலுத்த வேண்டிய பங்கு ஒதுக்கல் பணத்திலும் அழைப்புப் பணத்திலும் சரிக்கட்டப்படும்.

**ஆ) பங்குகள் (Shares)**

ஒரு கம்பெனியின் முதல் சமமான சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு சிறு பகுதியும் பங்கு என்று அழைக்கப்படுகிறது. தற்சமயம் ஒரு கம்பெனியானது இருவகையான பங்குகளை மட்டுமே வெளியிடலாம்.

அ) முன்னுரிமை அல்லது சலுகைப் பங்குகள்

ஆ) சாதரண பங்குகள்

முன்னுரிமை பங்குகளுக்கு இலாப ஈவு வழங்குவதிலும், மூலதனத்தை திருப்பித் தரும் பொழுதும் தனி உரிமை காட்டப்படுவதால் அத்தகைய பங்குளுக்குச் சலுகைப் பங்குகள் என்று பெயரிடப்பட்டுள்ளது.

மேலே கூறியுள்ள இரண்டு உரிமைகளும் ஒரு முன்னுரிமை பங்குக்கு தரப்படவில்லை எனில் அது ஒரு சாதாரணப் பங்காகவே கருதப்படும்.

சலுகை பங்குகள் அல்லாத பங்குகள் அனைத்தும் சாதரணப் பங்குகள் எனப்படும். இலாப ஈவு முன்னுரிமை பங்குதாரர்களுக்கு வழங்கியபின் சாதரணப் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும். கம்பெனியின் கலைப்பின் போது முன்னுரிமை பங்குதாரர்களுக்கு பணத்தை முதலில் திருப்பிக் கொடுத்த பிறகுதான் எஞ்சிய சாதரணப் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும்.

## 6.2 பங்குமுதல் வெளியீடு (Issue of Share Capital)

பங்குகளையும் கடன் பத்திரங்களையும் வெளியிடும் போது எம்மாதிரியான குறிப்பேட்டுப் பதிவுகளைச் செய்ய வேண்டும் என்பதனை இனிப் பார்ப்போம்.

ஒரு பொதுக் கம்பெனியானது பதிவு செய்யப்பட்டவுடன் அக்கம்பெனி வெளியிடும் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வாங்குமாறு அக்கம்பெனியின் இயக்குநர்கள் பொதுமக்களுக்கு அழைப்பு விடுகின்றனர். இம்மாதிரி விடும் அழைப்பையே தகவலறிக்கை என்று கூறுகிறோம். ஆனால் ஒரு தனிக் கம்பெனியானது தகவல் அறிக்கையை வெளியிட முடியாது. ஏனெனில் தனிக் கம்பெனியானது தனது முதலை தனிப்பட்ட முறையில்தான் திரட்ட வேண்டும். பொதுமக்களுக்கு பங்குகளை வாங்கும்படி அழைப்பு விடுக்க முடியாது. அதுபோன்ற ஒரு பொதுக் கம்பெனியானது தனது பங்குகளையும் கடன் பத்திரங்களையும் தனிப்பட்ட முறையில் விற்க முடியும் என்று எண்ணினால் அக்கம்பெனியும் தகவலறிக்கை எதுவும் வெளியிட வேண்டியதில்லை. தகவலறிக்கை பதிலாக வேறு ஒரு அறிக்கை தயாரித்து பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். அவ்வறிக்கையில் தகவலறிக்கையில் இருக்க வேண்டி செய்திகளனைத்தும் இருக்க வேண்டும். இம்மாதிரி அறிக்கையை தகவலறிக்கைக்குப் பதிலான அறிக்கை என்று கூறுகிறோம்.

தகவலறிக்கையில் வெளியிடப்பட்ட மொத்தப் பங்குகள் அல்லது பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட பங்குகள், குறைந்தளவு பங்கெடுப்பு, விண்ணப்ப பணம் போன்ற செய்திகள் வெளியிடப்படும்.

தகவலறிக்கையை வெளியிட்ட பின்பு பொதுமக்களிடமிருந்து பங்குகள் வேண்டி விண்ணப்பங்கள் வரத் துவங்கும். விண்ணப்பங்களுடன் விண்ணப்பப் பணமும் வரும். அப்படி வரும் பணம் வங்கியில் செலுத்தப்படுகிறது. குறைந்தளவில் பங்கெடுப்பு அளவிற்கு பொதுமக்களிடமிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பங்கள்

வந்திருப்பின் இயக்குநர்கள் விண்ணப்பங்களைப் பரிசிலித்து பங்குகளை ஒதுக்கும் வேலையைத் துவக்குவர்.

| | |
|---|---|
| ரொக்கம் | 1. வங்கி க/கு..........ப |
| பெறப்பட்டதற்கான பதிவு | பங்கு விண்ணப்ப க/கு |
| | (பங்குகளின் மீது ஒரு பங்குக்கு ரூ...வீதம் பெறப்பட்ட விண்ணப்பப் பணத்திற்கான பதிவு) |

விண்ணப்பம் பெறப்பட்ட பின்பு இயக்குநர் அவை கூடி விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும். அதன் பின்னர் யார் யாருடைய விண்ணப்பங்களை முழுவதுமாக ஏற்பது, யார் யாருடைய விண்ணப்பங்களில் ஒரு பகுதியை மட்டும் ஏற்பது, யார் யாருடைய விண்ணப்பங்களை முழுவதுமாக நிராகரிப்பது என்பது பற்றியும் இயக்குநர் அவை முடிவு செய்யும். அதன் பின்னர் விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும், இயக்குநர் அவையின் முடிவிற்கு ஏற்ப பதில் அனுப்பப்படும். பங்குகள் ஒதுக்கப்பட்டவர்களுக்கு பங்குகள் ஒதுக்கல் கடிதமும் பங்குகள் ஒதுக்கப்படாதவர்களுக்கு வருத்தக் கடிதமும் அனுப்பப்படும். வருத்தக் கடிதம் அனுப்பும் பொழுது பங்கு விண்ணப்ப பணமும் சேர்த்து அனுப்ப வேண்டும். அதிக அளவு பங்குகள் ஒதுக்கப்பட்டால், மீதமுள்ள பங்கு விண்ணப்ப பணம் பின்னால் பெற வேண்டிய ஒதுக்கல் பணம் அழைப்புப் பணம் ஆகியவற்றில் சரிகட்டப்படும். பங்குகள் ஒதுக்கப்பட்ட பின்பு, பங்குதாரர்கள் கம்பெனிக்கு தரவேண்டிய பாக்கித் தொகைக்கு கடனாளிகளாகவே கருதப்படுவார்கள்.

**II. பங்குகளை ஒதுக்கீடு செய்யும் பொழுது பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.**

| | |
|---|---|
| ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளின் மீது பெறப்பட்ட பங்கு விண்ணப்பத் | 2. பங்கு விண்ணப்பப க/குப<br>பங்கு முதல் க/கு |

| | |
|---|---|
| தொகை இப்பொழுது கம்பெனியின் மூலதனம் ஆகும். | (இயக்குநர் அவையின் தீர்மானப்படி, பங்கு ஒன்றுக்கு முதலில் ஒரு பகுதியாக ரூ....வீதம்... பங்குகளின் விண்ணப்ப பணம் பங்கு முதலிற்க மாற்றப்பட்டதற்காக) |

| | |
|---|---|
| பங்கு ஒதுக்கல் செய்யப்பட்ட பிறகு பங்கு பங்குதாரர்களிடமிருந்து பெற வேண்டி பங்க ஒதுக்கல் பணம். | 3. பங்கு ஒதுக்கல் க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(இயக்குநர் அவையின் தீர்மானப்படி ஒதுக்கப்பட்ட பங்குகள் மீது பங்கொன்றுக்கு ரூ... வீதம்... பங்குகள் மீது பெறவேண்டிய பங்கு ஒதுக்கல் பணத்திற்கான பதிவு) |

பங்கு விண்ணப்ப க/கு என எழுதுமிடத்தில் அது சாதாரண பங்கு விண்ணப்ப க/கு அல்லது முன்னுரிமை பங்கு விண்ணப்ப க/கு என்பதை கணக்கில் கொடுத்ததற்கு ஏற்ப எழுத வேண்டும். இது பின்னால் வரக்கூடிய II & III தலைப்புகளுக்கு பொருந்தும்.

| | |
|---|---|
| பங்குதாரர்களிடமிருந்து பெற்ற பங்கு ஒதுக்கல் பணத்திற்கான பதிவு | 4: வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கல் க/கு<br>(ஒதுக்கப்பட்ட பங்குகள் மீது பங்கு ஒன்றுக்கு<br>ரூ...வீதம்...பங்குகளுக்கான<br>ஒதுக்கல் பணம் பெறப்பட்டது) |

| | |
|---|---|
| நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீதான விண்ணப்பங்கள் பணம் திரும்பத்தரப்படுகிறது. | 5. பங்கு விண்ணப்ப க/கு ப<br>வங்கி க/கு<br>(நிராகரிக்கப்பட்ட விண்ணப்ப பங்குகளுக்கான பங்கு விண்ணப்பத் தொகை திருப்பி தரப்படுவதற்கான பதிவு) |

| | |
|---|---|
| பகுதி ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் மீது அதிகமுள்ள விண்ணப்ப பணம் பங்கு ஒதுக்கல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. | 6. பங்கு விண்ணப்ப க/கு<br>பங்கு ஒதுக்கல் க/கு<br>(பகுதி ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் மீது அதிகமாய் உள்ள விண்ணப்பப் பணம் பங்கு ஒதுக்கல் பணத்தில் சரிகட்டப்படுகிறது) |

குறிப்பு: பங்கு ஒதுக்கல் பணத்தை செலுத்த ஒருவர் தவறிவிட்டால் அவர் கம்பெனியில் பங்குதாரராக ஆக முடியாது. மேலும் அவரின் பெயர் உறுப்பினர் பதிவேட்டில் பதியப்பட மாட்டாது. பங்கு ஒதுக்கல் பணத்தை செலுத்தும் நபர்களே கம்பெனியின் பங்குதாரர்கள் என அழைக்கப்படுவர். அவர்களின் பெயர் மட்டுமே உறுப்பினர் பதிவேட்டில் பதியப்படும்.

பங்கு ஒதுக்கல் பணம் பெற்ற பின்பு, பங்குகள் மீது பெறவேண்டிய மீதிப்பணத்தை இயக்குநர்கள் தங்கள் விருப்பப்படி, வேண்டும்போது பங்குதாரர்களுக்கு அழைப்புகள் விடுத்து பெறுவர். இம்மாதிரி அழைப்பு அனுப்பும் போது அழைப்புக் கடிதம் ஒன்று அனுப்பப்படுகிறது.

III. அழைப்புகள் விடுக்கப்பட்டவுடன் பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| விடுவிக்கப்பட்ட அழைப்பின் மீது பெற வேண்டிய அழைப்புப் பணம் | 7. முதல் அழைப்பு க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>(ஒவ்வொரு பங்கின் மீதும் ரூ...வீதம்.. மொத்தம் பங்குகள் மீது பெற வேண்டிய முதல் அழைப்பு பணத்திற்கான பதிவு) |

| | |
|---|---|
| அழைப்பு பணம் பெறப்பட்டவுடன் | 8. வங்கி க/கு ப<br>முதல் அழைப்பு க/கு<br>(பங்கு ஒன்றிற்கு ரூ வீதம் மொத்தம் பங்குகள் மீது பெற வேண்டிய முதல் அழைப்புப் பணத்திற்கான பதிவு) |

குறிப்பு: ஒரு பங்குதாரர் தான் செலுத்த வேண்டிய அழைப்புப் பணத்தைச் செலுத்த தவறினால் பெறப்பட்ட அழைப்புப் பணமானது உண்மையில் பெற வேண்டிய அழைப்புத் தொகையைக் காட்டிலும் குறைவானதாய் இருக்கும். எனவே அழைப்பு க/கு பற்று இருப்பைக் காட்டும். அதைத்தான் அழைப்பு பாக்கி (Calls in arrears) என்று கூறுகிறோம்.

கம்பெனியின் இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கும் பொழுது அழைத்த முதலிலிருந்து அழைப்பு பாக்கி கழிக்கப்படுகிறது. ஏனெனில் அப்பொழுதுதான் செலுத்திய முதல் எவ்வளவு என்பதைக் கண்டறிய முடியும்.

அவ்விதம் செலுத்தப்படாமலிக்கும் அழைப்புகளுக்கு, பங்குதாரர்கள் வட்டி செலுத்த வேண்டும். இவ்விதம் பெறும் வட்டி கம்பெனிக்கு ஆதாயமாகையால் அவ்வட்டியானது இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படும்.

ரொக்க ஏடு தயாரிக்கும்படி நீங்கள் கோரப்படுவீர்களானால் 1,4,5 மற்றும் 8 வது குறிப்பேட்டுப் பதிவுகளை செய்ய வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக அவை ரொக்க ஏட்டில் காட்டப்படும்.

தற்பொழுது பெரும்பான்மையான கம்பெனிகளி பங்கு ஒதுக்குதலுக்கும் பங்கு விண்ணப்பத்திற்கும் சேர்த்து ஒரு கணக்கை மட்டும் துவக்குகின்றன. அதாவது பங்கு விண்ணப்பம் மற்றும் ஒதுக்கல் கணக்கு என்ற கணக்குகள் துவக்கப்படுகிறது. எனவே பங்கு விண்ணபத்திற்கும் ஒதுக்குதலுக்கும் தனித்தனியாக கணக்குகளை துவக்குவதில்லை. இம்முறையில் ஒரே கணக்கு மட்டும் துவங்கப்பட்டால், குறைந்தளவு குறிப்பேட்டு பதிவுகளை பதிவு செய்தாலே போதுமானது. காலமும் உழைப்பும் மீதமாகும்.

**கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு தயாரித்தல்**

கம்பெனியின் முடிவுக் கணக்கு தயாரிப்பது பற்றிய விவரங்களை பின்னால் காண்போம். இந்நிலையில் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துக்களும், பொறுப்புகளும் எவ்வரிசையில் எழுதப்பட வேண்டும என்பதைப் பார்ப்போம்.

..... கம்பெனி லிமிடெட்
இருப்புநிலைக் குறிப்பு..... நாளன்று

| | பொறுப்புகள் | | சொத்துக்கள் |
|---|---|---|---|
| 1. | பங்குமுதல் அனுமதித்தது ரூ | 1. | நிலைத்த சொத்துக்கள் ரூ. |
| | வெளியிட்டது ஒப்பியது | 2. | முதலீடுகள் |
| 2. | காப்புகளும் உபரிகளும் | 3. | நடைமுறைச் சொத்துக்களும் |
| 3. | பிணைக் கடன்கள் | | மற்றும் கடன்களும் |
| 4. | பிணையிலாக் கடன்கள் | 4. | இதர செலவுகள் |
| 5. | நடைமுறைப்பொறுப்புகளும் | 5. | இலாப நட்டக் கணக்கு |
| | ஒதுக்குகளும் | | |

ஐயப்பாடான அல்லது நிகழ்வடையாப் பொறுப்புகள் இருப்புநிலைக்குறிப்பிற்கு கீழ் எழுதப்படும். உபரி என்ற சொல் இலாப நட்டக் கணக்கின் வரவு இருப்பைக் குறிக்கின்றது.

**எடுத்துக்காட்டு: 1**

ஒமேகா லிமிடெட் என்னும் நிறுவனத்தின் இயக்குநர்கள் 2005 பிப்ரவரி 1ம் தேதியன்று பங்கொன்று ரூ.10 வீதம் 5000 முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டனர். பங்குகளுக்கான பணம் பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பிக்கும் போது ரூ. 3/—

ஒதுக்கும் பொது ரூ. 4/—

மீதம் 2005 மே 1ம் தேதியன்று

2005 பிப்பரவரி 10ம் தேதியின்று 7,000 பங்குகள் வேண்டி விண்ணப்பங்கள் வந்திருந்தன. ஆனால் 6500 பங்குகள் வேண்டி விண்ணபத்திவர்களுக்கு விகிதாச்சாரப்படி பங்குகள் ஒதுக்கப்பட்டன. மேற்சொன்ன பங்குகள் மீது பெறப்பட்ட அதிகப்படியான விண்ணப்ப பணம், ஒதுக்கலின் போது வரவேண்டிய பணத்தில் சரிகட்டப்பட்டது.

500 பங்குகளை பெற்றிருந்த சாம்சன் என்பவரைத் தவிர மீதிப்பெர் செலுத்த வேண்டிய பங்கு ஒதுக்கல் பணத்தையும் முதல் அழைப்பு பணத்தையும் தவறாமல் செலுத்தினார்கள்.

குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

செய்முறைக் குறிப்புகள்

1) பங்கொன்று ரூ. 10வீதம் 5000 முன்னுரிமைப் பங்குகள் வெளியிடப்பட்டது.

2) மொத்தம் பெறப்பட்ட விண்ணப்ப பணம் 7000 பங்குகள்X ரூ.3=ரூ.21,000

3) பொதுமக்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் =5,000

4). பங்கு ஒதுக்கல் 5,000 பங்குகளைக் காட்டிலும் அதிகம் இருக்க முடியாது.
6,500 பங்குகள் வேண்டிய விண்ணப்பித்தவர்களுக்கு மட்டும் பங்குகள் ஒதுக்கப்பட்டது.

5) நிராகரிக்கப்பட்டது மீதமுள்ள 500 விண்ணப்பதாரர்களுக்கு 500 பங்குகள் ஒதுக்கப்படவில்லை x ரூ.3 எனவே அவர்களின் பங்கு விண்ணப்ப் = ரூ.1,500 பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

6) பகுதி நிராகரிக்கப்பட்டது 6,500 பங்குகள் மீது பெற்றுள்ள அதிகப்படியான விண்ணப்பப்பணம் ஒதுக்க 1,500 பங்குகள் பட்டுள்ள 5,000 பங்குகள் மீது பெறப்படும் x ரூ.3 ஒதுக்கலின் பணத்தில் சரிக்கட்டப்படும். ரூ. 4,500

7) பெறப்பட்ட ஒதுக்கல் பணம் பின்வருமாறு கணக்கிடப்பட்டது

பெறவேண்டியது 5,0000 பங்குகள் x ரூ.4 =ரூ. 20,000

கழிக்க

அதிகப்படியான விண்ணப்பப் பணம், ஒதுக்கல் பணத்தில் சரிக்கட்டப்பட்டது 6ல் விளக்கப்பட்டுள்ளது =ரூ. 4,500

=ரூ.15,5000

கழிக்க:

சாம்சனிடமிருந்து பெறாத பணம் (எந்த நபருக்கும், அவர் விண்ணபித்தளவிற்கு பங்குகள் முழுமையாக ஒதுக்கப்பட வில்லை எல்லோருக்கும் விண்ணப்பதிதளவைக் காட்டிலும் குறைந்தளவே பங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன அதைப் போலவே சாம்சனிடமிருந்து பெற வேண்டிய மொத்த தொகை)

= ரூ. 2,000

கழிக்க

உபரியில் சாம்சனின் பங்கு

$\frac{4500}{5000} X\, 500$ = ரூ. 450

ரூ. 1,550

ரூ. 13,950

## ஒமேக லிமிடெட்

### குறிப்பேடு

| நாள் | விபரம் | | ப. | வ. |
|---|---|---|---|---|
| 2005 | வங்கி க/கு ப | | 21,000 | |
| பிப்10 | முன்னுரிமைப் பங்கு விண்ணப்ப க/கு | | | 21,000 |
| | (ரூ. 3 வீதம் 7000 பங்குகள் மீது பெறப்பட்ட பங்கு விண்ணப்பப்பணம்) | | | |
| | முன்னுரிமைப் பங்கு விண்ணப்ப க/கு ப | | 15,000 | |
| | முன்னுரிமைப் பங்கு முதல் க/கு | | | 15,000 |
| | (ரூ.3 வீதம் 5000 பங்குகள் மீது பெறப்பட்ட விண்ணப்பப் பணம் பங்கு முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |
| | முன்னுரிமை பங்கு ஒதுக்கல் க/கு ப | | 20,000 | |
| | முன்னுரிமை பங்கு முதல் க/கு | | | 20,000 |
| | (5000 பங்குகள் ரூ.4 வீதம் பெற வேண்டிய பங்கு ஒதுக்கல் பணம்) | | | |
| | முன்னுரிமைப் பங்கு விண்ணப க/கு ப | | 1,500 | |
| | வங்கி க/கு | | | 1,500 |
| | (நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் 500 பங்குகளுக்கான விண்ணப்பப் பணம் திரும்பிக் கொடுக்கப்பட்டது) | | | |
| | முன்னுரிமைப் பங்கு விண்ணப்ப க/கு ப | | 4,500 | |
| | முன்னுரிமைப் பங்கு ஒதுக்கல் க/கு | | | 4,500 |
| | (1500 பங்குகள் மீது பெறப்பட்ட அதிகப்படியான பங்கு விண்ணப்பப்பணம் பங்கு ஒதுக்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |
| | வங்கி க/கு ப. | | 13,950 | |
| | முன்னுரிமைப் பங்கு ஒதுக்கல் க/கு | | | 13,950 |
| | (பங்கு ஒதுக்கலின் போது பெறவேண்டிய ரூ. 20,000 சரிக்கட்டப்பட்ட ரூ. 4,500 ஐ கழித்து விட்டு மீதமுள்ள தொகையிலிருந்து சாம்சனிடமிருந்து பெறத் தவறிய ரூ. 1,550ஐ கழித்த பின்பு பெற்பட்ட நிகரத்தொகை) | | | |
| | முன்னுரிமை இறுதி அழைப்பு க/கு ப. | | 15,000 | |
| | முன்னுரிமை பங்கு முதல் க/கு | | | 15,000 |
| | (500 பங்குகள் தவிர மீதமுள்ள மீது ரூ.3 வீதம் பெற்ற இறுதி அழைப்புப் பணம்) | | | |

**பங்குகளை முனைமத் தொகையுடன் வெளியிடல் (Issue of Shares at a Premium)**

வெற்றிகரமான முறையில் நடக்கும் என எதிர்பார்க்கப்படும் ஒரு புதிய கம்பெனி அல்லது ஏற்கனவே நிறுவப்பட்டு நல்ல முறையில்

நடைபெற்றுவரும் ஒரு கம்பெனி பங்குகளை வெளியிடும் போது பங்குகளின் முகமதிப்பைக் காட்டி அதிகத் தொகையைச் செலுத்துமாறு பொதுமக்களைக்கோரும். எடுத்துக்காட்டாக ரூ. 10 மதிப்புள்ள ஒவ்வொரு பங்குக்கும் ரூ. 12 செலுத்தும்படி ஒரு கம்பெனி பொதுமக்களைக் கோருகிறது எனக் கொள்வோம். இம்மாதிரி, முகமதிப்பைக் காட்டிலும் அதிகத் தொகை *ரூ.2) செலுத்தி பங்குகளை பெறுமாறு கூறினால் பங்குகள் முனைமத்துடன் வெளியிடப்படுகின்றன எனச் சொல்கிறோம். இங்கே ரூ.2 முனைமத் தொகையாகக் கருதப்படுகிறது. இது ஒருவகை சிறப்பு மூலதன வரவாகக் கருதப்படும்.

பங்குகளை முனைமத்துடன் வெளியிடுவதற்கு கம்பெனிச் சட்டத்தில் கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் அவ்விதம் பெறப்பட்ட முனைமத் தொகையை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி சில கட்டுப்பாடுகளை கம்பெனிச் சட்டத்திலன் 78வது பிரிவு விதித்துள்ளது. பங்கு முனைமக் கணக்கு என்று சொல்லக் கூடிய தனிக் கணக்கொன்றைத் துவங்கி பங்கு முனைமத் தொகையைப் பின்வரும் காரியங்களுக்காக மட்டும் செலவிடலாம்.

1) கம்பெனியின் உறுப்பினர்களுக்கு போனசு பங்குகளை வெளியிடுதல்
2) தொடக்கச் செலவுகளைச் சரிக்கட்டுதல்.
3) பங்குகளை அல்லது கடன் பத்திரங்களை வெளியிட ஏற்பட்ட செலவுகளை அல்லது கழிவு அல்லது தள்ளுபடி தொகையை சரிகட்டுதல்
4) மீட்கக்கூடிய சலுகைப் பங்குகளை அல்லது கடன் பத்திரங்களை மீட்கும் பொழுது முனைமத் தொகையை செலவு செய்ய விரும்பினால் நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டுமே செய்யலாம்.

மற்ற ஏதாவது காரியங்களுக்கு பங்கு முனைமத் தொகையை செலவு செய்ய விரும்பினால் நீதி மன்றத்தில் அனுமதியுடன் மட்டுமே செய்யலாம்.

பொதுவாக பங்கு முனைமத் தொகை ஒதுக்கல் பணம் செலுத்தும் போது சேர்த்துச் செலுத்தப்படுகிறது. ஆனால் கம்பெனி விரும்பினால் பங்கு விண்ணப்பத்துடன் அல்லது முதல் அழைப்பின் போது அல்லது இரண்டாவது அழைப்பின் போது கம்பெனி தனது விருப்பம் போல பெற்றுக் கொள்ளலாம்.

**எடுத்துக்காட்டு: 2**

ஒவ்வொன்றும் ரூ.10 மதிப்புள்ள பங்குகளை ரூ.12 வீதம் 10,000 பங்குகளுக்கு பாலன் லிமிடெட் என்னும் நிறுவனம் விண்ணப்பங்களை வரவேற்றது பணம் பின்வருமாறு பெற வேண்டியிருந்தது.

| | |
|---|---|
| பங்கு ஒன்றிற்கு | ரூ. |
| விண்ணப்பிக்கும் பொழுது | 3 |
| ஒதுக்கும் போது | 5 (முனைமம் சேர்த்து) |
| அழைப்பின் போது | 4 |

பொது மக்கள் 10,000 பங்குகளுக்கும் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். பங்குகள் ஒதுக்கப்பட்டன. பெறவேண்டிய எல்லாப் பணமும் பெறப்பட்டது என்ற ஊகம் செய்து குறிப்பேட்டுப் பதிவுகளையும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.[1]

குறிப்புகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விண்ணப்பத் தொகை | ரூ.3 | x | 10,000 | = | ரூ.30,000 |
| ஒதுக்கல் தொகை | ரூ.3 | x | 10,000 | = | ரூ.30,000 |
| முனைமத் தொகை | ரூ.2 | x | 10,000 | = | ரூ.20,000 |
| அழைப்புத் தொகை | ரூ.4 | x | 10,000 | = | ரூ.40,000 |

* முனைமம் அல்லது மதிப்புயர்வு
** மீள்தகு சலுகைப் பங்குகள் என்றும் கூறுவதுண்டு

**விடை**

**பாலன் லிமிடெட்**
**குறிப்பேடு**

| நாள் | விபரம் | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப | | 30,000 | |
| | பங்கு விண்ணப்ப க/கு | | | 30,000 |
| | (பங்கு ஒன்றிற்கு ரூ. 3 வீதம் 10,000 பங்குகள் மீது பெறப்பட்ட பங்கு விண்ணப்பப் பணம்) | | | |
| | பங்கு விண்ணப்ப க/கு ப | | 30,000 | |
| | பங்கு மூலதன் க/கு | | | 30,000 |
| | (பங்கு விண்ணப்பப் பணத்தை மூலதன கணக்கிற்கு மாற்றியதற்காக) | | | |
| | பங்கு ஒதுக்கல் க/கு ப | | 30,000 | |
| | பங்கு மூலதன க/கு | | | 30,0000 |
| | (பங்கு ஒன்றிற்கு ரூ.3 வீதம் 10,000 பங்குகள் மீது பெறவேண்டிய பங்கு ஒதுக்கல் பணத்திற்கு பதிவு) | | | |
| | வங்கி க/கு ப. | | 50,000 | |
| | பங்கு ஒதுக்கல் க/கு | | | 30,000 |
| | பங்கு முனைமம் க/கு | | | 20,000 |
| | (10,000 பங்குகள் மீத ஒதுக்கல் பணமும் பங்கு முனைமப் பணமும் பங்கு ஒன்றிற்கு முறையே ரூ.3 மற்றும் வீதம் ரூ.2 பெறப்பட்டதற்கு) | | | |
| | பங்கு இறுதி அழைப்பு க/கு ப | | 40,000 | |
| | பங்கு மூலதன க/கு | | | 40,000 |
| | (பங்கு ஒன்றிற்கு ரூ.4 வீதம் 10,000 பங்குகள் மீது பெற வேண்டிய கடைசி அழைப்புப் பணம்) | | | |
| | வங்கி க/கு ப. | | 40,000 | |
| | இறுதி அழைப்பு க/கு | | | 40,000 |
| | (கடைசி அழைப்புக்கு பணம் தவறாமல் பெறப்பட்டது) | | | |

**பாலன் லிமிடெட்**

**இருப்புநிலைக் குறிப்பு..... நாளன்று**

| சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| வெளியிட்டது | | | |
| அனுமதித்து வெளியிட்டது | ? | வங்கி | 1,20,000 |
| ஒப்பியது மற்றும் செலுத்தியது | | | |
| ரூ.10 வீதம் 10000 பங்குகள் | 1,00,000 | | |
| பங்கு முனைமம் க/கு | 20,000 | | |
| | 1,20,000 | | 1,20,000 |

குறிப்பு

குறிப்பு: இந்திய கம்பெனிச் சட்டம் 78வது பிரிவில் குறித்துள்ள செயல்களுக்கு மட்டுமே பங்கு முனைமம் கணக்கைப் பற்று வைக்கலாம். இல்லை எனில் பங்கு முனைமம் கணக்கை வேறு எதற்கும் பயன்படுத்தாமல் அப்படியே வைத்திருக்க வேண்டும். பங்குகளைப் பறிமுதல் செய்ய வேண்டியிருந்தாலும் கூட பங்கு முனைமக் கணக்கைப் பற்று வைக்கக் கூடாது.

## பங்குகளை தள்ளுபடி செய்து வெளியிடல் (Issue of Shares at a Discount)

ஒரு புதிய கம்பெனியானது தள்ளுபடி செய்து பங்குகளை வெளியிடமுடியாது. (அதாவது பங்குகளின் முக மதிப்பைக் காட்டிலும் குறைந்து விலைக்குப் பங்குகளை வெளியிட முடியாது). ஏற்கனவே நிறுவப்பட்டு நடைபெற்று வரும் கம்பெனிகிள் சில நிபந்தனைகளின் பேரில் பங்குகளைத் தள்ளுபடி செய்து வெளியிடலாம். தள்ளுபடி செய்து வெளியிடப்படும் பங்குகள் முன்பே வெளியிடப்பட்ட பங்குகளின் வகைகளில் ஒன்றாக இருக்க வேண்டும். அளிக்கப்படும் தள்ளுபடியின் அளவு பங்குகளின் முக மதிப்பில் 10 சதவிதத்திற்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும். கம்பெனி தான் தொழிலை தொடங்க உரிமை பெற்ற நாளிலிருந்து ஓராண்டு காலம் முடித்த பின்னரே பங்குகளை தள்ளுபடியில் வெளியிடலாம். இம்மாதிரி பங்குகளை தள்ளுபடியில் வெளியிடுவதற்கு கம்பெனியின் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கம்பெனி சட்ட அவையின் இசைவையும் பெற்றிருக்க வேண்டும். கம்பெனி சட்ட அவை இசைவை அளித்த 2 மாத்திற்குள் இப்பங்குகளை வெளியிட வேண்டும்.

ரூ.10 மதிப்புள்ள ஒரு பங்கானது ரூ.9 க்கு வெளியிடப்பட்டால் ரூ.1 மூலதன நட்டமாகக் கருதப்படும். இவ்விதம் ஏற்படும் நட்டங்கள் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துக்கள் பகுதியில் பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி தலைப்பின் கீழ் தனியாகக் காட்டப்படும். அதன் பின்னர் மூன்று

அல்லது நான்கு ஆண்டுகளில் இந்நட்டமானது இலாப நட்டக்கணக்கில் சிறுகச் சிறுக பற்று வைக்கப்படும். பின்னர் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

**எடுத்துக்காட்டு:3**

சோழன் லிமிடெட் என்னும் நிறுவனம் பங்கொன்றுக்கு ரூ.100 மதிப்புள்ள 10,000 சாதரணப் பங்குகளை 5% தள்ளுபடி வெளியிட்டது பங்குகள் எல்லாம் மக்களால் எடுத்துக் கொள்ளப்பட்டு முழுவதும் செலுத்தப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளையும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| | | |
|---|---|---|
| முகமதிப்பு = ரூ 100 x 10,000 பங்குகள் | = | 10,00,000 |
| 5% தள்ளுபடியில் வெளியிடப்பட்டது | | |
| = 100 $x \frac{5}{100}$ = ரூ.5 வீதம் 10,000 பங்குகள் மீது தள்ளுபடி | | 50,000 |
| மீதம் பெறப்பட்ட தொகை | | 9,50,000 |

**சோழன் லிமிடெட்**

**குறிப்பேடு**

| நாள் | விபரம் | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | வங்கி க/கு ப. | | 9,50,000 | |
| | பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி க/கு ப. | | 50,000 | |
| | சாதாரணப் பங்கு முதல் க/கு | | | 10,00,000 |
| | (ரூ.100 மதிப்புள்ள பங்கு ஒன்றிற்கு ரூ.95 வீதம் 10,000 பங்குகள் மீது பெறப்பட்ட பணம்) | | | |

# சோழன் லிமிடெட்

## இருப்புநிலைக் குறிப்பு ...........

| சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பங்கு மூலதனம் அனுமதித்தது | ? | வங்கி | 9,50,000 |
| வெளியிட்டது ஒப்பியது மற்றும் | | | |
| ஒப்பியது மற்றும் செலுத்தப்பட்டது | ?. | பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி | 50,000 |
| பங்கொன்றின் மதிப்பு ரூ.100 வீதம் | 10,00,000 | | |
| முழுவதும் செலுத்தப்பட்ட 10,000 | | | |
| சாதாரணப் பங்குகள் | 10,00,000 | | 10,00,000 |

### அழையா முன்பணம் (Calls-in-Advance)

ஒரு சில சமயங்களில் சில பங்குதாரர்கள் கம்பெனியிடமிருந்து வாங்கியுள்ள பங்குகள் மீது செலுத்த வேண்டிய பணம் முழுவதையோ அல்லது ஒரு பகுதியையோ இயக்குநர்கள் அழைப்பு விடுவதற்க முன்பே செலுத்த விருப்பமுள்ளவர்களாக இருக்கலாம். அம்மாதிரி நிலையில் இயக்குநர்கள் விருப்பப்பட்டால் அம்மாதிரி செலுத்தப்படும் பணத்தைப் பெற்றுக் கொண்டு அழையா முன்பணக் கணக்கு எனும் கணக்கைத் துவங்கி அதில் வரவு வைக்கலாம். நடைமுறை விதிகளில் கூறப்பட்டுள்ள வட்டி விகிதத்தில் வட்டியைப் பங்குதாரர்களுக்குச் செலுத்தலாம். பதிவு மூலம், அழையா முன்பணக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட அழைப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. சட்டபூர்வமாக பார்த்தோமானால் அழையா முன்பணத்தை செலுத்திய முதலில் ஒரு பகுதியாகக் கருத முடியாது. எனவே இப்பணம் இருப்பு நிலைக்குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் தனியாகக் காட்டப்படுகிறது.

குறிப்பு

**பங்குகளின் முழுத்தொகையையும் பெற்றுக் கொண்டு பங்குகளை அளித்தல் (Issue of Shares at Lumpsum)**

பொதுவாக பங்குகள் மீதுப் பெறப்பட வேண்டிய பணம் பல தவணைகளில் பெறப்படுகிறது. அதாவது விண்ணப்பிக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட தொகை பங்கு ஒதுக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட தொகை எனப் பல தவணைகளில் பங்குகளின் பணம் பெறப்படுகிறது. அம்மாதிரி தவணைகளில் பெறும்போது கணக்கேடுகளில் எவ்விதமான பதிவுகளை செய்ய வேண்டும் என்பதனை பார்த்துள்ளோம்.

| |
|---|
| பங்குகளின் முழுத்தொகையையும் ரொக்கமாகக் கொண்டு பங்குகளை அளித்தால் பின்வரும் குறிப்பேட்டுப் பதிவைச் செய்ய வேண்டும். |

வங்கி க/கு ப

பங்கு முதல் க/கு

(பங்கு ஒன்றுக்கு ரூ... வீதம் பங்குகள் வெளியிடப்பட்டதற்காக)

| |
|---|
| பங்குகளை முனைமத் தொகையுடன் வெளியிடும் போது பங்குகளின் முழுத் தொகையையும் ரொக்கமாக பெறப்பட்டால் பின்வரும் பதிவைச் செய்ய வேண்டும். |

வங்கி க/கு ப

பங்கு முதல் க/கு

பங்கு முனைமம் க/கு

(பங்கு ஒன்றிற்கு ரூ....வீதம் பங்குகளுக்குப் பங்கொன்றிற்கு முனைமம் ரூ... வீதம் பங்குகளைத் தள்ளுபடியில் வெளியிடும் போது.

குறிப்பு: இம்மாதிரி நிலையில் நாம் ·ஏற்கனவே பார்த்துள்ள மாதிரி தனித்தனியான குறிப்பேட்டுப் பதிவுகள் தேவையில்லை. பங்குகளைத் தள்ளுபடியில் வெளியிடும் போது.

வங்கி க/கு ப.

பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி க/கு ப.

பங்குமுதல் க/கு

(பங்கு ஒன்றிற்கு ரூ... தள்ளுபடியில் வெளியிட்டது)

சில சமயங்களில் ரொக்கத்திற்குப் பதிலாக சொத்துக்களைப் பெற்றுக் கொண்டு பங்குகள் வழங்கப்படுவதும் உண்டு. உதாரணமாக ஒரு நபர் தன்னுடைய நிலம் மற்றும் கட்டிடங்களைக் கம்பெனிக்கு கொடுக்கிறார் என்று கொள்வோம். அவருக்கு அவருடைய சொத்திற்குப் பதிலாக ரொக்கம் கொடுக்காமல் பங்குகள் கொடுக்கப்பட்டால் பின்வரும் இரண்டு குறிப்பேட்டுப் பதிவுகள் பதியப்படுகின்றன.

| நிலம் மற்றும் கட்டடம் வாங்கியதைப் பதிவதற்கு |
|---|

1. நிலம் மற்றும் கட்டட க/கு ப.

விற்பனையாளர் க/கு
(விற்பனையாளரிடமிருந்து சொத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு)

| விற்பனையாளருக்குப் பங்குகள் அளிக்கப்பட்டதைப் பதிவதற்கு |
|---|

2. விற்பனையாளர் க/கு ப

....பங்கு முதல் க/கு

ரொக்கத்திற்கு பதிலாக விற்பனையாளருக்கு ரூ....

மதிப்புள்ள .... பங்குகள் வழங்கப்பட்டதற்கு)

பெரும்பாலும் தோற்றுவிப்பாளர்களின் சேவைக்காக, அவர்களுக்குப் பங்குகள் வழங்கப்படுகின்றன. தோற்றுவிப்பாளர்களிடமிருந்து கம்பெனி கட்டடம் போன்ற நிலைத்த சொத்துக்கள் எதுவும் பெறுவதில்லை. ஆனால்

நன்மதிப்பு என்னும் கற்பனையான சொத்தை கம்பெனி பெறுகிறது. எனவே நிலம் கட்டடம் முதலிய கணக்குகளைப் பற்று வைப்பதற்க பதிலாக நன்மதிப்பு கணக்கை பற்று வைக்க வேண்டும்.

நன்மதிப்பு க/கு ப

பங்கு முதல் க/கு

(தோற்றுவிப்பாளர்களின் சேவைக்காக பங்கு ஒன்று ரூ....

வீதம்.... பங்குகுள் வழங்கப்பட்டதற்கான பதிவு)

**எடுத்துக்காட்டு: 4**

மூர்த்தி லிமிடெட் என்னும் நிறுவனம் 10,000 சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்றது. பங்கு ஒன்றின் மதிப்பு ரூ100 முனைமம் ரூ.20 பங்குகளுக்கான பணம் பின்வருமாறு செலுத்தப்பட வேண்டியிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| 2005 மார்ச் 15 | | விண்ணப்பிக்கும் பொழுது | 20 |
| | ஏப்ரல் 1 | ஒதுக்கும் பொழுது (முனைமம் சேர்ந்து) | 50 |
| | ஜுலை 2 | முதல் அழைப்பு | 30 |
| | ஆகஸ்ட் 1 | இறுதி அழைப்பு | 20 |

பொதுமக்களிடமிருந்து 20,000 பங்குகள் வேண்டி விண்ணப்பங்கள் வந்தன. பின்வருமாறு பங்குகள் ஒதுக்கப்பட்டன.

8,000 விண்ணப்பதாரர்களுக்கு முழுவதும்

8,000 விண்ணப்பதாரர்களுக்கு 25 சதவீதம்

4,000 விண்ணப்பதாரர்களுக்கு இல்லை

பங்கு ஒதுக்கலின் போதும் அழைப்பின் போதும் பெறவேண்டிய எல்லாப் பணத்தையும் தன்னிடம் வைத்துக்கொள்ள கம்பெனி அனுமதிக்கப்பட்டது. கம்பெனியும் இவ்வதிகாரத்தைச் செயல்படுத்தியது.

குறிப்பு

இயக்குநர்கள் பங்கின் இறுதி அழைப்பை அழைக்கவில்லை ஒதுக்கலின் போது பெறவேண்டிய எல்லாப்பணமும் பெறப்பட்டது. மேலும்ட முதல் அழைப்பு பணமாக இயக்குநர்கள் ரூ.2,65,000ஐப் பெற்றனர்.

அழையா முன் பணத்திற்கு வருடத்திற்கு 6% வட்டியைப் பங்குதாரர்களுக்கு குறித்த நாளில் ரொக்கமாகச் செலுத்த வகை செய்திருந்தார்கள் எனக் கருதி குறிப்பேட்டுப் பதிவுகளையும் 2005 ஆகஸ்ட் 31ஆம் நாளன்று உள்ளபடி இருப்புநிலைக்குறிப்பையும் தயார் செய்க.

செய்முறைக் குறிப்புகள்

| | | பெறவேண்டிய தொகை | பெற்ற தொகை |
|---|---|---|---|
| 2005 மார்ச் 15 | அ) விண்ணப்பிக்கும் போது ரூ 20 x 20000 | | 4,00,000 |
| ஏப்ரல் | ஆ)ஒதுக்கும் பொழுது பங்கு முதல் | | |
| | ரூ 30 x 10000 | | |
| | நிராகரிக்கப்பட்டது 4000 x 20 = 80,000 | | |
| | (திருப்பிக் கொடுக்கப்பட்டது) | | |
| | கழி நிராகரிக்கப்பட்ட பகுதியாகிய | | |
| | (8000x75/100=6,000) 6,000 பங்குகளின் மீது | | |
| | பெறப்பட்ட விண்ணப்ப பணம் (6000 x 20) | | |
| | =ரூ.1,20,000த்தை ஒதுக்கப்பட்ட 2,000 பங்குகள் | | |
| | மீது ஒதுக்கல் பணம் ரூ.30 | | |
| | (பங்கு ஒன்றிற்கு) முனைமத் தொகை ரூ.20 வீதம் | | |
| | பெற வேண்டிய மொத்த பணம் ரூ.1,00,000ற்கு | | |
| | (2000 x ரூ.50) சரிக்கட்டப்படுகிறது மேலும் மீதம் | | |

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| | ரூ.20,000 உள்ளது.(1,20,000—1,00,000) இப்பணம் அழையா முன்பணமாகக் கருதப்படும் | | 2,40,000 |
| | இ) முனைமத் தொகை (20 x 8000) | | 1,60,000 |
| ஜூலை1 | ஈ) முதல் அழைப்பு ரூ 30 x 10000 | 3,00,000 | 2,65,000 |

விடை

## மூர்த்தி லிமிடெட் குறிப்பேடு

| நாள் | விபரம் | | ப. | வ. |
|---|---|---|---|---|
| 2005 | | | ரூ. | ரூ. |
| மார்ச்1 | வங்கி க/கு ப. | | 4,00,000 | |
| | சாதரணப் பங்கு விண்ணப்ப க/கு | | | 4,00,000 |
| | (பங்கொன்றிற்கு ரூ.20 வீதம் 20,000 பங்குகள் மீது பெறப்பட்ட பங்கு விண்ணப்ப பணம்) | | | |
| ஏப்ரல்1 | சாதாரணப் பங்கு விண்ணப்ப க/கு ப | | 2,00,000 | |
| | சாதாரணப் பங்கு முதல் க/கு | | | 2,00,000 |
| | (பங்கொன்றிற்கு ரூ.20 வீதம் 10,000 பங்குகள் மீது பெற வேண்டிய பங்கு விண்ணப்ப பணம்) | | | |
| | சாதாரணப் பங்கு ஒதுக்கல் க/கு ப | | 3,00,000 | |
| | சாதாரணப் பங்கு மூலதன க/கு | | | 3,00,000 |
| | (பங்கொன்றிற்கு ரூ.30 வீதம் 10000 பங்குகள் மீது பெற வேண்டிய பங்கு ஒதுக்கல் பணம்) | | | |
| | சாதாரணப் பங்கு விண்ணப்ப க/கு ப | | 80,000 | |
| | வங்கி க/கு | | | 80,000 |
| | (நிராகரிக்கப்பட் 4000 பங்குகள் மீது பெற்பட்ட விண்ணப்பப் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது) | | | |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| | சாதாரணப் பங்கு விண்ணப்ப க/கு ப. | | 1,20,000 | |
| | சாதாரணப் பங்கு ஒதுக்கல் க/கு | | | 60,000 |
| | பங்கு முனைமம் க/கு | | | 40,000 |
| | அழையா முன்பணக் க/கு | | | 20,000 |
| | (ஒதுக்கப்பட்ட 2000 பங்குகளின் மீது பெற்ற அதிகப்படியான விண்ணப்ப பணம் ஒதுக்கல், முனைமம் மற்றும் அழையா முன் பண கணக்குகளுக்கு மாற்றப்பட்டது) | | | |
| | வங்கி க/கு ப. | | 2,40,000 | |
| | சாதாரணப் பங்கு ஒதுக்கல் க/கு | | | 2,40,000 |
| | (பங்கு முனைமத் தொகை முழுமையாகப் பெறப்பட்டது) | | | |
| | வங்கி க/கு ப. | | 1,60,000 | |
| | சாதாரணப் பங்கு முனைமம் க/கு | | | 1,60,000 |
| | (பங்கு ஒதுக்கல் பணம் முழுமையாகப் பெறப்பட்டதற்காக) | | | |
| ஜூலை1 | சாதாரணப் பங்கு முதல் அழைப்பு க/கு ப | | 3,00,000 | |
| | சாதாரணப் பங்கு மூலதன க/கு | | | 3,00,000 |
| | (பங்கு ஒன்றிற்கு ரூ.30 வீதம் 10000 பங்குகள் மீது பெற வேண்டியது முதல் அழைப்புப் பணம்) | | | |
| | அழையா முன்பணக் க/கு ப. | | 20,000 | |
| | சாதாரணப் பங்கு முதல் அழைப்பு க/கு | | | 20,000 |
| | (அழையா முன்பணம் முதல் அழைப்பு கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | | |
| | வங்கி க/கு ப. | | 2,65,000 | |
| | சாதாரணப் பங்கு முதல் அழைப்பு க/கு | | | 2,65,000 |
| | (5,000 பங்குகள் தவில மீதமுள்ள பங்குகள் மீது பங்கொன்றிற்கு ரூ.50 முதல் அழைப்புப் பணம் பெறப்பட்டது) | | | |
| | அழையா முன்பண வட்டி க/கு ப. | | 300 | |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு | | | 300 |
| | (அழையா முன்பணம் ரூ.20,000 6% மூன்று மாத வட்டியாக செலுத்தப்பட்ட தொகை) | | | |

மூர்த்தி லிமிடெட் இருப்புநிலைக் குறிப்பு

31.8.2005 அன்று

| பொறுப்புகள் | | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. |
| பங்கு மூலதனம் அனுமதித்தது | | | வங்கி | 9,84,700 |
| வெளியிடப்பட்டது, ஒப்பியது மற்றும் செலுத்தப்பட்டது | | | வட்டி(சரிக்கட்ட வேண்டியது) | 300 |
| பங்கு ஒன்று ரூ.100 மதிப்புள்ள | | | | |
| 10,000 பங்குகளில் ஒன்றிற்கு | | | | |
| ரூ.80 வீதம் அழைக்கப்பட்டது. | 8,00,000 | | | |
| அழைப்பு பாக்கி | 15,000 | | | |
| | | 7,85,000 | | |
| பங்கு முனைமம் | | 2,00,000 | | |
| | | 9,85,000 | | 9,85,000 |

1. (ஊ) ஒப்புறுதி செய்தல் (UNDER WRITING)

பொதுவாக கம்பெனி வெளியிடும் எல்லாப் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் பொதுமக்கள் வாங்கி கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. எனவே கம்பெனி வெளியிடும் எல்லாப் பங்குகளும் கடன் பத்திரங்களும் பொதுமக்களால் வாங்கிக் கொள்ளப்படும் என்று சில நபர்கள் ஒப்புறுதி கொடுப்பார்கள். அவ்விதம் ஒப்புறுதி கொடுக்கும் நபர்களை ஒப்புறுதியாளர்கள் என்று கூறுகின்றோம். கம்பெனியின் பங்குகளைப் பொதுமக்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் எல்லாப் பங்குகளையும் எடுத்துக் கொண்டால் ஒப்புறுதியாளர்கள் பொறுப்பு ஏதுமில்லை.

இவ்விதம் உத்திரவாதம் கொடுப்பதற்காக ஒப்புறுதியாளர்களுக்கு கழிவு (கமிஷன்) கொடுக்கப்படுகிறது. இந்திய கம்பெனிச் சட்டம் 1956ன் படி ஒப்புறுதிக் கழிவு பினவரும் விகிதத்தைக் காட்டிலும் அதிகமாயிருக்கக் கூடாது.

| |
|---|
| கடன் பத்திர வெளியீட்டு விலையில் 2½% |
| பங்கு வெளியீட்டு விலையில் 5 சதவீதம். |

ஒப்புறுதியாளர்கள் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் யாவும் குறித்த விண்ணப்பங்கள் என்றழைக்கப்படும். அவ்விதம் அல்லாமல் நேரடியாகப் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் 'குறிக்கப்படாத விண்ணப்பங்கள' என்று சொல்லப்படுகிறது. கம்பெனி வெளியிடும் எல்லாப்பங்குகளையும் ஒரு ஒப்புறுதியாளர்கள் மட்டும் ஒப்புறுதி செய்திருந்தால் விண்ணப்பங்கள் குறிக்கப்பட்டுள்ளனவா அல்லது குறிக்கப்படவில்லையா எனக் காண்பது அவசியமில்லை. காரணம் என்னவெனில் ஒப்புறுதியாளர்கள் மூலம் வந்திருந்தாலும் சரி நேரடியாக விண்ணப்பங்கள் வந்திருந்தாலும் சரி, ஒப்புறுதியாளர்களுக்குக் கழிவு கொடுக்கப்படும். [1]இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்புறுதியாளர்கள் இருந்தால் தான் இம்மாதிரி பிரச்சனை எழும்.

ஒப்புறுதிக் கழிவும் பங்கு அல்லது கடன் பத்திர வெளியீட்டுத் தள்ளுபடியும் நட்டங்களாகும். எனவே இவ்விரு கணக்குகளும் பங்கு அல்லது கடன் பத்திர வெளியீட்டுச் செலவு கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

ஒப்புறுதிக் கழிவு செலுத்தப்படும் பொழுது பின்வரும் குறிப்பேட்டுப் பதிவு செய்யப்படுகிறது

......வெளியீட்டுக் கழிவு கணக்கு ப.

ஒப்புறுதியாளர் கணக்கு

---

* பங்கு மற்றும் கடன் பத்திரங்கள் மீது செய்யப்படும் ஒப்புறுதியானது காப்புறுதியைப் போன்றதாகும்.

(ஒப்புறுதியாளர் கழிவு செலுத்த வேண்டியிருப்பதற்கான பதிவு)

ஒப்புறுதியாளர் கணக்கு ப.

வங்கி கணக்கு

(கழிவு செலுத்துவதற்கான பதிவு)

எடுத்துக்காட்டு: 5

கணேசன் லிமிடெட் என்னும் நிறுவனம் ஒன்று ரூ.100 மதிப்புள்ள 1000 பங்குகளை ஒன்று ரூ.95 வீதம் வெளியிட்டது. திரு.காந்தி என்பவர் இவ்வெளியீட்டை ஒப்புறுதி செய்தார். அவருக்கு சட்டம் அனுமதிக்கும் உச்ச அளவு கழிவு கொடுப்பது என முடிவு செய்யப்பட்டது. பொதுமக்கள் 900 பங்குகளுக்கு விண்ணப்பம் செய்தனர். அவைகள் முழுவதும் ஒதுக்கப்பட்டு பணமும் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளையும், இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க. ஒப்புறுதியாளர்கள் தங்களின் ஒப்புறுதியாளர்கள் தங்களின் ஒப்புறுதியை நிறைவேற்றினர்.

**கணேசன் லிமிடெட்**

**குறிப்பேடு**

| நாள் | விபரம் | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | வங்கி க/கு ப. | | 86,400 | |
| | பங்கு வெளியீட்டு தள்ளுபடி க/கு ப. | | 3,600 | |
| | பங்கு முதல் க/கு | | | 90,000 |
| | (ஒன்று ரூ.100 மதிப்புள்ள 900 பங்குகள் ஒன்று ரூ.95 வீதம் வெளியடப்பட்டது) | | | |
| | காந்தி க/கு ப | | 9,600 | |
| | பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி க/கு | | 400 | |
| | பங்கு முதல் க/கு | | | 10,000 |
| | (ஒப்புறுதியாளருக்கு 100 பங்குகள் மூன்று ரூ.95 வீதம் ஒதுக்கப்பட்டது. இவை பொது மக்கள் ஏற்றுக் கொள்ளப்படாதது) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு வெளியீட்டு கழிவு க/கு ப | | 2,400 | |
| | காந்தி க/கு | | | 2,400 |
| | (1000 பங்குகள் மீது 2½% ஒப்புறுதி கழிவு செலுத்த வேண்டியது) | | | |
| | வங்கி க/கு ப | | 7,200 | |
| | காந்தி க/கு | | | 7,200 |
| | (மீதம் பெற வேண்டிய பணம் (9600—2400) காந்தி அவர்களிடமிருந்து பெறப்பட்டது) | | | |
| | பங்கு வெளியீட்டு செலவு க/கு ப | | 6,400 | |
| | பங்கு வெளியீட்டு தள்ளுபடி க/கு | | | 4,000 |
| | பங்கு வெளியீட்டு கழிவு க/கு | | | 2,400 |
| | (பின்னால் உள்ள இரண்டு கணக்குகளும் பங்கு வெளியீட்டு செலவு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |
| | (ஒதுக்கப்பட்ட 2000 பங்குகளின் மீது பெற்ற அதிகப்படியான விண்ணப்ப பணம் ஒதுக்கல், முனைமம் மற்றும் அழையா முன் பண கணக்குகளுக்கு மாற்றப்பட்டது) | | | |

**கணேசன் லிமிடெட்**
**இருப்புநிலைக் குறிப்பு .... அன்று**

| பொறுப்புகள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பங்கு | 1,00,000 | வங்கி | 93,600 |
| | | பங்கு வெளியீட்டுச் செலவு | 6,400 |
| | 1,00,000 | | 1,00,000 |

## பங்குகளின் பறிமுதல் மற்றும் ஒப்படைத்தல் (Forfeiture and Surrender of Shares)

ஒரு கம்பெனியில் பங்குகளுக்காக ஒரு நபர் விண்ணப்பிக்கும் பொழுது பங்குகளின் மீது செலத்துப்படவேண்டிய மீதமுள்ள தொகையை

குறிப்பு

தவறாமல் குறித்த நாளில் அந்நபர் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே கம்பெனியின் உறுப்பினர்கள் அழைப்புப் பணத்தைச் செலுத்தத் தவறினால் அழைப்புத் தொகையின் மீது வட்டி வசூலிக்க இயக்குநர்களுக்கு அதிகாரமுண்டு சங்க நடைமுறை விதிகளுக்கேற்ப வட்டியை வசூலிக்கலாம். வட்டியிருப்பினும் உறுப்பினர் ஒருவர் பணத்தைச் செலுத்தவில்லையெனில் அவரின் பங்குகளைப் பறிமுதல் செய்ய இயக்குநர்களுக்கு அதிகாரமுண்டு. அதாவது உறுப்பினரின் பங்குகளை அவரிடமிருந்து பறிமுதல் செய்து அவற்றைப் பிறிதொருவருக்கு விற்கலாம். ஆனால் இவ்விதம் செய்வதற்கு முன்பு உறுப்பினர்களுக்கு குறைந்தது 14 நாட்களுக்கு முன்பாவது முன்னறிவிப்பு கொடுக்க வேண்டும். இவ்விதம் அறிவிக்புக் கொடுத்த பின்பும் உறுப்பினர் பணம் செலுத்தவில்லை எனில் இயக்குநர் அவையின் தீர்மானத்தின்படி உறுப்பினரின் பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டு உறுப்பினர்க்கும் செய்தி அனுப்பப்படும். இதனுடைய விளைவு யாதெனின், பங்குகள் கணக்கேடுகளில் இருந்து நீக்கப்படுகின்றன. ஒரு உறுப்பினர் தானே பங்குகளை கம்பெனியிடம் சமர்பித்துவிட்டால் அதனை பங்குகளை ஒப்படைத்தல் என்று கூறுகிறோம். ஆனால் இங்கேயும் விளைவு ஒன்றுதான். அதாவது கணக்கேடுகளில் இருந்து பங்குகள் நீக்கப்படுகின்றன.

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் கணக்கு | ப | 8,000 | |
| பங்கு முதல் அழைப்பு க/கு | | | 2,000 |
| பங்கு இரண்டாவது அழைப்பு க/கு | | | 3,000 |
| பங்கு பறிமுதல் க/கு | | | 3,000 |

(முதல் மற்றும் இரண்டாவது அழைப்பு பணம் செலுத்தப்பட்டதற்காக 1,000 பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டதற்கான பதிவு)

குறிப்பு:

பங்குகளை நீக்கும்பொழுது பங்கு மூலதன கணக்கு பங்குகளின் முக மதிப்பு (ரூ.10) ற்கு பற்று வைக்கப்படாமல், ஏற்கனவே அழைக்கப்பட்ட தொகை (ரூ.8) பற்று வைக்கப்படுகிறது. செலுத்தப்படாத தொகைக்கு அந்தந்த அழைப்பு கணக்குகள் வரவு வைக்கப்படுகின்றன.

உறுப்பினர் ஏற்கனவெ செலுத்தியுள்ள தொகை (அழைக்கப்பட்டது ரூ.8. செலுத்தப்படாத முதல் அழைப்புக்கு ரூ.2 + செலுத்தப்படாத இரண்டாவது அழைப்பு ரூ.3 ஆக ரூ.5 எனவே செலுத்தப்பட்ட தொகை = ரூ.3) பங்குப் பறிமுதல் கணக்கில் வரவு வைக்கப்பட்டு இருப்பு நிலைக் குறிப்பில் பொறுப்புக்கான பகுதியில் ஒப்பிய முதலுடன் சேர்த்து காட்டப்படும். ஏனெனில் இது ஒரு மூலதன இலாபமாகும்.

**இருப்பு நிலைக் குறிப்பு (மாதிரி)**

| பொறுப்புகள் | | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|
| | ரூ. | | | ரூ. |
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள 9,000 | | | வங்கி | 75,000 |
| பங்குகள் ஒன்றிற்கு ரூ.8 விதம் | | | | |
| அழைக்கப்பட்டது. | 72,000 | | | |
| கூட்டு: | | | | |
| பங்கு பறிமுதல் க/கு | 3,000 | | | 75,000 |

**பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை மற வெளியீடு செய்தல்**

பறிமுதல் செய்யப்பட்ட பங்ககளை இயக்குநர்கள் மறுபடியும் வெளியீட செய்யலாம். தேவைப்பட்டால் அவைகளை தள்ளுபடி செய்தும் வெளியிடலாம். ஆனால் பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளின் மீது ஏற்கனவே பெறப்பட்டள்ள தொகையைக் காட்டிலும் தள்ளுபடி (நட்டம்) தொகை அதிகமாயிருக்ககூடாது. அதாவது செலுத்தப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிகமான அளவு நட்டம் மறு வெளியீட்டில் ஏற்படக்கூடாது.

முன் சொல்லப்பட்ட உதாரணத்தில் பறிமுதல் செய்யப்பட்டள்ள 1000 பங்குகளை ஒன்று ரூ.6 வீதம் வெளியிடுவதாகக் கொள்வோம். அப்படி எனில் ரூ.2,000 (ரூ.8—6—2x1000) நட்டமாகும். இந்நட்டத்தை பங்குப் பறிமுதல் கணக்கில் பற்று வைக்க வேண்டும். மறு வெளியீட்டிற்கு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவைச் செய்ய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| வங்கி க/கு | ப | 6,000 | |
| பங்கு பறிமுதல் க/கு | ப | 2,000 | |
| பங்கு முதல் க/கு | | | 8,000 |

(ரூ.8 வீதம் அழைக்கப்பட்ட 1,000 பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டு ஒன்று ரூ.6 வீதம் மறு வெளியீடு செய்யப்பட்டது)

மறு வெளியீடு செய்யப்பட்ட பின்பு உள்ளது இலாபம் ரூ.1000 (ரூ.3000—ரூ.2000) முதல் காப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு வரவு வைக்கப்படும். பறிமுதல் செய்யப்பட்ட பங்குகள் அத்தனையும் மறு வெளியீடு செய்யப்பட்டாலே இம்மாதிரி நிலை ஏற்படும். தொழில் நன்மதிப்பு ஆரம்பச் செலவுகள் போன்ற புலனாகாச் சொத்துக்களை நீக்குவதற்கு இதனைப் பயன்படுத்தலாம். ஆனால் இலாப செலவு ஈவு கணக்கிடுவதற்கு இதனைச் சேர்க்கக் கூடாது.

| | | | |
|---|---|---|---|
| பங்கு பறிமுதல் க/கு | ப. | 1,000 | |
| முதல் காப்பு க/கு | ப. | | 1,000 |

(பங்குப் பறிமுதல் கணக்கிலுள்ள மீதம் முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது)[1]

பங்குகளை மறுவெளியீடு செய்த பின்பு இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருக்கும்.

---

[1] பங்கு மற்றும் கடன் பத்திரங்களின் மீது செய்யப்படும் ஒப்புறுதியானது காப்புறுதியை போன்றதாகும்.

## இருப்புநிலைக் குறிப்பு

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள 10,000 | | வங்கி | 81,000 |
| பங்குகள் மீது ஒன்றிற்கு ரூ.8 | | (75000 + 6000) | |
| வீதம் அழைப்புச் செய்யப்பட்டது | 80,000 | | |
| முதல் காப்பு | 1,000 | | |
| | 81,000 | | 81,000 |

இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பகுதியில் முதல் காப்பு காட்டப்படும். பறிமுதல் செய்யப்பட்ட சில பங்குகள் சில பங்குகள் மறு வெளியீடு செய்யப்படாமல் இருந்தால் அப்பங்குகளின் மீது பெறப்பட்ட பறிமுதல் தொகையானது பங்குப் பறிமுதல் கணக்கிலே காட்டப்படும்.

எடுத்துக்காட்டு: 6

பாலன் லிமிடெட் ஒன்று 100 மதிப்புள்ள 10000 பங்குகளை 6 சதவீதம் தள்ளுபடியில் வெளியிட விண்ணப்பங்கள் கோரியது, தொகைகள் பின்வருமாறு பெறப்படும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ.25 |
| ஒதுக்கலின் போது | ரூ.34 |
| முதல் மற்றும் இறுதி அழைப்பு | ரூ.35 |

9000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன

100 பங்குகளுக்கான முதல் மற்றம் அழைப்புப் பணம் தவிர மற்றைய தொகைகள் முழுவதும் பெறப்பட்டது அப்பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டன. அதில் 50 பங்குகள் பங்கொன்று ரூ.90 வீதம் மறுபடியும் வெளியிடப்பட்டது. சட்ட விதிமுறைகளை அனுசரித்து கம்பெனியின் குறிப்பேட்டில் செய்ய வேண்டிய பதிவுகளைத் தருக.

குறிப்பு

**I. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்க உதவும் வினாக்கள்.**

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). பங்காதாயம் மற்றும் பங்குமுதலை திரும்பப் பெறுதல் ஆகிய இரண்டிலும் முன்னுரிமை பெற்ற பங்குகளை...... என்பர்.

ஆ). மக்கள் பங்கெடுப்புக்கு அளித்த பங்கு எண்ணிக்கைகளை விட குறைவான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்படும் நிலையை ...... என்பர்.

இ). பங்குதாரர்கள் தானாகவே தங்கள் பங்குகளை நிறுமத்திடம் திருப்பி தருவதை ...... என்கின்றோம்.

ஈ). நிறுமம் பெறும் பங்கு முனைமத் தொகையை இருப்பு நிலைக் குறிப்பில் ...... தலைப்பின் கீழ் காண்பிக்கப்படும்.

உ). முன்னுரிமை இல்லாத பங்குகள்...... பங்குகளாகும்.

இந்நடவடிக்கைகள் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பில் எங்ஙனம் காண்பிக்கப்படுகிறது.

விடை

குறிப்பேடு

| நாள் | விபரம் | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | வங்கி க/கு ப | | 2,25,000 | |
| | பங்கு விண்ணப்ப க/கு | | | 2,25,000 |
| | (9000 விண்ணப்பங்களுக்கான பணம் ரூ.2,25,000 (9000 x 25) பெற்றதற்கான பதிவு) | | | |
| | பங்கு விண்ணப்ப க/கு ப. | | 2,25,000 | |
| | பங்கு முதல் க/கு | | | |
| | (பங்கு விண்ணப்பத்தினை பங்கு முதலுக்கு மாற்றியதற்கான பதிவு) | | | |
| | பங்கு ஒதுக்கல் க/கு ப | | | |
| | பங்கு வெளியீட்டு தள்ளுபடி க/கு ப | | | |
| | பங்கு முதல் க/கு | | | |
| | (9000 பங்குகளை 6 சதவீதம் தள்ளுபடி (3,60,000—54,000=ரூ.3,06,000) யில் ஒதுக்கியதற்கான பதிவு) | | | |
| | வங்கி க/கு ப | | | |
| | பங்கு ஒதுக்கல் க/கு | | | |
| | (பங்கு ஒதுக்கல் பணம் பெற்றதற்கான பதிவு) | | | |
| | பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப. | | | |
| | பங்கு முதல் க/கு | | | |
| | (முதல் மற்றும் முடிவு அழைப்பு செய்ததற்கான பதிவு) (9000 x 35 = ரூ. 3,15,000) | | | |
| | பங்கு க/கு ப. | | 3,11,500 | |
| | பங்குமுதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு | | | 3,11,500 |
| | (8,900 பங்குகளுக்கான பணம் ரூ. 3,11,500 (3,15,000—3,500) பெற்றதற்கான பதிவு) | | | |
| | பங்கு முதல் க/கு ப. | | 10,000 | |
| | பங்கு வெளியீட்டு தள்ளுபடி க/கு | | | 600 |
| | பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு | | | 3,500 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு பறிமுதல் க/கு | | | 5,900 |
| | (6 சதவீதம் தள்ளுபடியில் வெளியிடப்பட்ட 100 பங்குகளை பறிமுதல் செய்ததற்கான பதிவு) | | | |
| | வங்கி க/கு ப. | | 4,500 | |
| | பங்கு வெளியீட்டு தள்ளுபடி க/கு ப. | | 300 | |
| | பங்கு பறிமுதல் க/கு | | 200 | |
| | பங்கு முதல் க/கு | | | 5,000 |
| | (பறிமுதலான பங்குகளில் 50 பங்குகளை ஒன்று ரூ.90 வீதம் மறுபடியும் வெளியிட்டதற்கான பதிவு) | | | |
| | பங்கு பறிமுதல் க/கு ப. | | 2,750 | |
| | மூலதனக்காப்பு க/கு | | | 2,750 |
| | (பறிமுதலான 50 பங்குகளை வெளியிட்ட பின் மீதமுள்ள தொகை ரூ.2750 (ரூ.2950–200) மூலதனக் காப்பிற்கு மாற்றியதற்கான பதிவு) | | | |

## பேரேடு

### வங்கி க/கு

| | | | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பங்கு விண்ணப்ப க/கு | 2,25,000 | இருப்பு கீ/இ | 8,47,000 |
| பங்கு ஒதுக்கல் க/கு | 3,06,000 | | |
| பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு | 3,11,500 | | |
| பங்கு முதல் க/கு | 4,500 | | |
| | 8,47,000 | | 8,47,000 |
| இருப்பு கீ/கொ | 8,47,000 | | |

### பங்கு முதல் க/கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி க/கு | 600 | பங்கு விண்ணப்ப க/கு | 2,25,000 |
| பங்கு முதல் மற்றும் இறுதி | | | |
| அழைப்பு க/கு | 3,500 | பங்கு ஒதுக்கல் க/கு | 3,06,000 |
| பங்கு பறிமுதல் க/கு | 5,900 | பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி க/கு | 54,000 |
| இருப்பு கீ/இ | 8,95,000 | பங்கு முதல் மற்றும் இறுதி | |

குறிப்பு

**2. சரியான பதிலைத் தேர்ந்தெடுக்க:**

1. விற்பனையாளருக்கு முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளாக ரூ.1,00,000, நிகரச் சொத்து ரூ.80,000க்கு மறுபயனாக கொடுக்கப்பட்டால் எஞ்சிய தொகை ரூ.20,000 எந்த கணக்கில் பற்று வைக்க வேண்டும்.
அ). இலாப நட்ட க/கு
ஆ). நற்பெயர் க/கு
இ). மூலதன காப்பு க/கு

2. அட்டவணை 'ஏ'ன்படி அழைப்பு நிலுவைக்கு வசூலிக்கப்படும் வட்டி வீதம் ஆண்டுக்கு
அ). 5% ஆ). 6%
இ). 12%

3. பங்கு முனைமத் தொகையை பயன்படுத்தப்படுவது
அ). பங்காதாயம் செலுத்த
ஆ). நற்பெயரை வழக்கொழிக்க
இ). முழுமையாகச் செலுத்தப்பட்ட போனஸ் பங்குகள் வெளியிட

4. பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை கழிவில் வெளியிடும் போது பற்று வைக்க வேண்டியது.
அ). பங்கு வெளியீடு கழிவு க/கு
ஆ). பங்கு பறிமுதல் க/கு
இ). இலாப நட்ட க/கு

5. பங்கு பறிமுதல் கணக்கு இருப்பு பறிமுதல் பங்கின் வெளியீட்டிற்குப் பின் மாற்றப்படுவது
அ). முதனக்காப்பு க/கு
ஆ). பங்கு முதல் க/கு
இ). இலாப நட்ட க/கு

6. ரூ.6 செலுத்தப்பட்ட பங்குகளின் மதிப்பு ரூ.10 எனில் பறிமுதல் செய்யப்பட்டு மறுவெளியீடு செய்வதற்கு நிர்ணயிக்கும் குறைந்த விலை பங்கு ஒன்றிற்கு விலை.
அ). ரூ.6 ஆ). ரூ.4
இ). ரூ.10

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| | | அழைப்பு க/கு | 3,15,000 |
| | | வங்கி க/கு | 4,500 |
| | | பங்கு வெளியீட்டு தள்ளுபடி க/கு | 300 |
| | | பங்கு பறிமுதல் க/கு | 200 |
| | 9,05,000 | | 9,05,000 |
| | | | 8,95,000 |

பங்கு விண்ணப்ப க/கு

| | ரூ. | | ரூ |
|---|---|---|---|
| பங்கு முதல் க/கு | 2,25,000 | வங்கி க/கு | 2,25,000 |
| | 2,25,000 | | 2,25,000 |

பங்கு ஒதுக்கல் க/கு

| | ரூ. | | ரூ |
|---|---|---|---|
| பங்கு முதல் க/கு | 3,06,000 | வங்கி க/கு | 3,06,000 |
| | 3,06,000 | | 3,06,000 |

பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு

| | ரூ. | | ரூ |
|---|---|---|---|
| பங்கு முதல் க/கு | 3,15,000 | வங்கி க/கு | 3,11,500 |
| | | பங்கு முதல் க/கு | 3,500 |
| | 3,15,000 | | 3,15,000 |

பங்கு பறிமுதல் க/கு

| | ரூ. | | ரூ |
|---|---|---|---|
| பங்கு முதல் க/கு | 200 | பங்கு முதல் க/கு | 5,900 |
| மூலதனக் காப்பு க/கு | 2,750 | | |
| இருப்பு க/கு | 2,950 | | 5,900 |
| | 5,900 | | 2,950 |

பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி க/கு

| | ரூ. | | ரூ |
|---|---|---|---|
| பங்கு முதல் க/கு | 54,000 | பங்கு முதல் க/கு | 600 |
| மூலதனக் காப்பு க/கு | 300 | இருப்பு கீ/கொ | 54,300 |
| | 54,300 | | 54,300 |
| இருப்பு கீ/கொ | 53,700 | | |

மூலதனக் காப்பு க/கு

| | ரூ. | | ரூ |
|---|---|---|---|
| இருப்பு கீ/இ | 2,750 | பங்கு பறிமுதல் க/கு | 2,750 |
| | 2,750 | | 2,750 |
| | | இருப்பு கீ/கொ | 2,750 |

இருப்புநிலைக் குறிப்பு
..... தேதியில் உள்ளவாறு

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| அனுமதித்த வெளியிட்ட முதல் | | வங்கி | 8,47,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள | | பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி | 53,700 |
| 10000 பங்கருள் | 10,00,000 | | |
| ஒப்பிய மற்றும் செலுத்திய முதல் | | | |
| ஒன்று மற்றும் செலுத்திய முதல் | | | |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள | | | |
| 8950 பங்குகள் | 8,95,000 | | |
| மூலதனக் காப்பு | 2,750 | | |
| பங்கு பறிமுதல் | 2,950 | | |
| | 9,00,700 | | 9,00,700 |

### 6.2.1. முன்னுரிமைப் பங்குகளை மீட்புச் செய்தல்

இந்தியக் கம்பெனிச் சட்டம் 1956 நிறைவேற்றப்பட்ட பிறகு பின்வரும் இருவகையான பங்குகள் மட்டுமே கம்பெனிகளால் வெளியிடப்படலாம்.

1) சாதாரணப் பங்குகள்
2) முன்னுரிமைப் பங்குகள்

குறிப்பு

**II. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி**

**1). சரியா அல்லது தவறா:**

அ). ஒரு நிறமம் தனது முன்னுரிமை பங்குகளை மீட்க முடியாது.

ஆ). புதிதாக கடன் பத்திரங்களை வெளியிட்டு வரும் பணத்திலிருந்து மீட்பு முன்னுரிமை பங்குகளை மீட்க முடியும்.

இ).முழுமையாக செலுத்தப் பட்ட முன்னுரிமைப் பங்கு களை மட்டுமே மீட்க முடியும்.

ஈ). முன்னுரிமை பங்கின் மீட்பின் மீதான முனைமத் தொகையை இலாபத்தில் தான் பற்று வைக்க வேண்டும்.

உ). மூலதன மீட்பு கணக்கானது சில்லறை செலவுகள் மற்றும் நட்டங் களை வழக்கொழிக்கத்தான் பயன்படுத்த வேண்டும்.

பிறவகைப் பங்குகளின் பங்குதாரர்கட்கு இலாப ஈவு வழங்கு முன் அதனைப் பெறும் உரிமையும் கம்பெனி கலைக்கப்படும் பொழுது கடன்கள் அடைக்கப்பட்ட பின்னர் முதன் முதலில் பங்குத் தொகைகளைத் திரும்ப பெறும் உரிமையையும் உடையவை முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன. மற்றவை சாதரணப் பங்குகளாகும்.

கம்பெனியின் நடைமுறைவிதிகள் அனுமதித்தால் பின்வரும் பலவகைப்பட்ட கூடுதல் உரிமைகள் உள்ள முன்னுரிமைப் பங்குகளையும் வெளியிடலாம்.

1. ஒரு ஆண்டில் போதுமான அளவு இலாபம் இல்லை எனில் இயக்குநர்கள் இலாப ஈவு வழங்கமாட்டார்கள். ஆனால் பின்வரும் ஆண்டுகளில் அதிகமான இலாபம் பெறும் போது இலாப ஈவு பெறாத ஆண்டின் பாக்கித் தொகையையும் சேர்த்து இவ்வாண்டில் பெறுவதற்கான கூடுதல் உரிமையை உடைய பங்குகளை குவியா முன்னுரிமை பங்குகள் எனக் கூறுகிறோம்.

இலாப ஈவு வழங்கப் பெறா ஆண்டுகட்குரிய தொகையினைப் பெறும் உரிமை இல்லை எனில் அவை குவியா முன்னுரிமை பங்குகள் எனப்படும்.

குறிப்பிட்ட இலாப ஈவை முன்னுரிமை பங்குதாரர்களுக்கும் இயக்குநர்கள் பரிந்துறை செய்யும். இலாப ஈவு சாதாரணப் பங்குதாரர்களுக்கும் வழங்கிய பின்னர் மீதமிருக்கக் கூடிய இலாபத்தில் பங்கு பெறும் உரிமையுடைய முன்னுரிமைப் பங்குகளையே எஞ்சிய இலாபத்தில் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள் என்று அழைக்கின்றோம்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் போதுமான அளவு இலாபம் இல்லை எனினும் கூட குறிப்பிட்ட இலாப ஈவு செலுத்தப்படும் என விற்பனையாளர்களினால் உத்ரவாதம் செய்யப்பட்ட பங்குகளை உத்திரவாத முன்னுரிமைப் பங்குகள் என அழைக்கின்றோம்.

பின்னால் ஒரு குறித்த நாளில் அல்லது எந்நேரத்திலும் கம்பெனியின் விருப்பப்படி பங்குகள் மீட்கப்படும் என்னும் நியந்தனையுடன்

வெளியிடப்படும் முன்னுரிமைப் பங்குகளை மீட்பு முன்னுரிமைப் பங்குகளை வெளியிடுவதற்கும் மீட்பதற்கும் சட்டத்தில் பல நிபந்தனைகள் உள்ளன. பங்கு வெளியீட சம்மந்தமாக வெளியிடப்படும் தகவலறிக்கையிலும் இது பற்றிய நிபந்தனைகள் யாவும் கொடுக்கப்பட வேண்டும். மேலும் முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு பின்வரும் சட்டசரத்துகளுக்கு உட்பட்டது.

1. முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை மட்டுமே மீட்பு செய்ய முடியும்.
2. [1]இலாபத்திலிருந்து அல்லது புதிய பங்குகளின் வெளியீட்டு மூலம் புதிய பங்குகள் மீட்பு நோக்கத்திற்கு பணம் பெறும் எண்ணத்துடன் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். கிடைக்கப் பெற்ற பணத்தை கொண்டு மட்டுமே மீட்பு செய்ய முடியும்(ஒரு பகுதியை இலாபத்திலிருந்து மற்றொரு பகுதியை புதிய பங்கு வெளியீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தைக் கொண்டும் அவைகளை மீட்புச் செய்யலாம்).
3. இலாபத்திலிருந்து பெற்ற தொகையினால் அவைகள் மீட்கப்பட்டால் அம்மாதிரி மீட்புச் செய்யப்பட்ட பங்குகளின் முகமதிப்பிற்குச் சமமான தொகையை 'மூலதன மீட்புக் காப்பு கணக்கிற்கு' மாற்ற வேண்டும். இம்மாதிரி மாற்றுவதற்கு இலாப நட்டக் கணக்கில் அல்லது இலாபத்திலிருந்து சேர்த்து வைக்கப்பட்டுள்ள காப்பு கணக்கில் பற்று வைக்க வேண்டும்.
4. முன்னுரிமைப் பங்குகளை மீட்பு செய்வதற்கு முனைமத் தொகை ஏதாவது செலுத்த வேண்டியிருப்பின் அத்தொகையை இலாப நட்டக் கணக்கு அல்லது பங்கு முனைமக் கணக்கிலிருந்து ஒதுக்க வேண்டும்.

*கடந்த கால இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்ட காப்புகளும் அதில் சேர்ந்துள்ளன.

குறிப்பு

2). கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ). முன்னுரிமை பங்குகள்... எனில் அவற்றை மீட்க இயலாது.

ஆ). மீட்பு முன்னுரிமைப் பங்குகளை முனைமத்தில் மீட்பதற்கான தொகையை ... கணக்கு அல்லது ... கணக்கிலிருந்துதான் எடுக்க இயலும்.

இ). மூலதன மீட்பு காப்புக் கணக்கானது செலுதப்பட்ட ...... வெளியிடுவதற்கு பயன்படுத்த முடியும்.

3). சரியான பதிலைச் சுட்டிக்காட்டுக.

அ). மீட்பின் போது மீட்புக்கு சமமான தொகையை இலாபத்திலிருந்து எடுத்து ......... க்கு மாற்ற வேண்டும்.
1). மேம்பாட்டுக் கழிவுக் காப்பு
2). மூலதன மீட்பு காப்பு
3). பொதுக் காப்பு

ஆ). மூலதன மீட்பு காப்பு கணக்கிற்கு மாற்றக்கூடியது.
1). பொதுக்காப்பு
2). பங்கு முனைமக் கணக்கு
3). மூலதனக் காப்பு

குறிப்பு

5. முழுவதும் செலுத்தப்பட்ட **போனசுப் பங்குகளை வெளியிட மூலதன மீட்புக் காப்புக் கணக்கை பயன்படுத்தலாம். அல்லது அப்படியே வைத்திருக்க வேண்டும். இக்கணக்கை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் எனில் நீதி மன்றத்தின் அனுமதி வேண்டும்.

மீட்புச் செய்வதினால் மீட்பு முன்னுரிமைப் பங்குதாரர்களின் பணம் செலுத்தப்படுகிறது. ஆனால் இதற்கு தேவைப்படும் பணம் இலாபத்திலிருந்து அல்லது புதிய பங்கு வெளியீட்டின் மூலம் பெறப்படுகிறது. ஆனால் இம்மாதிரி பங்குதாரர்களின் ஒரு பகுதியினர், புதிய பங்குதாரர்களால் மாற்றப்படுவதற்கு பதிலாக, இலாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு தொகை மூலதன மீட்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, நிரந்தரமாக வைத்திருக்கப்படுகிறது. இத்தொகை இலாப ஈவு பகிர்வதற்கு பயன்படுத்த முடியாது.

**நினைவு கொள்க**

1. மீட்பு முன்னுரிமைப் பங்குகளுக்குச் செலுத்த வேண்டிய முனைமத் தொகையை கணக்கிட்டு

   இலாப நட்ட கணக்கு பற்று வைத்து
   மீட்பு முனைமக் கணக்கு வரவு வைக்கவும்

2. மூலதன மீட்பு காப்பு கணக்கிற்கு எவ்வளவு மாற்ற வேண்டும் என்பதைக் கண்டறிந்து இலாப நட்டக் கணக்கு (மற்றும் அல்லது பொது காப்பு கணக்கு) பற்று வைத்து

   மூலதன மீட்பு காப்பு கணக்கு வரவு வைக்கவும்

குறிப்பு:

மீட்கப்பட்ட முன்னுரிமைப் பங்குகளின் முக மதிப்பிற்குச் சமமாக இத்தொகை இருக்கும். ஆனால் புதிய பங்குகள் ஏதாவது வெளியிடப்பட்டிருந்தால் பின் வரும் முறையைக் கையாளவும்.

3. மீட்கப்படும பங்குகளின் முக மதிப்பிலிருந்து புதிய பங்குகளின் முக மதிப்பை கழித்து விடவும்.

   மீட்பு முன்னுரிமைப் பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்தப் பணத்தை மாற்றவும்.

** செம்மையாக நடைபெற்று வரும் கம்பெனிகளில், எல்லா இலாபத்தையும் இலாப ஈடாக கொடுக்காமல், அவற்றை இயக்குநர்கள் காப்பாகச் சேமித்து வைக்கலாம். பின்னால் ஒரு நாளில் இம்மாதிரி சேமித்து வைக்கப்பட்ட காப்புகளை ரொக்கமாகப் பிரித்துக் கொடுத்தால் பண நெருக்கடி ஏற்படும் என்ற காரணத்தினால் போனசு பங்குகளாக (கூடுதல் பங்குகள்) பங்குதாரர்களுக்கு கொடுக்கலாம்.

குறிப்பு

மீட்பு முன்னுரிமைப் பங்கு முதல் கணக்குபற்று.
மீட்பு முனைமம் கணக்கு பற்று
மீட்பு முன்னுரிமைப் பங்குதாரர்கள் வரவு

4. புதிய பங்குகள், ஏதும் வெளியிட்டால் பின்னால் வரும் பதிவு மேலே சொல்லப்பட்ட மூன்று பதிவுகளுக்கும் முன்னால் வர வேண்டும்.
வங்கி கணக்கு பற்று
பங்கு முதல் கணக்கு வரவு
பங்கு முனைமம் கணக்கு வரவு

**எடுத்துக்காட்டு: 7**

2004 டிசம்பர் 31ஆம் நாளன்று இனியவன் லிமிடெட் என்னும் நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள | | பலவகை சொத்துக்கள் | 9,00,000 |
| 200 சாதாரணப் பங்கு | 2,00,000 | வங்கி | 1,00,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 3000 | | | |
| 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 3,00,000 | | |
| 6 சதவீதம் கடன் பத்திரங்கள் | 1,00,000 | | |
| பொதுக் காப்பு | 1,50,000 | | |
| இலாப நட்டக் க/கு | 1,00,000 | | |
| பற்பல கடனீந்தோர் | 1,50,000 | | |
| | 10,00,000 | | 10,00,000 |

குறிப்பு

ஒன்று ரூ.105 வீதம் முன்னுரிமைப் பங்குகள் அதே நாளில் மீட்புச் செய்யப்பட்டது. இதற்காக வேண்டி ஒன்று ரூ.150 வீதம் 1000 சாதாரணப் பங்குகள் வெளியிடப்பட்டது. எல்லாப் பங்குகளுகம் பொது மக்களால் எடுத்துக் கொள்ளப்பட்டன.

குறிப்பேட்டுப் பதிவுகளையும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

## குறிப்பேடு

| நாள் | விபரம் | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 2004 | வங்கி க/கு ப. | | 1,50,000 | |
| | சாதாரணப் பங்குகள் க/கு | | | 1,00,000 |
| | பங்கு முனைமம் க/கு | | | 50,000 |
| | (ஒன்று ரூ.150 வீதம் 1000 பங்குகள் வெளியிடப்பட்டது) | | | |
| | இலாப நட்ட க/கு ப | | 15,000 | |
| | மீட்பு முனைமம் க/கு | | | 15,000 |
| | (இலாபத்திலிருந்து மீட்பு முனைமத் தொகை ஒதுக்கப்பட்டது) | | | |
| | 6% மீட்பு முன்னுரிமைப் பங்கு முதல் க/கு ப. | | 3,00,000 | |
| | மீட்பு முனைமம் க/கு | | 15,000 | |
| | 6% மீட்பு முன்னுரிமைப் பங்குதாரர்கள் க/கு | | | 3,15,000 |
| | (6% மீட்பு முன்னுரிமைப் பங்குகள் 3000 மீட்பு செய்வதற்குத் தேவைஙான பணம் மாற்றப்பட்டது) | | | |
| | பொதுக் காப்பு க/கு ப. | | 1,50,000 | |
| | இலாப நட்ட க/கு ப. | | 50,000 | |
| | மூலதன மீட்பு கணக்கு தொகை பின்வருமாறு மாற்றப்படுகிறது) | | | 2,00,000 |
| | மீட்கப்பட வேண்டிய | | | |
| | பங்கின் முகமதிப்பு 3,00,000 | | | |
| | கழிக்க: புதிதாக | | | |
| | வெளியிடப்பட்ட முகமதிப்பு ரூ. 1,00,000 | | | |
| | 2,00,000 | | | |
| | 6% மீட்பு முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு க/கு ப | | 3,15,000 | |
| | வங்கி க/கு | | | 3,15,000 |
| | (ரூ. 65,000 வங்கியிலிருந்து அதிகப்பற்றாகப் பெற்று பொறுப்பு நீக்கப்படுகிறது. கையில் உள்ள இருப்பு ரூ.1,00,000 பங்கு வெளியீட்டுப் பணம் ரூ.1,50,000) | | | |

### இனியவன் லிமிடெட்

### இருப்புநிலைக் குறிப்பு

### 2005 ஜனவரி 1ம் தேதியன்று

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பங்கு முதல் | | பற்பல சொத்துக்கள் | 9,00,000 |
| அனுமதித்தது... | | | |
| வெளியிட்டது, ஒப்பியது, | | | |
| மற்றும் செலுத்தியது: | | | |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள | | | |
| 100000 பங்குகள் முழுவதும் | | | |
| அழைக்கப்பட்டு செலுத்தப்பட்டது | 3,00,000 | | |
| காப்புகள் மற்றும் உபரி | | | |
| மூலதன மீட்பு க/கு | 2,00,000 | | |
| பங்கு முனைமம் க/கு | 50,000 | | |
| இலாப நட்ட க/கு | 35,000 | | |
| பிணைக்கடன்கள் | | | |
| 6 சதவீதம் கடன் பத்திரங்கள் | 1,00,000 | | |
| வங்கி அதிகப்பற்று | 65,000 | | |
| பற்பல கடனீந்தோர் | 1,50,000 | | |
| | 9,00,000 | | 9,00,000 |

### 6.2.2. கடன் பத்திரங்களை வெளியிடல் மற்றும் மீட்டல்

சம மதிப்புடைய பங்குகளைக் கொண்டது பங்கு மூலதனம் என்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். அதைப் போலவே சம மதிப்புடைய கடன் பத்திரங்களை (Debentures) வெளியீட்டு கம்பெனி தனக்கு வேண்டியளவு பணத்தை பொது மக்களிடமிருந்து கடனாகப் பெறலாம். பங்குகளைப் போலவே கடன் பத்திரங்களும் தகவலறிக்கையில் அடிப்படையாகக் கொண்டு வெளியிடுகின்றன. அக்கடன் பத்திரங்களை வாங்கும் படி பொதுமக்களுக்கு அழைப்பு விடப்படுகிறது. பங்குகள் வாங்க எப்படி

விண்ணப்பம் செய்ய வேண்டுமே அதைப் போலவே கடன் பத்திரங்கள் வாங்கவும் விண்ணப்பம் செய்ய வேண்டும். கம்பெனிக்கு விண்ணப்பங்கள் வந்து சேர்ந்து பின்னர் இயக்குநர்கள் அவற்றை பரிசீலித்து கடன் பத்திரங்களை விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்குவர்.

பங்குகள் வெளியிடும் போது என்ன குறிப்பேட்டுப் பதிவுகளைச் செய்வோமோ அதைப் போன்ற குறிப்பேட்டுப் பதிவுகளையே கடன் பத்திரங்களை வெளியிடும் போதும் செய்ய வேண்டும். பங்குகள் என்ற சொல்லுக்குப் பதிலாக கடன் பத்திரங்கள் என்ற சொல்லை உபயோகப்படுத்த வேண்டும் என்பதை மாணவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இருப்பு நிலைக் குறிப்பில் பொறுப்புக்கள் பகுதியில் கடன் பத்திரங்கள் காட்டப்படும்.

**எடுத்துக்காட்டு: 8**

சாமி லிமிடெட் என்னும் நிறுவனம் ஒன்று ரூ.100 மதிப்புள்ள 9 சதவீதம் கடன் பத்திரங்கள் 3000த்தை வெளியிட்டது. பணம் பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் பொழுது ரூ.20ம் மீதிப் பணத்தைப் பத்திரங்களை ஒதுக்கியவுடனும் செலுத்த வேண்டும். 2,000 கடன் பத்திரங்களுக்குப் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தன. அவை ஒதுக்கப்பட்டன பெற வேண்டிய பணம் முழுவதும் பெறப்பட்டது.

குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதுக இருப்பு நிலைக் குறிப்பையும் காட்டுக, செய்முறைக் குறிப்புகள்.

வெளியிட்டது 3,0000 கடன் பத்திரங்கள்

விண்ணப்பித்தது மற்றும் ஒதுக்கியது 2,000 கடன் பத்திரங்கள்

விண்ணப்பிக்கும் பொழுது ரூ.20 x 2,000 = ரூ. 40000

மீதம் (ரூ.100 — 20) = ரூ.80.

ஒதுக்கும் பொழுது ரூ.80 x 2,000 = ரூ.1,60,000

## சாமி லிமிடெட்

### குறிப்பேடு

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | வங்கி க/கு ப. | | 40,000 | |
| | கடன் பத்திர விண்ணப்ப க/கு | | | 40,000 |
| | (ஒன்றிற்கு ரூ.20 வீதம் 2000 கடன் பத்திரங்கள் மீது பெற்ற விண்ணப்ப பணம்) | | | |
| | கடன் பத்திர விண்ணப்ப க/கு ப. | | 40,000 | |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 40,000 |
| | (விண்ணப்பப் பணம் கடன் பத்திரங்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | | |
| | கடன் பத்திர ஒதுக்கல் க/கு ப. | | 1,60,000 | |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 1,60,000 |
| | (ஒன்றிற்கு ரூ.80 வீதம் 2000 கடன் பத்திரங்கள் மீது பெற வேண்டிய ஒதுக்கல் பணம்) | | | |
| | வங்கி க/கு ப. | | 1,60,000 | |
| | கடன் பத்திர ஒதுக்கல் க/கு | | | 1,60,000 |
| | (ஒதுக்கல் பணம் தவறாமல் பெறப்பட்டது) | | | |

## சாமி லிமிடெட்
### இருப்புநிலைக் குறிப்பு

.... நாளன்று

| சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| 9% கடன் பத்திரங்கள் | 2,00,000 | வங்கி | 2,00,000 |
| | 2,00,000 | | 2,00,000 |

ஒன்று ரூ.100 மதிப்புள்ள 2000 கடன் பத்திரங்களின் மொத்த மதிப்பும் ஒரே சமயத்தில் செலுத்தப்பட்டால் பின்வரும் குறிப்பேட்டுப் பதிவு செய்யப்படும்.

வங்கி க/கு ப. ரூ.2,00,000

கடன் பத்திரங்கள் க/கு ரூ.2,00,000

(ஒன்று ரூ.100 வீதம் 2000 கடன் பத்திரங்கள் வெளியிட்டு பெற்ற பணம்)

குறிப்பு

கடன் பத்திரங்களை நிபந்தனைகளுடன் வெளியிடுவதற்கு சட்டத் தடைகள் எதுவும் இல்லை. பின்வரும் முறைகளில் கடன் பத்திரங்களை வெளியிடலாம்.

| வரிசை | பெயரளவு (முகமதிப்பு) | வெளியீட்டு விலை | மீட்பு (திரும்ப செலுத்தும் விலை) | |
|---|---|---|---|---|
| 1. | ரூ.100 | ரூ.100 | ரூ.100 | சமநிலையில் வெளியிடப்பட்டது |
| 2. | ரூ.100 | ரூ.95 | ரூ.100 | தள்ளுபடி செய்து வெளியிடப்பட்டது |
| 3. | ரூ.100 | ரூ.105 | ரூ.100 | முனைமத் தொகையுடன் வெளியிடப்பட்டது |
| 4. | ரூ.100 | ரூ.100 | ரூ.105 | சமநிலையில் வெளியிடப்பட்டு முனைமத் |
| | | | | தொகை செலுத்தி மீட்க வேண்டியது |
| 5. | ரூ.100 | ரூ.95 | ரூ.105 | தள்ளுபடி செய்து வெளியிடப்பட்டது முனைமத் |
| | | | | தொகை கொடுத்து மீட்க வேண்டியது |

மேற்கூறியவற்றிற்கு குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருமாறு இருக்கும் ....

**குறிப்பேடு**

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | வங்கி க/கு ப. | | 100 | |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 100 |
| | (சமநிலையில் கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டது) | | | |
| | வங்கி க/கு ப. | | 95 | |
| | கடன் பத்திர வெளியீட்டு தள்ளுபடி க/கு | | 5 | |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 100 |
| | (கடன் பத்திரங்கள் தள்ளுபடி செய்து வெளியிடப்பட்டது) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப. | | 105 | |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 100 |
| | கடன் பத்திர முனைமம் க/கு | | | 5 |
| | (கடன் பத்திரங்கள் முனைமத்துடன் வெளியிடப்பட்டது) | | | |
| | வங்கி க/கு ப. | | 100 | |
| | கடன் பத்திர வெளியீடு நட்ட க/கு ப. | | 5 | |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 100 |
| | கடன் பத்திர மீட்பு முனைமம் க/கு | | | 5 |
| | (கடன் பத்திரங்கள் சமவிலையில் வெளியிடப்பட்டு, முனைமத் தொகையுடன் மீட்கப்பட வேண்டியவை) | | | |
| | வங்கி க/கு ப | | 95 | |
| | கடன் பத்திர வெளியீட்டு நட்டக் க/கு ப. | | 10 | |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 100 |
| | கடன் பத்திர மீட்பு முனைமம் க/கு | | | 5 |
| | (தள்ளுபடி செய்து வெளியிடப்பட்ட கடன் பத்திரங்கள் முனைமத்தொகை செலுத்தி மீட்கப்பட வேண்டியவை) | | | |

**கவனிக்க:**

1. கடன் பத்திங்கள் க/கு எப்பொழுதும் முகமதிப்பிற்கு வரவு வைக்கப்படுகிறது

2. கடன் பத்திர வெளியீட்டு தள்ளுபடி—ஒரு சிறப்பு நட்டமாகும். மீட்பினால் ஏற்படும் நட்டம் — ஒரு சிறப்பு நட்டமாகும்.

இந்நட்டங்கள் கணக்கிலிருந்து நீக்கப்படும் வரை இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துக்கள் பகுதியில் காட்டப்படும். இலாப நட்டக் கணக்கை அல்லது பங்குமுனைமக் கணக்கை பற்று வைத்து இவைகள் நீக்கப்பட வேண்டும்.

3. கடன் பத்திர முனைமக் க/கு — மூலதன லாபம்.

கடன் பத்திர மீட்பு முனைமக் க/கு – ஒரு பொறுப்பாகும்.

(இரண்டுமே இருப்புநிலைக் குறிப்பின் — பொறுப்புகள் பகுதியில் காட்டப்படுகின்றன)

4. எல்லாச் சூழ்நிலைகளிலும் கடன் பத்திரங்களின் முகமதிப்பின் மீதே வட்டி கணக்கிடப்பட்டது.

## 2. அ. துணைப்பிணையமாக கடன் பத்திரங்கள் வெளியிடல்

கம்பெனி பிற நபரிடமிருந்து கடன் பெறும் போது (உதாரணமாக ஒரு வங்கியிடமிருந்து கடன் பெறும் போது) தன்னுடைய கடன் பத்திரங்களையே கடனுக்கு கூடுதல் பிணையமாகக் கொடுக்கலாம். அம்மாதிரி வெளியிடப்படும் கடன் பத்திரங்களையே கடன் அல்லது அதிகப் பற்றிற்கு துணைப் பிணையம் என்று கூறுகின்றோம். நிலையான பிணையங்கள் ஏதேனும் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கு மேலாகவும் இணை கூட்டாகவும் துணைப் பிணையங்கள் செயல்படுகின்றன.

இம்மாதிரியான கடன் பத்திரங்களை வெளியிடும் போது கம்பெனியின் ஏடுகளில் பதிவு எதுவும் செய்ய வேண்டுவதில்லை. ஏனெனில் சிறிது காலத்திற்குப் பின் கடன் திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டால் கடன் பத்திரங்களின் மதிப்பிற்கு கம்பெனி பொறுப்பில்லை. கடன் திருப்பிச் செலுத்தப்பட்டவுடன் இக்கடன் பத்திரங்கள் கம்பெனிக்கு திருப்பி அனுப்பப்படுகிறது எனவே அம்மாதிரியான கடன் பத்திரங்கள் நிகழ்வடையாப் பொறுப்பாகவே கருதப்படுகிறது. எனவே இருப்புநிலைக்குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

| பொறுப்புக்கள் | | |
|---|---|---|
| | ரூ. | |
| வங்கியின் அதிகப்பற்று | | |
| (ரூ.1,00,000 மதிப்புள்ள 6% | 1,00,000 | |
| கடன் பத்திரங்களை | | |
| துணைப்பிணையமாகக் கொண்டது) | | |

மாறாக துணைப்பிணையாக வெளியிடப்பட்ட கடன் பத்திரங்கள் குறித்து பதிவு செய்தே ஆக வேண்டும் என்று கம்பெனி விரும்பினால் வெளியிடும் பொழுது கீழ்கண்ட பதிவினை செய்ய வேண்டும்.

கடன் பத்திரங்கள் அனாமத்துக் க/கு ப.

கடன் பத்திரங்கள் க/கு

கடன் பத்திரங்கள் அனாமத்துக் கணக்கு இருப்புநிலைக்குறிப்பின் சொத்துக்கள் பகுதியிலும் கடன் பத்திரங்கள் கணக்கு பொறுப்புகள் பகுதியிலும் காண்பிக்கப்படும். கடன் திரும்பச் செலுத்தப்பட்ட பின்பு மேற்கண்ட பதிவு கீழ்கண்ட தலைகீழாகத் திருப்பி எழுவதன் மூலம் அதனை நீக்க வேண்டும்.

கடன் பத்திரங்கள் க/கு ப.

கடன் பத்திரங்கள் அனாமத்துக் க/கு

**2. (ஆ) கடன் பத்திரங்கள் வெளியிடும் போது ஏற்படும் நட்டம் மற்றும தள்ளுபடியை நீக்குவது.**

கடன் பத்திரங்கள் வெளியிடுவதில் ஏற்படும் நட்டம் மற்றும் தள்ளுபடியை எவ்வளவு விரைவில் கம்பெனியின் ஏடுகளிலிருந்து நீக்க முடியுமோ அவ்வளவு விரைவில் நீக்க வேண்டும். எனினும் இதற்கு கட்டுப்பாடு எதுவுமில்லை. இம்மாதிரி நட்டங்கள் பெரும்பாலும் இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டு நீக்கப்படுகிறது. பங்கு முனைமம் க/கு அல்லது கடன் பத்திர முனைமம் கணக்கிற்கு மாற்றியும் அதை நீக்கலாம். வழக்கமாக பதியப்படும் குறிப்பேட்டுப் பதிவு,

இலாப நட்டக் க/கு ப.

கடன் பத்திர வெளியீட்டு நட்டக் (தள்ளுபடி) க/கு

(நட்டம் நீக்கப்படுகிறது)

ஒரே வருடத்தில் இந்த நட்டத்தைக் கணக்கேடுகளிலிருந்து நீக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சில ஆண்டுகளில் நீக்கினால் போதுமானது. எடுத்துக்காட்டாக ஒரு கம்பெனி ஒன்றின் மதிப்பு ரூ.100 வீதம் 1,000 கடன் பத்திரங்களை 6 சதவீதம் தள்ளுபடியுடன் வெளியிடுகிறது என்று கொள்வோம். மேலும் அக்கடன் பத்திரங்களை வருடத்திற்கு ரூ.20,000 வீதம் 5 வருடங்களில் மீட்க வேண்டும். என்றும்

குறிப்பு

கொள்வோம், மேலும் அக்கடன் பத்திரங்களை வருடத்திற்கு ரூ.20000 வீதம் 5 வருடங்களில் மீட்க வேண்டும்.

மொத்த தள்ளுபடி ரூ.6,000 இந்நட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய தொகையினை விகிதாச்சாரப்படி நீக்க வேண்டும். அதாவது கம்பெனியின் ஏடுகளில் கொடுக்க வேண்டிய கடன் முதலாண்டு தொடக்கத்தில் ரூ.1,00,000 எனவும் மூன்றாம் ஆண்டு ரூ.60,000 எனவும் காண்பிக்கும். ஆகவே செலுத்தப்பட வேண்டிய தொகையின் விகிதாச்சாரம் பின்வருமாறு இருக்கும்.

| | ரூ. | |
|---|---|---|
| முதல் ஆண்டு | 1,00,000 | 10:3:6:4:2 |
| இரண்டாம் ஆண்டு | 80,000 | அல்லது |
| மூன்றாம் ஆண்டு | 60,000 | 5:4:3:2:1 |
| நான்காம் ஆண்டு | 40,000 | மொத்தம் |
| ஐந்தாம் ஆண்டு | 20,000 | 15 |

ரூ. 6,000 தள்ளுபடியை பின்வருமாறு நீக்க வேண்டும்.

முதல் ஆண்டு $= 6000 \times \frac{5}{15} =$ ரூ.2,000

இரண்டாம் ஆண்டு $= 6000 \times \frac{4}{15} =$ ரூ.1,600

மூன்றாம் ஆண்டு $= 6000 \times \frac{3}{15} =$ ரூ.1,200

நான்காம் ஆண்டு $= 6000 \times \frac{2}{15} =$ ரூ.800

ஐந்தாம் ஆண்டு $= 6000 \times \frac{1}{15} =$ ரூ.400

ஒரு கம்பெனி ஒன்று ரூ.100 வீதம் 10,000 கடன் பத்திரங்களை 9.5 சதவீதம் தள்ளுபடியில் வெளியிடுகின்றன என்று கொள்வோம். ஐந்தாம் ஆண்டு முடிவிலிருந்து வருடத்திற்கு ரூ.1,00,000 வீதம் கடன் பத்திரங்கள் மீட்கப்பட வேண்டும்.

மொத்தத் தள்ளுபடி ரூ.95,0000

ஒவ்வொரு ஆண்டு செலுத்தப்பட வேண்டிய தொகையின் விகிதாச்சாரப்படி இத்தளுபடியை நீக்க வேண்டும்.

| வருடம் | செலுத்த வேண்டிய தொகை |
|---|---|
| 1..... | 10,00,000 |
| 2..... | 10,00,000 |
| 3..... | 10,00,000 |
| 4..... | 10,00,000 |
| 5..... | 10,00,000 |
| 6..... | 90,000 |
| 7..... | 80,000 |
| 8..... | 70,000 |
| 9..... | 60,000 |
| 10..... | 50,000 |
| 11..... | 40,000 |
| 12..... | 30,000 |
| 13..... | 20,000 |
| 14..... | 10,000 |
| | 95,00,000 |

முதல் ஐந்தாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி பின் வருமாறு நீக்கப்படும்

ரூ. 95000 $x \frac{10}{95}$ = ரூ. 10,000

ஆறாவது வருடம் ரூ. 95,000 $\frac{9}{95}$ = ரூ. 9,000

ஏழாவது வருடம் ரூ 95,000 $\frac{8}{95}$ = ரூ. 8,000

மற்றும் இதே போன்று கணக்கிடப்பட்டு பிற ஆண்டுகளிலும் நீக்கப்படும்.

## கடன் பத்திரங்களை மீட்டுப்பெறல் (Redemption of Debendtures)

ஒரு கம்பெனியானது பங்குகளை வெளியிட்டு தனக்கு தேவைப்படும் நீண்டகால மூலதனத்தை பொதுமக்களிடமிருந்து பெறலாம் என்பதை ஏற்கனவே கண்டோம். அதைப் போலவே பங்குகளுக்கு பதிலாக கடன் பத்திரங்களை வெளியிட்டும் தொகை பெறலாம். புங்குதாரர் எல்லோரும் கம்பெனியின் சொத்தக்காரர்களாக கருதப்படுவார்கள். ஆனால் அதே நேரத்தில் கடன் பத்திரதாரர்கள் கம்பெனியின் கடனீந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள். கடன் பத்திரங்கள் மீது வட்டி ஆண்டிற்கு ஒருமுறை அல்லது ஆறு மாங்களுக்கு ஒருமுறை செலுத்தப்படுகிறது. இம்மாதிரி செலுத்தப்படும் வட்டி கம்பெனியின் இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

**1. வெற்று அல்லது சாதாரணக் கடன் பத்திரம் (Naked or Simple Debenture)**

கம்பெனியின் சொத்துக்களை பிணையமாகக் குறிப்பிடமால் வெளியிடப்படும் கடன் பத்திரம் வெற்றுக் கடன் பத்திரம் அல்லது சாதாரணக் கடன் பத்திரம் என்றழைக்கப்படும்.

**2. அடைமானக் கடன் பத்திரம் (Mortgage Debenture)**

கம்பெனியின் சொத்துகளை பிணையமாகக் குறிப்பிட்டு வெளியிடப்படும் கடன் பத்திரங்கள் அடமானக் கடன் பத்திரங்கள் என்றழைக்கப்படுகின்றன.

**3. கொணர்பவர் கடன் பத்திரம் (Bearer debenture)**

கொணர்பவருக்கு செலுத்துமாறு வெளியிடப்படும் கடன் பத்திரம் இவ்விதம் கொணர்பவர் கடன் பத்திரங்கள் என்றழைக்கப்படுகின்றன. இது ஒருவரிடம் மற்றவரிடம் சேர்ந்த மாத்திரத்தில் இரண்டாமவருக்கு உரியதாகிறது.

**4. பதிவு செய்த கடன் பத்திரம் (Registered Debenure)**

கடன் பத்திரங்களின் பெயரை கடன் பத்திர ஏட்டில் பதிவு செய்தால் அதனை பதிவு செய்த கடன் பத்திரம் என்றழைக்கின்றோம். அதனை மாற்றித்தரும் பொழுத கம்பெனியிடம் மாற்றுப்பத்திரம் (Transfer Deed) மூலம் பதிவு செய்ய வேண்டும்.

**5. மீட்க முடியாத கடன் பத்திரம் (Irredeemable Debenture)**

இவ்வகை கடன் பத்திரங்களை மீட்பதற்கு தேதி எதுவும் குறிக்கப்படுவதில்லை. கம்பெனி கலைக்கப்படும் பொழுது அல்லது கம்பெனி வட்டியைச் செலுத்தத் தவறும் பொழுது இப்பத்திரங்களின் பணத்தை திரும்பப் பெறலாம்.

**6. மாற்றக்கூடிய கடன் பத்திரம் (Convertiable Debenture)**

கடன் பத்திரங்களை பங்குகளாகவோ முன்னுரிமை பங்குகளாகவோ மாற்ற ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருந்தால் அவ்வகை பத்திரங்களை மாற்றக்கூடிய கடன் பத்திரங்கள் என்று அழைக்கின்றோம்.

**7. மீட்புக் கடன் பத்திரம் (Redeemable Debenture)**

குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னரோ அல்லது கம்பெனி விரும்பிய பொழுதோ திருப்பிச் செலுத்தும் நிபந்தனையோடு கூடிய கடன் பத்திரம் மீட்கக் கூடிய கடன் பத்திரம் என்றழைக்கப்படும்.

கடன் பத்திரங்களின் பணத்தைத் திரும்பச் செலுத்துவதையோ மீட்பு என்று கூறுகிறோாம் பணத்தைத் திரும்பச் செலுத்துபவருக்கு சட்டபூர்வ தடைகள் ஏதுமில்லை. எனினும் பத்திரங்களை வெளியிடும் போது தகவலறிக்கையில் சொல்லப்படும் நிபந்தனைகள் அத்தனையும் நிறைவேற்றப்பட வேண்டும்.

பின்வரும் வழிகளில் ஏதாவது ஒரு முறையில் கடன் பத்திரங்களை மீட்புச் செய்லாம்.

1. வெளியிட்ட நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பணத்தை ஒரே தடவையில் செலுத்தி மீட்பது.

2. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தும் இதனை ஆண்டுத்தவணை முறை என்ற சொல்லுகிறோம்.
3. வெளிச்சந்தயில் வாங்குவதின் மூலம்.
4. மாற்றுக் கடன் மூலம்
5. கடன் கழிவு நிதி மூலம்.

**1. தொகை முழுவதும் ஒரே தடவையில் செலுத்தி மீட்பு செய்தல்**

கடன் பத்திரங்களை வெளியிடும் பொழுது வங்கிகணக்கு பற்று வைக்கப்பட்டு கடன் பத்திரக் கணக்கு வரவு வைக்கப்படுகிறது. கடன் பத்திரங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு பணத்தை மொத்தமாக செலுத்தும் போது

| |
|---|
| கடன் பத்திரங்கள் க/கு ப |
| கடன் பத்திரதாரர்கள் க/கு |
| (கடன் பத்திரங்களை கடன் பத்திரதாராகளுக்கு மாற்றுவதற்கான பதிவு) |
| கடன் பத்திரதாரர்கள் க/கு ப |
| வங்கி க/கு |
| (கடன் பத்திரதாரர்கள் பணம் செலுத்தப்பட்டது) |

**2. வருடாந்திர தவணை முறையில் மீட்புச் செய்தல்**

வருடாந்திர தவணை முறையில் பணம் செலுத்தி மீட்பு செய்யப்படும் பொழுது குறிப்பேட்டுப் பதிவுகள், மேலே 1ல் சொல்லி உள்ளதைப் போலவே வரும். குலுக்குச்சீட்டு மூலமாக மீட்பு செய்யப்பட வேண்டிய கடன் பத்திரங்கள் தேர்வு செய்யப்படுகின்றன.

**3. வெளிச் சந்தயில் வாங்குவதன் மூலம் மீட்புச் செய்தல்**

கடன் பத்திரங்களை மீட்பு செய்வதற்கு மற்றொருமுறை யாதெனில் அவற்றை வெளிச் சந்தையில் வாங்குவதாகும். இது மூலதன பங்குகளை வாங்குவதிலிருந்து மாறுபட்டதாகும். எனவே கம்பெனி தன்னுடைய கடன் பத்திரங்களை வாங்குவதற்குச் சட்டத்தில் தடை ஏதுமில்லை.

உதாரணமாக ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 10 கடன் பத்திரங்கள் ஒன்று ரூ. 95 வீதம் வெளிச் சந்தையில் வாங்கப்பட்டது. இம்மாதிரி வாங்கும் போது கடன் பத்திரம் ஒன்றிற்கு ரூ.5 வீதம் இலாபம் உள்ளது.

ஏனெனில் ரூ.95 செலுத்துவதின் மூலம் ரூ.100 பொறுப்பு நீங்குகிறது. குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு இருக்கும்.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| கடன் பத்திரங்கள் க/கு ப | 1,000 | |
| வங்கி க/கு | | 950 |
| கடன் பத்திர மீட்பு இலாப க/கு | | 50 |
| (வெளிச் சந்தையில் வாங்கியதன் மூலம் கடன் பத்திரங்கள் மீட்பு செய்யப்பட்டது) | | |

குறிப்பு: கடன் பத்திரங்களை மீட்பு செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபம் மூலதன இலாபமாக கருதப்படுகிறது. எனவே அது மூலதன காப்பு கணக்கிற்கு மாற்றப்படாலம். அல்லது கடன் பத்திர வெளியீட்டு தள்ளுபடி கணக்கிலுள்ள இருப்பை நீக்குவதற்கு பயன்படுத்தபடலாம். ஆனால் அதை லாப ஈவாக அளிப்பதற்கும் சட்டத்தில் தனை ஏதுவுமில்லை.

மேரே கூறப்பட்ட உதாரணத்தில் உள்ள 10 கடன் பத்திரங்கள் ஒன்று ரூ.103 வீதம் வாங்கப்பட்டதாக கொள்வோம். அப்படியெனில் கடன் பத்திரம் ஒன்றிற்கு ரூ.3 வீதம் நட்டம் ஏற்படுகிறது. குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு இருக்கும்.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| கடன் பத்திரங்கள் க/கு ப | 1,000 | |
| கடன் பத்திரங்கள் மீட்பு நட்ட க/கு ப | 30 | |
| வங்கி க/கு | | 1,030 |
| (கடன் பத்திரங்கள் வெளிச்சந்தையில் வாங்கி மீட்பு செய்யப்பட்டது) | | |

ஒரு கம்பெனியானது தன்னுடைய சொந்தக்கடன் பத்திரங்களை தானே வாங்கி அதை நீக்கி விடாமல் அப்படியே வைத்திருக்கலாம். மறுபடியும் கம்பெனி விரும்பும் பொழுது அவற்றை சந்தையில் விற்கலாம். அம்மாதிரி நிலையில் இவ்விதம் பெறப்படும் கடன் பத்திரங்கள் யாவும் முதலீடாகக் கருதப்படுகின்றது. எனவே சொந்தக் கடன் பத்திரங்களின் க/கு என்று சொல்லக்கூடிய புதிய கணக்கு பற்று வைக்கப்பட்டு வங்கி க/கு வரவு வைக்கப்படுகிறது. பின்னால் இக்கடன் பத்திரங்களை நீக்கும் பொழுது இலாபம் அல்லது நட்டம் ஏற்படலாம். அது கடன் பத்திர மீட்பு கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

கடன் பத்திரங்கள் நீக்கப்படும் வரை கம்பெனியானது தனது சொந்தக் கடன் பத்திரங்கள் மீது வட்டி செலுத்தாது. கடன் பத்திரங்கள் நீக்கப்பட்ட பின்பு, பட்டி செலுத்துவது பற்றிய கேள்வியே எழாது. இம்மாதிரி சேமிக்கப்படும் வட்டியானது கணக்கிற்கு கொண்டு வரப்படுகிறது. அதற்காக வேண்டி, கடன் பத்திர வட்டி க/கு பற்று வைக்கப்பட்டு இலாப நட்டக் க/கு வரவு வைக்கப்படுகிறது.

### 4. மாற்றுக் கடன் பத்திரங்கள் மூலம் மீட்பு செய்தல்

சில நேரங்களில் ஒரு கம்பெனியானது பணத்தைக் கொடுத்து கடன் பத்திரங்களை மீட்கப்படாமல் புதிய கடன் பத்திரங்கள் அல்லது பங்குகளை மாற்றாகக் கொடுத்து, கடன் பத்திரங்களை மீட்பு செய்வதும் உண்டு. அம்மாதிரி கடன் பத்திரங்கள் மாற்றுவதற்கு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவு தேவை.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| 6% கடன் பத்திரங்கள் க/கு ப | xxx | |
| 9% கடன் பத்திரங்கள் க/கு | | xxx |
| (ஒன்று ரூ.... மதிப்புள்ள 6% கடன் பத்திரங்களை | | |
| ஒன்று ரூ.... மதிப்புள்ள 9% கடன் பத்திரங்களாக மாற்றியதற்கு) | | |

5. கடன் கழிவு நிதி மூலமாகச் செய்தல்

குறித்த நாளில் பணத்தை மொத்தமாகச் செலுத்தி கடன் பத்திரங்களை மீட்க வேண்டுமெனில் கம்பெனி மிகவும் சிரமப்படும். ஏனெனில் பணத்தை மொத்தமாகச் செலுத்தினால் கம்பெனியின் நடைமுறை மூலதனம் பாதிக்கப்படலாம். எனவே கம்பெனிகள் பின்வரும் முறையைப் பின்பற்றினால் பணச்சிக்கல் எதுவும் எழாது. ஒவ்வொரு ஆண்டும் இலாபத்திலிருந்து ஒரு குறித்த தொகையை எடுத்து அரசாங்க பத்திரங்கள் போன்றவற்றில் முதலீடு செய்யலாம். அவ்விதம் செய்தால் கடன் பத்திரங்கள் முதிர்வு அடையும் பொழுது கடன் பத்திரதாரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய பணத்தை மொத்தமாக சேர்ந்துள்ள முதலீட்டிலிருந்து எளிதில் பெற்று விடலாது. அது மட்டுமில்லாமல் முதலீட்டிலிருந்து பெறப்படும் வட்டியை மீண்டும் முதலீடு செய்யலாம். இம்மாதிரி மொத்தமாக நிதியை சேர்ப்பதையே கழிவு நிதி முறை என்று கூறுகின்றோம்.

இதற்கான கணக்குப் பதிவுகள்

அ) முதல் வருடம்

1. இலாப நட்ட பகிர்வு க/கு ப

கழிவு நிதி க/கு — வருடாந்திர தவணை தொகை

(கடனீட்டு பத்திர மீட்புக்காக
இலாபத்திலிருந்து ஒதுக்கிய தொகை)

2. கழிவு நிதி முதலீட்டு க/கு ப

வங்கி க/கு — முதலீடு செய்யப்பட்ட தொகை

குறிப்பு : 1. முதல் பதிவு செய்வதற்கான எண்ணத்தை காட்டுகிறது

2. இரண்டாம் பதிவு எண்ணத்தை நிறைவேற்றியதற்கான பதிவு ஆகும்.

(ஆ) பின்வரும் ஆண்டுகளில்

வட்டியை பெற்றவுடன் 1. வங்கி க/கு ப

வட்டியாக பெறப்பட்ட

குறிப்பு

கடனீட்டு பத்திர தொகைக்கு

கழிவு நிதி முதலீட்டு

வட்டி க/கு

(முதலீட்டின் மீது பெறப்பட்டது)

வட்டியை கழிவு நிதிக் கணக்கிற்கு மாற்றும் பொழுது 1. (அ)

கடனீட்டுப் பத்திர

கழிவு நிதி முதலீட்டு

வட்டி க/கு

கழிவு நிதி க/கு

குறிப்பு: இரண்டு பதிவுகள் தேவைதானா என்று நினைக்கக்கூடும். ஆனால் கம்பெனிச் சட்டம் எல்லா வட்டி வருமானங்களையும் முடிவுக் கணக்கில் காட்ட வேண்டும் என்று கூறுவதால், கழிவு நிதி முதலீட்டின் மூலம் பெற்பட்ட வட்டியை நேரடியாக நிதிக் கணக்கில் வரவு வைக்கக்கூடாது.

| | | | |
|---|---|---|---|
| வருட இறுதியில் ஒதுக்க வேண்டிய தொகை | 2. | இலாபநட்டப் பகிர்வு க/கு ப | |
| | | கழிவு நிதி க/கு | வருடாந்திர தவணை தொகைக்கு |
| | | (இலாபத்திலிருந்து கடனீட்டுப் பத்திர மீட்புக்காக வருட இறுதியில் ஒதுக்கப்பட்ட தொகை) | |
| | 3. | கழிவு நிதி முதலீடு க/கு ப | |
| | | வங்கி க/கு | வருடாந்திர தவணை தொகையும் வட்டியும் முதலீடு செய்யப்பட்டது. |
| | | (வருடாந்திர தவணைத் தொகையும் பெறப்பட்ட வட்டியும் முதலீடு செய்யப்பட்டது) | |

### (இ) இறுதி வடிவம்

ஒவ்வோராண்டும் மேலே (ஆ) குறிப்பிட்டுள்ள பதிவுகளைச் செய்ய வேண்டும். ஆனால் இறுதியாண்டில் மட்டும் அதாவது, எவ்வாண்டில் கடனீட்டுப் பத்திரங்களை மீட்க வேண்டுமோ அவ்வாண்டில் மேலே குறிப்பிட்டுள்ள மூன்றாவது பதிவினை (முதலீடு செய்வதற்கான பதிவினை) செய்யக்கூடாது. ஏனெனில் இறுதியாண்டில் இருக்கின்ற முதலீடுகளை விற்று பணமாக்கி கடனீட்டுப் பத்திரதாரர்களுக்குச் செலுத்த வேண்டும்.

இறுதியாண்டில் மேலே உள்ள குறிப்பேட்டுப் பதிவுகளுடன் (ஆ) 1, 1—அ (2) பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளையும் செய்ய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| முதலீடுகள் | வங்கி க/கு | ப | பெறப்பட்ட தொகைக்கு |
| விற்கப்பட்டவுடன் | கழிவுநிதி முதலீட்டு க/கு | | தொகைக்கு |
| | முதலீடுகள் விற்கப்பட்டதற்கான பதிவு | | |
| விற்பனையில் கிடைத்த | கழிவு நிதி முதலீட்டுக் க/கு | ப | |
| | கழிவு நிதி க/கு | | |
| | முதலீட்டுகளை விற்றதனால் பெற்ற இலாபம் | | |
| | அல்லது | | |
| விற்பனையில் அடைந்த | கழிவு நிதி க/கு | ப | |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு | | |
| | (முதலீடுகளை விற்றதில் ஏற்பட்ட நட்டம்) | | |

(கழிவு நிதி முதலீட்டுக் கணக்கை முடித்து கழிவு நிதி கணக்கிற்கு மாற்ற வேண்டும் என்பதை நினைவு கொள்க)

| | | |
|---|---|---|
| கடனீட்டுப் பத்திர தொகையை | கடனீட்டுப் பத்திர க/கு | ப |
| திரும்பத் தருதல் | கடனீட்டுப் பத்திரதாரர்கள் க/கு | |
| | கடனீட்டுப் பத்திரதாரர்கள் க/கு | ப |
| | வங்கி க/கு | |
| | (கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு பணம் செலுத்தப்பட்டது) | |
| கழிவுநிதி கணக்கை | கழிவு நிதி க/கு | ப |
| | பொதுகாப்பு க/கு | |
| | (கழிவு நிதிக் கணக்கை பொதுகாப்பிற்கு மாற்றியதற்கு) | |

இலாபத்திலிருந்து கடனீட்டுப் பத்திரங்கள் மீட்பு செய்யப்பட்டது என்பதை கடைசிப் பதிவு காட்கின்றது. அதாவது கடன் பத்திரதாரர்களுக்கு செலுத்தப்படும் ரொக்கமானது இலாபத்திலிருந்த பெறப்பட்ட தொகையல்லாமல் சொத்து ஒன்றை விற்றுப் பெற்றதல்ல.

எடுத்துக்காட்டு: 9

2002 ஜனவரி 1—ல் கம்பெனி ஒன்று ரூ.100 மதிப்புள்ள கடன் பத்திரங்களை முகமதிப்பில் வெளியிடப்பட்டது. 2002 டிசம்பர் 31ல் முகமதிப்பில் இவை மீட்கப்பட வேண்டியவை. இதற்காக ஒரு கழிவு நிதி ஏற்படுத்தப்படுகிறது. முதலீட்டுகள் மீது ஆண்டிற்கு 5 சதவீதம் ஆண்டு வட்டி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறத. ஒவ்வொரு ஆண்டும் ரூ.0.180975 யை முதலீடு செய்தால் 5 ஆண்டு இறுதியில் ரூ.1 கிடைக்கும் என கழிவு நிதி வாய்ப்பாடு உணர்த்துகிறது.

5ம் ஆண்டு இறுதியில் முதலீடுகளை விற்றதில் ரூ.3,90,000 பெறப்பட்டது. அதே நாளில் கம்பெனியின் வங்கியிருப்பு ரூ.1,45,600 ஆக

இருந்தது. கடன் பத்திரங்கள் முழுமையாக மீட்கப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளையும் பேரேட்டுக் கணக்குகளையும் தயார் செய்க.

முதலீடுகள் ரூ.10 மடங்கிலும் செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்டது.

விடை: இலாபத்திலிருந்து செலுத்த வேண்டிய வருடாந்திர தவணையை கணக்கிட 0.180975ஐ ரூ.5,00,000ஆல் பெருக்க வேண்டும். பெருக்கினால் 9048.7500000 வரும் தசம புள்ளிகள் வைத்தோமானால் வருடாந்திர ஒதுக்குத் தொகை ரூ.90,487.50 என அறியலாம்.

| | | | ப. | | வ. | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | பை | ரூ. | பை |
| 2002 ஜன 1 | வங்கி க/கு ப. | | 5,00,000 | 00 | | |
| | கடனீட்டு பத்திரங்கள் க/கு (கடனீட்டு பத்திரங்கள் முகமதிப்பில் வெளியிடப்பட்டதற்கான பதிவு) | | | | 5,00,000 | 00 |
| டிச. 31[1] | இலாபநட்ட பகிர்பு க/கு ப. கழிவு நிதி க/கு (இலாபத்திலிருந்து பணம் ஒதுக்கப்பட்டது) | | 90,487 | 50 | 90,487 | 50 |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு ப. வங்கி க/கு (ஆண்டுத் தவணை ரூ.10ன் மடங்கில் முதலீடு செய்யப்பட்டது) | | 90,490 | 00 | 90,490 | 00 |
| 2003 டிச.31 | வங்கி க/கு ப. கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு (ரூ. 90,490 முதலீடு செய்வதில் 5% வட்டி பெறப்பட்டது) | | 4,524 | 50 | 4,524 | 50 |
| | கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு ப. கழிவு நிதி க/கு (வட்டியை கழிவுநிதிக்கு மாற்றியதற்கு) | | 4,524 | 50 | 4,524 | 50 |
| | இலாப நட்ட பகிர்வு க/கு ப. கழிவு நிதி க/கு (இலாபத்திலிருந்து ஆண்டுத்தவணை தொகை ஒதுக்கப்பட்டது) | | 90,487 | 50 | 90,487 | 50 |

* கடனீட்டு பத்திரங்களுக்குத் திரும்பச் செலுத்த வேண்டிய பணத்திற்கான ஒதுக்கீட்டிற்கு இலாப நட்டப் பகிர்வு கணக்குத்தான் பற்று வைக்கப்படும். இலாப நட்டக் கணக்கைப் பற்று வைக்கக்கூடாது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | (இலாபத்திலிருந்து ஆண்டுத்தவணை தொகை ஒதுக்கப்பட்டது) | | | | | |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு ப. | | 95,010 | 00 | | |
| | வங்கி க/கு | | | | 95,010 | 00 |
| | (ஆண்டுத் தவணையும் பெறப்பட்ட வட்டியும் முதலீடு செய்யப்பட்டது) | | | | | |
| 2004 டிச.31 | வங்கி க/கு ப. | | 9,275 | 00 | | |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு | | | | 9,275 | 00 |
| | (ரூ.18,85,500 முதலீடு செய்வதில் பெறப்பட்ட 5% வட்டி) | | | | | |

குறிப்பு : முதல் தவணை முதல் ஆண்டின் (31.12.2002) இறுதியில் முதலீடு செய்யப்படுவதால் அவற்றின் மீது முதலாண்டு இறுதியில் வட்டி ஒன்றும் பெறப்பட மாட்டாது.

குறிப்பேட்டுப் பதிவுகளைச் செய்யும் பொழுதே பேரேட்டுக் கணக்குகளில் பதிவுகள் எழுதப்படும் முறையினைக் கவனிக்கவும்.

| | | | ப. | | வ. | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | பை | ரூ. | பை |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு ப. | | 9,275 | 00 | | |
| | கடனீட்டு நிதி க/கு | | | | 9,275 | 00 |
| | (வட்டியை கழிவு நிதிக் கணக்கிற்கு மாற்றியதற்கு) | | | | | |
| | இலாபநட்ட பகிர்வு க/கு ப. | | 90,487 | 50 | | |
| | கழிவு நிதி க/கு | | | | 90,487 | 50 |
| | (இலாபத்திலிருந்து ஆண்டுத் தவணை தொகை ஒதுக்கப்பட்டது) | | | | | |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு ப. | | 99,760 | 00 | | |
| | வங்கி க/கு | | | | 99,760 | 00 |
| | (ஆண்டுத் தவணைத் தொகையும் வட்டியும் முதலீடு செய்யப்பட்டது) | | | | | |
| 2005 டிச31 | வங்கி க/கு ப. | | 14,263 | 00 | | |
| | கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு | | | | 14,263 | 00 |
| | (ரூ.2,85,260ஐ முதலீட செய்ததில் பெறப்பட்ட வட்டி) | | | | | |
| | கழிவு நிதி க/கு ப. | | 14,263 | 00 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு (வட்டியை கழிவு நிதி கணக்கிற்கு மாற்றியதற்கான பதிவு) | | | | 14,263 | 00 |
| | இலாப நட்ட பகிர்வு க/கு ப. | | 90,487 | 50 | | |
| | கழிவு நிதி க/கு (இலாபத்திலிருந்து கழிவு நிதிக்கு பணம் ஒதுக்கப்பட்டது) | | | | 90,487 | 50 |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு ப. | | 1,04,750 | 00 | | |
| | வங்கி க/கு (ஆண்டுத் தவணை தொகையும் வட்டியும் முதலீடு செய்யப்பட்டது) | | | | 1,04,750 | 00 |
| 2004 டிச.31 | வங்கி க/கு ப. | | 19,500 | 00 | | |
| | கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு (ரூ.3,90,010ஐ முதலீடு செய்ததில் பெறப்பட்ட 5% வட்டி) | | | | 19,500 | 00 |
| | கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு ப. | | 19,500 | 00 | | |
| | கழிவு நிதி க/கு (வட்டியை கழிவு நிதிக்கணக்கிற்கு மாற்றியதாகும்) | | | | | |
| | இலாப நட்ட பகிர்வு க/கு ப. | | 90,487 | 50 | | |
| | கழிவு நிதிக் க/கு (இலாபத்திலிருந்து ஆண்டுத்தவணை தொகை ஒதுக்கப்பட்டது) | | | | | |
| | வங்கி க/கு ப. | | 3,90,000 | 00 | | |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு (முதலீடுகள் விற்கப்பட்டன) | | | | 3,90,000 | 00 |
| | கழிவு நிதி க/கு ப. | | 10 | 00 | | |
| | கழிவு நிதி முதலீட்டு க/கு (முதலீடுகளை விற்றதில் ஏற்பட்ட நட்டம் கழிவு நிதிக்கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | | 10 | 00 |
| | கடனீட்டுப் பத்திரங்கள் க/கு ப. | | 5,00,000 | 00 | | |
| | கடனீட்டுப் பத்திரங்கள் க/கு (கடன் பத்திரதாரர்கள் முடிக்கப்பட்டு கடனீட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | | 5,00,000 | 00 |
| | கடனீட்டுப் பத்திரதாரர்கள் க/கு ப. | | 5,00,000 | 00 | | |

குறிப்பு

**III. உங்கள் முன்னேற்றத்தை சரிபாக்கும் பயிற்சிகள் "அ"**

**1). கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கடன் பத்திரங்கள் என்பது நிறுமம்......... பெற்றதற்கான அத்தாட்சி.

2. கடன் பத்திரதாரர்கள் நிறுமத்தின் ......... ஆவார்கள்.

3. வட்டி பெறும் உரிமைச் சீட்டை......... கடன் பத்திரத்துடன் இணைப்பார்கள்.

4. மீளா கடன் பத்திரங்களை நிறுமத்தின் ......... போது மீட்பர்.

5. ......... நிதியை கடன் பத்திர மீட்புக்கு உருவாக்குவார்கள்.

குறிப்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வங்கி க/கு (கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கு பணம் செலுத்தப்பட்டது) | | | | 5,00,000 | 00 |
| | கழிவு நிதி க/கு ப. பொதுகாப்பு க/கு (கழிவு நிதி கணக்கு, பொது காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 4,99,9,990 | 00 | 4,99,999 | 00 |

## கழிவு நிதி க/கு

| நாள் | | ரூ. | பை | நாள் | | ரூ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 2002 டிச31 | இருப்பு கீ/இ | 90,487 | 50 | 2002 டிச31 | இலாபநட்ட பகிர்வு க/கு | 90,487 | 50 |
| | | 90,487 | 50 | | | 90,487 | 50 |
| 2003 டிச31 | இருப்பு கீ/இ | 1,85,499 | 50 | 2003 ஜன1 | இருப்பு கீ/கொ | 90,487 | 50 |
| | | | | | கழிவுநிதி முதலீட்டு வட்டி | 4,524 | 50 |
| | | | | | இலாபநட்ட பகிர்வு க/கு | 90,487 | 50 |
| | | 1,85,499 | 50 | | | 1,85,499 | 50 |
| 2004 டிச31 | இருப்பு கீ/இ | 2,85,262 | 00 | 2004 ஜன1 | இருப்பு கீ/கொ | 1,85,499 | 50 |
| | | | | டிச31 | கழிவுநிதி முதலீட்டு வட்டி ரூ.1,85,000 மீது 5% வட்டி | 9,275 | 00 |
| | | | | | இலாபநட்ட பகிர்வு க/கு | 90,487 | 50 |
| | | 2,85,262 | 00 | | | 2,85,262 | 00 |
| 2005 டிச31 | இருப்பு கீ/இ | 3,90,012 | 50 | 2005 ஜன1 | இருப்பு கீ/கொ | 2,85,262 | 00 |
| | | | | டிச31 | கழிவு நிதி முதலீட்டின் மீது ரூ.2,85,260ன் மீது 5% வட்டி | 14,263 | 00 |
| | | | | | இலாப நட்ட பகிர்வு க/கு | 90,487 | 50 |
| | | 3,90,012 | 50 | | | 3,90,012 | 50 |
| 2006 டிச31 | கழிவு நிதி முதலீட்டு க/கு (நட்டம்) | 10 | 00 | 2006 ஜன1 | இருப்பு கீ/கொ | 3,90,012 | 50 |
| | பொதுகாப்பு க/கு மாற்றப்பட்டது | 4,99,9990 | 00 | டிச31 | கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு ரூ.3,90,012 மீது வட்டி 5% வட்டி | 19,500 | 00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இலாப நட்ட பகிர்வு க/கு | 90,487 | 50 |
| | | 5,00,000 | | | | 5,00,000 | |

ப கழிவு நிதி முதலீட்டு க/கு வ

| நாள் | | ரூ. | பை | நாள் | | ரூ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 2002 டிச31 | வங்கி க/கு | 90,490 | 00 | 2002 டிச.31 | இருப்பு கீ/இ | 90,490 | 00 |
| | | 90,490 | 00 | | | 90,490 | 00 |
| 2003 ஜன1 | இருப்பு கீ.கொ | 90,490 | 00 | 2003 டிச31 | இருப்பு கீ/இ | 1,85,500 | 00 |
| டிச31 | வங்கி க/கு | 95,010 | 00 | | | | |
| | | 1,85,500 | 00 | | | 1,85,500 | 00 |
| 2004 ஜன1 | இருப்பு கீ/கொ | 1,85,500 | 00 | 2004 டிச 31 | இருப்பு கீ/இ | 2,85,260 | 00 |
| டிச31 | வங்கி க/கு | 99,760 | 00 | | | | |
| | | 2,85,260 | 00 | | | 2,85,260 | 00 |
| 2005 ஜன1 | இருப்பு கீ/கொ | 2,85,260 | 00 | 2005 டிச31 | இருப்பு கீ/கொ | 3,90,010 | 00 |
| | வங்கி க/கு | 1,04,750 | 00 | | | | |
| | | 3,90,010 | 00 | | | 3,90,010 | 00 |
| 2006 ஜன1 | இருப்பு கீ/கொ | 3,90,010 | 00 | 2006 டிச31 | வங்கி க/கு | 3,90,000 | 00 |
| | | | | | கழிவு நிதி க/கு நட்டம் மாற்றப்பட்டது | 10 | 00 |
| | | 3,90,010 | 00 | | | 3,90,010 | 00 |

## கழிவு நிதி முதலீட்டு வட்டி க/கு

| நாள் | | ரூ. | பை | நாள் | | ரூ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 2003 டிச31 | கழிவு நிதி க/கு மாற்றம் | 4,524 | 50 | 2003 டிச.31 | வங்கி க/கு | 4,524 | 50 |
| 2004 டிச 31 | கழிவு நிதி க/கு மாற்றம் | 9,275 | 00 | 2004 டிச31 | வங்கி க/கு | 9,275 | 00 |
| 2005 டிச31 | கழிவு நிதி க/கு மாற்றம் | 14,263 | 00 | 2005 டிச31 | வங்கி க/கு | 14,263 | 00 |
| 2006 டிச 31 | கழிவு நிதி க/கு மாற்றம் | 19,500 | 00 | 2006 டிச 31 | வங்கி க/கு | 19,500 | 00 |

## கடன் பத்திரங்கள் க/கு

| நாள் | | ரூ. | பை | நாள் | | ரூ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 2002 டிச 31 | இருப்பு கீ/இ | 5,00,000 | 00 | 2002 ஜீன் 1 | வங்கி க/கு | 5,00,000 | 00 |
| | | 5,00,000 | 00 | | | 5,00,000 | 00 |
| 2003 டிச 31 | இருப்பு கீ/இ | 5,00,000 | 00 | 2003 ஜீன்1 | இருப்பு கீ/கொ | 5,00,000 | 00 |
| | | 5,00,000 | 00 | | | 5,00,000 | 00 |
| 2004 | | | | 2004 | | | |

குறிப்பு

**2). பின்வருபவை சரியா அல்லது தவறா எனக் கூறுக.**

1. கடன் பத்திரங்கள் பங்குகளாக மாற்ற முடியும்.
2. கடன் பத்திரங்கள் தள்ளுபடியில் வெளியிட்டு முனைமத்தில் மீட்கப்பட முடியாது.
3. எல்லா கடன் பத்திரங்களும் அடமானம் கொண்டது.
4. கடன் பத்திரங்கள் கூடுதல் பிணையமாக வெளியிட முடியும்.
5. ஒரு நிறுமம் முதலீட்டிற்காக அதன் கடன் பத்திரங்களை வாங்க முடியும்.

குறிப்பு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| டிச 31 | இருப்பு கீ/இ | 5,00,000 | 00 | ஜீன் 1 | இருப்பு கீ/கொ | 5,00,000 | 00 |
| | | 5,00,000 | 00 | | | 5,00,000 | 00 |
| 2005 டிச 31 | இருப்பு கீ/இ | 5,00,000 | 00 | 2005 ஜீன் 1 | இருப்பு கீ/கொ | 5,00,000 | 00 |
| | | 5,00,000 | 00 | | | 5,00,000 | 00 |
| 2006 டிச 31 | கடன் பத்திரதாரர்கள் க/கு (மாற்றப்பட்டது) | 5,00,000 | 00 | 2006 ஜீன் 1 | இருப்பு கீ/கொ | 5,00,000 | 00 |
| | | 5,00,000 | 00 | | | 5,00,000 | 00 |

கடன் பத்திரங்கள் க/கு

| நாள் | | ரூ. | பை | நாள் | | ரூ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 2006 டிச 31 | வங்கி க/கு | 5,00,000 | 00 | 2006 டிச 31 | கடன் பத்திரங்கள்க/கு | 5,00,000 | 00 |
| | | 5,00,000 | 00 | | | 5,00,000 | 00 |

வங்கி க/கு

| நாள் | | ரூ. | பை | நாள் | | ரூ. | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 2006 டிச 31 | இருப்பு கீ/கொ<br>கழிவுநிதி க/கு(வட்டி)<br>முதலீட்டு க/கு | 1,45,600<br>19,500<br>3,90,000 | 00<br>00<br>00 | 2006 டிச 31 | கடன் பத்திர தாரர்கள் க/கு | 5,00,000 | 00 |
| | | 5,55,100 | 00 | | | 5,55,100 | 00 |

### 6.2.3. இலாப ஈவு – முடிவுக் கணக்குகள்

கம்பெனிக்கு கிடைக்கும் லாபமனைத்தையும் இலாப ஈவாக வழங்க முடியாது. சட்டப்படி கம்பெனியின் பங்குதாரர்கள் பகிர்ந்து அளிக்கக்கூடிய இலாபத்தின் ஒரு பங்கை இலாப ஈவு என்று கூறுகிறோம். அதாவது பங்குதாரர்களுக்கு வழங்கக்கூடிய மொத்த பகிர்தகு இலாபத்தையும் இலாப ஈவு என்றோ சொல்கிறோம். ஒவ்வொரு பங்கதாரருக்கும் தனித்தனியாக

பங்குதாரர்களுக்கு வழங்கக்கூடிய மொத்த பகிர்தகு இலாபத்தையும் இலாப ஈவு என்றோ சொல்கிறோம். ஒவ்வொரு பங்கதாரருக்கும் தனித்தனியாக பிரித்துக் கொடுக்கக் கூடிய இலாபத்தின் பங்கையும் இலாப ஈவு என்று கூறுகிறோம்.

கம்பெனியின் இயக்குநர்கள் பரிந்துரை செய்யும் இலாப ஈவை கம்பெனியின் பங்குதாரர்கள் தங்களது ஆண்டுப் பேரவைக் கூட்டத்தில் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் அளித்தால் இலாப ஈவு நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது. இலாப ஈவு அறிவிக்கப்பட்டவுடன் அது கம்பெனியின் ஒரு கடனாகக் கருதப்படுகிறது. அதைப்போல பெறுவதற்கு பங்குதாரர்கள் உரிமையுடையவர்களாகிறார்கள். ஆனால் அறிவிக்கப்பட்ட இலாப ஈவிற்கு வட்டி செலுத்தப்படுவதில்லை.

பொதுவாக பங்குகள் மீது செலுத்தப்பட்டிருக்கும் தொகையின் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் இலாப ஈவாக வழங்கப்படுகிறது. சில சமயங்களில் பங்கின் பெயரளவு மதிப்பின் அடிப்படையிலும் இலாப ஈவு வழங்கலாம். எம்முறையில் இலாப ஈவு வழங்க வேண்டும் என்பது பற்றிக் கம்பெனியின் நடைமுறைவிதிகளில் சொல்லப்பட்டிருக்கும். பங்குகள் மீது செலுத்த வேண்டிய அழைப்புத் தொகை செலுத்தப்படாமல் இருக்கும் பொழுது செலுத்தப்பட்ட தொகை மீது தான் இலாப ஈவு கணக்கிடப்பட வேண்டும். அதாவது செலுத்தப்பட்ட முதலிலிருந்து அழைப்புப் பாக்கியை கழித்து பின் வரக்கூடிய நிகர தொகையில் இலாப ஈவு வழங்கப்படுவதுண்டு. இலாப ஈவு ஆணை என்று சொல்லக்கூடிய பணம் பெறுவதற்கான ஆணை ஒவ்வொரு பங்குதாரருக்கும் தனித்தனியே அனுப்பப்படுகிறது. பங்குதாரர்கள் அவ்வாணையைக் கம்பெனியின் அலுவலகத்தில் அல்லது ஆணையில் குறிப்பிட்ட வங்கியிலும் ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

இலாப ஈவு வழங்கும் போது கம்பெனியிலிருந்தும் வருமான வரியைக் குறிப்பிட்ட விகிதத்தில் கழித்து அத்தொகையை மத்திய அரசிடம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பங்குதாரருக்கும் இவ்விதம் இலாப

ஈவிலிருந்து வரியைக் கழித்ததற்கு ஆதாரமாக சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

இலாப ஈவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள் இலாப ஈவு ஆணையைத் தயார் செய்து பங்குதாரர்களுக்கு அனுப்பா விட்டால் கம்பெனியில் உள்ள அதிகாரிகள் தண்டைனக்குள்ளாக நேரிடும்.

குறிப்பு: இலாப ஈவு ரொக்கமாகவே வழங்கப்பட வேண்டும். ஆனால் இது கம்பெனி போனசுப் பங்குகளை வெளியிடுவதை தடை செய்வதில்லை. பணத்திற்கு மாற்றாக பிற கம்பெனிப் பங்குகளையும், கடனீட்டுப் பத்திரங்களையும் இலாப ஈவாக வழங்கும் பழக்கம் 1960 ஆம் ஆண்டு கம்பெனிச் (திருத்த) சட்டத்திற்கு முன் இருந்து வந்தது. இவ்வாறு பங்குகளையோ கடனீட்டுப் பத்திரங்களையோ இலாப ஈவாக வழங்குவது பங்குச் சான்றுச் சீட்டு இலாப ஈவு எனப்படும். 1960 ஆம் ஆண்டிற்குப் பிறகு கம்பெனியின் இத்தொகை இலாப ஈவாக வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

இலாப ஈவைக் கணக்கிடுதல்

வேறு எதுவும் சொல்லப்படாத வரையில் இலாப ஈவு செலுத்தப்பட்ட முதலின் மீதே கணக்கிடப்படுகிறது.

ஒரு கம்பெனி ஒன்று ரூ.100 மதிப்புள்ள 10,000 சாதரணப் பங்குகளை வெளியிட்டுள்ளது. பங்குகள் ஒவ்வொன்றின் மீதும் ரூ.80 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளது என்று கொள்வோம் 10 சதவீதம் இலாப ஈவு.

$$\text{ரூ}.8{,}00{,}000 \, x \frac{10}{100} = 80{,}000$$

செலுத்தப்பட்ட தொகை குறைவாய் இருந்தாலுங்கூட ஒரு கம்பெனியானது பங்கின் பெயரளவு மதிப்பின் மீதும் இலாப ஈவைக் கணக்கிடலாம். அம்மாதிரி நிலையில் மேலே கூறப்பட்ட இலாப ஈவு ரூ.1,00,000மாக வரும் எப்படியிருப்பினும் இலாபஈவு கணக்கிடு பகுதியாக

அழையா முன்பணத்தைச் செலுத்தப்பட்ட முதலின் ஒரு பகுதியாக எடுத்துக் கொள்வதில்லை.

ஒரு கம்பெனி ஒன்று ரூ.10 மதிப்புள்ள முழுவதும் அழைக்கப்பட்ட சாதாரண பங்குகள் 15,000த்தை வெளியிட்டதாகக் கொள்வோம். அழைப்புப் பாக்கி ரூ.500 உள்ளதாகக் கொள்வோம். 10 சதவீதம் இலாப ஈவு அறிவிக்கப்பட்டால் பின்வருமாறு இலாப ஈவு கணக்கிடப்படும்.

| | |
|---|---|
| முதல் | 1,50,000 |
| கழி: அழைப்புப் பாக்கி | 500 |
| | 1,49,500 |

இலாப ஈவு $=1,49,500 x \frac{10}{100} =$ ரூ.14,950

இலாப ஈவு பற்றிய குறிப்பேட்டுப் பதிவுகள்

(வருமான வரி இல்லாமல்)

1. இலாப ஈவு அறிவிக்கப்பட்ட பொழுது

| | |
|---|---|
| இலாப நட்டப்பகிர்வு க/கு | ப |
| இலாப ஈவு க/கு | |
| (...நாளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி செலுத்தப்பட வேண்டிய இலாப ஈவு) | |

2. இலாப ஈவு ஆணையை பங்குதாரர்கள் ரொக்கமாக மாற்றும்.

| | |
|---|---|
| இலாப ஈவு க/கு | ப |
| வங்கி க/கு | |
| பங்குதாரர்களுக்கு இலாப ஈவு செலுத்தப்பட்டதற்காக) | |

எல்லாப் பங்குதாரர்களுக்கும் உடனடியாக இலாப ஈவு ஆணையை மொத்தமாக மாற்றுவதில்லை. அம்மாதிரி நிலையில் இலாப ஈவு க/கு வரவு இருப்பினைக் காட்டும். ஆண்டு இறுதியில் அவ்வாறு பங்குதாரர்கள் கம்பெனியிடமிருந்து பெற்றுக் கொள்ளாத இலாப ஈவு 'உரிமை கோரா இலாப ஈவு' எனம் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. பொறுப்புகள் பகுதியில் நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்குகளும் எனும் தலைப்பின் கீழ் காட்டப்படும்.

இவ்விதம் மூன்று வருடங்களாக உள்ள உரிமைகோர இலாப ஈவு மத்திய அரசின் பொது வருமான கணக்கிற்கு மாற்றப்படும். அதற்கு பிறகு இவ்வாறான பங்குதாரர்கள் மத்திய அரசிடமே இவ்வகை கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இலாப ஈவு பற்றிய குறிப்பேட்டுப் பதிவுகள்
(வருமான வரியை கழித்த பின்பு)

ஒரு கம்பெனியானது வருமானவரியை இலாப ஈவிலிருந்து கழித்து அறிவிப்புச் செய்தால் இலாப ஈவின் மொத்தத் தொகையிலிருந்து வருமான வரியைக் கழித்துவிடும். நிகர இலாப ஈவை பங்குதாரர்களுக்கு வருமான வரி அலுவலகத்திற்கு செலுத்திவிடும். குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருமாறு இருக்கும்.

| | |
|---|---|
| இலாப நட்ட பகிர்வு க/கு | ப |
| இலாப ஈவு க/கு | |
| (... நாளிட்ட தீர்மானத்தின்படி செலுத்தப்பட வேண்டிய மொத்த இலாப ஈவு) | |

| | |
|---|---|
| இலாப ஈவு க/கு | ப |
| வருமான வரி க/கு | |
| வங்கி க/கு | |
| (மொத்த இலாப ஈவிலிருந்து வருமான வரியைக் கழித்த பின்பு இலாப ஈவு செலுத்தப்பட்டது) | |

| | |
|---|---|
| வருமான வரி க/கு | ப |
| வங்கி க/கு | |
| (வருமான வரி செலுத்தப்பட்டது) | |

**இடைக்கால இலாப ஈவு**

இரு ஆண்டுப் பேரவைக் கூட்டங்களுக்கு இடையே வழங்கப்படும் இலாப ஈவு இடைக்கால இலாப ஈவு எனப்படும் அல்லது கம்பெனியின் கணக்குகாலம் முடிவதற்கு முன்பாக வழங்கப்படும். இலாப ஈவு இடைக்கால இலாப ஈவு என்று சொல்லப்படும். குறிப்பிட்ட ஆண்டில் உண்டான இலாபத்திலிருந்து அல்லது முந்தைய ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட இலாபத்திலிருந்து இலாப ஈவு வழங்கப்படும்.

கம்பெனியால் தயாரிக்கப்பட்ட முடிவுக் கணக்குகள் இலாபத்திலிருந்து இலாப ஈவு அறிவிக்கப்பட்டால் அதை இறுதி இலாப ஈவு என்று கூறுகிறோம்.

**1. இடைக்கால இலாப ஈவு செலுத்தப்படும் பொழுது**

| | |
|---|---|
| இடைக்கால இலாப ஈவு க/கு | ப |
| வங்கி க/கு | |
| (இடைக்கால இலாப ஈவு செலுத்தியதற்கு) | |

**2. முடிவுக் கணக்கு தயாரிக்கப்படும் பொழுது**

| | |
|---|---|
| இலாப நட்டப் பகிர்வு க/கு | ப |
| இடைக்கால இலாப ஈவு க/கு | |
| (இடைக்கால இலாப ஈவு கணக்க இலாப நட்டப் பகிர்வு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | |

இறுதி இலாப ஈவை அளிக்கும் தீர்மானத்தில் வேறு ஏதும் சொல்லாத வரையில் இடைக்கால இலாப ஈவு இறுதி இலாப ஈவில் சரிக்கட்டப்படுவதில்லை. உதாரணமாக ஒரு கம்பெனிக்கு ரூ.10,00,000ன் மீது 4 சதவீதம் இடைக்கால இலாப ஈவு வழங்குகிறது என்று கொள்வோம். அதாவது ரூ.40,000 இடைக்கால இலாப ஈவாக வழங்கப்பட்டது. ஆண்டு முடிவில் இறுதி இலாப ஈவாக ரூ.10,00,000ன் மீது 8% அறிவிப்பு செய்கிறது. அதாவது இறுதி இலாப ஈவ ரூ.80,000. எனவே இந்த ஆண்டு அளிக்கப்பட்ட மொத்த இலாப ஈவு ரூ.1,20,000 (ரூ.40,000 + ரூ.80,000)

### 3. முதலிலிருந்து இலாப ஈவு செலுத்தப்பட முடியாது

கம்பெனி ஈட்டும் இலாபத்திலிருந்து மட்டுமே இலாப ஈவு செலுத்தப்பட முடியும் என்பதை ஏற்கனவே பார்த்துள்ளோம். எனவே ஒரு கம்பெனி இலாபம் ஏதும் இல்லாத போது முதலிலிருந்து இலாப ஈவைச் செலுத்தினால் இயக்குநர்கள் அவ்வாறு செலுத்திய தொகையைத் திருப்பித் தர கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

முதலிலிருந்து இலாப ஈவு வழங்க முடியாதெனினும் வட்டி வழங்கச் சில சூழ்நிலைகளில் மத்திய அரசு கம்பெனிக்கு அதிகாரம் வழங்கலாம்.

கம்பெனியின் அமைப்பு வேலைகள் தொடங்கிய பின் தொழில் உற்பத்தி தொடங்கி வருவாயைக் காண ஆண்டுக் பல செல்ல வேண்டியிருக்கும். அத்தகையை தொழில்களில் ஈடுபட்டிருக்கும் கம்பெனிகள் 4 சதவிகிதம் வட்டி அல்லது அரசு முடிவு செய்யும் விகிதத்தில் செலுத்தப்பட்ட முதல் மீது வட்டி செலுத்தலாம். அவ்விதம் செலுத்தும் வட்டியை அமைப்புச் செலவாகக் கொள்ளலாம். அதாவது இவ்வட்டி ஒரு முதலீட்டு செலவாகும். இவ்வாறு வட்டி செலுத்துவது பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டது.

கம்பெனியின் செயல்முறை விதிகள் அல்லது நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானம் வட்டி செலுத்துவதற்கான அதிகாரத்தைக் கம்பெனிக்கு வழங்க வேண்டும்.

இதற்கான முன் ஒப்புதலை மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். ஆனால் அவ்விதம் செலுத்திய வட்டி செலத்திய முதலைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்தாகக் கருதப்படக்கூடாது.

**4. மூலதன இலாபத்திலிருந்து இலாப ஈவை செலுத்துதல்**

நடைமுறை இலாபத்திலிருந்து (Revenue Profit) மட்டுமே இலாப ஈவை செலுத்தலாம் என்பதை நாம் அறிவோம். பின்வரும் மூலதன இலாபத்திலிருந்து (Capital Profit) இலாப ஈவை செலுத்தலாம்.

1. நிலைத்த சொத்துக்களை விற்பதால் கிடைக்கும் இலாபம்.
2. ஒரு வியாபார நிறுவனத்தை வாங்குவதால் ஏற்படும் இலாபம்
3. கடனீட்டுப் பத்திரங்களின் வெளியீட்டில் பெறும் முனைமத் தொகை
4. கடனீட்டுப் பத்திரங்களைத் தள்ளுபடியில் மீட்பதால் கிடைக்கும் இலாபம்.

எப்படியிருப்பினும் கம்பெனி கூட்டுருவாக்கத்திற்கு முன் ஏற்பட்ட ஆதாயம் பங்குகளை வெளியீட்டடில் செய்யப்பட்ட பங்குகளை மீண்டும் வெளியிடும் பொழுது கிடைக்கும். ஆதாயம் மூலதன மீட்பு காப்பு போன்ற பிற மூலதன இலாபங்களை இலாப ஈவு வழங்குவதற்கு பயன்படுத்தக்கூடாது.

**5. பகிர்தகு இலாபம்**

சட்டப்படி கம்பெனியின் பங்குதாரர்களுக்கு இலாப ஈவாக வழங்கக்கூடிய இலாபத்தை பகிர்தகு இலாபம் என்கிறோம்.

பகிர்தகு இலாபத்ததை பற்றிய பிரிட்டன் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் இந்தியாவை பொறுத்தவரை செல்லாதவைகளாகக் கருதப்படுகின்றது. 1956 ஆம் ஆண்டில் கம்பெனிச் சட்டம் பிரிக்கத்தக்க இலாபத்தைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறது.

எந்த ஒரு நிதி எந்த ஒரு நிதி ஆண்டிற்கும் இலாபத்திலிருந்து மட்டுமே ஈவை அறிவிக்கலாம் அல்லது செலுத்தலாம் என கம்பெனிச் சட்டத்தின் 205 (1) வது பிரிவு கூறுகிறது. இங்கே குறிப்பிடப்படும் இலாபம் என்னும் சொல் நடைமுறை இலாபங்கள் அல்லது மூலதன இலாபங்கள் அல்லது பிரித்துக் கொடுக்கப்படாத கடந்த கால இலாபங்களை உள்ளடக்கியுள்ளது.

ஒரு கம்பெனியானது இலாப ஈவைச் செலுத்துமுன் பின்வரும் நான்கு கோட்பாடுகளை கவனத்தில் கொள்ள வேண்டும் எனச் சட்டம் கூறுகிறது.

1. வெளிக் கடனீந்தோரின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
2. இலாப ஈவை செலுத்துவதற்கான பங்குதாரர்களின் முதலைப் பயன்படுத்தக்கூடாது
3. உண்மையான இலாபத்திலிருந்து மட்டுமே இலாப ஈவைச் செலுத்த வேண்டும்.
4. கம்பெனியின் நடைமுறைவிதிகளுக்குட்பட்டு இலாப ஈவ செலுத்தப்படும் நடைமுறை விதிகள் இல்லை எனில் கம்பெனிச் சட்டத்தில் உள்ள அட்டவணை 1ல் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் ஈவின் சரத்துக்களுக்குட்பட்டு இலாப ஈவு செலுத்தப்படும். கம்பெனிச் சட்டத்திலுள்ள சரத்துக்களுக்கு புறம்பாக நடைமுறை விதிகள் இருக்கக் கூடாது.

## முன்னுரிமை பங்குகளுக்கு இலாப ஈவு

இலாப ஈவை பெறுவதில் முன்னுரிமை பங்குதாரர்களுக்கு முன்னுரிமை உண்டு. இவ்வகைப் பங்குகளை குவிவு முன்னுரிமை பங்குகள் குவியா முன்னுரிமை பங்குகள் என்று பிரிக்கலாம். குவிவு முன்னுரிமைப் பங்குகளுக்கு கடந்த வருடங்களுக்கான இலாப ஈவு பாக்கியை சேர்த்துப் பெறுவதற்கு உரிமை உண்டு. ஆனால் குவியா

முன்னுரிமை பங்குகளுக்கு இவ்வித உரிமை கிடையாது. உதாரணமாக ஒரு கம்பெனி மூன்று வருடங்களாக நட்டமடைந்து நான்காவது ஆண்டு இலாபம் ஈட்டுகிறதென்று வைத்துக் கொள்வோம். அக்கம்பெனியின் குவியா பங்குக்கான ஆண்டு இலாபம் ஈட்டுகிறதென்று வைத்துக் கொள்வோம். அக்கம்பெனியின் குவியா பங்குக்கான இலாப ஈவையும் இந்த வருடத்திற்கான இலாப ஈவையும் சேர்த்துப் பெறுவதற்கு உரிமை கிடையாது.

பகிர்தகு இலாபத்தை நிர்ணயம் செய்யும் பொழுது சட்டத்தின் பின்வரும் சரத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. நடப்பாண்டில் நிலைத்த சொத்துக்களின் மீதான தேய்மானம் ஒதுக்குவதுடன் கடந்த ஆண்டுகளில் தேய்மானம் ஒதுக்கப்படவில்லையாயின் அதற்கு வகை செய்த பின்னரே பகிர்தகு இலாபத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.
2. கடந்த கால நட்டங்களினால் கம்பெனியின் இலாப நட்டக் கணக்கு பற்ற இருப்பைக் காட்டினால் அதை சரி செய்த பின்னரே பகிர்தகு இலாபத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். என்ற சட்ட பிணைப்பு ஏதுமத் கம்பெனிக்கு இல்லை.
3. இலாப ஈவை அறிவிப்பதற்கு பங்கு முனைமத் தொகையைப் பயன்படுத்தலாகாது. கம்பெனியின் நடைமுறை விதிகள் செய்யவில்லையெனின் கடன் பத்திர முனைமத் தொகை இலாப ஈவு செலுத்தப்படவேண்டும்.
4. ஒரு குறிப்பிட்ட விகிதத்திற்கு மேல் இலாப ஈவு அறிவிப்புச் செய்தால் இலாபத்திலிருந்து போதுமான அளவு காப்பு கட்டாயமாக ஏற்படுத்தப்படவேண்டும்.
5. சட்டப்பிரிவு 250(2) இன் படி தேய்மானச் செலவானது சட்டப்பிரிவு 350ல் கூறிய அளவு இருக்க வேண்டும்.

6. இவ்வகையில் எழுதப்படும் தேய்மானச் சொத்தின் மதிப்பில் 95 சதவீதம் இருக்க வேண்டும். இந்தச் செலவை அந்த சொத்து பயன்படுத்தப்படும் ஆண்டுகளில் மாற்றி எழுத வேண்டும்.
7. வருமானவரிச் சட்டத்தில் தேய்மானச் சதவீதம் கொடுக்கப்படாத சொத்துகளுக்கு மத்திய அரசின் அனுமதியின் பேரில் கம்பெனியின் விருப்பப்படி ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் தேய்மானச் செலவு ஏற்படுத்தலாம்.
8. இலாப ஈவு பகிர்ந்தளிக்காத வருடங்களின் தேய்மானத்திற்கென்று தொகை ஒதுக்க வேண்டியதில்லை. ஆனால் பின்னால் இலாப ஈவு அளிக்கும் பொழுது கூறியவாறு செலவுகளை ஒதுக்காத வருடங்களுக்கும் சேர்த்து தேய்மானத்தை ஒதுக்கிய பின்பே இலாப ஈவு அளிக்க வேண்டும்.

கடந்த வருட இலாபங்களை அதிகப்படியான வியாபாரத்தில் ஈடுபடுத்தும் பொருட்டு 1974 ஆம் ஆண்டு பிரிவு 205(யு) (3) என்ற புதுப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் படி சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இலாப ஈவு அளிக்க வேண்டும்.

காப்புகளில் இருந்து இலாப ஈவு அளிப்பதை ஒழுங்குபடுத்தும் பொருட்டு 1975 ஆம் ஆண்டு புதிய வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. இதன்படி

1. கடந்த வருட இலாப ஈவு அல்லது செலுத்திய முதலில் 10 சதவீதம் இதில் எது குறைவோ அதற்கு மிகாமல் இலாப ஈவு அளிக்க வேண்டும்.
2. காப்புகளில் இலாப ஈவு அளிக்க எடுக்கப்பட்ட தொகை செலுத்திய மற்றும் இதர காப்புகளின் மொத்தத்தில் 10 சதவீதத்திற்கு மேற்படக் கூடாது. இவ்விதம் எடுக்கப்பட்ட தொகையை முதலில் நட்டத்தைச் சரிகட்டப் பயன்படுத்த வேண்டும்.
3. மேற்படி மாற்றிய தொகை போக மீதியுள்ள காப்பு செலுத்திய 15 சதவீதத்திற்கு குறையக்கூடாது.

## 6. இராப ஈவு பற்றிய அடிப்படைக் கொள்கைகள்.

ஒரு கூட்டுப் பங்குகள் கம்பெனியின் வெற்றி அல்லது தோல்வி அக்கம்பெனி தனது இலாபத்தை எவ்விதம் பயன்படுத்துகிறது. என்பதைப் பொறுத்தே உள்ளது. இலாப ஈவை பரிந்துரை செய்யும் முன் கம்பெனியின் இயக்குநர்கள் பின்வரும் கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. பொதுவான வியாபாரத்தின் நிலை மற்றும் எதிர்காலத்தில் இலாபம் ஈட்டுவதற்கான வாய்ப்புகள்
2. இலாபத்தை கம்பெனியின் மேம்பாட்டிற்காக இருத்தி வைத்துக் கொள்ளுதல்
3. இலாப ஈவைப் பரிந்துரை செய்வதற்கு இயக்குநர்களுக்கு உள்ள அதிகாரம்
4. இடைக்கால இலாப ஈவு ஏதாவது செலுத்தப்பட்டிருந்தால் அதை கழிதத பின்பு இறுதி இலாப ஈவு செலுத்துவதற்கு போதியளவு இலாபம் உள்ளது என்பதை அறிய வேண்டும்.
5. இலாப ஈவு வழங்குவதற்கு போதிய பண வசதி இருக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும்.
6. பல வகை பங்குகளின் உரிமைகள்.
7. குறைந்தளவு இலாபம் உள்ள ஆண்டுகளிலும் அதிக அளவு இலாபம் உள்ள ஆண்டகளிலும் சமமான இலாப ஈவை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சில கம்பெனிகள் இலாப ஈவு சமன் செய்யும் நிதி (Divident Equalization Fund)[1] என்னும் நிதியை உருவாக்குகின்றன.

---

* தேவைப்படும் தொகை அளவிற்கு இலாப நட்டப் பகிர்வு கணக்கு பற்று வைக்கப்பட்டு இலாப ஈவு சமன் நிதி கணக்கு வரவு வைக்கப்படுகிறது. குறைந்தளவு இலாபம் உள்ள ஆண்டுகளின் இலாப ஈவை அறிவிப்பதற்கு இலாப நட்டப் பகிர்வு கணக்கு வரவு வைக்கப்படும்.

குறிப்பு

**7. போனசுப் பங்குகளை வெளியிடல் அல்லது காப்புகளை முதல்படுத்துதல்**

ஒவ்வொரு கம்பெனியின் ஆண்டு இலாபங்களிலிருந்து அதிக அளவு பொதுக்காப்பினை உண்டாக்க முயற்சி செய்கிறது. தற்போது அல்லது எதிர்கால தேவைக்கும் அதிகமான அளவில் காப்பு சேர்க்கப்பட்டிருந்தால் அக்காப்பின் ஒரு பகுதியை பங்குதாரர்களுக்கு அளிக்க கம்பெனி விரும்பலாம். ஏனெனில் இம்மாதிரி காப்பு கடந்த காலத்தில் தாங்கள் பெற்றிருக்க வேண்டிய உண்மையான இலாப அளவைக் காட்டிலும் குறைவாகவே பெற்றிருப்பார்கள். இதை ஈடு செய்வதற்கே இவ்விதம் காப்பின் ஒரு பகுதி திருப்பித் தர விரும்பும் பொழுது இயக்குநர்கள் அதனைப் போனசுப் பங்குகள்** என்னும் வடிவமைப்பில் திருப்பித் தருகின்றனர். அம்மாதிரி போனசு பங்குகளை வெளியிடுவதற்கு பங்குதாரர்களின் பொதுப் பேரவையின் அனுமதியைப் பெற வேண்டும். பின்வருவனவற்றின் போனசுப் பங்குகளை வெளியிடலாம்.

1. பொதுக்காப்பு
2. முதல் மீட்புக் காப்புகள்
3. இலாபங்கள் மற்றும் காப்புகள்
4. இலாப நட்டப் பகிர்வு க/கு (வரவு இருப்பு)
5. கழிவு நிதி அல்லது கடன் பத்திர மீட்பு நிதி
6. பங்கு முனைமக் கணக்கு

அம்மாதிரி பங்குகள் வெளியிடப்பட்டதும் எதிலிருந்து அப்பங்குகள் வெளியிடப்பட்டது என்பது இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட வேண்டும்.

போனசுப் பங்குகளை வெளியிடுவதன் மூலம் ஒரு கம்பெனியானது பின்வரும் நன்மைகளைப் பெறுகின்றது.

1. போதுமான அளவு இலாபம் இருந்தும் இலாப ஈவை ரொக்கமாகச் செலுத்த முடியாத கம்பெனி போனசுப் பங்குகளை வழங்குவதன்

---

** மேலூதியப் பங்குகள் என்றும் சொல்வதுண்டு.

குறிப்பு

மூலம் பங்குதாரர்களை திருப்தி செய்கிறது. அதே நேரத்தில் கம்பெனியின் நடைமுறை முதலும் பாதிக்கப்படவில்மல.

2. சேர்ந்துள்ள இலாபங்களையும் காப்புகளையும் முதல்படுத்துவதற்கு இது ஒரு எளிதான வழியாகும்.

3. முதலுக்கும் இலாபத்திற்கும் இடையே உள்ள உண்மையான உறவை இது காட்டுகின்றது.

4. அம்மாதிரிப் பங்குகளை வெளியிடுவதன் விளைவாக சாதரணமாக வழங்கப்படும் இலாப ஈவு குறைந்து விடும். எனவே கம்பெனியின் பங்குகளை கொண்டு ஊக வாணிபத்தில் ஈடுபடுவதை இது தடை செய்கிறது.

அம்மாதிரிப் பங்குகளை வெளியிடுவதன் மூலம் பங்குதாரர் பின்வரும் பயனைப் பெறுகின்றனா.

1. போனசுப் பங்குகள் வெளியிடப்படுவதினால் பங்குதாரர்களக்கு கம்பெனியின் மீது ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. ஏனெனில் கடந்த காலத்தில் சேர்த்து வைக்கப்பட்ட காப்புகள் இப்பொழுது போனசுப் பங்குதாரர்களுக்கு திருப்பி அளிக்கப்படுகிறது.

2. சேர்த்து வைத்துள்ள காப்புகள் எதற்கு பயன்படுத்தப்படுமோ என்ற சந்தேகம் முதலீட்டாளர்களின் மனதிலிருந்து நீக்கப்படுகிறது.

போனசுப் பங்குகள் வெளியீட்டிற்கான பதிவுகள்.*

| |
|---|
| 1. பொதுக்காப்பு கணக்கை பற்றுவை |
| அல்லது இலாப நட்டப் பகிர்வு க/கு |
| அல்லது முதல் மீட்பு க/கு |
| அல்லது பங்கு முனைமம் க/கு |
| (சூழ்நிலையைப் பொறுத்தது) |
| பங்குதாரர்களின் *போனசு கணக்கை வரவு வை |

* முதல் மீட்புக் கணக்கையும் பங்கு முனைமக் கணக்கையும் முழுவதும் செலுத்தப்பெற்ற போனசுப் பங்குகளை வெளியிட மட்டுமே பயன்படுத்த முடியும்.

2. பங்குதாரர்களின் போனசு கணக்கை பற்று வை
   பங்கு முதல் கணக்கை வரவு வை
   (வெளியிட்ட பங்குகளின் முகமதிப்பிற்கு)
   பங்கு முனைமம் கணக்கை வரவு வை
   (பங்குகள் முனைமம் வெளியிடப்பட்டிருந்தால்)

பகுதி செலுத்தப்பட்ட பங்குகளை முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மாற்றுவதற்காக போனசுப் பங்குகள் வழங்கப்பட்டால் பின்வரும் பதிவுகள் செய்யப்படும்.

அ) மேலே (1)ல் கொடுக்கப்பட்டதை போன்ற அதே பதிவுகள்

ஆ) பங்கு அழைப்புகணக்கை பற்று வை பங்குமுதல் கணக்கை வரவு வை

இ) பங்குதாரர்களின் போனசு கணக்கை பற்று வை பங்கு அழைப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | | பல்வகைச் | |
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள | | சொத்துக்கள் | 7,00,000 |
| 20000 பங்குகள் | 2,00,000 | | |
| பொதுக்காப்பு | 50,000 | | |
| இலாப நட்ட க/கு | 2,50,000 | | |
| பங்கு முனைமம் க/கு | 50,000 | | |
| நடைமுறை பொறுப்புகள் | 1,50,000 | | |
| | 7,00,000 | | 7,00,000 |

கம்பெனியில் 5 பங்குகள் வைத்திருப்பவர்களுக்கு ஒன்று ரூ.10 மதிப்புள்ள பங்குகள் 3ஐ போனசுப் பங்குகளாக அளிப்பது எனக் கம்பெனி முடிவு செய்தது. பங்கு முனைமம் கணக்கு, பொதுக்காப்பு ஆகியவற்றைப்

பயன்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது. மீதும் தொகை தேவைப்பட்டால் இலாப நட்டக் கணக்கையும் பயன்படுத்த முடிவு செய்தது.

குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதி திருத்தி அமைக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பையும் அளிக்க.

விடை

அளிக்கப்பட்ட போனசுப் பங்குகளை கணக்கிடு

கம்பெனியில் உள்ள மொத்தப் பங்குகள் = 20,000

கம்பெனியில் வைத்துள்ள ஒவ்வொரு 5 பங்கிற்கும்

கொடுக்கப்பட வேண்டிய 3 போனசுப் பங்குகள் = 20,000 x 3/5 = 12,000

ஒன்று ரூ.10 வீதம் போனசு பங்குகளின் மதிப்பு ரூ. 1,20,000

பின்வருவனவற்றிலிருந்து இவை கொடுக்கப்பட வேண்டும்

பங்கு முனைமம் ரூ.50,000

பொதுக்காப்பு ரூ.50,000

இலாப நட்டக் கணக்கு ரூ.20,000

**மதன் கம்பெனி லிமிடெட் குறிப்பேடு**

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| 2004 | | | ரூ. | ரூ. |
| மார்ச்31 | பங்கு முனைமம் க/கு ப. | | 50,000 | |
| | பொதுகாப்பு க/கு ப. | | 50,000 | |
| | இலாபநட்ட க/கு | | 20,000 | |
| | பங்குதாரர்களின் போனசு க/கு | | | 1,20,000 |
| | (நாளிட்ட தீர்மானத்தின்படி மேலே கண்ட கணக்குகளிலிருந்து போனசுத் தொகை செலுத்தப்பட்டது) | | | |
| | பங்குதாரர்களின் போனசு க/குப. | | 1,20,000 | |
| | பங்கு முதல் க/கு | | | 1,20,000 |
| | (நாளிட்ட தீர்மானத்தின்படி ஒன்று ரூ.10 மதிப்புள்ள 12000 பங்குகள் ஒதுக்கப்பட்டது) | | | |

## மதன் கம்பெனி லிமிடெட் இருப்புநிலைக் குறிப்பு

### 1996 மார்ச் 31 ஆம் நாளன்று

| சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பங்கு முதல் அனுமதித்தது ஒன்று ரூ... மதிப்புள்ள பங்குகள் வெளியிட்டது ஒப்பியதுமற்றும் செலுத்தப்பட்டது | | பலவகை சொத்துக்கள் | 7,00,000 |
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள 32000 பங்குகள் | 3,20,000 | | |
| மேலே உள்ளதில் 12000 பங்குகள் போனசுப் பங்குகளாக 31.3.2004 அன்று வெளியிடப்பட்டது (பங்கு முனைமத்திலிருந்து ரூ.50000 பொதுக்காப்பிலிருந்து ரூ.50000 மற்றும் இலாபநட்டக் கணக்கிலிருந்து ரூ.20000 பயன்படுத்தப்பட்டது) | | | |
| இலாப நட்ட க/கு | 2,30,000 | | |
| நடைமுறை பொறுப்புகள் | 1,50,000 | | |
| | 7,00,000 | | 7,00,000 |

### 8. உரிமைப் பங்குகள் வெளியீடு

ஒரு பொதுக் கம்பெனியானது கூடுதல் சாதாரணப் பங்குகள் அல்லது முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டு தன்னுடைய ஒப்பிய

முதலை அதிகரிக்க விரும்பினால் (பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிந்த பின்போ அல்லது முதல் பங்கு ஒதுக்கலிலிருந்து ஒராண்டு முடிந்த பின்போ அதாவது இவ்விரண்டில் எது முதலில் நிகழ்கின்றதோ அப்போது) அம்மாதிரி வெளியிடப்படும் பங்குகள் ஏற்கனவே பங்குதாரர்கள் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

அம்மாதிரி வெளியிடப்படும் பங்குகளே உரிமைப் பங்குகள் என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அந்த சாதாரணப் பங்குதாரர்களின் சட்டப்பூர்வ உரிமையாகும் உரு பொதுக் கம்பெனியானது, இச்சட்டப் பூர்வ உரிமையை நீக்க வேண்டும் என விரும்பினால் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அவ்வுரிமையை நீக்கலாபம். மேலும் ஏற்கனவே உள்ள பங்குதாரர்கள் உரிமைப் பங்குகளை எடுக்கத் தவறிவிட்டால் இயக்குநர்கள் தங்கள் விருப்பப்படி அப்பங்குகளை வெளியிடலாம்.

உரிமைப் பங்குகளை முகமதிப்பில் அல்லது முனைமத் தொகையில் வெளியடலாம். தொகையும் மொத்தமாக அல்லது தவணைகளில் செலுத்தப்படலாம்.

**எடுத்துக்காட்டு: 11**

ஒன்று ரூ.100 மதிப்புள்ள 9% முன்னுரிமை பங்குகள் 3,000 மற்றும் ஒன்றுக்கு ரூ.10 மதிப்புள்ள சாதாரணப் பங்குகள் 70,000 ஆகியவற்றை குகன் லிமிடெட் என்னும் நிறுவனம் அனுமதித்த முதலாகக் கொண்டிருந்தது. 2004 டிசம்பர் எல்லா முன்னுரிமைப் பங்குகளும் 50,000 சாதாரணப் பங்குகளும் வெளியிடப்பட்டு முழுவதும் செலுத்தப்பட்டிருந்தது.

2005 மார்ச் 1ம் நாளன்று இயக்குநர் அவை செய்த முடிவின்படி சாதாரணப் பங்குதாரர்களுக்கு பினவருமாறு உரிமைப் பங்குகள் வழங்கப்பட்டன. ஏற்கனவே 5 பங்குகள் வைத்துள்ள ஒருவருக்கு பங்கு ஒன்று ரூ.12 வீதம் 1 புதிய பங்கு. புதிய பங்கிற்கான பணம், விண்ணப்பத்துடன் ரூ.7ம் ஒதுக்கும் பொழுது ரூ.5ம் செலுத்தப்பட வேண்டும்.

சாதாரணப் பங்குதாரர்கள் 8,000ம் உரிமைப் பங்குகளை எடுத்துக் கொண்டார்கள் 2005 மார்ச் 20ஆம் நாளன்று உரிமைப் பங்குகள் ஒதுக்கப்பட்டது. 2005 மார்ச் 31 ஆம் நாளன்று ஒதுக்கல் பணம் பெறப்பட்டது.

2005 மார்ச் 31 ஆம் நாளன்று சாதாரண பங்குதாரர்கள் எடுத்துக் கொள்ளப்படாத உரிமைப் பங்குகள் ரூ.30,000க்குச் சந்தையில் இயக்குநர்களால் விற்கப்பட்டது. உரிமைப் பங்கு வெளியீட்டிற்காக ரூ.6,000ம் செலவழிக்கப்பட்டது.

மேற்கூறிய நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்வதற்கு முன்பு சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி பங்கு முனைமத் தொகையைப் பயன்படுத்தும் படி நீர் கோரப்படுகிறீர்.

விடை

குறிப்புகள் : 50,000 சாதாரணப் பங்குகள் உள்ளன 5 பங்குகள் ஒரு புதிய பங்கு

ஃ $\frac{50,000}{5} = 10,000$ புதிய பங்குகள்

அதாவது உரிமைப் பங்குகள் ஏற்கனவே உள்ள பங்குதாரர்கள் 8000 உரிமைப் பங்குகளை ரூ.7 விண்ணப்பிக்கும் பொழுது எடுத்துக் கொள்கின்றனா.

ரூ.5 ஒதுக்கும் பொழுது ரூ.2,000 உரிமைப் பங்குகள் பொது மக்களுக்கு விற்கப்பட்டது. ஆக ரூ.12 எனவே பங்கு ஒன்றிற்கு ரூ.2 முனைமத் தொகை உள்ளது.

ஒதுக்கல் பணம் ரூ.3 (ரூ.5—ரூ.2).

குறிப்பேடு:

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 2005 மாரச்20 | வங்கி க/கு ப.<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(ஏற்கனவே உள்ள பங்குதாரர்களிடமிருந்து பங்கு ஒன்றிற்கு ரூ.7 வீதம் 8000 உரிமைப் பங்குகள் மீது பெறப்பட்ட விண்ணப்பப் பணம்) | | 56,000 | 56,000 |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச31 | பங்கு விண்ணப்ப க/கு ப.<br>பங்குமுதல் க/கு<br>(பங்கு விண்ணப்ப பணம் பங்கு முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 56,000 | 56,000 |
| | பங்கு ஒதுக்கல் க/கு ப.<br>பங்கு முதல் க/கு<br>(நாளிட்ட தீர்மானத்தின்படி பங்கு ஒன்றிற்கு ரூ.3 வீதம் 8000 உரிமைப் பங்குகள் மீது பெற வேண்டிய ஒதுக்கல் பணம்) | | 24,000 | 24,000 |
| | வங்கி க/கு ப.<br>பங்கு ஒதுக்கல் க/கு<br>பங்கு முனைமம் க/கு<br>(பங்கு ஒன்றிற்கு ரூ.3 வீதம் ஒதுக்கல் பணமும் ரூ.2 வீதம் முனைமப் பணமும் 8000 உரிமைப் பங்குகள் மீது பெறப்பட்டது) | | 40,000 | 24,000<br>16,000 |
| | வங்கி க/கு ப.<br>பங்கு ஒதுக்கல் க/கு<br>பங்கு முனைமம் க/கு<br>(2000 உரிமைப் பங்குகள் ரூ.30,000ற்கு விற்கப்பட்டது) | | 30,000 | 20,000<br>10,000 |
| | $\frac{30,000}{2,000}$ = ரூ 15 பங்கு ஒன்றிற்கு<br>முகமதிப்பு ரூ.10<br>முனைமம் ரூ. 5<br>பங்கு வெளியீட்டு செலவு க/கு ப.<br>வங்கி க/கு<br>(வெளியீட்டு செலவு செலுத்தப்பட்டது) | | 6,000 | 6,000 |
| | *பங்கு முனைமம் க/கு ப.<br>பங்கு வெளியீட்டுச் செலவு க/கு<br>(பங்கு முனைமம் கணக்கிற்கு பங்கு வெளியீட்டு செலவு க/கு மாற்றப்பட்டது) | | 6,000 | 6,000 |

## 6.3. தொழில் நிறுவனத்தை வாங்குதல்

சில சமயங்களில் தனி ஆள் வணிகம் அல்லது கூட்டு வியாபார நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பெனிக்கு விற்கப்படுகிறது. அல்லது தனி ஆள் வியாபார அல்லது கூட்டு வியாபார நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பெனியாக மாற்றப்படுகிறது. ஏனெனில் வரையறக்கப்பட்ட கம்பெனியில் பொறுப்புவரையறுக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் தனி ஆள் வணிகம் அல்லது கூட்டு வணிகத்தை விலைக்கு வாங்கும் நோக்கத்தோடு கூட்டுப் பங்கு கம்பெனி அமைக்கப்படுகிறது.

தொழில் நிறுவனத்தை கம்பெனிக்கு விற்கும் நபரை

| விற்பனையாளர் |
|---|

எனக்கூறுகிறோம்.

தொழில் நிறுவனம் எவ்விலைக்கு விற்கப்படுகிறதோ அவ்விலையை[1]

| கொள்முதல் மறுபயன்** |
|---|

எனக்கூறுகிறோம்.

தொழில் மறுபயனை பின்வருபவற்றைக் கொடுத்து தீர்க்கலாம்.

| பங்குகள் கடன் பத்திரங்கள் மற்றும் ரொக்கம் |
|---|

கொள்முதல் மறுபயன் (ரூ.100000 எனக் கொள்க) எடுத்துக் கௌ்ளப்படும் நிகர சொத்துக்களின் (ரூ.80000 எனக் கொள்க) மதிப்பைக் காட்டிலும் அதிகமிருப்பின் அவ்வதிக தொகையான இங்கே ரூ.20000 [தொழில் நன்மதிப்பிற்காக] செலுத்தப்படுகிறது

அதைப்போன்றே கொள்முதல் மறுபயன் (ரூ.50000 எனக் கொள்க) எடுத்துக் கொள்ளப்படும் நிகரச் சொத்துக்களின் மதிப்பைக் (ரூ60000 எனக்கொள்க) காட்டிலும் குறைவாக இருப்பின் அவ்வித்தியாகச் தொகையானது மூலதன இலாபமாகக் கருதப்படும்.

| மூலதனக் காப்பு |
|---|

என அழைக்கப்படும் அல்லது இங்கு உள்ள உதாரணத்தில் ரூ.10,000 மூலதன இலாபத்தை இலாப ஈவு அளிப்பதற்கு பயன்படுத்தலாம்.

* இம்முறையைக் கம்பெனி சட்டம் அனுமதிக்கிறது. ** அல்லது கொள்முதல் எனக்கூறலாம்.

குறிப்பு

1. நாம் பொருள்களை விலைக்கு வாங்கும் பொழுது கொள்முதல் கணக்கைப் பற்று வைக்கிறோம். அதைப் போன்று ஒரு தொழிலை வாங்கும் பொழுது கொள்முதல் கணக்கு பற்று வைக்கப்படும். தொழிலை அளிப்பவரின் கணக்கு வரவு வைக்கப்படும் அதாவது விற்பனையாளரின் கணக்கு வரவு வைக்கப்படும்.

2. இம்முறையில் கம்பெனியானது விற்பனையாளரின் சொத்துக்களை வாங்கிக் கொண்டு பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்கிறது. எனவே கம்பெனியில் எடுத்துக் கொள்ளப்படும் எல்லாச் சொத்துக்களையும் பற்று வைக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா பொறுப்புகளையும் வரவு வைக்க வேண்டும். மேலும் தொழில் கொள்முதல் கணக்கையும் வரவு வைக்க வேண்டும்.

குறிப்பு: நிலைமையைப் பொறுத்து தொழில் நன்மதிப்பு கணக்கு பற்று வைக்கப்படும். அல்லது முதல் காப்புக் கணக்கு வரவு வைக்கப்படும். அதாவது கொள்முதல் விலையானது எடுத்துக்கொள்ளப்படும் நிகர சொத்துக்களின் மதிப்பைக் காட்டிலும் அதிகமிருப்பின் வித்தியாசத் தொகை, தொழில் நன்மதிப்புக் கணக்கில் பற்று வைக்கப்படும். ஆனால் கொள்முதல் விலையானது எடுத்துக் கொள்ளப்படும் நிகர சொத்துக்களின் மதிப்பைக் காட்டிலும் குறைவாக இருப்பின் வித்தியாசத் தொகை மூலதனக் காப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

3. தொழில் நிறுவனம் வாங்கப்பட்ட நாளிலிருந்து பணம் செலுத்தப்படும் நாள் வரை உள்ள இடைப்பட்ட காலத்திற்கு வட்டி செலுத்த வாங்கும் கம்பெனி ஒப்புக் கொண்டால் அளிக்கும் வட்டி கம்பெனி நட்டமாகும். எனவே வட்டி கணக்கு பற்று வைக்கப்பட்டு விற்பனையாளரின் கணக்கு வரவு வைக்கப்படும்.

4. விற்பனையாளரின் கணக்கு தீர்க்கப்படும் பொழுது விற்பனையாளர் ரொக்கம் பங்குகள் அல்லது கடன் பத்திரங்களை பெறுவார். எனவே விற்பனையாளரின் கணக்கு கொள்முதல் விலை

அளவிற்கு பற்று வைக்கப்படும். ரொக்கம் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களின் கணக்குகள் வரவு வைக்கப்படும்.

(குறிப்பு: பங்குகள் முனைமத்தில் கொடுக்கப்பட்டால் முனைமத் தொகையைப் பங்கு முனைமம் கணக்கில் வரவு வைக்கப்படும்)

முக்கிய பகுதிகள்

கம்பெனியின் ஏடுகளில்

| | |
|---|---|
| தொழில் கொள்முதல் க/கு | ப |
| விற்பனையாளர் க/கு | |
| (தொழில் நிறுவனம் ரூ வாங்கப்பட்டது) | |

ஆ) கம்பெனி சொத்துக்களை எடுத்துக் கொண்டு

| | |
|---|---|
| பலவகை சொத்துக்கள் க/கு | ப |
| தொழில் நன்மதிப்பு க/கு | ப |
| பல்வகை பொறுப்புகளின் க/கு | |
| தொழில் கொள்முதல் க/கு | |
| (சொத்துக்களும் பொறுப்புகளும் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டு வித்தியாசம் தொழில் நன்மதிப்பு கணக்கில் பற்று வைக்கப்படுகிறது) | |

அல்லது

| | |
|---|---|
| 2. முதல் காப்பு இருக்கும் போது | |
| பல்வகை சொத்துக்கள் க/கு | ப |
| பல்வகை பொறுப்புகள் க/கு | |
| தொழில் கொள்முதல் க/கு | |
| முதல் காப்பு க/கு | |
| (சொத்துக்களும் பொறுப்புகளும் கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டு வித்தியாசம் முதல் காப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | |

இ)விற்பனையாளர் தொகை செலுத்தப்படும் பொழுது

| | |
|---|---|
| விற்பனையாளர் க/கு | ப |
| ரொக்க க/கு | |
| அல்லது பங்குகள் க/கு | |
| அல்லது பத்திரங்கள் க/கு | |
| அல்லது முனைமம் க/கு | |
| (விற்பனையாளர் கணக்கு தீர்மானிக்கப்பட்டது) | |

**எடுத்துக்காட்டு: 12**

பாலனும், பாரதிதாசனும் 3:2 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டாளியாக இருந்தனர்.

குறிப்பு

2004 டிசம்பர் 31ஆம் நாள் அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது

| சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| கடனீந்தோர் | 15000 | நிலமும் கட்டிடமும் | 25,000 |
| பொதுக்காப்பு | 3000 | இயந்திரம் | 10,000 |
| முதல் | | சரக்குகள் | 12,000 |
| பாலன் 20,000 | | கடனாளி | 5,000 |
| பாரதிதாசன் 15,000 | | வங்கி | 1,000 |
| | 35,000 | | |
| | 53,000 | | 53,000 |

திருச்சிராப்பள்ளி லிமிடெட் என்னும் நிறுவனம் ஒன்று ரூபாய் 10மதிப்புள்ள பங்குகளை உடைய ரூ.1,00,000 அனுமதித்த முதலாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பாலன் மற்றும் பாரதிதாசன் தொழில் நிறுவனத்தை புதிய கம்பெனி முழுவதுமாக (வங்கி இருப்புடன்) ஏற்றுக் கொண்டது. கொள்முதல் விலை ரூ.45,000 என முடிவு செய்யப்பட்டு அதில் ரூ.40,000 முழுவதும் செலுத்தப்பட்டு பங்குகளாகவும் மீதம் ரொக்கமாகவும் கொடுக்கப்பட்டது.

கம்பெனி பொதுமக்களுக்கு 5,000 பங்குகளை வெளியிட்டது. மேலும் ரூ.25,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. துவக்கச் செலவுக்காக ரூ.6,000 செலுத்த வேண்டியிருந்தது.

மேற்சொன்ன நடவடிக்கைகளை திருச்சிராப்பள்ளி லிமிடெட்டின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள் மூலம் பதிக.

குறிப்புகள்

| | | |
|---|---|---|
| | 4,000 | பங்குகள் |
| 1. கொள்முதல் விலை ரூ.45,000 | 5,000 | ரொக்கம் |

2. தொழில் நன்மதிப்பு அல்லது முதல் காப்பைக் கணக்கிடல்

| | | |
|---|---|---|
| எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்துக்கள் நிலம் | ரூ. | 25,000 |
| இயந்திரம் | | 10,000 |
| சரக்கு | | 12,000 |

| | | |
|---|---|---|
| கடனாளிகள் | 5,000 | |
| வங்கி | | 1,000 |
| | | 53,000 |
| கழிக்க: ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்புகள் | | |
| கடனீந்தோர் | | 15,000 |
| | | 38,000 |

இங்கே கொள்முதல் மறுபயன் (ரூ.45,000) எடுத்துக்கொண்ட சொத்துக்களின் நிகரமதிப்பைக் (ரூ.38,000) காட்டிலும் உள்ள வித்தியாசத் தொகை ரூ.7,000 தொழில் நன்மதிப்புக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

கவனிக்க: பொதுக்காப்பானது சேர்த்துவைக்கப்பட்ட இலாப தொகையாதலால் அது கூட்டாளிக்கு உரியது.

| | | |
|---|---|---|
| 3. 1.1.2005 அன்று வங்கியிருப்பு: | | 1,000 |
| 31—12—2004 அன்று வங்கியிருப்பு | | |
| ஒன்று ரூ.10 வீதம் 5000 பங்குகளுக்கு பொதுமக்களிடமிருந்து மொத்தபணம் | | 50,000 |
| | | 51,000 |
| கழிக்க: விற்பனையாளருக்கு செலுத்தப்பட்டது | | 5,000 |
| | | 46,000 |
| கழிக்க: இயந்திரம் வாங்கியது | 25,000 | |
| துவக்கச் செலவுகள் | 6,000 | |
| | | 31,000 |
| | | 15,000 |

விடை

## திருச்சிராப்பள்ளி லிமிடெட்

### குறிப்பேடு

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 2004 டிச31 | தொழில் கொள்முதல் க/கு ப.<br>பாலன் மற்றும் பாரதிதாசன் க/கு<br>(ரூ.45000ற்கு பாலன் மற்றும் பாரதிதாசனிடமிருந்து தொழில் நிறுவனம் வாங்கப்பட்டது) | | 45,000 | 45,000 |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலம் மற்றும் கட்டட க/கு ப.<br>இயந்திரம் க/கு ப.<br>சரக்கு க/கு ப.<br>கடனாளிகள் க/கு ப.<br>வங்கி க/கு ப.<br>தொழில் நன்மதிப்பு க/கு ப.<br>கடனீந்தோர் க/கு<br>தொழில் கொள்முதல் க/கு<br>(சொத்துக்களும் பொறுப்புகளும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டு வித்தியாசம் தொழில் நன்மதிப்பு கணக்கில் பற்று வைக்கப்பட்டது) | | 25,000<br>10,000<br>12,000<br>5,000<br>1,000<br>7,000 | <br><br><br><br><br><br>15,000<br>45,000 |
| | வங்கி க/கு ப.<br>பங்கு முதல் க/கு<br>(ஒன்று ரூ.10 மதிப்புள்ள 5000 பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது) | | 50,000 | <br>50,000 |
| | பாலன் மற்றும் பாரதிதாசன் க/கு ப.<br>பங்குமுதல் க/கு<br>வங்கி க/கு<br>(ஒன்று ரூ.10 மதிப்புள்ள 4000 பங்குகள் மற்றும் ரொக்கம் ரூ.5000 கொடுத்து விற்பனையாளர்களின் கணக்கு தீர்க்கப்பட்டது) | | 45,000 | <br>40,000<br>5,000 |
| | இயந்திரம் க/கு ப.<br>வங்கி க/கு<br>(ரொக்கத்திற்கு இயந்திரம் வாங்கப்பட்டது) | | 25,000 | <br>25,000 |
| | துவக்கச் செலவுகள் க/கு ப.<br>வங்கி க/கு<br>(துவக்கச் செலவுகள் செலுத்தப்பட்டது) | | 5,000 | <br>5,000 |

## திருச்சிராப்பள்ளி லிமிடெட்

## இருப்புநிலைக் குறிப்பு

## 2005 ஜனவரி 1ஆம் நாளன்று

| சொத்துக்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பங்குமுதல் | | நிலைத்த சொத்துக்கள் | |
| அனுமதித்தது: | | தொழில் நன்மதிப்பு | 7,000 |
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள | | இயந்திரம் | 35,000 |
| பங்குகள் 10,000 | 1,00,000 | நிலம், கட்டிடம் | 25,000 |
| வெளியிட்டது: | | நடப்புச் சொத்துக்கள் | |
| ஒப்பியது செலுத்தப்பட்டது | | மற்றும் கடன்கள் | |

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| ரூ.10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட 9000 பங்குகள் | 90,000 | சரக்கு | 12,000 |
| கடனீந்தோர்கள் | 15,000 | கடனாளிகள் | 5,000 |
| | | வங்கிகள் | 15,000 |
| | | பலவகைச் செலவுகள் | 6,000 |
| | | துவக்கச் செலவுகள் | |
| | 1,05,000 | | 1,05,000 |

**விற்பனையாளர் பொருட்டு கடனாளிகளிடமிருந்து தொகையினை வசூல் செய்தல் மற்றும் கடனீந்தோருக்கு செலுத்துதல்**

சில நேரங்களில் தொழில் நிறுவனத்தை வாங்கும் கம்பெனி விற்பனையாளரின் ஏட்டுக் கடன்களையும் (கடனாளிகள்) கடன் தொகையையும் எடுத்துக் கொள்வது இல்லை. ஏனெனில் விற்கும் கம்பெனியின் கடனாளிகளிடமிருந்து தொகையினை வசூல் செய்வதற்கும் வாங்கும் கம்பெனி மிகவும் சிரமப்பட் வேண்டியதிருக்கலாம். அதே போன்று மதிப்பிடப்பட்ட தொகையைக் காட்டிலும் அதிகம் செலுத்தி சில பொறுப்புகள் தீர்க்கப்பட வேண்டியதிருக்கலாம். எனவே, வாங்கும் கம்பெனியானது விற்பனையாளரின் முகவராக செயல்பட்டு விற்பனையாளரின் சார்பாக அவரின் கடனாளிகளிடமிருந்து வசூல் செய்யும். மேலும், கடனீந்தோருக்குப் பணத்தைச் செலுத்தும் இதில் கிடைக்கக் கூடிய இலாபம் அல்லது நட்டம் விற்பனையாளருக்கே சேர வேண்டும். அதே நேரத்தில் வாங்கும் கம்பெனி செய்யும் பணிக்காக (வசூல் செய்தல் மற்றும் பணம் செலுத்துதல்) வசூலிக்கப்பட்ட தொகையின் மீது ஒரு குறிப்பிட்ட அளவு கழிவுத் தொகை வாங்கும் கம்பெனிக்கு அளிக்கப்படும். எனவே வாங்கும் கம்பெனி விற்கும் கம்பெனியின் கடனாளிகளையும் கடனீந்தோரையும் தன்னுடைய கணக்கு ஏடுகளில் பதிவு செய்யாது.

விற்பனையாளரின் பொருட்டு தொகை வசூலிக்கப்படுவதையும் செலுத்துவதையும் வாங்கும் கம்பெனியின் ஏடுகளில் முறையாக பதிவு செய்வது நலமாகும்.

குறிப்பு

அவற்றை பதிவு செய்ய பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகள் தேவை

1. விற்பனையாளரின் கடனாளிகளையும் கடனீந்தோரையும் பதிவு செய்ய

விற்பனையாளரின் கடனாளிகள் க/கு பற்று வை (மொத்த தொகை)

விற்பனையாளரின் கடனீந்தோர் க/கு வரவு வை

விற்பனையாளரிடம் அனாமத்து க/கு வரவு வை(வித்தியாசத் தொகை)

2. கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெறப்பட்டவுடன்

ரொக்கம் அல்லது வங்கி க/கு

விற்பனையாளர் கடனாளிகள் க/கு வரவு வை

குறிப்பு: கடன்களை வசூல் செய்யும் பொழுது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் விற்பனையாளரின் கடனாளிகள் கணக்கிலிருந்து விற்பனையாளரின் அனாமத்துக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

3. கடனீந்தோருக்குத் தொகை செலுத்தப்படும் பொழுது

விற்பனையாளரின் கடனீந்தோர் க/கு பற்று வை

ரொக்கம் அல்லது வங்கி க/கு வரவு வை

குறிப்பு: கடனீந்தோரின் தொகை செலுத்தப்படும் பொழுது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் விற்பனையாளரின் கடனீந்தோரின் கணக்கிலிருந்து விற்பனையாளரின் அனாமத்துக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

4. கழிவு அளிக்கப்படும் பொழுது

விற்பனையாளரின் அனாமத்துக் கணக்கு பற்றுவை

கழிவு கணக்கு வரவு வை

5. இறுதியாகச் செலுத்த வேண்டிய தொகை

வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து செலுத்தப்பட்ட தொகையையும் கழிவுத் தொகையையும் நீக்கிய பின்பு உள்ள தொகை.

விற்பனையாளருக்குச் செலுத்தும் பொழுது

விற்பனையாளரின் அனாமத்துக் கணக்கு பற்று வை

ரொக்கம் அல்லது வங்கி க/கு வரவு வை

குறிப்பு

கூட்டு உருவாக்கத்தின் (பதிவு செய்வதற்கு) முன் ஏற்படும் இலாபம் அல்லது நட்டத்தை பதிவு செய்யும் முறை

ஏற்கனவே நடைபெற்றுவரும் ஒரு தொழில் நிறுவனத்தை குறிப்பிட்ட ஒரு நாளிலிருந்து கம்பெனி எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அக்கம்பெனியானது தொழில் நிறுவனத்தை எடுத்துக் கொள்ளப்படும் நாளில் பதிவு செய்யப்படாமல் அதற்கு பின் ஒரு நாளில் பதிவு செய்யப்படலாம். தொழில் நிறுவனத்தை ஏற்றுக் கொண்ட பின் முதல் ஆண்டின் முடிவுக் கணக்குகளை தயாரிக்கப்படும் பொழுது நாம் இலாபத்தைப் பின்வரமாறு பிரிக்க வேண்டும்.

1. தொழில் நிறுவனம் எடுத்துக் கொள்ளப்பட்ட நாளுக்கும் கம்பெனியில் கூட்டுருவாக்கம் ஏற்பட்ட நாளுக்கும் இடைப்பட்ட காலம்
2. கூட்டுருவாக்கத்திற்குப் பின் உள்ள காலம்

| | |
|---|---|
| கூட்டுருவாக்கத்திற்கு முன் ஏற்பட்ட இலாபம் | கூட்டுருவாக்கத்திற்கு பின் ஏற்பட்ட இலாபம் |

கம்பெனியின் கூட்டுருவாக்கதிற்கு முன் ஏற்பட்ட இலாபம் கம்பெனியினால் ஈட்டப்பட்டதாகக் கருதமுடியாது. ஏனெனில் கூட்டுருவாக்கத்திற்கு முன் கம்பெனியை சட்டப்படி ஒரு அமைப்பாகக் கருதமுடியாது. அதே போன்று கம்பெனிக்கு கூட்டுருவாக்கத்திற்கு முன் ஏற்பட்ட நட்டத்தையும் கம்பெனிக்கு ஏற்பட்ட நட்டமாகக் கருத முடியாது. அம்மாதிரி ஏற்படும்ட சிறப்பான இலாபம் அல்லது நட்டத்தை என்ன செய்வது? கூட்டுருவாக்கத்திற்கு முன் ஈட்டப்பட்ட எந்த இலாபத்தையும் முதல் காப்பு கணக்கிற்கு மாற்ற வேண்டும். அது ஒரு முதலின் இலாபமாக இருப்பதால் இலாப ஈவு அளிப்பதற்கு அதைப் பயன்படுத்த முடியாது.

* அல்லது பதிவு செய்வதற்கு

குறிப்பு

கூட்டுருவாக்கத்திற்கு முன் ஏற்பட்ட எந்த நட்டத்தையும் தொழில் நன்மதிப்பு கணக்கிற்கு மாற்ற வேண்டும். அதன் பின் அத்தொகையை சில ஆண்டுகளில் கணக்கேடுகளிலிருந்து நீக்கிவிடலாம். தொழில் நன்மதிப்புக் கணக்கு ஏதும் இல்லாத போது இம்மாதிரி ஏற்படும் நட்டத்தைத் துவக்கச் செலவுகள் கணக்கிற்கு மாற்றி சில ஆண்டுகளில் கணக்கேடுகளில் அந்நட்டத்தை நீக்க விட வேண்டும்.

கூட்டுருவாக்கத்திற்குப் பிறகு ஈட்டப்படும் இலாபம் நடைமுறை இலாபமாகும். எனவே கணக்கிற்கு அளிப்பதற்கு அவற்றை பயன்படுத்தலாம். கம்பெனி விரும்பினால் இலாபத்தை பொதுகாப்பு கணக்கிற்கு மாற்றலாம்.

தொழில் நிறுவனத்தை ஏற்றுக் கொள்ளும் கம்பெனி பொதுக் கம்பெனியாயிருந்தால் தொழில் துவக்கச் சான்றிதழ் பெறாமல் கம்பெனி வியாபாரத்தை துவக்க முடியாது. எனவே இம்மாதிரி நிலையில் கம்பெனி தொழில் துவக்கச் சான்றிதழ் பெறும் வரையில் ஈட்டப்படும் இலாபம் மூலதன இலாபமாக கருதப்படும். முன் ஈட்டப்பட்ட இலாபம் என்பது கம்பெனி கூட்டுருவாக்க நாள் முடிய ஈட்டப்பட்ட இலாபத்தைத் தான் குறிக்குமே அல்லாது தொழில் துவக்கச் சான்றிதழ் பெறும் நாள் வரை ஈட்டப்படும் இலாபத்தை குறிக்காது இவ்வாறு பாகுபடுத்தும் முறை கட்டாயமாகப் பயன்படுவதில்லை.

கூட்டுருவாக்கத்திற்கு முன் மற்றும் பின் ஈட்டப்படும் இலாபங்களை கண்டறியும் முறைகள்

கூட்டுருவாக்க நாளன்று சரக்கு இருப்பைக் கண்டறிந்து மதிப்பிட்டு அதே நாளில் கணக்குகள் எல்லாம் இருப்புக் கட்டப்பட்டு இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டால் கூட்டுருவாக்கத்திற்கு முன் நட்டம் ஈட்டப்பட்ட இலாபம் அல்லது ஏற்பட்டதை கண்டறியலாம். ஆனால் பெரும்பாலான சமயங்களில் இம்முறை பின்பற்றப்படுவதில்லை. வழக்கம்போல முதலாண்டிற்கான இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டு ஏற்படும் அல்லது

நட்டம் கூட்டுருவாக்கத்திற்கு முன் கூட்டுருவாக்கத்திற்கு பின் இரண்டாகப் பின்வரும் முறையில் பிரிக்கப்படுகிறது.

| பிரிக்க வேண்டிய இனம் | பிரிக்க வேண்டிய அடிப்படை |
|---|---|
| 1. மொத்த இலாபம் | விற்பனை விகிதம் |
| 2. வாடகை, சம்பளம் காப்பீடு அச்சுக் கூலி எழுதுபொருள், அஞ்சல் செலவு தொலைபேசி கட்டணம் தேய்மானம் | கால விகிதம் |
| 3. தூக்கு தள்ளுபடி அளிக்கப்பட்டது விளம்பரம் பயண ஊழியர் சம்பளம் மற்றும் கமஷன் தரகு | விற்பனை விகிதம் |
| 4. துவக்கச் செலவுகள், இயக்குனர் கட்டணம் கடன் பத்திர வட்டி, தணிக்கைக் கட்டணம் (கும்பெனி அமைக்கப்பட்டபின் ஏற்படும் செலவுகள்) | கூட்டுருவாக்கத்திற்குப் பின் உள்ள காலத்திற்கு முழுவதும் மாற்றப்பட வேண்டும் |
| 5 கூட்டாளிகள் சம்பளம் முதல் மீது வட்டி | கூட்டுருவாக்கத்திற்கு முன் உள்ள காலத்திற்கு முழுவதும் மாற்றப்பட வேண்டும். |

**எடுத்துக்காட்டு: 13**

2004 மே 1ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனி வேறு ஒரு தொழல் நிறுவனத்தை 2004 ஜனவரி 1லிருந்து ஏற்றுக் கொண்டது 2004 செப்டம்பர் 30ம் தேதியுடன் முதலாண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மொத்த இலாபம் | ரூ. 56,000 |
| பொதுச் செலவுகள் | ரூ. 14,220 |

இயக்குநரின் ஊதியம் (மாதம் ஒன்றிற்கு) ரூ. 1,000

அமைப்புச் செலவுகள் ரூ. 1,500

வாடகை 2004 ஜுன் 30 முடிய மாதம் ஒன்றிற்கு ரூ.100 ஆக இருந்தது ஜுலை 1, 2004லிருந்து ஆண்டிற்க ரூ.300 என வாடகை உயர்த்தப்பட்டது.

தொழில் நிறுவனத்தில் மேலாளருக்கு மாதம் ரூ.500 வீதம் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் கம்பெனியின் கூட்டுருவாக்கத்திற்குப் பின் அவர் கம்பெனியின் ஒரு இயக்குநராக நியமிக்கப்பட்டார். அதன் பின் அவருக்குச் செலுத்தப்பட்ட ஊதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இலாப நட்டக் கணக்கை தயாரிக்கவும் நிகர விற்பனை ரூ.82,000 என அனுமானம் செய்து கொள்க. 2004 ஆண்டின் கடைசி 8 மாதங்களில் சராசரி விற்பனையில் பாதி முதல் 4 மாதங்களின் சராசரி விற்பனை எனக் கொள்க.

**குறிப்புகள்:**

அ) மொத்த இலாபம்.

முதல் 4 மாதங்களின் விற்பனை 1 எனக் கொள்க அப்படி எனில் மீதம் உள்ள காலத்தின் விற்பனை 2 ஆகும்.

முதல் பகுதியில் மாதங்கள் 4 இரண்டாவது பகுதியில் மாதங்கள் 5 விகிதாச்சாரம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

கூட்டுருவாக்கத்திற்கு முன் 1 x 4 = 4

கூட்டுருவாக்கதிற்கு பின் 2 x 5 = 10

விற்பனை விகிதம் 4:10 அல்லது 2:5

விற்பனை விகிதத்தில் மொத்த இலாபத்தை பிரிக்க வேண்டும்.

56,000 x 2/7 = 16,000

56,000 x 5/7 = 40,000

குறிப்பு

ஆ) பொதுச் செலவுகள்

கால விகிதத்தில் இதைப் பார்க்க வேண்டும். அதாவது

4மாதங்கள் மற்றும் 5 மாதங்கள்

(1—1—2004—30—4—2004) (1—5—2004—30—9—2004)

காலவிகிதம் = 4:5

ரூ. 14,220 x 4/9 ரூ. 6,320

ரூ. 14,220 x 5/9 ரூ. 7,990

இ) இயக்குநரின் ஊதியம் 5 மாதங்கள் 2004 செப்டம்பரி 30 முடிய மாதம் ஒன்றிற்கு ரூ.1,000 வீதம்.

அதாவது 5 x 1,000 = 5,000

மேலாளரின் சம்பளம் = ரூ.2,000

அதாவது 4 x 500 (மாதம் ஒன்றிற்கு)

ஈ) அமைப்புச் செலவுகள் முழுவதும் கூட்டுருவாக்கதிற்குப் பின் உள்ள காலத்தில் வரும்

உ) வாடகை

மாதம் ஒன்றிற்கு ரூ100 வீதம்

4 x 100 = ரூ.400 (ஏப்ரல் 30 முடிய)

2 மாதத்திற்கு ரூ.100 வீதம்

2 x 100 = ரூ.200 (2004 மே ஜூன் மாதங்கள்)

3 மாதத்திற்கு ரூ.250/— வீதம்

ரூ.750/— (செப்படம்பர் 30 முடிய)

மொத்த வாடகை ரூ400 + 950 (200+750) = ரூ.1350

கூட்டுருவாக்கத்திற்கு முன் = ரூ.400

கூட்டுருவாக்கத்திற்கு பின் = ரூ.950

விடை

## இலாப நட்டக் கணக்கு

2004 செப்டம்பர் 30 முடிய 9 மாதங்கள்

ப வ

| | கூட்டுரு வாக்கத்திற்கு முன் ரூ. | கூட்டுரு வாக்கத்திற்கு பின் ரூ. | | கூட்டுரு வாக்கத்திற்கு முன் ரூ. | கூட்டுரு வாக்கத்திற்கு பின் |
|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவுகள் (4:5) | 6,320 | 7,900 | மொத்த இலாபம் | 16,000 | 40,000 |
| இயக்குநர் ஊதியம் | | 5,000 | | | |
| மேலாளர் சம்பளம் | 2,000 | | | | |
| அமைப்பு செலவுகள் | | 1,500 | | | |
| வாடகை | 400 | 950 | | | |
| முதல் காப்பு[1] | 7,280 | | | | |
| நிகர லாபம் | | 24,650 | | | |
| | 16,000 | 40,000 | | 16,000 | 40,000 |

### முடிவுக் கணக்குகள்

இப்பாடத்தில் கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் முடிவுக் கணக்குகள்— இலாப நட்டக்கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு—தயாரிப்பது பற்றி இனிக் காண்போம். இக்கணக்கு சம்பந்தமாக சில சிறப்பான சரத்துக்கள் கம்பெனிச் சட்டத்தில் உள்ளன. அச்சட்டத்தின் படி ஒவ்வொரு வருடமும் சிறப்பான உறுப்பினர்களின் பொதுக்கூட்டத்தில் கம்பெனியின் இயக்குநர்கள் முடிவு கணக்கை சமர்ப்பிக்க வேண்டும். இலாப நட்டக் கணக்கு** நிதியாண்டிற்கான அக்கம்பெனியின் உண்மையான மற்றும் சரியான இலாபம் அல்லது நட்டத்தினை உணர்த்தும். இதே போல் ஒவ்வொரு இருப்புநிலைக் குறிப்பும் நிதியாண்டில் இறுதியில் உள்ளவாறான

* கம்பெனியின் கூட்டுருவாக்கத்திற்கு ஈட்டப்பட்ட இலாபத்ததையும் கம்பெனி ஈட்டியதாக கருத முடியாது எனவே அம்மாதிரி இலாபத்தை முதல் காப்புக் கணக்கிற்கு மாற்ற வேண்டும். இலாப ஈவு அளிப்பதற்கு அந்த இலாபத்தைப் பயன்படுத்த முடியாது.

** கம்பெனிச் சட்டத்திலுள்ள இணைப்பு 6ல் உள்ளவாறான தேவைகளை இலாப நட்டக் கணக்குப் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் இச்சட்டத்தின் அட்டவணை 6ல் பகுதி 1ல் கொடுக்கப்பட்டுள்ள வடிவத்தின்படி முடிந்தவரையில் சூழ்நிலைக்கேற்றவாறு இருப்புநிலைக் குறிப்பின் படிவங்களை தங்களுடைய சட்டங்களில் பெற்றிருக்கின்றன. காப்பீட்டுக் கழகம் வங்கி அல்லது மின்சார நிறுவனம் ஆகியவற்றிற்கு இச்சட்டத்தின் சரத்துக்களை அமல் செய்ய முடியாது.

குறிப்பு

அக்கம்பெனியின் சொத்து மற்றும் பொறுப்பு ஆகியவற்றின் உண்மையான மற்றும் சரியான நிலைமையினை உணர்த்தும்.

**கணக்குகளைத் தணிக்கை செய்தல்**

கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக ஒவ்வொரு கம்பெனியும் ஒரு தகுதி பெற்ற தணிக்கையாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். இத்தணிக்கையாளர் தான் சோதனை செய்த கணக்குகளைப் பற்றி ஒரு அறிக்கையினை அக்கம்பெனியின் பங்குதாரர்களுக்கு அளிக் வேண்டும்.

**கணக்குகளை வெளியீடு செய்தல் (Publication of Accounts)**

கம்பெனியின்** வருடாந்திரப் பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு 21 நாட்களுக்கு முன்பு தணிக்கையாளரின் அறிக்கையுடன் கூடிய இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்கு ஆகியவற்றின் பிரதி ஒன்றினை பங்குதாரர்களுக்கும், கடன் பத்திரதாரர்களுக்கும் கம்பெனி அனுப்ப வேண்டும்.

**கணக்குகளை ஆராய்தல் (Consideration of Accounts)**

வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது *ஆண்டுக் கணக்குகளை இயக்குநர் மற்றும் தணிக்கையாளரின் அறிக்கையுடன் சேர்ந்து பங்குதாரர்கள் ஆராய்ந்து* அவற்றை ஏற்றுக் கொள்வார்கள் அல்லது நிராகரித்து விடுவார்கள்.

---

** பதிவு செய்ததிலிருந்து 18 மாதங்களுக்குள் ஒரு கம்பெனி அதனுடைய முதல் வருடாந்திரப் பொதுக்கூட்டத்தை நடத்தி விட வேண்டும். அதன் பின் ஒவ்வொரு வருடமும் வருடாந்திரப் பொதுக்கூட்டம் நடத்திய தேதியிலிருந்து 15 மாதங்களுக்குள் அக்கம்பெனி நடத்த வேண்டும். மேலுமத் அக்கம்பெனியின் நிதியாண்டு முடிந்த 6 மாதங்களுக்குள் ஒரு வருடாந்திரப் பொதுக்கூட்டம் நடத்தப்பட வேண்டும். இது இருப்புநிலைக் குறிப்பையும் இலாப நட்டக் கணக்கையும் குறிக்கும்.

* இங்கு நிதியாண்டு என்பது கணக்குகள் தயாரிக்கப்படுகின்ற ஒரு காலத்தைக் குறிக்கும்

* இதன் பொருள்

அ) சொத்துக்களும் பொறுப்புகளும் சரியாக விவரிக்கப்படுகிறது
ஆ) நிலைமையை மிகைப்படுத்தியோ அல்லது குறைத்தோ காட்டுவதில்லை
இ) தேவையான ஒதுக்குகளை மிக அதிகமாகவே அல்லது குறைவாகவோ ஏற்படுத்துவதில்லை.
ஈ) ஒரு மாறாத அடிப்படையில் சரக்கிருப்பு கணக்கிடப்படுகிறது.
உ) சந்தேகம் அல்லது தவறான எண்ணத்தை நீக்குதலுக்காகஇருப்புநிலைக் குறிப்பேடு பல குறிப்புகளும் இணைக்கப்படுகின்றன.

## கணக்குகளைத் தாக்கல் செய்தல் (Filling of Accounts)

ஒரு கம்பெனியின் ஆண்டுக் கணக்குகளை வருடாந்திர பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்த பின்பு இயக்குநரால் கையொப்பம் இடப்பட்ட மூன்று பிரதிகளை ஒவ்வொரு கம்பெனியும் கூட்டு பங்கு கம்பெனிகளின் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

## பொதுக் குறிப்புகள்.

ஆண்டுக் கணக்குகளில் கொடுக்கப்பட வேண்டியவைகளை தெளிவாக அக்கணக்குகளில் எழுத முடியாவிட்டால் அவற்றை ஒரு தனி அட்டவணையில் குறித்து அக்கணக்குகளில் ஒரு பகுதி என அவைகளை இணைத்து விடலாம்.

நிர்ணயிக்கப்பட்ட முறையின்படி தொகைகளை முழு ரூபாய்களாகவே எழுத வேண்டியுள்ளது. சில இடங்களில் விரும்பினால் பைசாக்களையும் எழுதலாம்.

சட்டத்தின் படி ஆண்டுக் கணக்குகளில் அனைத்து இனங்களுக்கும் கடந்த ஆண்டின் தொகைகளும் கொடுக்கப்பட வேண்டும்.

தேர்வில் குறிப்பேட்டுப் பதிவுகள் செய்யுமாறு குறிப்பாகக் கேட்கப்பட்டிருந்தால் நீங்கள் தேவையான பதிவுகள் செய்ய வேண்டும்.

## இலாப நட்டக் கணக்கு (Profit and Loss Account)

இலாப நட்டக் கணக்கினை வியாபாரக் கணக்கு இலாப நட்டக் கணக்கு மற்றும் இலாப நட்டப் பகிர்வு கணக்கு எனப் பிரிப்பது பற்றி சட்டம் ஏதும் கூறவில்லை. வழக்கமாக மூன்று பிரிவுகளாக இக்கணக்கு தயாரிக்கப்படுகிறது. இவ்வாறான ஒரு கணக்கினை இலாப நட்டக் கணக்கு என்கிறோம். வியாபார இலாப நட்டக் கணக்கு என

குறிப்பு

அழைக்கப்படுவதில்லை. ஆனால் வியாபாரக் கணக்கும் இலாப நட்டக் கணக்கினுள் அடங்கியுள்ளது.

| | |
|---|---|
| 1. உற்பத்தி செய்யப்பட்ட அல்லது கொள்முதலான தொடக்க சரக்கிருப்பு | அ) மொத்த விற்பனை அல்லது செய்த வேலைக்குப் பெற்ற மொத்த வருமானம் |
| 2. கொள்முதல் செய்யப்பட்ட கச்சாப் பொருட்கள் அல்லது பொருட்கள் | ஆ) உற்பத்தியான அல்லது கொள்முதலான சரக்குகளின் இறுதி இருப்பு |
| 3. தொடக்கத்திலுள்ள வேலை முற்றாப் பொருட்கள் | இ) இறுதியிலுள்ள வேலை முற்றாப் பொருட்கள் |
| 4. பயன்படுத்திய இதர சில்லரை சாமான்களும் உதிரி பாகங்களும் | ஈ) முதலீடுகளின் மீதான வருமானம் |
| 5. சக்தியும் எரிபொருளும் | உ) முதலீடுகளின் மீது அல்லது வழக்கமாக நடை பெறாத ஒரு வகையான நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்ட இலாபம் அல்லது |
| 6. கூலி, மேலூதியம் முதலியன | ஊ) பல்வகை வருமானம் |
| 7. தொழிலாளர்களின் சேமநல நிதிக்கு பங்களித்த தொகை | எ) துணைக் கம்பெனிகளிலிருந்து கிடைத்த இலாப ஈவுகள் |
| 8. தொழிலாளர்களின் பொதுநல வாழ்வுச் செலவுகள் | |
| 9. வாடகை கட்டணங்கள் மற்றும் வரிகள் | |
| 10. காப்பீட்டுக கட்டணம் | |
| 11. பழுது பார்த்தல் | |
| 12. பல்வகைச் செலவுகள் | |
| 13. விற்பனை முகவர்களுக்கு விற்பனை மீது அளித்த கமிஷன் தரகு மற்றும் தள்ளுபடிகள் | |
| 14. தேய்மானம் | |
| 15. கடன் பத்திரங்களின் மீதான வட்டி | |

குறிப்பு

| | |
|---|---|
| 1. குறிப்பிட்ட பொறுப்புகள் அல்லது பின்வரும் பொறுப்புகள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பொறுப்புகளைச் செலுத்துவற்காக ஒதுக்கப்பட்டதொகை | |
| 2. நடப்பு ஆண்டிற்கான வருமானவரி | |
| 3. சென்ற ஆண்டிற்கான வருமான வரி | ஏ) சென்ற ஆண்டிலிருந்து இருப்பு |
| 4. கடன் பத்திரங்கள் மற்றும் பங்குகளை மீட்டலுக்காக ஒதுக்கப்படும் தொகை | ஐ) நடப்பு ஆண்டிற்கான இலாபம் |
| 5. காப்பு அல்லது நிதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை | |
| 6. பரிந்துரைக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட இலாப ஈவுகள் | |
| 7. இருப்புநிலைக் குறிப்பிற்கு | |

தனி ஆள் அல்லது கூட்டு நிறுவனத்தில் இலாப நட்டக் கணக்கின் இருப்பு முதல் கணக்குகளுக்கு மாற்றப்படுவது போல் கம்பெனியின் கணக்குகளில் செய்யப்படுவதில்லை. ஆனால் இருந்த இருப்பு இலாப நட்ட பகிர்வு கணக்கு எனும் ஒரு கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

இலாப நட்டப் பகிர்வு கணக்கு என்பது இலாப நட்டக் கணக்கின் ஒரு பகுதியாகும். பகிர வேண்டிய இலாபத் தொகையைக் காண்பிப்பதற்காகவும், அவைகள் எவ்வாறு பகிரப்படுகின்றன என்பதனைக் காட்டுவதற்காகவும் இவ்வாறு செய்யப்படுகிறது.

குறிப்பு: எண்கள் கொடுக்கப்பட்ட இனங்களில் 1 முதல் 8 வரை மற்றும் அ முதல் இ வரையுள்ளவைகள் பொதுவாக வியாபாரக் கணக்கில் பதியப்படுகின்றன. 9 முதல் 17 வரை மற்றும் ஈ முதல் எ வரையுள்ளவைகள் வழக்கமான இலாப நட்டக் கணக்கில் பதியப்படுகின்றன.

உண்மையில் இப்போது பிரித்ததைப் போன்று இலாப நட்டக் கணக்கினை மூன்று பகுதிகளாகப் பிரிவுகளாக பிரித்தல் குற்றமாகாது மொத்த இலாபம் நிகர இலாபம் மற்றும் பகிர்வு இலாபம் ஆகியவற்றைத் தெளிவாக அறிந்து கொள்வதற்காக இவ்வாறு பிரித்தல் முறை பரிந்துரைக்கப்படுகிறது.

இலாப நட்டக் கணக்கில் கடந்த ஆண்டின் தொகைகளும் கொடுக்கப்பட வேண்டும்.

உற்பத்திக் கணக்கு தயாரிக்குமாறு குறிப்பாகச் சொல்லப்பட்டிருந்தால் நீங்கள் அக்கணக்கைத் தயாரிக்க வேண்டும்.

## ஆ) இருப்புநிலைக் குறிப்பு (Blance Sheet)

கம்பெனிகள் சட்டம் தீர்மானிக்கின்ற முறையின் படி ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனி அதனுடைய இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்க வேண்டியுள்ளது. கணக்காண்டின் இறுதியில் உள்ளவாறான அக்கம்பெனியின் உண்மையான மற்றும் சரியான நிதி நிலைமையை இந்த இருப்புநிலைக் குறிப்பு விளக்க வேண்டும். அதிகமான அல்லது குறைவானவைகளைக் காண்பிக்க கூடாது இங்கு மறைக்காப்புககள் ஏதும் இருக்கக் கூடாது. கடன் ஆண்டின் தொகைகள் இடது புறத்தில் கொடுக்கப்படுவது அவசியம்.

பொறுப்புகள்

இவைகள் கீழ்கண்ட தலைப்புகளில் அடக்கப்பட்டுள்ளன

1. பங்கு முதல் (பிரிவு மீட்டல் விற்பனையாளருக்கு அளித்த பங்குகள் மேலுதியப் பங்குகள்)
2. காப்புகள் மற்றும் உயிர்
3. பிணைக் கடன்கள்
4. நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்குகள்

அ) நடப்பு பொறுப்புகள் ஆ) ஒதுக்குகள்

நிகழ்வடையாப் பொறுப்புகளை அடிக்குறிப்பின் மூலம் காண்பிக்க வேண்டும்.

**சொத்துக்கள்:**

இவைகள் கீழ்கண்ட தலைப்புகளில் அடங்க வேண்டும்.

1. நிலைத்த சொத்துக்கள் (உண்மையான அடக்கவிலை + சோத்தல்கள் — தேய்மானம்)
2. முதலீடுகள்
3. நடப்புச் சொத்துக்கள், கடன்கள் மற்றும் முன்பணம்

   அ) நடப்புச் சொத்துக்கள்

   ஆ) கடனும், முன்பணமும்

   பல்வகைச் செலவீனம் (இச்செலவு நீக்கப்படாத வரையில்)
4. பல்வகைச் செலவீனம் (இச்செலவு நீக்கப்படாத வரையில்)
5. இலாப நட்டக் கணக்கு (பற்று இருப்பு)

இனி இருப்புநிலைக் குறிப்பிற்கான தீர்மானிக்கப்பட்ட படிவம் பற்ற நாம் சுருக்கமாக காண்போம்.

1) படுக்கை வடிவிலான இருப்புநலைக் குறிப்பு

| கடந்த ஆண்டுக் குரிய தொகை ரூ | பொறுப்புகள் | நடப்பு ஆண்டுக் குரிய தொகை ரூ | கடந்த ஆண்டுக் குரிய தொகை ரூ | சொத்துக்கள் | நடப்பு ஆண்டுக் குரிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| | 1. பங்கு முதல்<br>அனுமதித்தது<br>வெளியிட்டது<br>ஒப்பியது<br>பங்கு ஒன்று ரூ...<br>வீதம்<br>பங்குகள்<br>அழைக்கப்பட்டது<br>கழி: செலுத்தப்படாத அழைப்புகள்<br>கூட்டு: பங்கு பறிமுதல்<br>II. காப்புகளும்.<br>உபரிகளும்<br>அ) முதல் காப்புகள்<br>ஆ) முதல் மீட்பு காப்பு<br>இ) பங்கு முனைமம் க/கு<br>ஈ) பிற காப்புகள்<br>கழி: இலாப நட்டக க/கு<br>பற்று இருப்பு<br>உ) பிற நிதிகள்<br>ஊ) உபரி<br>இலாபநட்டக்<br>கணக்கு வரவு இருப்பு | | | 1. நிலைத்த சொத்துக்கள்<br>1) தொழில் நன்மதிப்பு<br>2) நிலம்<br>3) கட்டடம்<br>4) குத்தகை சொத்துக்கள்<br>5) கம்பெனிக்காக போடப் பட்ட இருப்புப் பாதை<br>6) பொறி மற்றும் இயந்திரம்<br>7) மனை துணைப்பொருள் மற்றும் பொருந்தியவை<br>8) சொத்துக்களின் மேம்பாடு<br>9) வாணியக் குறிகள் பட்டயங்கள்<br>10) கால்நடைகள்<br>11) வண்டிகள் முதலியன<br>II. முதலீடுகள்<br>முதலீடுகளையும் அவற்றின்<br>மதிப்பிடும் தன்மையையும் காட்டுதல்<br>அ) அரசுப் பத்திரங்கள்<br>ஆ) பங்குகள் கடன் பத்திரங்கள் அல்லது | |

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| III. பிணைக்கடன்கள்<br>அ) கடன் பத்திரம்<br>ஆ) வங்கியர்<br>இ) பிற கடன்கள்<br>IV. பிணையில்லாகடன்<br>அ)நிலைத்த வைப்புகள்<br>ஆ) வங்கி மற்றும் பிற நபரிடமிருந்து பெற்ற பிற கடன்கள்<br>V. நடப்பு பொறுப்புகளும் ஒதுக்குகளும்<br>அ) நடைமுறை பொறுப்புகள்<br>1) செலுத்த வேண்டிய உண்டியல்<br>2) பலவகை கடனீந்தோர்<br>3) கோரப்படாத இலாப ஈவு<br>4) பிற பொறுப்புகள்<br>5) கடன்கள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி<br>ஆ) ஒதுக்குகள்<br>1) வரிகளுக்கான ஒதுக்கு<br>2) தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு<br>நிகழ்வடையாப் பொறுப்புகள் எடுத்துக்காட்டு<br>குவிவு முன்னுரிமைப் பங்குகளின் மீதான இலாப ஈவுப் பாக்கி | | | ஆ) [illegible]<br>பத்திரங்கள் அல்லது பத்திரங்கள்<br>இ) அசையா சொத்துக்கள்<br>III. நடப்புச் சொத்துக்கள் கடன்கள் மற்றும் முன் பணங்கள்<br>அ) நடப்புச் சொத்துக்கள்<br>1) வர வேண்டிய வட்டி<br>2) பண்டங்களும் உதிரியுறுப்புகளும்<br>3) உதிரிக் கருவிகள்<br>4) சரக்கிருப்பு<br>5) வேலை முற்றாப்பொருள்<br>6) கடனாளிகள்<br>கழி : காப்பு<br>அ) முழுவதும் நல்ல வையாகக் கருதப்படும் பிணைக் கருவிகள்<br>ஆ) நல்லவையாகக் கருதப்படும் கடன்கள் ஆனால் பிணையல்லாது<br>இ) இயக்குநர் மற்றும் பிற அலுவலர் செலுத்த வேண்டிய கடன்கள்<br>ஈ) ஐயக்கடன்<br>7) கையில் மற்றும் வங்கியில் உள்ள ரொக்கம்<br>அ) கடன்களும் முன்பணமும்<br>ஆ) துணைக்கம்பெனிகளுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள்<br>இ) மாற்று உண்டியல்<br>ஈ) முன் செலுத்திய செலவுகள்<br>உ) சுங்க அலுவலகம் துறைமுகம் மற்றும் பிற அலுவலகத்திலுள்ள இருப்புகள்<br>IV. பல்வகைச் செலவுகள்<br>1) துவக்கச் செலவுகள்<br>2) பங்குகள் மற்றும் கடன் பத்திர வெளியிட்டு ஒப்புறுதிக் கழிவ அல்லது தரகு<br>V. இலாப நட்டக் கணக்கு |

2) செங்குத்து வடிவிலான இருப்புநிலைக்குறிப்பு கம்பெனியின் பெயர்

........................................ல் இருப்புநிலைகுறிப்பு

| | அட்டவணை | நடப்பு நிதி ஆண்டின் இறுதியில் உள்ள தொகைகள் | கடந்த நிதி ஆண்டின் இறுதியில் உள்ள தொகைகள் |
|---|---|---|---|
| I. நிதி ஆதாரங்கள்<br>1. பங்குதாரர்களின் நிதிகள்<br>அ) மூலதனம்<br>ஆ) காப்பு மற்றும் மிகுதிகள்<br>2. கடன் நிதிகள்<br>அ) பிணைக் கடன்கள்<br>ஆ) பிணையில்லாக் கடன்கள்<br>II. நிதிகளின் பயன்பாடு<br>1. நிலையான சொத்துக்கள்<br>அ) மொத்த சொத்துக்கள்<br>ஆ) கழி: தேய்மானம்<br>இ) முடிவடையா உற்பத்தியிலுள்ள மூலதனம்<br>2. முதலீடுகள்<br>3. நடப்பு சொத்துக்கள் கடன்கள் மற்றும் முன் தொகைகள்<br>அ) சரக்குகள்<br>ஆ) பற்பல கடனீந்தோர்கள்<br>இ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகள்<br>ஈ) மற்றைய நடப்பு சொத்துக்கள்<br>உ) கடன்கள் மற்றும் முன் தொகைகள்<br>கழி<br>நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்<br>அ) பொறுப்புகள்<br>ஆ) ஒதுக்கீடுகள்<br>நிகர நடப்பு சொத்துக்கள்<br>4. அ) நீக்கப்படாத அல்லது சரிகட்டப்படாத பல்வகை செலவீனங்கள்<br>ஆ) இலாப நட்டக் கணக்கு<br>மொத்தம் | | | |

குறிப்புகள் 1) மேலே உள்ள இனங்கள் ஒவ்வொன்றும் விவரங்களுடன் தனித்தனி அட்டவணையில் கொடுக்கப்பட வேண்டும். இருப்புநிலைக்குறிப்பு தயாரித்தலுக்கான பொதுக் குறிப்புகள் அடங்கிய கம்பெனிச் சட்ட

குறிப்பு

அட்டவணை VI (பகுதி A1)யின்படி தேவையான அனைத்து விவரங்களுடன் அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

2) மேலே கூறப்பட்ட அட்டவணைகள் கணக்கியல் விதிமுறைகள் மற்றும் விளக்கக் குறிப்புகள் அனைத்தும் இருப்புநிலைக்குறிப்புடன் இணைக்கப்பட வேண்டும்.

3) இருப்புநிலைக்குறிப்பில் உள்ள தொகைகள் '000 அல்லது 00 என வசதிக்கேற்றவாறு சுருக்கப்பட்டு ஆயிரங்களின் மதிப்பில் எழுதப்பட வேண்டும்.

4) உறுதியில்லாப் பொறுப்புகள் (Contingent Liabilities) இருப்புநிலைக்குறிப்பில் ஒரு அடிக்குறிப்பின் மூலம் தனியாக சேர்க்கப்பட வேண்டும்.

**எடுத்துக்காட்டு: 14**

2004 டிசம்பர் 31 அன்று கதிரேசன் சைக்கிள் கம்பெனி லிமிடெட் இருப்புச் சோதனை பின்வருமாறு இருந்தது. 2004 ஆண்டிற்கு இலாப நட்டக் கணக்கையும் இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும். இருப்புநிலைக் குறிப்பின் கீழ் தணிக்கையாளரின் சான்றிதழையும் தருக.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| அழைப்பு பாக்கி | 6,400 | அனுமதித்த முதல் ஒன்று ரூ.10 மதிப்புள்ள 50,000 சாதாரணப் பங்குகள | 5,00,000 |
| இலாப ஈவு 2003ற்கு செலுத்தப்பட்டது | 1,000 | ஒப்பிய முதல் ஒன்று ரூ.10 மதிப்புள்ள 10000 சாதாரணப் பங்குகள் | 1,00,000 |
| கையில் ரொக்கம் | 2,500 | | |
| வங்கியில் ரொக்கம் | 10,000 | | |
| வருமான வரி செலுத்தப்பட்டது | 2,000 | விற்பனை | 75,000 |
| நிலம் கட்டடம் | 12,000 | வருமான வரி ஒதுக்குகள் 1.1.04 | 5,000 |
| கிடங்கு | 10,000 | வாராக்கடன் ஒதுக்கல் 1.1.04 | 1,400 |
| நில வாடகை | 1,000 | | |
| சம்பளம் (இயக்குநரின் சம்பளம் ரூ.1000 சேர்ந்துள்ளது) | 6,600 | 6% கடன் பத்திரங்களை | 3,000 |
| | | பல வகைப் பொறுப்புகள் | 400 |
| முதலீடுகள் (சந்தை விலை ரூ.11500) | 10,000 | முதலீடுகள் மீது வட்டி | 800 |
| | | பங்கு மாற்றுக் கட்டணம் | 2,000 |
| பணியாளருக்கு முன்பணம் | 12,000 | பலவகைக் கடனீந்தோர் | 12,920 |
| பொறி இயந்திரம் | 10,000 | கடன் பத்திர மீட்பு நிதி | 2,000 |
| துவக்கச் செலவுகள் | 5,000 | ஊழியர் நல நிதி | 15,200 |
| முனைத்துணைப் பொருட்கள் | 3,200 | கடன் பத்திர மீட்பு | |

| | | | |
|---|---|---|---|
| உள் தூக்கு கூலி | 2,000 | முதலீடுகள் வட்டி | 80 |
| கருவிகள் விற்றதில் நட்டம் | 300 | ஓய்வு நிதி | 9,000 |
| கூலி | 21,400 | இலாப நட்டக் கணக்கு | 1,000 |
| கடன் பத்திர மீட்பு நிதி | | இலாப ஈவு சமன் செய் நிதி | 2,000 |
| முதலீடு 1.1.04 | 1,400 | பொதுக்காப்பு | 10,000 |
| கடன் பத்திரங்கள் மீது வட்டி | 90 | | |
| வங்கிக் கட்டணம் | 100 | | |
| நிலக்கரி வாயு தண்ணீர் | 710 | | |
| வரிகள் | 800 | | |
| கொள்முதல் | 50,000 | | |
| வரகவ்குரிய உண்டியல் | 1,200 | | |
| வியாபாரச் செலவுகள் | 1,000 | | |
| பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் வெளியீட்டுத் தரகு | 700 | | |
| ஏட்டுக் கடன்கள் நல்லவையாகவும் 40,000 ஐயக்கடனாகவும் 3,000 கருதப்பட்டது | 43,000 | | |
| சரக்கு 1.4.04 | 25,400 | | |
| | 2,39,800 | | 2,39,800 |

தேய்மானம் கணக்கிடுக

| | |
|---|---|
| கட்டடம் | 2½% |
| பொறி | 10% |
| மனைத்துணைப் பொருட்கள் | 10% |

2. வாராக்கடன் ஏட்டுக் கடன்கள் மீது ரூ.2,150 காப்பு ஏற்படுத்துக

ரூ. 1000 த்திற்கு வருமான வரிக்காக வேண்டி ஒதுக்கு ஏற்படுத்துக

4. ரூ.200 கடன் பத்திர மீட்பு காப்பு நிதிக்கு மாற்றவும்

5. 31.12.04 அன்று சரக்கிருப்பு மதிப்பு 30,000

## கதிரேசன் சைக்கிள் கம்பெனி லிமிடெட்

## இலாப நட்டக் கணக்கு

## 1996 டிசம்பர் 31 தேதியுடன் முடியும் ஆண்டிற்கு

| ப | | ரூ | ரூ | | | வ |
|---|---|---|---|---|---|---|
| | துவக்கச் சரக்கிருப்பு | | 25,400 | விற்பனை | | 75,000 |
| | கொள்முதல் | | 50,000 | இறுதிச் சரக்கிருப்பு | | 30,000 |
| | உள்தூக்குக் கூலி | | 2,000 | | | |
| | கூலி | | 21,400 | | | |
| | காற்று, நிலக்கரி, தண்ணீர் | | 710 | | | |
| | மொத்த இலாபம் கீ/இ | | 5,490 | | | |



குறிப்பு

**IV. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**1). சரியா அல்லது தவறா:**

அ). இயக்குனர்கள் பரிந்துரை செய்த பங்காதாய வீதத்தை பங்குதாரர்கள் உயர்த்தலாம்.

ஆ). அழைப்பு முன்பணத்தின் மீது பங்காதாயம் செலுத்தப் படுவதில்லை.

இ). வரிக்கு ஒதுக்கிய பின்னர் தான் நிருவாக ஊதியத்தைக் கணக்கிட முடியும்.

ஈ). இலாப நட்ட பகிர்வு கணக்கின் இருப்பு பங்கு முதல் கணக்கிற்கு மாற்றப்படும்.

உ). வரி ஒதுக்கீடு இலாப நட்டக் கணக்கில் காண்பிக்கப் படும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 1,05,000 | | | 1,05,000 |
| | நில வாடகை | | 1,000 | மொத்த இலாபம் கீ/கொ | | 5,490 |
| | சம்பளம் | | 5,600 | | | |
| | இயக்குநர் சம்பளம் | | 1,000 | பலவகைப் பெறுதல்கள் | | 400 |
| | கடன் பத்திர வட்டி | 90 | | முதலீடுகள் மீது வட்டி | | 2,000 |
| | கூட்டு கொடுபடாதது | 90 | 180 | பங்கு மாற்றுக் கட்டணம் | | 80 |
| | வங்கிக் கட்டணம் | | 100 | கடன் பத்திர மீட்பு நிதி | | |
| | | | | நடப்பு ஆண்டிற்கு நிகர நட்டம் | | 4,580 |
| | வரிகள் | | 800 | | | |
| | வியாபாரச் செலவுகள் | | 1,000 | | | |
| | வராக்கடன் ஒதுக்கு | | | | | |
| | தேவையான காப்பு | 2,150 | | | | |
| | கழி: ஏற்கனவே உள்ளது | 1,400 | 750 | | | |
| | தேய்மானம் | | | | | |
| | நிலம் கட்டிடம் 2 ½% | 300 | | | | |
| | பொறி இயந்திரம் 10% | 1,000 | | | | |
| | மனைத்துணைப் பொருள் 10% | 320 | 1,620 | | | |
| | கருவி விற்றதில் நட்டம் | | 300 | | | |
| | வரிகளுக்கான ஒதுக்கு | | 1,000 | | | |
| | | | 13,350 | | | 13,350 |

## இலாப நட்டப் பகிர்வு கணக்கு

| | | ரூ | ரூ | | ரூ | ரூ |
|---|---|---|---|---|---|---|
| | இலாப ஈவு (2003) செலுத்தப்பட்டது | | 1,000 | இருப்பு கீ/கொ | | 1,000 |
| | கடன் பத்திர மீட்பு நிதிக்கு மாற்றப்பட்டது (ரூ.500 + வட்டி ரூ.80) | | 580 | முன் ஆண்டுகளால் ஒதுக்கப்பட்ட வரிகளுக்கான ஒதுக்குகுளில் உள்ள | | 3,000 |
| | நடப்பு ஆண்டின் நிகர நட்டம் | | 4,580 | மீதம் (ரூ.5000— ரூ.2000) | | |
| | | | | மாற்றப்பட்ட இருப்பு | | 2,160 |
| | | | 6,160 | | | 6,160 |

# கதிரேசன் சைக்கிள் கம்பெனி லிமிடெட்
## இருப்புநிலைக் குறிப்பு
## 2004 டிசம்பர் 31 அன்று

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துக்கள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| I. பங்கு முதல் ஒன்று 10% மதிப்புள்ள 50,000 சாதாரணப் பங்குகள் | | 5,00,000 | I. நிலைத்த சொத்துக்கள் நிலமும் கட்டடமும் | 12,000 | |
| வெளியிட்டது மற்றும் ஒப்பியது | | | கழி: தேய்மானம் 2½ | 300 | 11,700 |
| ஒன்று ரூ.10% மதிப்புள்ள 10000 சாதாரணப் பங்குகள் | 1,00,000 | | கிட்டங்கி | | 10,000 |
| கழி: அழைப்புப் பாக்கி | 6,400 | 93,600 | பொறி இயந்திரம் | 10,000 | |
| II. காப்பும் உபரியும் பொதுக்காப்பு | 10,000 | | கழி: தேய்மானம் 10% | 1,000 | 9,000 |
| நடப்பு ஆண்டு நட்டம் | 2,160 | | மனைத்துணைப் பொருள் பொருந்தியவை | 3,200 | |
| | | | கழி: தேய்மானம் 10% | 320 | 2,880 |
| கடன் பத்திர மீட்பு நிதி கடைசி இருப்பு நிலைக்குறிப்பின்படி 2,000 கூட்டு நடப்பு ஆண்டில் | 7,840 | | II. முதலீடுகள் முதலீடு (சந்தை மதிப்பு 11,500) | | 10,000 |
| சேர்ந்துள்ளது 580 | 2,580 | | கடன் பத்திர மீட்பு நிதி முதலீடு | | 1,400 |
| இலாப ஈவு சமன் செய்ய நிதி | 2,000 | 12,420 | | | |
| III. பி[illegible] கடன்கள் | | | III. நடைமுறைச் சொத்துக்கள் கடன்கள் | | |
| 6% கடன் பத்திரங்கள | 3,000 | | அ) நடைமுறைச் | | |
| சேர்ந்துள்ள வட்டி | 90 | 3,090 | சொத்துக்கள் சரக்கு | 30,000 | |
| ஐஏ. பிணையில்லாக் கடன் | | இல்லை | ஏட்டுக் கடன் 43,000 | | |
| ஏ. நடைமுறைப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்குகள் | | | கழி: வராக்கடன் ஒதுக்கு 2,150 | 40,850 | 70,850 |
| அ) நடைமுறைப் பொறுப்புகள் பலவகைக் கடனீந்தோர் | | 12,920 | விவரங்கள் 1. நல்லகடனாக கருதப்படுபவை ஆனால் பிணையமில்லாதது | இல்லை | |
| | | | 2. கடனாளியின் தனிப்பட்ட பிணையத்தை தவிர வேறு பிணையில்லா நல்ல கடன் | 40,000 | |
| | | | 3.ஐயக்கடன் | 3,000 | |

குறிப்பு

**2). கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). அறிவிக்கப்பட்ட பங்காதாயம்.........மிகாமல் இருந்தால் காப்பிற்கு ஒதுக்க வேண்டியதில்லை.

ஆ). நிருவாக நபர்களுக்கு செலுத்த வேண்டிய அதிகபடி ஊதியம் இலாபத்தில் ......... சதவீதம்.

இ). இரண்டு ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக்கிடையே அறிவிக்கப்படுவது ......... பங்காதாயம்.

ஈ). இருப்பு நிலைக் குறிப்பில் தோற்றுவிக்கும் செலவு ...... பக்கத்தில் ......... தலைப்பின் கீழ் காண்பிக்கப்படும்.

உ). இருப்புச் சோதனையில் தோன்றும் அழைப்பு நிலுவை இருப்பு நிலைக் குறிப்பில் ......... இருந்து ......... காண்பிக்கப்படும்.

குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ) ஒதுக்குகள் | | | | 43000 | |
| வரிகளுக்கு | 1,000 | | | | |
| பணியாளர் நல நிதி | 15,200 | | கையில் ரொக்கம் | 2,500 | |
| ஓய்வு நிதி | 9,000 | 25,200 | வங்கியில் ரொக்கம் | 10,000 | 12,500 |
| | | | ஆ) கடன்கள் | | |
| | | | வரவுக்குரிய உண்டியல் | 1,200 | |
| | | | பணியாளருக்கு முன்பணம் | 12,000 | 13,200 |
| | | | ஐஏ. பலவகைச் செலவுகள் | | |
| | | | துவக்கச் செலவுகள் | 5,000 | |
| | | | பங்கு மற்றும் கடன்பத்திர வெளியீட்டுத் தரகு | 700 | 5,700 |
| | | | ஏ.இலாபநட்டக் கணக்கு | | இல்லை |
| | | 1,47,230 | | | 1,47,230 |

பங்குதாரர்கள் அளிக்கப்படும் தணிக்கையாளரின் தணிக்கை அறிக்கை

கதிரேசன் சைக்கிள் கம்பெனி லிமிடெட் 2004 டிசம்பர் 31ம் தேதியுடன் முடியுடன் ஆண்டிற்கான இருப்புநிலைக் குறிப்பையும் சேர்க்கப்பட்டுள்ள இலாப நட்டக் கணக்கையும் நாங்கள் தணிக்கை செய்தோம். பின்வரும் அறிக்கை யைத் தருகிறோம்.

1. நாங்கள் அறிகின்ற வரையில் கணக்குகளை தணிக்கை செய்ய வேண்டிய எல்லா செய்திகளையும், விவரங்களையும் பெற்றுக் கொண்டோம்.

2. எங்களது கருத்துப்படி, சட்டப்படி பராமரிக்க வேண்டிய எல்லா கணக்குப் புத்தகங்களும் கம்பெனியினால் பராமரிக்கப்படுகிறது

4. எங்களுடைய கருத்துப்படியும் எங்களுக்கு கிடைத்த விவரங்கள் மற்றும் விளக்கங்களின் படியும் இங்கே தணிக்கை செய்யப்பட்டுள்ள கணக்குகள் அதனுடன் சேர்ந்துள்ள செய்திகள் கம்பெனிச் சட்டம் 1956ன் சரத்துக்களுக்கும் ஏற்ற உண்மையான மற்றும் முறையான

அ) 2004 டிசம்பர் 31 அன்று கம்பெனியின் நிலைமையும் இருப்புநிலைக்குறிப்பும்

ஆ) 2004 டிசம்பர் 31ம் தேதியுடன் முடியும் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டத்தை இலாப நட்டக் கணக்கும் காட்டுகின்றன.

குறிப்பு

| | |
|---|---|
| 3. இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள இலாப நட்டக் கணக்கும், இருப்புநிலைக் குறிப்பும் சட்டப்படி இருக்க வேண்டிய கணக்கேடுகளைப் போல் உள்ளது. | 2005 மார்ச 15,..... .... பட்டயக் கணக்குகள் |

### 6.4. இணைப்பு, ஈர்ப்பு மற்றும் மறு அமைப்பு

தனி ஆள் வணிகம், கூட்டு வணிகம், கூட்டு பங்கு கம்பெனி ஆகிய மூன்றும் முக்கியமான தொழில் அமைப்புகளாகும். சில நேரங்களில் இரு தனி ஆள் வணிகங்கள் தங்கள் வியாபாரங்களை இணைத்துக் கூட்டு வணிகமாக மாற்றலாம். இம்மாதிரி இணைப்புகளை பற்றி ஏற்கனவே நாம் பார்த்துள்ளோம். இப்போது கூட்டுப்பங்கு கம்பெனிகளின் ஒன்றிணைப்பைப் பற்றி பார்க்கப் போகிறோம்.

இந்நாட்களில் இரு பெரும் முன்னேற்றங்கள் தொழில் நிறுவனங்களின் அமைப்புகளில் ஏற்பட்டுள்ளதை நாம் காணலாம். ஒன்று கூட்டுப் பங்கு கம்பெனியின் அமைப்பும், வளர்ச்சியுமாகும். இரண்டாவது தொழில் நிறுவனங்களின் சேர்க்கைகள். பின்வரும் நோக்கங்களுக்காக பல வகையான தொழில் சேர்க்கைகளைத் தொழில் அதிபர்கள் உண்டாக்கியுள்ளனர்.

1. போட்டிகளைத் தவிர்த்தல்
2. பணி அமைப்பு மற்றும் மேலாண்மைச் செலவுகளைக் குறைத்தல்
3. மூலப் பொருட்கள் மற்றும் பண்டங்களை வாங்கும் பொழுது சகாய விலையில் வாங்குதல். விளம்பரம் மற்றும் பொருள்களை விற்கும் செலவுகளைக் குறைத்தல்

மேலே சொன்ன பயன்களைப் பெறுவதற்காக கம்பெனி ஒன்றாக இணைகின்றன. இணைப்பின் வடிவமானது ஒன்றிணைப்பாகவோ அல்லது ஈர்ப்பமைப்பாகவோ இருக்கலாம்.

**ஒன்றிணைப்பு (Amaigamation)**

காந்தி அன் கோ மற்றும் கணேசன் அன் கோ என்ற இரு கம்பெனிகள் இருப்பதாகக் கொள்வோம். இப்பொழுது இவ்விரு கம்பெனிகளையும் எடுத்துக் கொள்ளும் நோக்கத்துடன் பாலன் அன் கோ என்ற புதிய கம்பெனி அமைக்கப்பட்டால் அதை ஒன்றிணைப்பு எனச் சொல்கிறோம்.

எனவே ஒன்றிணைப்பு திட்டத்திற்கு ஒப்புக் கொள்ளும் கம்பெனிகள் தங்களது வியாபாரத்தை புதிய கம்பெனிக்கு விற்றுவிடுகின்றன. அதாவது பழைய கம்பெனிகள் கலைக்கப்படுகின்றன. புதிய கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டு அது கலைக்கப்படும் கம்பெனிகளை ஏற்றுக் கொள்கிறது.

எடுத்துக்காட்டாக அசோசியேட் சிமிண்ட் கம்பெனி ஆப் இந்தியா (A.C.C) என்னும் கம்பெனி இந்தியாவின் பல பாகங்களில் செயலாற்றி வந்த சிமிண்ட கம்பெனிகளின் ஒன்றிணைப்பாகும்.

இவ்வாறு போட்டிகளைக் குறைக்கவும் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிக்கவும் இரு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் கலைக்கப்பட்டு புதிய கம்பெனிகள் அமைக்கப்படுகின்றன. இணைக்கப்படும் கம்பெனிகள் தனித்துவத்தை இழக்கின்றன.

**ஒன்றிணைப்பின் நன்மைகள்.**

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் இருந்த இடத்திலே ஒரு கம்பெனி இருப்பதால் மேல் விளைவுகள் (Over all expenses) மற்றும் அமைப்புச் செலவுகள் உண்டு.
2. போட்டிகளையும் வீண் செலவுகளையும் தவிர்ப்பதற்கு வாய்ப்புகள் உண்டு.
3. பங்குகளைப் பொது மக்களுக்கு வெளியிட்டு அதிக அளவு முதல் தொகையை பெறலாம்.

4. உற்பத்திச் செலவுகளையும் விநியோகச் செலவுகளையும் குறைக்க வாய்ப்புண்டு.
5. பழைய கம்பெனிகளில் பயன்படுத்தாமல் இருந்த இயந்திரங்களைப் பயனள்ள வழியில் பயன்படுத்தலாம்.
6. புதிய கம்பெனி அமைக்கப்படுவதால் கம்பெனிகள் அமைப்புப் பத்திரம் புதிய நோக்கங்களைச் சேர்த்து வியாபாரத்தை விரிவுபடுத்த வாய்ப்பு ஏற்படும்.

குறைகள்:

1. பழைய கம்பெனிகள் தங்களது தனித்துவத்தை இழந்து விடுகின்றன. எனவே அவைகளின் தொழில் நன்மதிப்பும் மறைந்துவிடும்.
2. கம்பெனிகளை இணைப்பதால் செலவுகள் குறையும் எனச் சொல்ல முடியாது. ஏனெனில் ஆட்குறைப்பு போன்ற சிக்கன நடவடிக்கைகளை தொழிலாளர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்
3. மேலாண்மை நிர்வாகம் மாறுவதை ஏற்கனவே பணி செய்து வரும் பணியாளர் விரும்புவார் என்று சொல்ல முடியாது.
4. பழைய கம்பெனிகள் கடந்த கால் நட்டத்திற்கு அளிக்கப்பட்ட வரிச்சலுகை இணைப்பிற்கு பின் கிடையாது.

**ஈர்ப்பமைப்பு (Absorption)**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் கலைக்கப்பட்டு ஏற்கனவே இயங்கி வரும் கம்பெனி அவைகளை ஏற்றுக் கொள்வதை ஈர்ப்பு எனச் சொல்கிறோம். மூர்த்தி அன்கோ மற்றும் நாதன் அன்கோ என்ற இரு கம்பெனிகள் இருப்பதாக கொள்வோம். நாதன் அன்கோ கம்பெனியானது மூர்த்தி அன் கோ கம்பெனியை எடுத்துக் கொண்டால் அதை ஈர்ப்பமைப்பு எனச் சொல்கிறோம். இங்கே மூர்த்தி அன்கோ கம்பெனி கலைக்கப்படும்.

**ஈர்ப்பமைப்பின் நன்மைகள்**

1. கலைப்பின் மூலம் ஏற்படக்கூடிய நன்மைகள் கிடைக்க வாய்ப்புண்டு
2. வீண் போட்டிகள் தவிர்க்கப்படுகின்றன
3. மூலப் பொருள்களை நன்கு பயன்படுத்தலாம்.

**குறைபாடுகள்**

1. ஒரு கம்பெனியானது தனது தனித்துவத்தை இழந்து விடுகிறது. அதனால் அதனுடைய தொழில் நன்மதிப்பு மறைந்து விடுகிறது.
2. மேலாண்மை நிர்வாகம் மாறுவதை ஏற்கனவே பணிசெய்து வரும் பணியாளர் விரும்புவர் எனச் சொல்ல முடியாது. இது கம்பெனியின் நிர்வாகத்தைப் பாதிக்கலாம்.
3. ஈர்ப்பமைப்பினால் ஏற்கப்படும் கம்பெனியின் பங்குதாரர்களுக்குப் பெரும்பாலும் நட்டமே ஏற்படுகிறது.
4. சட்டத்தின் அனுமதியின்றி அனுமதித்த முதலுக்கும் அதிகமாக பங்கு முதலை வெளியிட முடியாது.
5. புதிய நோக்கச் சரத்தை எளிதில் சேர்க்க முடியாது.

**ஒன்றிணைப்புக்கும் ஈர்ப்பமைப்பிற்கும் உள்ள வித்தியாசங்கள் யாவை?**

இரண்டும் கலைப்பமைப்பு மூலம் இணைக்கப்படும் உரு சேர்க்கையாகும். இரண்டு முறையிலும் இணைப்பு ஏற்படுகிறது. ஆனால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் கலைக்கப்பட்டு அவற்றை புதிய கம்பெனி எடுத்துக் கொள்ளும் போது அதனை ஒன்றிணைப்பு என்கிறோம். ஆனால் கலைக்கப்பட்ட ஒரு கம்பெனியை தற்பொழுது இயங்கி வரும் வேறு ஒரு கம்பெனி எடுத்துக் கொள்ளும் போது அதனை ஈர்ப்பமைப்பு என்கிறோம்.

ஒன்றிணைப்பில் இணைக்கப்படும் இரு கம்பெனிகளும் கலைக்கப்படுகின்றன. ஈாப்பமைப்பில் எடுத்துக் கொள்ளப்படும். கம்பெனி மட்டும் கலைக்கப்படுகிறது.

## மறு அமைப்பு (Reconstruction)

ஒரு கம்பெனியானது நட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது எனக் கொள்வோம். எனவே அக்கம்பெனிகளில் நட்டம் சேர்ந்து கொண்டே வரும். அம்மாதிரியாகச் சேர்ந்துள்ள கடந்தகால நட்டங்களினால் கம்பெனியின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கும். இவ்வாறு வியாபாரத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்படும் நட்டத்தை அதிக அளவில் சேர்ந்து கம்பெனியின் நிதி நிலைமையைப் பாதிக்கும் பொழுது கம்பெனியை மறு அமைப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

சாதாரணமாக மறு அமைப்ப என்னும் சொல் ஒன்றை மாற்றி மீண்டும் அதனைப் புதிய வடிவத்தில் மாற்றி அமைப்பதைக் குறிக்கிறது. எனவெ ஒரு கம்பெனியைத் திருத்தி அமைத்து அதை புதிய வடிவத்தில் நடத்துவதையே கம்பெனி மறு அமைப்பு என்று கூறுகிறோம்.

மறு அமைப்பு இரு வகைப்படும்.



## அ) வெளி மறு அமைப்பு (External Reconstruction)

வெளி மறு அமைப்பில் செய்யப்படும் கம்பெனியானது கலைக்கப்படுகிறது. அதற்குப் பதிலாக புதிய கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டு, அது கலைக்கப்படும் கம்பெனியின் சொத்துக்களையும் எடுத்துக் கொள்ளும். கடனீந்தோரின் கணக்கு அவர்கள் விருப்பப்படி தீர்க்கப்படுகிறது. அவர்களின் கணக்கு, கடன் பத்திரங்கள் கொடுத்து தீர்க்கப்படலாம் அல்லது வேறு வகையிலும் தீர்க்கப்படலாம். அதே போன்று பழைய கம்பெனியின் பங்குதாரர்களுக்கு, புதிய கம்பெனியின் பங்குகள் அளிக்கப்படுகிறன்றன. பழைய கம்பெனிகள் கலைக்கப்படுகிறது. பொதுவாக, புதிய கம்பெனியின் பெயர் நோக்கம் ஆகியவை பழைய கம்பெனியின் பெயர் நோக்கத்துடன் ஒத்தே இருக்கும். கலைக்கப்படும் கம்பெனியின் பங்குதாரர்களை புதிய கம்பெனியிலும் பங்குதாரர்களாக இருப்பர்.

| |
|---|
| ஒரு கம்பெனி கலைக்கப்பட்டு திருத்தி அமைக்கப்பட்ட திட்டப்படி மீண்டும் ஒரு புதிய கம்பெனி, பங்குதாரர்கள் மற்றும் கடனீந்தோரின் சம்மதத்துடன் பதிவு செய்யப்படுகிறது. இதுவே வெளி மறு அமைப்பாகும். |

ஏற்பு மற்றும் மறுஅமைப்பு நடவடிக்கைகள், இரண்டுமே விற்பனையே ஒத்திருந்த போதிலும் ஏற்பில் ஏற்கனவே உள்ள ஒரு கம்பெனி கலைக்கப்படும் கம்பெனியை எடுத்துக் கொள்கிறது. ஆனால் மறுஅமைப்பில் ஒரு கம்பெனி கலைக்கப்பட்டு அதை புதிதாக அமைக்கப்படும் ஒரு கம்பெனி எடுத்துக் கொள்கிறது. இதில் ஏற்படும் நட்டத்தை கலைக்கப்படும் பழைய கம்பெனியின் பங்குதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## ஆ) உள் மறு அமைப்பு (Internal Reconstruction)

உள் மறு அமைப்பில் கம்பெனி கலைக்கப்படுவதில்லை. பங்குகளை உட்பிரிவு செய்தல் அல்லது பங்குகளை ஒருங்கிணைத்தல் போன்ற

முறையில் மூலதனம் மறு அமைப்பு செய்யப்படுகிறது கம்பெனி கலைக்கப்படுவதில்லை மற்றும் புதிய கம்பெனியம் அமைக்கப்படுவதில்லை.

> ஒவ்வொரு வகையான பங்குதாரர்களின் சம்மதத்துடனும் மற்றும் கடனீந்தோர், கடன் பத்திரதாரர்கள் ஆகியோரின் உடன்பாட்டு டனும் கம்பெனியின் முதலை மறுஅமைப்புச் செய்தலையே உள் மறுஅமைப்பு என்று கூறுகிறோம். இது ஏறக்குறைய முதல் குறைப்பே ஆகும்.

**கொள்முதல் மறுபயன் (Purchase Consideration)**

கலைக்கப்படும் ஒரு கம்பெனியின் சொத்துக்களை பெறுகின்ற ஒரு வாங்கும் கம்பெனி கலைக்கப்படும் கம்பெனிக்கு அளிக்கும் விலையே கொள்முதல் மறுபயன் ஆகும்.

**கொள்முதல் மறுபயனைக் கணக்கிடும் முறைகள்**

**1. நிகர செலுத்துதல் முறை (Net Payment Metjod)**

ஒரு வாங்கும் கம்பெனி ஒரு கலைக்கப்படும் கம்பெனிக்கு செலுத்துகின்ற தொகைகள் அனைத்தையும் கூட்டி மொத்தக் கொள்முதல் மறுபயனைக் கணக்கிட வேண்டும்.

அ) வாங்கும் கம்பெனி அளிக்கும் அனைத்து ரொக்கம், பங்குகள் அல்லது கடன் பத்திரங்களை கூட்டவும்.

ஆ) கலைக்கப்படும் கம்பெனியின் பங்குதாரர்கள், கடனீந்தோர்கள், கடன் பத்திரதாரர்கள் ஆகியோருக்கு செலுத்தப்பட்ட தொகைகள் மற்றும் கலைப்புச் செலவுகளுக்காக அளிக்கப்பட்ட தொகை ஆகியவற்றைக் கூட்டவும்.

இ) கலைக்கப்படும் கம்பெனியின் சார்பாக வாங்கும் கம்பெனி வெளியாட்களுக்கு செலுத்தும் தொகைகளைக் கூட்டக் கூடாது.

ஈ) வாங்கும் கம்பெனி ஒத்துக் கொண்ட பொறுப்புகளை கூட்டவோ அல்லது கழிக்கவோ கூடாது.

### 2. நிகர சொத்துமுறை (Net Asset Method)

கலைக்கப்படும் கம்பெனிக்கு வாங்கும் கம்பெனி செலுத்திய தொகைகள் கணக்கில் கொடுக்கப்படாத போது கொள்முதல் மறுபயனைக் கணக்கிட வாங்கும் கம்பெனி எடுத்துக் கொண்ட சொத்துக்களின் ஒத்துக் கொள்ளப்பட்ட மதிப்புக்கள் அனைத்தையும் கூட்டி அக்கூட்டுத் தொகையிலிருந்து வாங்கும் கம்பெனி ஏற்றுக் கொண்ட பொறுப்புகளின் ஒத்துக் கொள்ளப்பட்ட மதிப்புகளைக் கழிக்க வேண்டும்.

### 3. பங்குகளின் உண்மை மதிப்பு (Intrinsic Value) முறை

இது நிகர சொத்த முறையினின்றும் சிறிது வேறுபட்ட முறையாகும். இங்கு விற்கப்படும் மற்றும் வாங்கும் கம்பெனிகளுடைய பங்குகளின் மதிப்பு கணக்கிடப்பட்டு, அம்மதிப்புகளின் அடிப்படையில் வாங்கும் கம்பெனி விற்கும் கம்பெனிக்கு பங்குகளை அளிக்கிறது. இம்முறையில் அளிக்கப்படும் மறுபயன் அளவு விற்கும் கம்பெனியின் நிகர சொத்துக்களின் மதிப்பிற்கு சமமாகவே இருக்கும். இங்கு பங்குகளின் மதிப்புகள் கணக்கிடப்படுவதால் அப்பங்குகளை எளிதில் கலைக்கப்படும் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு பிரித்துக் கொடுக்க முடிகிறது.

### 4. நிகர செலுத்துதல் மற்றும் நிகர சொத்துமுறை

நிகர செலுத்துதல் முறை மற்றும் நிகர சொத்துமுறை ஆகிய இருமுறைகளையுமே சில கம்பெனிகள் பயன்படுத்துகின்றன. எனினும் இவ்விருமுறைகளினாலும் கண்டுபிடிக்கப்பட்ட கொள்முதல் மறுபயன்கள் சமமாக இருத்தல் வேண்டும். இவ்விரு முறையிலும் கணக்கிடப்பட்ட கொள்முதல் மறுபயன்கள் இல்லாத போது அந்த வித்தியாசத்தை வாங்கும் கம்பெனியின் பங்குகள் விலையில் சரிசெய்து கொள்ள வேண்டும்.

நிகர சொத்து முறையில் கணக்கிடப்பட்ட கொள்முதல் மறுபயன் அதிகமாயிருப்பின், பங்குகள் முனைமத்தில் அளிக்கப்படுகின்றன எனக்

கொள்ளலாம். நிகர சொத்துமுறையில் அளிக்கப்படும் கொள்முதல் மறுபயன் நிகர செலுத்தல்களை விடக் குறைவாக இருப்பின் பங்குகள் தள்ளபடியில் அளிக்கப்படுகின்றன எனவும் கொள்ள வேண்டும்.

**தொழில் நிறுவனத்தை வாங்கும் கம்பெனியின் ஏடுகளில் செய்யப்படும் பதிவுகள்**

| | | |
|---|---|---|
| 1. தொழில் கொள்முதல் க/கு விற்கும் கம்பெனியின் | —பற்று வை | தொழில் கொள்முதல் மறுபயன் தொகைக்காக |
| கலைப்பாளர் க/கு | —வரவு வை | |
| 2. சொத்து க/கு (நன்மதிப்பு நீங்கலாக) | —பற்று வை | வாங்கும் கம்பெனியினால் எடுத்துக் கொள்ளப்படும் |
| பொறுப்புகள் க/கு | —வரவு வை | சொத்துக்களும் பொறுப்புகளும் |
| தொழில் கொள்முதல் | —வரவு வை | அக்கம்பெனியினால் குறிக்கப்படும் மதிப்பில் |

எடுத்துக் கொள்ளப்படும் நிகரச் சொத்துக்களின் மதிப்பைக்காட்டிலும் கொள்முதல் மறுபயன் தொகை குறைவாக இருந்தால் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் ஆதாயமாகும்.

கொள்முதல் மறுபயன் தொகையானது எடுத்துக் கொள்ளப்படும், சொத்துக்களின் மதிப்பைக் காட்டிலும் அதிகமிருந்தால் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் தொழில் நன்மதிப்பாகும். எனவே மேலே உள்ள குறிப்பேட்டுப் பதிவில் நன்மதிப்பு க/கு பற்று வைக்கப்படும்.

முதல் காப்பு அல்லது தொழில் நன்மதிப்பு இம்முறையால் அறியப்படுகிறது. விற்கும் கம்பெனியின் ஏடுகளில் உள்ளதொழில் நன்மதிப்பைக் கணக்கில்

நிகர மதிப்பு = (எடுத்துக் கொள்ளப்படும்)
மொத்தச் சொத்துக்கள் — மொத்த பொறுப்புகள்

தொழில் நன்மதிப்பு = கொள்முதல் மறுபயன் — நிகர மதிப்பு

முதல் காப்பு = நிகர மதிப்பு – கொள்முதல் மறுபயன்

3. விற்கும் கம்பெனியின் கலைப்பாளர் க/கு பற்று வை
ரொக்க க/கு வரவு வை
(அல்லது வங்கி அல்லது பங்கு முதல், பங்கு முனைமம், கடன் பத்திரங்கள்)

கொள்முதல் மறுபயனைத் தீர்ப்பதற்காக விற்பனையாளருக்கு செலுத்தப்படும் ரொக்கம் அல்லது அளிக்கப்படும் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் ஆகியன

**சிறு குறிப்பு**

வாங்கும் கம்பெனி தீர்வுச் செலவுகளை ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டால் தொழில் நன்மதிப்பு கணக்கைப் பற்று வைத்து வங்கிக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். இது ஏற்கனவே கொள்முதல், தொகையில் சேர்க்கப்பட்டிருந்தால் இப்பதிவு தேவையில்லை.

எடுத்துக்காட்டு 15

**இரண்டு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகள் பின்வருமாறு இருந்தன**

**சேரன் கம்பெனி லிமிடெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| அனுமதித்த முதல் ஒன்று ரூ.300 மதிப்புள்ள 1,000 பங்குகள் | 3,00,000 | | |
| ஒப்பிய முதல் ஒன்று ரூ.270 மதிப்புள்ள 900 பங்குகள் | 2,43,000 | பல்வகைச் சொத்துக்கள் | 3,22,000 |
| காப்பு நிதி | 72,000 | வங்கியிருப்பு | 1,000 |
| செலுத்த வேண்டிய உண்டியல்கள் | 8,000 | | |
| | 3,23,000 | | 3,23,000 |

**சோழன் கம்பெனி லிமிடெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| அனுமதித்த முதல் ஒன்று ரூ.200 மதிப்புள்ள 6,000 பங்குகள் | 12,00,000 | பலவகைச் சொத்துக்கள் | 8,46,000 |
| ஒப்பிய முதல் ஒன்று ரூ.150 மதிப்புள்ள 4,000 பங்குகள் | 6,00,000 | வங்கி | 30,000 |
| இலாப நட்டக்க/கு | 2,28,000 | | |
| கடனீந்தோர் | 48,000 | | |
| | 8,76,000 | | 8,76,000 |

சேரன் கம்பெனி லிமிடெட்டை சோழன் கம்பெனி லிமிடெட் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனத் திட்டமிடப்பட்டு பின்வரும் ஏற்பாடு அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சேரன் கம்பெனி லிமிடெட்டில் மூன்று பங்குகள் வைத்துள்ள ஒருவருக்கு சோழன் கம்பெனி லிமிடெட்டில் 5 பங்குகள் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் இரண்டு கம்பெனிகளின் இருப்புநிலைக்குறிப்புப் படி பங்குகளின் உள்மதிப்பு மதிப்பிடப்பட்டு இரண்டு கம்பெனிகளிலும் உள்ள பங்குதாரர்களின் உரிமைகளைச் சமமாக்குவதற்குத் தேவைப்படும் அளவிற்குச் சேரன் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு ரொக்கம் கொடுக்கப்படும்.

சோழன் கம்பெனி லிமிடெட்டில் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அத்துடன் புதிய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

**விடை:**

1. சேரன் கம்பெனி லிமிடெட் பங்குகளின் உள்மதிப்பு

| | ரூ. |
|---|---|
| மொத்த சொத்துக்கள் | 3,23,000 |
| கழிக்க : பொறுப்புகள் | 8,000 |
| | 3,15,000 |

∴ ஒவ்வொரு பங்கின மதிப்பு $= \frac{3,15,000}{900} =$ ரூ.350

குறிப்பு

2. சோழன் கம்பெனி லிமிடெட் பங்குகளின் உள்மதிப்பு

| | ரூ. |
|---|---|
| மொத்த சொத்துக்கள் | 8,76,000 |
| கழிக்க : பொறுப்பகள் | 48,000 |
| | 8,28,000 |

∴ ஒவ்வொரு பங்கின் மதிப்பு $= \frac{8,28000}{4,000} =$ ரூ.207

சேரன் கம்பெனியில் மூன்று பங்குகள் வைத்துள்ள ஒருவருக்கு சோழன் கம்பெனியில் 5 பங்குகளும் மீதம் ரொக்கமாவும் கொடுக்கப்பட வேண்டும். எனவே செலுத்தப்பட வேண்டிய ரொக்கம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| | ரூ. |
|---|---|
| ஒன்று ரூ.350 வீதம் சோழன் கம்பெனி லிமிடெட்டின் 3 பங்குகளின் உள் மதிப்பு | 1,050 |
| கழிக்க ஒன்றுக்கு ரூ.207 வீதம் சோழன் கம்பெனி லிமிடெட்டின் 5 பங்குகளின் உள்மதிப்பு | 1,035 |
| செலுத்த வேண்டிய ரொக்கம் | 15 |

3 பங்குகளுக்கு செலுத்தப்பட வேண்டிய ரொக்கம் ரூ.15 வீதம்

எனவே, பங்கு ஒன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய ரொக்கம் 5

சேரன் கம்பெனி லிமிடெட்டில் 900 பங்குகள் உள்ளன. 3 பங்குகளுக்கு 5 பங்குகள் வீதம் சோழன் கம்பெனி லிமிடெட்டினால் வழங்கப்படும்.

சோழன் கம்பெனி லிமிடெட்டில் ஒரு பங்கின் செலுத்தப்பட்ட மதிப்பு ரூ.150

| | |
|---|---|
| ∴ மேலே உள்ள பங்குகளின் மதிப்பு = 1500 x ரூ.150 | 2,25,000 |
| ஒரு பங்கிற்கு ரூ.5 வீதம் 900 பங்குகளுக்கு செலுத்தப்பட வேண்டிய ரொக்கம் | 4,500 |
| கொள்முதல் மறுபயன் | 2,29,500 |

## சோழன் கம்பெனி லிமிடெட் குறிப்பேடு

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | தொழில் கொள்முதல் க/கு ப.<br>சேரன் கம்பெனி லிமிடெட் கலைப்பாளர் க/கு<br>(நாளிடப்பட்ட ஒப்பந்தத்தின்படி செலுத்தப்பட வேண்டிய கொள்முதல் மறுபயன்) | | ரூ.<br>2,29,000 | ரூ.<br><br>2,29,000 |
| | பலவகைச் சொத்துக்கள் ப.<br>வங்கி க/கு ப.<br>செலுத்த வேண்டிய உண்டியல்கள்<br>தொழில் கொள்முதல் க/கு<br>முதல் காப்பு க/கு<br>(எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களும் பொறுப்புகளும் கணக்கிற்கு கொண்டு வரப்பட்ட வித்தியாசம் முதல் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 3,22,000<br>1,000 | <br><br>8,000<br>2,29,500<br>85,500 |
| | சேரன் கம்பெனி லிமிடெட் கலைப்பாளர் க/கு ப.<br>பங்குமுதல் க/கு<br>வங்கி க/கு<br>(கொள்முதல் மறுபயனாக ஒன்று ரூ.150 மதிப்புள்ள 1500 பங்குகளும் ரொக்கம் ரூ.4500 செலுத்தப்பட்டது) | | 2,29,500 | <br>2,25,000<br>4,500 |

## இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல்:<br>அனுமதித்தது:<br>ஒன்று ரூ.200 மதிப்புள்ள 6,000 பங்குகள் | 12,00,000 | நிலைத்த சொத்துக்கள்<br>பல்வகைச் சொத்துக்கள்<br>(ரூ.8,46,000+3,22,000) | 11,68,000 |
| வெளியிட்டது மற்றும் ஒப்பியது ஒன்று ரூ.150 மதிப்புள்ள 5500 பங்குகள் | 8,25,000 | வங்கி (ரூ.30,000 + 1,000 – 4,500) | 26,500 |
| காப்புகள் மற்றும் உபரிகள்<br>முதல் காப்பு | 85,500 | | |
| இலாப நட்டக்க/கு | 2,28,000 | | |
| நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்குகள்<br>செலுத்த வேண்டிய உண்டியல் | 8,000 | | |
| கடனீந்தோர் | 48,000 | | |
| | 11,94,500 | | 11,94,500 |

**விற்கும் கம்பெனியின் ஏடுகளில் செய்யப்படும் பதிவுகள்**

1) தீர்வுக் கணக்கு ஒன்று துவக்கப்பட்டு சொத்துக்கள் ஏட்டு மதிப்பில் அக்கணக்கிற்கு மாற்றப்படும்.

| |
|---|
| தீர்வு க/கு ப.<br>பல்வகைச் சொத்துக்கள் க/கு<br>(தனித்தனியாக)<br>(பலவகைச் சொத்துக்கள் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்பட்டதற்கான பதிவு) |

குறிப்பு:

ரொக்கம் அல்லது வங்கியிருப்பு வாங்கும் கம்பெனியினால் எடுத்துக் கொள்ளப்படவில்லை எனில் அவற்றைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றக்கூடாது.

அதேபோன்று செலவுகள் பங்கு வெளியீட்டு ஒப்புறுதிக் கழிவு பங்கு மற்றும் கடன் பத்திர வெளியீட்டுத் தள்ளுபடி, இலாப நட்டக் க/கு (பற்று இருப்பு) போன்றவற்றை தீர்வுக் கணக்கிற்கு மாற்றக்கூடாது. ஏனெனில் அவை விற்றுப் பணமாக்கத் தக்கவையல்ல. இவை நேரடியாக சாதாரணப் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

இம்முறையில் எல்லாச் சொத்துக்களின் கணக்குகளும் முடிக்கப்படும்.

2) வாங்கும் கம்பெனியினால் ஏற்றுக் கொள்ளப்படும் பொறுப்புகளை மாற்றுவதற்கான பதிவு

| |
|---|
| பொறுப்புகள் க/கு ப.<br>(தனித்தனியா)<br>தீர்வு க/கு<br>(பொறுப்புகள் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) |

குறிப்பு:

வாங்கும் கம்பெனியினால் ஏற்றுக் கொள்ளப்படும் பொறுப்புகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றக்கூடாது.

கடந்த கால இலாபத்திலிருந்து சேர்த்து வைக்கப்பட்டுள்ள பொதுக் காப்பு, காப்பு நிதி இலாப நட்ட க/கு (வரவு இருப்பு) போன்ற இனங்களை தீர்வுக் கணக்கிற்கு மாற்றக் கூடாது. இவைகள் பங்குதாரர்களின் கணக்கிற்கு மாற்றப்படும். ஏனெனில் சேர்ந்துள்ள இலாபம்யாவும் பங்குதாரர்களுக்கே உரியது.

ஆனால் ஏதாது நிதி ஒன்று பொறுப்பாக இருக்கும் பட்சத்தில் அது தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படும். நிதியின் ஒரு பகுதி மட்டும் பொறுப்பாக இருந்தால் அப்பகுதி மட்டும் தீர்வு கணக்கிற்கு மாற்றப்படும். மீதம் பங்குதாரர்களின் கணக்கிற்கு மாற்றப்படும்.

3) வாங்கும் கம்பெனியிடமிருந்து பெற வேண்டிய கொள்முதல் மறுபயன் தொகையை பதிவு செய்வதற்கான பதிவு

| | |
|---|---|
| வாங்கும் கம்பெனி க/கு | ப. |
| தீர்வு க/கு | |
| (நாளிட்ட ஒப்பந்தத்தின்படி பெற வேண்டிய கொள்முதல் மறுபயன்) | |

4) கலைப்புச் செலவுகளை விற்கும் கம்பெனி ஏற்றுக் கொண்டால் பின்வரும் பதிவு செய்யப்படும்.

| | |
|---|---|
| தீர்வு க/கு | ப. |
| வங்கி க/கு | |
| (ரொக்கம்) | |
| (கலைப்புச் செலவுகள் விற்கும் கம்பெனியால் செலுத்தப்பட்டது) | |

கலைப்புச் செலவுகளை வாங்கும் கம்பெனியை ஏற்றுக் கொண்டால் பின்வரும் முறை பின்பற்றப்படும்.

| | |
|---|---|
| (1) வாங்கும் கம்பெனி க/கு | ப. |
| ரொக்கம் க/கு | |
| (வாங்கும் கம்பெனியின் சார்பாக கலைப்புச் செலவுகளைச் செலுத்துதல்) | |
| (2) ரொக்கம் க/கு | ப. |
| வாங்கும் கம்பெனி க/கு | |
| (கலைப்புச் செலவுகளைத் திரும்ப பெறுதல்) | |

5) கொள்முதல் மறுபயனுக்காக ரொக்கம், பங்குகள் அல்லது கடன் பத்திரங்கள் பெறுவதை பதிவு செய்தல்

> ரொக்க க/கு ப.
> (அல்லது பங்குகள் அல்லது கடன் பத்திரங்கள்)
> வாங்கும் கம்பெனி க/கு
> (கொள்முதல் மறுபயனுக்காக ரொக்கம் பெறப்பட்டது)

6) வாங்கும் கம்பெனியால் ஏற்றுக் கொள்ளப்படாத பொறுப்புகளைத் தீர்த்தல்

> பொறுப்புகள் க/கு ப.
> (தனித்தனியா)
> வங்கி க/கு
> (பொறுப்புகள் செலுத்தப்பட்டன)

குறிப்பு : இதனால் ஏற்படக் கூடிய இலாபம் நட்டத்தைத் தகுந்த குறிப்பேட்டுப் பதிவு மூலம் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

இலாபம் ஏற்பட்டால் : பொறுப்பு க/கு ப.

தீர்வு க/கு

நட்டம் ஏற்பட்டால் : தீர்வு க/கு ப.

பொறுப்பு க/கு

7) அ) பங்குமுதல் தொகையை பங்குதாரர்களின் கணக்கிற்கு மாற்றுவதற்காக

பங்குமுதல் க/கு ப.

பங்குதாரர்கள் க/கு

(பங்குமுதல் க/கு முடிக்கப்பட்டு பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டது)

அ) சேர்ந்துள்ள இலாபங்கள் (முதல் அல்லது நடைமுறை பங்குதாரர்களின் கணக்கு மாற்றப்படுவதற்கு)

| | |
|---|---|
| பொதுகாப்பு க/கு | ப. |
| (அல்லது காப்பு க/கு) | |
| இலாப நட்டக் க/கு (வ/இருப்பு) | ப. |
| பங்கு முனைமம் க/கு | ப. |
| இலாப ஈவு சமன் செய் நிதி க/கு | ப. |
| நிகழ்வடையா காப்பு க/கு | ப. |
| தொழிலாளர் நட்ட ஈடு க/கு | ப. |
| (அதாவது அதற்கு எதிராகப் பொறுப்பு ஏதும் இல்லை எனில் பங்குதாரர்கள் க/கு) | |
| (சேர்ந்துள்ள இலாபங்கள் பங்குதாரர்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டது) | |

சேர்ந்துள்ள அனைத்து நட்டங்களும் முதல் அல்லது நடைமுறை பங்குதாரர்கள் கணக்கில் மாற்றப்படுவதற்கு

| | |
|---|---|
| பங்குதாரர்கள் க/கு | ப. |
| இலாப நட்டக் க/கு (ப.இருப்பு) | |
| அல்லது துவக்கச் செலவுகள் க/கு அல்லது பங்குகள் அல்லது கடன் பத்திர வெளியீட்டுத் தள்ளுபடி க/கு | |
| (சேர்ந்துள் நட்டங்கள் பங்குதாரர்கள் கணக்கில் பற்று வைக்கப்பட்டது) | |

இ) தீர்வுக் கணக்கில் ஏற்பட்ட இலாபத்தைப் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுதவதற்கு

| | |
|---|---|
| தீர்வு க/கு | ப. |
| பங்குதாரர்கள் க/கு | |
| (தீர்வு கணக்கில் உள்ள இலாபம் பங்குதாரர்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டது) | |

குறிப்பு

தீர்வுக் கணக்கில் நட்டம் ஏற்பட்டால் மேலே உள்ளதற்குத் தலைகீழான பதிவு செய்யப்படும்.

8) பங்குதாரர்களின் கணக்கைத் தீர்ப்பதற்கு

| | |
|---|---|
| பங்குதாரர்கள் க/கு | ப. |
| ரொக்கம் க/கு | |
| (பங்குதாரர்களின் கணக்கு முடிக்கப்பட்டது) | |

இவ்விதம் விற்கும் கம்பெனியின் ஏடுகளில் உள்ள கணக்குகள் முழுவதும் முடிக்கப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு 16:**

அன்பு லிமிடெட் மற்றும் அறிவு லிமிடெட் என்னும் இரு கம்பெனிகளும் ஒன்றிணைப்புச் செய்ய ஒப்புக் கொண்டு பண்பு லிமிடெட் என்னும் புதிய கம்பெனியை அமைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. புதிய கம்பெனியானது ஒன்றிணைக்கப்படும் இரு கம்பெனிகளின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் எடுத்துக் கொள்ளும்.

அன்பு லிமிடெட்டின் சொத்துக்களும் பொறுப்புகளும் ஏட்டு மதிப்பில் எடுத்துக் கொள்ளப்படும். அதற்கு மறுபயனாக அன்பு லிமிடெட்டில் உள்ள ஒவ்வொரு 4 சாதாரணப் பங்குகளுக்கும் பண்பு லிமிடெட்டில் 5 சாதாரணப் பங்குகள் 10% முனைமத்தில் வழங்கப்படும்.

அறிவு லிமிடெட்டைப் பொறுத்தவரை

1) அறிவு லிமிடெட்டின் கடன் பத்திரங்கள் முழுவதும் தீர்க்கப்பட்டு அதற்குச் சமமாக பண்பு லிமிடெட் கடன் பத்திரங்கள் 10% தள்ளுபடியில் வழங்கப்படும்.
2) அறிவு லிமிடெட்டில் 6% முன்னுரிமை பங்குகள் வைத்துள்ளவர்களுக்கு ஒவ்வொரு 5 பங்குகளுக்கும் பண்பு

1) லிமிடெட்டில் ஒன்று ரூ.100 மதிப்புள்ள 7% முன்னுரிமைப் பங்குகள் 4 வழங்கப்படும்.

3. பொறி மற்றும் இயந்திரத்தின் மதிப்பில் 10% கடனாளிகள் மதிப்பில் 5% குறைந்த பின்பு சாதாரண பங்குதாரர்களின் கணக்கில் உள்ள இருப்பைச் சரிகட்டுவதற்கு தேவையான அளவு பங்குகள் பங்கு ஒன்றிற்கு முனைமம் ரூ.1 வீதம் வழங்கப்படும்.

இணைப்பு அன்று அன்பு லிமிடெட், அறிவு லிமிடெட் ஆகிய கம்பெனிகளின் சுருக்கப்பட்டு இருப்புநிலைக்குறிப்புகள் வருமாறு:

| | அன்பு லிமிடெட் | அறிவு லிமிடெட் | | அன்பு லிமிடெட் | அறிவு லிமிடெட் |
|---|---|---|---|---|---|
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள சாதாரண பங்குகள் | 4,00,000 | 5,00,000 | பொறி இயந்திரம் | 8,00,000 | 8,00,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 6% முன்னுரிமைப் பங்குகள் | | 3,00,000 | சரக்கிருப்பு | 65,000 | 60,000 |
| 4% கடன் பத்திரங்கள் | | 2,00,000 | கடனாளிகள் | 95,000 | 50,000 |
| இலாப நட்டக் க/கு | 5,00,000 | | ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகள் | 65,000 | 40,000 |
| நிகழ்வடையாக் காப்பு | 50,000 | | இலாப நட்டக் க/கு | | 1,40,000 |
| பலவகைக் கடனீந்தோர் | 75,000 | 90,000 | | | |
| | 10,25,000 | 10,25,000 | | 10,25,000 | 10,25,000 |

அன்பு லிமிடெட் அறிவு லிமிடெட் மற்றும் பண்பு லிமிடெட் ஆகிய கம்பெனியின் ஏடுகளின் இணைப்பிற்குத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். மேலே பண்பு லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பையும் தயாரிக்கவும்.

**விடை:**

அன்பு லிமிடெட்டின் கொள்முதல் மறுபயன் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

அன்பு லிமிடெட்டின் ஒவ்வொரு 4 பங்குகளுககும் பண்பு லிமிடெட்டில் 5 பங்குகள் அதாவது 4,00,000 ÷ 10 = 40,000 ÷ 4 = 10,000 x 5 = 50,000 சாதாரணப் பங்குகள் பண்பு லிமிடெட்டில்

| | ரூ. |
|---|---|
| ஒன்றின் மதிப்பு ரூ.10 பங்குகளின் மதிப்பு | 5,00,000 |
| கூட்டுக: பண்பு லிமிடெட்டின் பங்குகள் மீது 10% முனைமத்தொகை | 50,000 |
| கொள்முதல் மறுபயன் | 5,50,000 |

## அன்பு லிமிடெட்டின் குறிப்பேடு

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | தீர்வு க/கு ப.<br>பொறி மற்றும் இயந்திரம் க/கு<br>சரக்கு க/கு<br>கடனாளிகள் க/கு<br>ரொக்கம் மற்றும் வங்கி க/கு<br>(பலவகைச் சொத்துக்களும் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன) | | 10,25,000 | <br>8,00,000<br>65,000<br>95,000<br>65,000 |
| | பற்பல கடனீந்தோர் க/கு ப.<br>தீர்வு க/கு<br>(பொறுப்புகள் சொத்துக்களும் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன) | | 75,000 | <br>75,000 |
| | பண்பு லிமிடெட் க/கு ப.<br>தீர்வு க/கு<br>(... நாளிட்ட ஒப்பந்தப்படி வரவேண்டிய கொள்முதல் மறுபயன்) | | 5,50,000 | <br>5,50,000 |
| | பண்பு லிமிடெட்டின் க/கு சாதாரண பங்குகள் க/கு ப.<br>பண்பு லிமிடெட் க/கு<br>(கொள்முதல் மறுபயனுக்காக பண்பு லிமிடெட்டிலிருந்து ஒன்று ரூ.10 மதிப்புள்ள பங்குகள் 10% முனைமத்தில் பெறப்பட்டது) | | 5,50,000 | <br>5,50,000 |
| | சாதாரணப் பங்குமுதல் க/கு ப.<br>இலாப நட்டக் க/கு ப.<br>நிகழ்வடையாக் காப்பு க/கு ப.<br>பங்குதாரர்கள் க/கு<br>(பங்குமுதலும் சேர்த்து வைக்கப்பட்டுள்ள இலாபங்களும் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 4,00,000<br>5,00,000<br>50,000 | <br><br><br>9,50,000 |
| | பங்குதாரர்கள் க/கு ப.<br>தீர்வு க/கு<br>(தீர்வு கணக்கின் நட்டம் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 4,00,000 | <br>4,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்குதாரர்கள் க/கு ப.<br>பண்பு லிமிடெட்டின் பங்குகள் க/கு<br>(பண்பு லிமிடெட்டின் பங்குகள் பிரித்துக் கொடுக்கப்பட்டு பங்குதாரர்களின் கணக்கு தீர்க்கப்பட்டது) | | 5,50,000 | 5,50,000 |

### தீர்வு க/கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பற்பல சொத்துக்கள் | 10,25,000 | பற்பல கடனீந்தோர்<br>பண்பு லிமிடெட்<br>கொள்முதல் மறுபயன்<br>பங்குதாரர்கள் க/கு (நட்டம்) | 75,000<br><br>5,50,000<br>4,00,000 |
| | 10,25,000 | | 10,25,000 |

அறிவு லிமிடெட்டின் கொள்முதல் மறுபயன் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| | | ரூ. |
|---|---|---|
| 1) | அறிவு லிமிடெட்டின் கடன் பத்திரதாரர்களுக்கு பண்பு லிமிடெட்டின் கடன் பத்திரங்கள் 10% தள்ளுபடியில் வழங்கப்பட்டது | 1,80,000 |
| முகமதிப்பு ரூ.2,00,000 | அதாவது ரூ.2,00,000 $\times \frac{10}{100} =$ ரூ.20,000 | |
| | 2) அறிவு லிமிடெட்டில் உள்ள ஒவ்வொரு 3 முன்னுரிமை பங்குகளுக்கு பண்பு லிமிடெட்டில் 4 முன்னுரிமை பங்குகள் வழங்கப்படும் | 2,40,000 |
| | அதாவது 3,00,000 ÷ 100 = 3,000 ÷ 5 = 600 பங்குகள் x 4 = 2,400 பங்குகள் ஒன்று ரூ.100 மதிப்புள்ளது | |
| | 3) மீதம் ஒன்று ரூ.10 மதிப்புள்ள சாதாரணப் பங்குகள் பங்கு ஒன்றிற்கு முனைமம் ரூ.1 வீதம் பண்பு லிமிடெட்டில் வழங்கப்பட்டது | 3,25,000 |
| | அதாவது ஒன்று ரூ.10 மதிப்புள்ள 32,500 பங்குகள் பங்கு முனைமம் பங்கு ஒன்றிற்கு ரூ.1 வீதம் | 32,500 |
| | கொள்முதல் மறுபயன் | 7,77,500 |

குறிப்பு : மீதம் பின்வருமாறு கண்டறியப்பட்டுள்ளது

அறிவு லிமிடெட்டின் சொத்துக்கள் பண்பு லிமிடெட்டினால் எடுத்து கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| பொறி மற்றும் இயந்திரம் | 7,20,000 | (10% தேய்மானத்தில்) |
| சரக்கு | 60,000 | |
| கடனாளிகள் | 47,500 | (5% குறைப்பில்) |
| வங்கி ரொக்கம் | 40,000 | |
| | 8,67,500 | |
| கழிக்க : பற்பல கடனீந்தோர் | 90,000 | |
| கழிக்க | 7,77,000 | |
| கடன் பத்திரங்கள் மற்றும் முன்னுரிமைப் பங்குகள் வழங்கப்பட்டது | 4,20,000 | |
| | 3,57,500 | (1,80,000 + 2,40,000) |

3,57,500 + 11 = 32,500 பங்குகள்

## அறிவு லிமிடெட்டின் ஏட்டில் குறிப்பேடு

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | தீர்வு க/கு ப. | | 9,50,000 | |
| | பொறி மற்றும் இயந்திரம் க/கு | | | 8,00,000 |
| | சரக்கு க/கு | | | 60,000 |
| | கடனாளிகள் க/கு | | | 50,000 |
| | ரொக்கம் மற்றும் வங்கி க/கு | | | 40,000 |
| | (பலவகைச் சொத்துக்களும் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன) | | | |
| | பற்பல கடனீந்தோர் க/கு ப. | | 90,000 | |
| | தீர்வு க/கு | | | 90,000 |
| | (பொறுப்புகள் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன) | | | |
| | பண்பு லிமிடெட் க/கு ப. | | 7,77,500 | |
| | தீர்வு க/கு | | | 7,77,500 |
| | (... நாளிட்ட ஒப்பந்தப்படி பெற வேண்டிய கொள்முதல் மறுபயன் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | |
| | பண்பு லிமிடெட்டின் கடன் பத்திரங்கள் க/கு ப. | | 1,80,000 | |
| | பண்பு லிமிடெட்டின் 7% முன்னுரிமைப் பங்குகள் க/கு ப. | | 2,40,000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பண்பு லிமிடெட்டின் சாதாரணப் பங்குகள் க/கு ப.<br>பண்பு லிமிடெட் க/கு<br>(கொள்முதல் மறுபயனுக்காக பண்பு லிமிடெட்டிலிருந்து ஒன்று ரூ.10 மதிப்புள்ள பங்குகள் 10% முனைமத்தில் பெறப்பட்டது) | | 3,57,500 | 7,77,500 |
| | சாதாரணப் பங்குமுதல் க/கு ப.<br>6% முன்னுரிமைப் பங்குமுதல் க/கு ப.<br>கடன் பத்திரங்கள் க/கு ப.<br>சாதாரணப் பங்குதாரர்கள் க/கு<br>6% முன்னுரிமைப் பங்குதாரர்கள் க/கு<br>கடன் பத்திரங்கள் க/கு<br>(கணக்குகள் உரிமையாளர்கள் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன) | | 5,00,000<br>3,00,000<br>2,00,000 | 5,00,000<br>3,00,000<br>2,00,000 |
| | சாதாரணப் பங்குதாரர்கள் க/கு ப.<br>இலாப நட்டக் க/கு<br>(சேர்ந்துள்ள நட்டம் மாற்றப்படுகிறது)<br>கடன் பத்திரதாரர்கள் க/கு ப.<br>6% முன்னுரிமைப் பங்குதாரர்கள் க/கு ப.<br>சாதாரணப் பங்குதாரர்கள் க/கு ப.<br>தீர்வு க/கு<br>(தீர்வுக் கணக்கு உடையவர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 1,40,000<br>20,000<br>60,000<br>2,500 | 1,40,000<br>62,500 |
| | சாதாரணப் பங்குதாரர்கள் க/கு ப.<br>6% முன்னுரிமை பங்குதாரர்கள் க/கு ப.<br>கடன் பத்திரதாரர்கள் க/கு ப.<br>பண்பு லிமிடெட்டின் சாதாரணப் பங்குகள் க/கு<br>பண்பு லிமிடெட்டின் 7% முன்னுரிமைப் பங்குகள் க/கு<br>பண்பு லிமிடெட்டின் கடன் பத்திரங்கள் க/கு<br>(பங்குதாரர்களின் கணக்கும் கடன் பத்திரதாரர்களின் கணக்கும் தீர்க்கப்பட்டது) | | 3,57,500<br>2,40,000<br>18,000 | 3,57,000<br>2,40,000<br>18,000 |

ரூ.2,00,000 மதிப்புள்ள அறிவு லிமிடெட்டின் கடன் பத்திரங்கள் ரூ.1,80,000 மதிப்புள்ள பண்பு லிமிடெட்டின் கடன்பத்திரங்களுக்கு மாற்றப்பட்டது. வித்தியாசம் ரூ.20,000 ரூ.3,00,000 மதிப்புள்ள அறிவு லிமிடெட்டின் 6% முன்னுரிமை பங்குகள் ரூ.2,40,000 மதிப்புள்ள பண்பு லிமிடெட்டின் முன்னுரிமை பங்குகளுக்கு மாற்றப்பட்டது. வித்தியாசம் ரூ.60,000

குறிப்பு

### தீர்வு க/கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பொறி இயந்திரம் | 8,00,000 | பற்பல கடனீந்தோர் | 90,000 |
| சரக்கிருப்பு | 60,000 | பண்பு லிமிடெட் | |
| கடனாளிகள் | 50,000 | (கொள்முதல் மறுபயன்) | 7,77,500 |
| வங்கி | 40,000 | பற்பல உரிமையாளர்கள் | |
| | | க/கு நட்டம் | 82,500 |
| | 9,50,000 | | 9,50,000 |

### பண்பு லிமிடெட்டின் ஏடுகளில் குறிப்பேடு

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | தொழில் கொள்முதல் க/கு ப. | | 13,27,500 | |
| | அன்பு லிமிடெட் க/கு | | | 5,50,000 |
| | அறிவு லிமிடெட் கலைப்பாளர் க/கு | | | 7,77,500 |
| | (செலுத்த வேண்டிய கொள்முதல் மறுபயன்) | | | |
| | பொறி மற்றும் இயந்திர க/கு ப. | | 15,20,000 | |
| | சரக்கு க/கு ப. | | 1,25,000 | |
| | கடனாளிகள் க/கு ப. | | 1,45,000 | |
| | ரொக்கம் மற்றும் வங்கி க/கு ப. | | 1,05,000 | |
| | பற்பல கடனீந்தோர் க/கு | | | 1,65,000 |
| | வாராக்கடன் காப்பு க/கு | | | 2,500 |
| | தொழில் கொள்முதல் க/கு | | | 4,00,000 |
| | (அறிவு லிமிடெட் மற்றும் அன்பு லிமிடெட்டின் பலவகைச் சொத்துக்களும் பொறுப்புக்களும் கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டு கொள்முதல் விலைக்கும் நிகரச் சொத்துக்களின் மதிப்பிற்கும் உள்ள வித்தியாசம் முதல் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | | 13,27,500 |
| | அன்பு லிமிடெட்டின் கலைப்பாளர் க/கு ப. | | 5,50,000 | |
| | அறிவு லிமிடெட்டின் கலைப்பாளர் க/கு ப. | | 7,77,500 | |
| | சாதாரணப் பங்கு முதல் க/கு | | | 8,25,000 |
| | 7% முன்னுரிமை பங்கு முதல் க/கு | | | 2,40,000 |
| | கடன் பத்திரங்கள் க/கு | | | 1,80,000 |
| | பங்கு முனைமம் க/கு | | | 82,500 |
| | (கொள்முதல் மறுபயன் தீர்க்கப்பட்டது) | | | |

### பண்பு லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்பு.... தேதியன்று

| பொறுப்புக்கள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் அனுமதித்த வெளியிடப்பட்ட ஒப்பிய மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம்: | | நிலையான சொத்துக்கள் பொறி மற்றும் இயந்திரம் | 15,20,000 |
| ஒன்று 10 மதிப்புள்ள 82,500 சாதாரணப் பங்குகள் | 8,25,000 | நடப்புச் சொத்துக்கள் சரக்கிருப்பு | 1,25,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 2,400 7% முன்னுரிமைப் பங்குகள் | 2,40,000 | கடனாளிகள் 1,45,000 கழி: ஐயக்கடன் காப்பு 2,500 | 1,42,500 |
| காப்புகள் மற்றும் உபரி பங்கு முனைமம் | 82,500 | ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு | 1,05,000 |
| மூலதனக் காப்பு | 4,00,000 | | |
| பிணைக் கடன்கள் கடன் பத்திரங்கள் | 1,80,000 | | |
| பிணையில்லாக் கடன்கள் பற்பல கடனீந்தோர் | 1,65,000 | | |
| | 18,92,500 | | 18,92,500 |

**எடுத்துக்காட்டு: 17**

2004 டிசம்பர் 31ஆம் நாளன்று பாலன் லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

### பாலன் கம்பெனி லிமிடெட்
### இருப்பு நிலைக் குறிப்பு
### 2004 டிசம்பர் 31ஆம் நாளன்று

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் ஒன்று ரூ.10 மதிப்புள்ள 20,000 சாதாரண பங்குகள் | 2,00,000 | பலவகைச் சொத்துக்கள் | 3,79,000 |
| 6% கடன் பத்திரங்கள் | 1,00,000 | | |
| கடனீந்தோர் | 30,000 | ரொக்கம் | 1,000 |
| காப்பு நிதி | 25,000 | | |
| இலாப நட்ட க/கு | 25,000 | | |
| | 3,80,000 | | 3,80,000 |

இக்கம்பெனியை இராமன் கம்பெனி லிமிடெட் ஏற்றுக் கொள்கிறது. கம்பெனியை ஏற்றுக் கொள்வதற்கு மறுபயன் பின்வருமாறு அளிக்கப்பட்டது.

1). கடன் பத்திரங்களை 5% முனைமத்தில் தீர்த்தல்

2). கடனீந்தோர் சம்பந்தப்பட்ட பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல்

3). பாலன் கம்பெனியிலுள்ள ஒவ்வொரு பங்கிற்கு மாறாக பங்கு ஒன்றிற்கு ரொக்கம் ரூ.5 மதிப்புள்ள இராமன் கம்பெனி லிமிடெட்டின் பங்கு ரூ.6 எனும் சந்தை விலையில் வழங்கப்படும் கலைப்புச் செலவு ரூ.500ஐ வாங்கும் கம்பெனி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏற்புக்கு முன்கூட்டியே இராமன் லிமிடெட்டின் பங்குதாரர்களுக்கு 10% இலாப ஈவு அறிவிப்புச் செய்யப்பட வேண்டும். செலுத்தப்பட்ட முதல் ரூ.2,00,000 ஆகும்.

இரண்டு கம்பெனிகளின் ஏடுகளிலும் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**குறிப்புகள்**

1. கொள்முதல் மறுபயன்

| (பின்வருமாறு கணக்கிடப்படுகிறது) | ரூ. | ரூ. |
|---|---|---|
| கடன் பத்திரங்களைத் தீர்த்தல் | | |
| 6% கடன் பத்திரங்கள் | | |
| 5% முனைமம் | | |
| பங்குகளை வழங்குதல் | | |
| பாலன் கம்பெனியில் உள்ள ஒவ்வொலு | | |
| பங்கிற்கும் இராமன் கம்பெனியில் 20,000 | | |
| பங்குகள் உள்ளன. | | |
| ஒன்று ரூ.5 மதிப்புள்ள பங்கு ரூ.8 வீதம் | | |

வழங்கப்படுகிறது. 20,000 x 5 முனைமம்

20,000 x ரூ.3

ரொக்கம் — பங்கு ஒன்றிற்கு ரூ.5 வீதம்

(20,000 x 5)

கொள்முதல் மறுபயன்

3. ரூ.20,000ன் மீது 10% இலாப ஈவு

செலுத்தப்பட்டது.

$$2,00,000 \times \frac{10}{100} = \text{ரூ.}20,000$$

விடை

பாலன் கம்பெனி லிமிடெட்டின் ஏடுகளில்

| | | | ப. ரூ. | வ. ரூ. |
|---|---|---|---|---|
| 2004 டிச 31 | தீர்வு க/கு ப.<br>பலவகைச் சொத்துக்கள் க/கு<br>ரொக்க க/கு<br>(பலவகைச் சொத்துக்களும் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது) | | 3,80,000 | 3,79,000<br>1,000 |
| | பற்பல கடனீந்தோர் க/கு ப.<br>தீர்வு க/கு<br>(பொறுப்புகள் தீர்வு கணக்கிற்கு மாற்றப்படுகின்றது) | | 30,000 | 30,000 |
| | இராமன் லிமிடெட் க/கு ப.<br>தீர்வு க/கு<br>(நாளிட்ட ஒப்பந்தத்தின்படி பெறப்பட வேண்டிய கொள்முதல் மறுபயன்) | | 3,65,000 | 3,65,000 |
| | இராமன் லிமிடெட் கம்பெனி பங்குகள் க/கு ப.<br>ரொக்க க/கு ப.<br>இராமன் கம்பெனி லிமிடெட் க/கு<br>(ரூ.2,60,000 மதிப்புள்ள பங்குகளும் மீதம் ரொக்கமாகவும் கொள்முதல் மறுபயனுக்காக பெறப்பட்டன) | | 1,60,000<br>2,65,000 | 3,65,000 |
| | இராமன் கம்பெனி லிமிடெட் க/கு ப.<br>ரொக்க க/கு<br>(கலைப்புச் செலவுகளை வாங்கும் கம்பெனி ஏற்றுக் கொள்கிறது) | | 500 | 500 |
| | ரொக்க க/கு ப.<br>இராமன் கம்பெனி லிமிடெட் க/கு<br>(வாங்கும் கம்பெனியிடமிருந்து கலைப்புச் செலவுத் தொகை பெறப்பட்டது) | | 500 | 500 |
| | கடன் பத்திரங்கள் க/கு ப.<br>தீர்வு க/கு ப.<br>கடன் பத்திரதாரர்கள் க/கு<br>(கடன் பத்திரதாரர்கள் செலுத்த வேண்டிய தொகை ரூ.1,00,000 5% முனைமத்துடன் செலுத்தப்பட வேண்டும் முனைமம் தீர்வு கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 1,00,000<br>5,000 | 1,05,000 |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன் பத்திரதாரர்கள் க/கு ப.<br>ரொக்க க/கு<br>(கடன் பத்திரதாரர்களுக்குப் பணம் செலுத்தப்பட்டது) | | 1,05,000 | 1,05,000 |
| | சாதாரணப் பங்குமுதல் க/கு ப.<br>சாதாரணப் பங்குதாரர்கள் க/கு<br>(பங்குமுதல் க/கு முடிக்கப்பட்டு பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது) | | 2,00,000 | 2,00,000 |
| | காப்புநிதி க/கு ப.<br>இலாப நட்டக் க/கு ப.<br>சாதாரணப் பங்குதாரர்கள் க/கு<br>(சேர்ந்துள்ள இலாபம் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 25,000<br>25,000 | 50,000 |
| | தீர்வு க/கு ப.<br>சாதாரணப் பங்குதாரர்கள் க/கு<br>(தீர்வுக் கணக்கின் இலாபம் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 10,000 | 10,000 |
| | சாதாரணப் பங்குதாரர்கள் க/கு ப.<br>இராமன் கம்பெனி லிமிடெட் பங்குகள் க/கு<br>ரொக்க க/கு<br>(சாதாரணப் பங்குதாரர்களின் கணக்கு முடிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய தொகை செலுத்தப்பட்டது) | | 2,60,000 | 1,60,000<br>1,00,000 |

ப. **தீர்வு க/கு** வ.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பல்வகைச் சொத்துக்கள் | 3,79,000 | பற்பல கடனீந்தோர் | 30,000 |
| ரொக்கம் | 1,000 | இராமன் லிமிடெட் | 3,65,000 |
| கடன் பத்திரதாரர்கள் க/கு | 5,000 | | |
| சாதாரணப் பத்திரதாரர்கள் க/கு (இலாபம்) | 10,000 | | |
| | 3,95,000 | | 3,95,000 |

## இராமன் கம்பெனி லிமிடெட்டின் ஏடுகளில்

| | | | ப. ரூ. | வ. ரூ. |
|---|---|---|---|---|
| 2004 டிச 31 | இலாப நட்டப் பகிர்வு க/கு ப.<br>இலாப ஈவு க/கு<br>(... நாளிட்ட ஒப்பந்தத்தின் படி ரூ.2,00,000 மீது செலுத்தப்பட வேண்டிய 10% இலாப ஈவு) | | 20,000 | 20,000 |
| | இலாப ஈவு க/கு ப.<br>வங்கி க/கு<br>(ஏற்புக்கு முன் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு செலுத்தப்பட்டது) | | 20,000 | 20,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழில் கொள்முதல் க/கு ப.<br>பாலன் கம்பெனி லிமிடெட் கலைப்பாளர் க/கு<br>(... நாளிட்ட ஒப்பந்தத்தின்படி செலுத்த வேண்டிய கொள்முதல் மறுபயன்) | | 3,65,000 | 3,65,000 |
| | பலவகைச் சொத்துக்கள் க/கு ப.<br>ரொக்கம் க/கு ப.<br>தொழில் நன்மதிப்பு க/கு ப.<br>பலவகைக் கடனீந்தோர் க/கு<br>தொழில் கொள்முதல் க/கு<br>(பலவகைச் சொத்துக்களும் பொறுப்புகளும் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டு, வித்தியாசம் தொழில் நன்மதிப்புக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது) | | 3,79,000<br>1,000<br>15,000 | 30,000<br>3,65,000 |
| டிச 31 | பாலன் கம்பெனி லிமிடெட் கலைப்பாளர் க/கு ப.<br>ரொக்க க/கு<br>பங்குமுதல் க/கு<br>பங்குமுனைமம் க/கு<br>(கொள்முதல் மறுபயனுக்காக ஒன்று ரூ.5 மதிப்புள்ள 20000 பங்குகள் ஒன்று ரூ.8 வீதமும் ரொக்கமும் செலுத்தப்பட்டது) | | 3,65,000 | 2,05,000<br>1,00,000<br>60,000 |
| | தொழில் நன்மதிப்பு க/கு ப.<br>ரொக்க க/கு<br>(பாலன் கம்பெனியின் கலைப்புச் செலவு தொழில் நன்மதிப்பு கணக்கில் பற்று வைக்கப்படுகிறது) | | 500 | 500 |

**இணைக்கப்படும் கம்பெனிகளுக்கிடையே உள்ள கடன்கள்**

ஒன்றுக்கொன்று அறியாத புதிய கம்பெனியின் பெரும்பாலும் இணைக்கப்படுவதில்லை என்பதை நாம் அறிவோம். வழக்கமாக ஒன்றிணைப்பு அல்லது ஈர்ப்பமைப்புச் செய்யப்படும் கம்பெனிகள் ஒன்றுடன் ஒன்று வியாபாரத் தொடர்புடைய கம்பெனிகள் அல்லது நன்கு அறிந்த கம்பெனிகளாக இருக்கும். எனவே இணைக்கப்படும் கம்பெனிகளுக்கிடையே பரஸ்பர கடன்கள் இருப்பது என்பதைச் சாதாரணமாகக் காணலாம்.

விற்கும் கம்பெனி வாங்கும் கம்பெனியிடமோ அல்லது வாங்கும் கம்பெனி விற்கும் கம்பெனியிடமோ கொள்முதல் மற்றும் விற்பனை மூலம்

கடன்பட்டிருக்கலாம். அம்மாதிரி இரு கம்பெனிகளிடையே நிலவக்கூடிய பரஸ்பரக் கடன்களை வாங்கும் கம்பெனியின் ஏட்டிலிருந்து நீக்கிவிடலாம். வாங்கும் கம்பெனியின் கடனாளிகள் பேரேடு மற்றும் கடனீந்தோர் பேரேடுகளில் விற்கும் கம்பெனியின் பெயர்களை பலவகைக் கடனாளிகள், பலவகைக் கடனீந்தோரிலிருந்து நீக்கிவிட வேண்டும். வழக்கமாக, தொழிலை ஏற்கும்போது செய்யவேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைப் பதிவு செய்த பின்னர் இம்மாதிரியான சரிக்கட்டுப் பதிவுகளைச் செய்யலாம்.

தீர்வுக் கணக்கினைத் தயாரிக்கம் பொழுது கம்பெனிகளுக்கு இடையிலான கடன்கள் பற்றிய பதிவுகள் ஏதும் செய்ய வேண்டிய அவசியமில்லை.

**கையிருப்பு சரக்கு மதிப்பிற்கான சரிக்கட்டுப் பதிவு**

இணைப்பிற்கு முன் இணையும் கம்பெனியின் இரண்டும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வழியுண்டு. இவ்வித நடவடிக்கைகளினால் வாங்கி விற்பனையாகாத சரக்குகளின் மதிப்பு இலாபத்தையும் உள்ளிட்டதாக இருக்கும். ஆனால் இணைப்பிற்குப்பின் சரக்கு மதிப்பில் இவ்வகையான இலாபம் இருக்கக்கூடாது. இவ்வகையான நடவடிக்கைகள் கீழ்க்காணும் இரண்டு வழிகளில் நடக்க வாய்ப்புண்டு.

1. ஈர்க்கும் கம்பெனி ஈர்க்கப்படும் கம்பெனியிடமிருந்து சரக்குகள் வாங்கியிருந்து விற்பனை ஆகாமல் மீதியிருத்தல். இச்சமயத்தில் ஈர்க்கும் கம்பெனி ஏடுகளில் கீழ்க்காணும் பதிவினைச் செய்ய வேண்டும்.

தொழில் அமைப்பு அல்லது முதல் காப்பு க/கு ப.

சரக்கு க/கு வ.

2. ஈர்க்கும் கம்பெனியிடமிருந்து ஈர்க்கப்படும் கம்பெனி சரக்குகள் வாங்கியிருந்து விற்பனை ஆகாமல் மீதியிருத்தல் இச்சமயத்தில் ஈர்க்கப்படும் கம்பெனியின் ஏடுகளில் சரக்கின் உண்மையான மதிப்பு

மட்டும் பதியப்படும். அதிகப்படியான இலாபம் தொழில் நன்மதிப்பிலாவது அல்லது முதல் காப்பிலாவது தானாகவே சரி செய்யப்பட்டு விடும்.

**எடுத்துக்காட்டு 18**

2004 செப்டம்பர் 30 அன்று பாரத் லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| அனுமதித்தது: | | பலவகைச் சொத்துக்கள் | 2,60,000 |
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள 10000 சாதாரணப் பங்குகள் | 1,00,000 | ரொக்கம் | 1,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 6% குவிவு முன்னுரிமை பங்குகள் 1000 | 1,00,000 | இலாப நட்டக் கணக்கு (நட்டம்) | 80,000 |
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட 6,000 சாதாரணப் பங்குகள் | 60,000 | | |
| 6% குவிவு முன்னுரிமைப் பங்குகள் 600 | 60,000 | | |
| 5% கடன் பத்திரங்கள் | 30,000 | | |
| வியாபாரக் கடனீந்தோர் | 30,000 | | |
| வங்கி அதிகப்பற்று | 1,61,000 | | |
| பலவகைச் சொத்துக்களுக்கு (எதிராக) | 1,61,000 | | |
| | 3,41,000 | | 3,41,000 |



குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்.**

**1). சரியா அல்லது தவறா:**

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுமங்கள் இணைந்து புதிய நிறுமம் உருவாக்கும் வழி முறையை ஈர்ப்பு என்பர்.

2. சொத்து மற்றும் பொறுப்புகளை ஒப்புக் கொள்ளப்பட்ட மதிப்பின் அடிப்படையில் வாங்கும் நிறுமம் விற்கும் நிறுமத்திற்கு மறுபயன் கொடுக்க முடிவு செய்யும் முறையானது நிகரச் செலுத்துதல் முறையாகும்.

3. ஒருங்கிணைப்பு நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுமங்கள் கலைக்கப்பட்டு ஒரு புதிய நிறுமம் உருவாகும்.

4. கொள்முதல் மறுபயனை நிகரச் சொத்து முறையில் கணக்கிடும் பொழுது கற்பனைச் சொத்துக்களையும் சேர்த்து கருத்தில் கொள்ள வேண்டும்.

5. பணியாளர்கள் நட்ட ஈடு நிதி ஒரு பொறுப்பாகும். எனவே அதனை தீர்வுக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

குறிப்பு

1. இக்கம்பெனியை மறுஅமைப்பு செய்ய முடிவு செய்யப்பட்டது அதற்காக ஹிந்துஸ்தான லிமிடெட் என்னும் புதிய கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டது. புதிய கம்பெனியின் பதிவு முதலாகிய ரூ.2,00,000ம் ஒன்று ரூ.10/— மதிப்புள்ள 8000 சாதாரணப் பங்குகளாகவும் ஒன்று ரூ.100 மதிப்புடைய (7%) 1200 முன்னுரிமைப் பங்குகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. பாரத் லிமிடெட்டின் சொத்துக்களையும், பொறுப்புகளையும் புதிய கம்பெனி எடுத்துக் கொள்ளும்.
2. பாரத் லிமிடெட்டில் உள்ள கடன் பத்திரதாரர்கள், தங்களின் கடன் பத்திரங்களுடன் மாற்றாக புதிய கம்பெனியில் 7% முன்னுரிமைப் பங்குகளை ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டனர்.
3. பாரத் லிமிடெட்டின் முன்னுரிமைப் பங்குதாரர்கள் தாங்கள், வைத்துள்ள ஒவ்வொரு 3 முன்னுரிமைப் பங்குகளுக்கும், ஹிந்துஸ்தான் லிமிடெட்டில் ஒரு முன்னுரிமைப் பங்கு பெறுவர்.
4. பாரத் லிமிடெட்டின் சாதாரணப் பங்குதாரர்கள் தாங்கள் வைத்துள்ள 4 சாதாரணப் பங்குகளுக்கும் ஹிந்துஸ்தான் லிமிடெட்டில் ரூ.8 வீதம் செலுத்தப்பட்ட சாதாரணப் பங்கு ஒன்றைப் பெறுவர்.
5. ஹிந்துஸ்தான் லிமிடெட் ஒன்று ரூ.10 மதிப்புள்ள 3500 சாதாரணப் பங்ககளை முகமதிப்பில் வெளியிட்டது. அத்துடன் பாரத் லிமிடெட்டின் பழைய பங்குதாரர்களுக்கு வழங்கிய பங்குகள் மீது பங்கு ஒன்றுக்கு ரூ.2 வீதம் பெற வேண்டிய பணத்திற்கு அழைப்பு விடுத்தது.
6. பாரத் லிமிடெட்டின் கலைப்புச் செலவு ரூ.768ஐ புதிய கம்பெனி செலுத்தியது.
7. ஹிந்துஸ்தான் லிமிடெட்டின் துவக்கச் செலவு ரூ.240 செலுத்தப்பட்டது.

பின்வருபவற்றைச் செய்யும்படி கோரப்படுகிறீர்கள்.

1. பழைய மற்றும் புதிய கம்பெனியின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.
2. ஹிந்துஸ்தான் லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்பைத் தருக.

**இராமன் கம்பெனி லிமிடெட்டின் ஏடுகளில்**

| | | | ப. ரூ. | வ. ரூ. |
|---|---|---|---|---|
| 2004 செப் 30 | தீர்வுக் க/கு ப.<br>பலவகை சொத்துக்கள் க/கு<br>ரொக்க க/கு<br>(பலவகைப்பட்ட சொத்துக்கள் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 2,61,000 | 2,60,000<br>1,000 |
| | 5% கடன் பத்திரங்கள் க/கு ப.<br>வியாபாரக் கடனீந்தோர் க/கு ப.<br>வங்கி அதிகப்பற்று க/கு ப.<br>தீர்வு க/கு<br>(பொறுப்புகள் தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 30,000<br>30,000<br>1,61,000 | 2,21,000 |
| | ஹிந்துஸ்தான் லிமிடெட் க/கு ப.<br>தீர்வு க/கு<br>(வியாபாரத்தை எடுத்துக் கொண்டதற்கு ஹிந்துஸ்தான் லிமிடெட் செலுத்த வேண்டிய தொகை) | | 32,000 | 32,000 |
| | ஹிந்துஸ்தான் லிமிடெட் 7% முன்னுரிமைப் பங்குகள் க/கு ப.<br>ஹிந்துஸ்தான் லிமிடெட் சாதாரணப் பங்குகள் க/கு ப.<br>ஹிந்துஸ்தான் லிமிடெட் க/கு<br>(ஹிந்துஸ்தான் லிமிடெட்டிடமிருந்து ஒன்று ரூ.100 மதிப்புள்ள 200 முன்னுரிமைப் பங்குகளும் ஒன்று ரூ.8 வீதம் செலுத்தப்பட்ட 1,500 சாதாரணப் பங்குகளும் பெறப்பட்டது) | | 20,000<br>12,000 | 32,000 |
| | சாதாரணப் பங்கு முதல் க/கு ப.<br>6% குவிவு முன்னுரிமைப் பங்கு முதல் க/கு ப.<br>சாதாரணப் பங்குதாரர்கள் க/கு<br>6% குவிவு முன்னுரிமைப் பங்குதாரர்கள் க/கு<br>(பங்கு முதல் அந்தந்த பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 60,000<br>60,000 | 60,000<br>60,000 |
| | சாதாரணப் பங்குதாரர்கள் க/கு ப. | | 80,000 | |

குறிப்பு

6. இரண்டு அல்லது மேற்பட்ட நிறுமங்கள் கலைக்கப்பட்டு அவைகளின் வணிகத்தை எடுத்துக் கொள்ள புதிய நிறுமம் உருவாக்குவது ஈர்ப்பு ஆகும்.

7. வாங்கும் நிறுமம் எடுத்துக்கொண்ட சொத்துக்களின் ஒப்புக்கொண்ட மதிப்பிலிருந்து, எடுத்துக் கொண்ட பொறுப்புக்களின் ஒப்புக்கொண்ட மதிப்பைக் கழித்தால் கிடைப்பது நிகர மதிப்பு ஆகும்.

8. புற சீரமைப்பு என்பது சீரமைப்பாகும். நிறுமத்தின் பங்கு முதலைக் குறைப்பது.

9. வாங்கும் நிறுமம் செலுத்தும் பல செலுத்துதல்களைக் கூட்டிக் கொள்முதல் மறுபய னைக் கணக்கிடுவது நிகர செலுத்துதல் முறையாகும்.

10. விபத்து ஈட்டுறுதி கணக்கு என்பது ஒரு பொறுப்பாகும். அதனை தீர்வுக் கணக்கிற்கு மாற்றி கணக்கை முடிக்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | இலாப நட்ட க/கு (சேர்ந்துள்ள நட்டம் சாதாரணப் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | | 80,000 |
| | 5% குவிவு முன்னுரிமைப் பங்குதாரர்கள் க/கு ப. தீர்வு க/கு (பங்குகளை மாற்றுவதினால் ஏற்படும் நட்டம், முன்னுரிமைப் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 40,000 | 40,000 |
| | தீர்வுக் க/கு ப. சாதாரணப் பங்குதாரர்கள் க/கு (தீர்வுக் கணக்கின் இலாபம் சாதாரணப் பங்குதாரர்கள் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 32,000 | 32,000 |
| 2004 செப் 30 | சாதாரணப் பங்குதாரர்கள் க/கு ப. 6% குவிவு முன்னுரிமைப் பங்குதாரர்கள் க/கு ப. ஹிந்துஸ்தான் லிமிடெட் சாதாரணப் பங்குகள் க/கு ஹிந்துஸ்தான் லிமிடெட் 7% முன்னுரிமைப் பங்குகள் க/கு (புதிய கம்பெனியின் பங்குகள் பிரித்துக் கொடுக்கப்படுகிறது) | | 12,000<br>20,000 | 12,000<br>20,000 |

## ஹிந்துஸ்தான் லிமிடெட் குறிப்பேடு

| | | | ப. ரூ. | வ. ரூ. |
|---|---|---|---|---|
| 2004 செப் 30 | தொழில் கொள்முதல் க/கு ப. பாரத் லிமிடெட் கலைப்பாளர் க/கு (தொழிலை எடுத்துக்கொண்டதற்கு மறுபயனாக கலைப்பாளருக்கு செலுத்த வேண்டிய தொகை) | | 32,000 | 32,000 |
| | பலவகைச் சொத்துக்கள் க/கு ப.<br>ரொக்க க/கு ப.<br>5% கடன் பத்திரங்கள் க/கு<br>வியாபாரக் கடனீந்தோர் க/கு<br>வங்கி அதிகப்பற்று க/கு<br>தொழில் கொள்முதல் க/கு<br>முதல் காப்பு க/கு<br>(பாரத் லிமிடெட்டின் சொத்துக்களும், பொறுப்புகளும் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டு, வித்தியாசம் முதல் காப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது) | | 2,60,000<br>1,000 | 30,000<br>30,000<br>1,61,000<br>32,000<br>8,000 |
| | பாரத் லிமிடெட் கலைப்பாளர் க/கு ப. சாதாரணப் பங்கு முதல் க/கு 7% முன்னுரிமைப் பங்கு முதல் க/கு (தொழிலை எடுத்துக் கொண்டதற்கு மறுபயனாக சாதாரணப் பங்குகளும் முன்னுரிமைப் பங்குகளும் வழங்கப்பட்டன) | | 32,000 | 12,000<br>20,000 |
| | கடன் பத்திரங்கள் க/கு ப. 7% முன்னுரிமைப்பங்கு முதல் க/கு | | 30,000 | 30,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடன் பத்திரங்கள் க/கு ப.<br>7% முன்னுரிமைப்பங்கு முதல் க/கு<br>(கடன் பத்திரங்களுக்கு மாற்றாக 7% முன்னுரிமைப் பங்குகள் 300 வழங்கப்பட்டது) | | 30,000 | 30,000 |
| | வங்கி க/கு ப.<br>சாதாரணப் பங்குமுதல் க/கு<br>(ஒன்று ரூ.10 மதிப்புள்ள 3500 பங்குகள் ரொக்கத்திற்கு வெளியிடப்பட்டது) | | 35,000 | 35,000 |
| | அழைப்பு க/கு ப.<br>சாதாரணப் பங்கு முதல் க/கு<br>(... நாளிட்ட இயக்குனர் அவை ஒப்பந்தத்தின்படி பங்கு ஒன்றுக்கு ரூ.2 வீதம் 1500 பங்குகள் மீது பெற வேண்டிய அழைப்பு பணம்) | | 3,000 | 3,000 |
| | வங்கி க/கு ப.<br>அழைப்பு க/கு<br>(அழைப்புப்பணம் பெறப்பட்டது) | | 3,000 | 3,000 |
| | தொழில் நன்மதிப்பு க/கு ப.<br>வங்கி க/கு<br>(பாரத் லிமிடெட்டின் கலைப்புச் செலவுகள் செலுத்தப்பட்டு தொழில் நன்மதிப்பு கணக்கில் பற்று வைக்கப்பட்டது) | | 760 | 760 |
| | துவக்கச் செலவுகள் க/கு ப.<br>வங்கி க/கு<br>(துவக்கச் செலவுகள் செலுத்தப்பட்டது) | | 240 | 240 |

வங்கியிருப்பு பின்வருமாறு கணக்கிடப்பட்டது:

| | | |
|---|---|---|
| 3500 பங்குகள் வெளியிட்டு பெற்ற ரொக்கம் | | 35,000 |
| 1000 பங்குகள் மீது பெற்ற அழைப்புப்பணம் | | 3,000 |
| | | 38,000 |
| கழி : துவக்கச் செலவுகள் | 240 | |
| தொழில் மதிப்பு | 760 | 1,000 |
| வங்கியிருப்பு | | 37,000 |

**இருப்புநிலைக்குறிப்பு அக்டோபர் 1ல் உள்ளபடி**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள 800 சாதாரணப் பங்குகள் | 80,000 | தொழில் நன்மதிப்பு | 760 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 7% முன்னுரிமை பங்குகள் | 1,20,000 | பலவகைச் சொத்துக்கள் | 2,60,000 |
| | 2,00,000 | | |

குறிப்பு

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நிகரச் செலுத்துதல் முறையில் கொள்முதல் மறு பயன் விற்பனை நிறுமத்தில் உள்ள ......... கொடுக்கும் செலுத்துதலைக் கூட்டிக் கணக்கிடப்படுகின்றது.

2. ஒன்றுக்கு மேற்பட்ட நிறுமங்கள் கலைக்கப்பட்டு, புதிய நிறுமம் உருவாக்கப் படாததை ......... என்பர்.

3. கலைப்பின் போது, முன்னுரிமை பங்குதாரர்கள் மற்றும் கடன்பத்திரதாரர்கள் அவர்களுடைய முக மதிப்பைவிட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பெறும் பொழுது, ......... கணக்கின் வழியே சரிக்கட்டப்படுகிறது.

4. விற்பனை நிறுமங்களின் ஏடுகளில் உள்ள பணியாளர்கள் ஈட்டு நிதி ......... கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

5. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறுமங்கள் கலைக்கப்பட்டு ஒரு புதிய நிறுமம் உருவாவதை ......... என்பர்.

| | | | |
|---|---|---|---|
| ஒன்று ரூ.10 மதிப்புள்ள | | ரொக்க இருப்பு | 1,000 |
| 5,000 சாதாரணப் பங்குகள் | 50,000 | வங்கி இருப்பு | 37,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள | | துவக்கச் செலவுகள் | 240 |
| 7% முன்னுரிமைப் பங்குகள் | 50,000 | | |
| 500 | | | |
| முதல் காப்பு | 8,000 | | |
| வங்கி அதிகப்பற்று | 1,61,000 | | |
| கடனீந்தோர் | 30,000 | | |
| | 2,99,000 | | 2,99,000 |

## 6.5. உள் மறு அமைப்பு (Internal Reconstruction)

சாதாரணமாக மறுஅமைப்பு அல்லது புனரமைப்பு என்னும் சொல் ஒன்றை மாற்றி மீண்டும் அதனை புதிய வடிவத்தில் அமைப்பதைக் குறிக்கும். எனவே ஒரு கம்பெனியைத் திருத்தி அமைத்திட அதனைப் புதிய வடிவத்தில் நடத்துவதையே கம்பெனி மறு அமைப்பு என்று கூறுகிறோம். மறு அமைப்பு இருவகைப்படும்.

1. வெளி மறு அமைப்பு
2. உள் மறு அமைப்பு

வெளி மறு அமைப்பில் மறு அமைப்புச் செய்யப்படும் கம்பெனியானது கலைக்கப்படுகிறது. அதற்குப் பதிலாக புதிய கம்பெனி ஒன்று அமைக்கப்படுகிறது. புதிய கம்பெனி கலைக்கப்படும் கம்பெனியின் சொத்துக்களையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்து எடுத்துக் கொள்கிறது. பொதுவாக புதிய கம்பெனியின் பெயர், நோக்கம் முதலியன பழைய கம்பெனியின் பெயர் நோக்கம் முதலானவற்றை ஒத்திருக்கும். கலைக்கப்படும் கம்பெனியின் பங்குதாரர்களே புதிய கம்பெனியிலும் பங்குதாரர்களாக இருப்பர்.

மாறாக உள் மறு அமைப்பில் கம்பெனி கலைக்கப்படுவதில்லை. புதிய கம்பெனியும் அமைக்கப்படுவதில்லை. கம்பெனியின் பங்கு முதல்

மற்றும் பொறுப்புகளைக் குறைத்தல் மற்றும் மாற்றி அமைத்தல் மூலம் கம்பெனி மறு அமைப்பு செய்யப்படுகிறது. இதனையே உள் மறு அமைப்பு என்கிறோம்.

கம்பெனியின் செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்குமாயின் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அத்துடன் நீதிமன்றத்தின் அனுமதியையும் பெற்று ஒரு கம்பெனியானது தனது முதலைக் குறைக்கலாம். சாதாரணமாக இவ்விதம் அனுமதி வழங்கும் முன்பு நீதிமன்றம், கம்பெனியின் கடனீந்தோரைக் கலந்தாலோசிக்கும். நீதிமன்றம் தான் சரி என்று நினைக்கும் நிபந்தனைகளுடன் முதல் குறைப்பை உறுதி செய்து ஆணை பிறப்பிக்கும். மேலும் கம்பெனியின் பெயருடன் குறைக்கப்பட்டது என்ற சொற்களை சேர்க்கும் படி நீதிமன்றம் கம்பெனிக்கு ஆணையிடலாம். முதல் குறைப்பு திட்டத்திற்கு நீதிமன்றத்தின் அனுமதி கிடைத்த பின்பு, எல்லா உறுப்பினர்களும் அவ்வாணைக்கு கட்டுப்பட வேண்டும். ஆணையின் ஒரு நகலை பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

**கீழ்க்கண்ட வகைகளில் பங்கு முதலைக் குறைக்கலாம்.**

1. செலுத்தப்பட்ட பங்கு முதலை நீக்குதல்
2. பங்குகளின் மீது செலுத்தப்படாத தொகையைக் குறைத்தல் அல்லது முற்றிலும் நீக்குதல்
3. கம்பெனியின் தேவைக்கும் அதிகமாகவுள்ள பங்கு முதலைத் திருப்பிச் செலுத்துதல்

**முதல் குறைப்புப் பற்றிய நடவடிக்கைகளைக் கணக்கேடுகளுக்கு கொண்டு வருதல்**

1. குறைக்கப்படும் முதல் தொகையானது முதல் குறைப்பு க/கு என்று சொல்லப்படும் கணக்கில் முதலில் வரவு வைக்கப்படுகிறது. அதற்கச் சமமாக பங்குமுதல் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

குறிப்பு

6. இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு நிறுமம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயங்கிக் கொண்டிருக்கும் நிறுமங்களின் வணிகத்தை எடுத்துக் கொள்வது.........

7. விற்கும் நிறுமத்தின் வணிகத்தை வாங்குவதற்கு வாங்கும் நிறுமம் தரும் தொகையை ......... என்பர்.

8. விற்கும் நிறுமத்தின் கலைப்புச் செலவை வாங்கும் நிறுமம் செலுத்த ஒப்புக் கொள்ளும் போது, வாங்கும் நிறுமத்தின்......... கணக்கில் பற்று வைக்க வேண்டும்.

9. விற்கும் நிறுமத்தின் குவிந்த நட்டத்தை......... கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

2. பின்னர் முதல் குறைப்பு கணக்கு பற்று வைக்கப்படுகிறது. அதற்குச் சமமாக பலவகையான நட்டங்கள் மற்றும் நீக்கப்பட வேண்டி உயர் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் கணக்குகள் வரவு வைக்கப்படும்.
3. இவ்விதம் சரிகட்டுதல்கள் செய்த பின்பு தயாரிக்கப்படும் இருப்புநிலைக்குறிப்பு சொத்துக்களையும் பொறுப்புகளையும் தீர்வு மதிப்பில் காட்டும்.

**உள் மறு அமைப்புத்திட்டம்**

ஒரு கம்பெனியில் நட்டம் அதிக அளவில் சேர்ந்து விட்டால் அல்லது முதல் தொகை அதிகமாகி விட்டால் அல்லது இலாப ஈவு செலுத்த சிரமபட்டால் முதல் குறைப்புத் திட்டம் அல்லது தன் மறு அமைப்புத் திட்டம் ஒன்று திட்டமிடப்படும்.

முதலில் எதிர்காலத்தில் கம்பெனி எவ்வளவு இலாபம் ஈட்டும் என்பது கவனமாகவும் திட்டமிடப்படும். இல்லையெனில் மீண்டும் ஒரு மறு அமைப்பு பாதிப்பதாக இருக்கக் கூடாது.

மூன்றாவதாக சாதாரணப் பங்குதாரர்கள் அதிகமான இழப்புகுள்ளாவர்கள். நட்டத்தின் பெரும் பகுதியை அவர்களே ஏற்க வேண்டியிருக்கும். கம்பெனியின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் உரிமை அவர்களுக்கு இருப்பதினால் இம்மாதிரியான நட்டங்களை அவர்களே ஏற்க வேண்டியுள்ளது.

நான்காவதாக நடைமுறை முதல் தேவையான அளவுக்கு புதிய பங்குகளை வெளியிடலாம். முன்னுரிமை பங்குகளின் இலாப ஈவு பாக்கியைச் செலுத்த ரொக்கம் தேவைப்படலாம். நடப்புச் செலவுகளுக்கும் பணம் தேவைப்படலாம்.

1. நீக்க வேண்டிய மொத்த தொகை எவ்வளவு என்று கண்டறிய வேண்டும்.

2. முன்னுரிமை மற்றும் சாதாரண பங்குதாரர்கள் மற்றும் கடனீந்தோர் இழப்பை எப்படி ஏற்க வேண்டும் என முடிவு செய்ய வேண்டும்.

3. முன்னுரிமை மற்றும் சாதாரண பங்குதாரர்கள் மற்றும் கடனீந்தோர் இழப்பை எப்படி ஏற்க வேண்டும் என முடிவு செய்ய வேண்டும். இதற்காக அவற்றின் மீது அளிக்கும் இலாப ஈவு விகிதத்தை உதாரணமாக 6 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக உயர்த்தலாம். ஆனால் மொத்த இலாப ஈவு வருவாய் ஒன்றாக இருக்க வேண்டும்.

4. குவிவு முன்னுரிமை பங்குகளைப் பொறுத்தவரையில் இலாப ஈவுப் பாக்கியை ரொக்கமாக செலுத்தலாம் அல்லது வைப்புச் சான்றிதழாக அளிக்கலாம்.

5. பலவகை உறுப்பினர்களும், கடனீந்தோரும் அளித்த இழப்புகளை நட்டங்கள் மற்றும் உயர் மதிப்பீடுகளை நீக்க பயன்படுத்தலாம். ஏதாவது இருப்பு இருக்குமேயானால் அது முதல் காப்பு கணக்கிற்கு மாற்றப்படும்.

உதாரணமாக ஒன்று ரூ.10 மதிப்புள்ள 7% குவிவு முன்னுரிமை பங்குகள், பங்கு ரூ.8 வீதம், முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாகக் குறைக்கப்படலாம். ஆனால் அதே நேரத்தில் இலாப ஈவு விகிதம் 6 சதவீதத்திலிருந்து 7½ சதவீதமாக உயர்த்தப்பட்டால், பழைய இலாப ஈவு வருவாய் மாறாமல் இருக்கும். அதாவது,

$$1000000 \text{ x } \frac{6}{100} = \text{ரூ.}6{,}000$$

இப்பொழுது $80000 \text{ x } \frac{7\frac{1}{2}}{100} = 6{,}000$

இலாப ஈவு மொத்த வருவாய் மாறவில்லை.

குறிப்பு

## எடுத்துக்காட்டு 19

2004 டிசம்பர் 31 ராமகிருஷ்ணன் கம்பெனி லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் அனுமதித்தது ஒன்று ரூ.10 மதிப்புள்ள 30,000 சாதாரணப் பங்குகள் | 3,00,000 | வில்லங்கமில்லா கட்டடங்கள் | 50,000 |
| வெளியிட்டது ஒன்று ரூ.10 மதிப்புள்ள 20000 பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டது | 2,00,000 | பொறி மற்றும் இயந்திரங்கள் | 1,00,000 |
| | | சரக்கு | 28,000 |
| பலவகை கடனீந்தோர் | 22,500 | பலவகைக் கடனாளிகள் | 16,000 |
| வங்கி அதிகப்பற்று | 37,500 | வங்கியில் ரொக்கம் | 500 |
| | | துவக்கச் செலவுகள் | 3,000 |
| | | இலாப நட்டக் கணக்கு பற்று இருப்பு | 62,500 |
| | 2,60,000 | | 2,60,000 |

பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றி முதல் குறைப்புத்திட்டம் ஒன்று இக்கம்பெனிக்காகத் தயாரிக்கப்பட்டது.

1. பங்குகள் அதே அளவு எண்ணுள்ள பங்கு ஒன்று ரூ.5 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாகக் குறைக்கப்பட்டது.
2. அவ்வாறு கிடைக்கும் பணத்தைப் பின்வரும் காரியங்களுக்குப் பயன்படுத்தலாம்.

குறிப்பு

a. இலாப ட்டக் கணக்கு பற்று இருப்பை நீக்குவதற்கு
b. துவக்கச் செலவுகள் கணக்கை நீக்குவதற்கு
c. இயந்திரம் கணக்கில் ரூ.30,000ஐ நீக்க அதை சந்தைவிலைக்கு கொண்டு வருவதற்கு
d. சரக்கின் மதிப்பில் ரூ.2,500ஐ நீக்குவதற்கு
e. ஐயக்கடன் காப்பாக ரூ.2,000ஐ ஏற்படுவதற்கு (தீர்வு மதிப்பிற்கு கடனாளிகள் கணக்கைக் கொண்டு வருவதற்கு)

குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து திருத்தி அமைக்கப்பட்ட இருப்புநிலைக்குறிப்பை தயாரிக்கவும்.

விடை

ராமகிருஷ்ணன் கம்பெனி லிமிடெட் குறிப்பேடு

| | | | ப. ரூ. | வ. ரூ. |
|---|---|---|---|---|
| 2004 டிச 31 | சாதாரணப் பங்குமுதல் ரூ.10 பங்குகள் க/கு ப. | | 2,00,000 | |
| | முதல் குறைப்பு க/கு | | | 1,00,000 |
| | சாதாரணப் பங்குமுதல் க/கு (ரூ.5 பங்குகள் க/கு) | | | 1,00,000 |
| | (பங்கு ஒன்றுக்கு ரூ.5 வீதம் பங்கு மீது முதல் தொகை குறைக்கப்பட்டு நீதிமன்றம் அதை உறுதி செய்தது) | | | |
| | முதல் குறைப்பு க/கு ப. | | 1,00,000 | |
| | இலாப நட்டக் க/கு | | | 62,500 |
| | துவக்கச் செலவுகள் க/கு | | | 3,000 |
| | பொறி மற்றும் இயந்திரம் க/கு | | | 30,000 |
| | சரக்கு க/கு | | | 2,500 |
| | வராக்கடன் காப்பு க/கு | | | 2,000 |
| | (சிறப்புத் தீர்மானத்தின்படி முதல் குறைப்புத் தொகை பலவகைச் சொத்துக்களை நீக்கவதற்கு பயன்படுத்தப்படுகிறது) | | | |

குறிப்பு

## ராமகிருஷ்ணன்ன கம்பெனி லிமிடெட் இருப்புநிலைக்குறிப்பு

2005 ஜனவரி 1ல் உள்ளபடி

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் அனுமதித்தது ஒன்று ரூ.5 மதிப்புள்ள 30,000 சாதாரணப் பங்குகள் | 1,50,000 | நிலைத்த சொத்துக்கள்: வில்லங்கமில்ல கட்டிடங்கள் | 50,000 |
| வெளியிட்டது மற்றும் ஒப்பியது ஒன்று ரூ.5 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட 20000 பங்குகள் | 1,00,000 | பொறி மற்றும் இயந்திரம் 1,00,000 கழி : மறுஅமைப்புத் திட்டத்தில் குறைக்கப்பட்டது 30,000 | 70,000 |
| பிணையில்லாக் கடன்கள் வங்கி அதிகப்பற்று | 37,500 | | |
| நடப்புப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்குகள் பலவகைக் கடனீந்தோர் | 22,500 | நடப்புச் சொத்துக்கள் கடன்கள் முன் பணங்கள் சரக்கு 28,000 கழி : மறுஅமைப்புத் திட்டத்தின் கீழ் குறைக்கப்பட்டது 2,500 | 25,500 |
| | | கடனாளிகள் 16,000 கழி:வராக்கடன் ஒதுக்கு 2,000 | 14,000 |
| | | வங்கியில் ரொக்கம் | 500 |
| | 1,60,000 | | 1,60,000 |

### எடுத்துக்காட்டு 20

2004 டிசம்பர் 31 அன்று நாகமலை கம்பெனி லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் | | நன்மதிப்பு | 1,00,000 |
| அனுமதித்தது மற்றும் | | பொறித் தொகுதி | 16,00,000 |
| வெளியிட்டது ஒன்று | | சரக்கு | 1,00,000 |
| ரூ.100 மதிப்புள்ள 6% | | கடனாளிகள் | 1,50,000 |
| 10,000 குவிவு | | ரொக்கம் | 60,000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 10,00,000 | | |

| | | | |
|---|---|---|---|
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 13000 சாதரரணப்பங்குகள் | 13,00,000 | இலாப நட்ட க/கு (குறைவு) | 9,30,000 |
| முழுவதும் செலுத்தப்பட்டது | | | |
| 5% கடன் பத்திரங்கள் | 5,00,000 | | |
| பலவகை கடனீந்தோர் | 1,40,000 | | |
| | 29,40,000 | | 29,40,000 |

1. முன்னரிமை இலாப ஈவு கடந்த இரண்டு ஆண்டுகளாக செலுத்தப்படாமல் இருந்தது. மறு அமைப்பு நேரத்தில் அது செலுத்தப்பட வேண்டும். மேலும் எதிர்காலத்தில் ஈட்டப்படும் சராசரி இலாபம் ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய ரூ.1,20,000 ஆக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.
2. பொறித் தொகுதியின் மதிப்பு ரூ.15,00,000 இவை உடனடியாக விற்கப்பட்டால் அவற்றின் மதிப்பு ரூ.10,00,000
3. சரக்கின் மதிப்பு ஏட்டு மதிப்பேயாகும்.
4. கடனாளிகள் ரூ.30,000 சந்தேகத்திற்குரியது அவற்றில் 33½% கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் தொகையை மறு அமைப்புச் செய்ய விரும்புகிறார்கள். புதிய வகைப் பங்குகளை உருவாக்காமல் பங்கு முதலை சரிகட்டுவதற்குத் தேவையான ஒரு முதல் குறைப்புத் திட்டத்தை உருவாக்கும்படி கோரப்படுகிறீர்கள்.

உன்னுடைய திட்டப்படி இருப்புநிலை குறிப்பையும் மாற்றி அமைக்கலாம்.

குறிப்பு

விடை

**I. நீக்கப்பட வேண்டிய தொகை**

1. 2 ஆண்டுகளுக்கு இலாப ஈவு

$10000 \times \frac{6}{100} \times 2$ வருடம்

1,20,000

2. இலாப நட்டக் கணக்கு குறைவு (இருப்பநிலைக்குறிப்புப்படி)

9,30,000

3. பொறித் தொகுதி தேய்மானம் நாம் அவற்றை விற்கப் போவதில்லை எனவே அவற்றின் மதிப்பு ரூ.10,00,000 என்பதை மறந்து விடுக. எனவே, தற்போதைய மதிப்பிற்கும் (ரூ.15,00,000) ஏட்டு மதிப்பிற்கும் ரூ.16,00,000 உள்ள வித்தியாசம் ரூ.1,00,000ஐ நீக்க வேண்டும்.

1,00,000

4. வராக்கடன்

ஐயக்கடன் ரூ.30,000 அதில் 33½% வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது ரூ.10,000

20,000

5. நன்மதிப்பு

1,00,000      12,70,000

**II. முன்னுரிமைப் பங்குதாரர்கள்**

கணக்கைப் படித்துப் பார்த்தோமானால் போதுமான அளவு இலாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம். எனவே மறு அமைப்புத் திட்டமானது முன்னுரிமைப் பங்குதாரர்களை அதிக அளவில் பாதிக்கக் கூடாது.

முன்னுரிமை பங்கு முதலின் ஆரம்பத் தொகையாகிள ரூ.10,00,000ஐ அதனின் பங்காகக் குறைக்கலாம்.

$$= 10,00,000 \times \frac{4}{5} = 8,00,000$$

இதிலிருந்து நாம் ரூ.2,00,000 பெறுகிறோம்.

அவர்கள் அதே அளவு வருவாய் பெற வேண்டும் என நாம் விரும்பினால் (அவர்கள்) ரூ.60,000 பெறுகிறார்கள் அதாவது 10,00,000—ன் மீது 6% இலாப ஈவு விகிதத்தை உயர்த்த வேண்டும்.

$$\frac{60,000}{8,00,000} \times 100 = 7\frac{1}{2}\%$$

கம்பெனி கலைக்கப்படும் பொழுது தங்களின் பங்கு முதலை திரும்பப் பெறுவதில் முன்னுரிமைப் பங்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதால் அதிக அளவு இழப்பை ஏற்கும்படி அவர்களைக் கோர முடியாது.

**III. சாதாரணப் பங்குதாரர்கள்**

பெறும் அளவு நட்டத்தையும் இழப்பையும் சாதாரணப் பங்குதாரர்களே ஏற்க வேண்டும். ஆனால் எதிர்காலத்தில் அவர்களால் நல்ல இலாப ஈவைப் பெற முடியும்.

மொத்தம் தேவைப்படும் தொகை ரூ.12,70,000 இவற்றில் ரூ.2,00,000ஐ முன்னுரிமை பங்குதாரர்களிடமிருந்து பெற முடியும். மீதமுள்ள தொகையை சாதாரணப் பங்குதாரர்களிடமிருந்தே பெற வேண்டும்.

| | |
|---|---|
| அதாவது | 12,70,000 |
| கழி | 2,00,000 |
| தேவைப்படுவது | 10,70,000 |

இதற்காக சாதாரணப் பங்குகளின் முக மதிப்பை பின்வரும் அளவிற்கு குறைக்க வேண்டும்.

| | |
|---|---|
| மூல மதிப்பு | 13,00,000 |
| கழி : தேவைப்பட்டுள்ள தொகை | 10,70,000 |
| திட்டமிடப்பட்டுள்ள மதிப்பு | 2,30,000 |

குறிப்பு

முகமதிப்பு = ரூ.2,30,000 ÷ 13,000 பங்குகள்

எனவே, நாம் பங்கு ஒன்றின் முகமதிப்பு ரூ.15 எனக் குறைத்துவிடலாம்.

| | |
|---|---|
| மூல மதிப்பு | 13,00,000 |
| கழி : திட்டமிடப்பட்ட மதிப்பு | |
| ரூ.15 x 13,000 பங்குகள் | 1,95,000 |
| கிடைக்கும் தொகை | 11,05,000 |

குறிப்பு : ஏதாவது வித்தியாசமிருப்பின் அதை முதல்காப்பாகக் கருதலாம்.

## IV. இலாப ஈவு

முன்னுரிமை இலாப ஈவு பாக்கியாகிக ரூ.1,20,000 செலுத்த நமக்கு பணம் தேவைப்படுகிறது. ஒன்று ரூ.15 மதிப்புள்ள 8,000 சாதாரணப் பங்குகளை வெளியிட்டு இப்பணத்தை பெறலாம். மேலும் நடைமுறை முதலும் நமக்கு தேவைப்படுகிறது. எனவே நாம் அனுமதித்த முதலை உயர்த்தி தேவையான அளவு பங்குகளை வெளியிடலாம்.

### நாகமலை கம்பெனி லிமிடெட்டின் குறிப்பேடு

| | | | ப. ரூ. | வ. ரூ. |
|---|---|---|---|---|
| 2004 டிச 31 | 6% முன்னரிமை பங்குமுதல் க/கு ப.<br>7½% முன்னுரிமை பங்கு முதல் க/கு<br>முதல் குறைப்பு க/கு<br>(முன்னுரிமை பங்குமுதல் ரூ.200000 குறைக்கப்பட்டதற்காக) | | 10,00,000 | <br><br>8,00,000<br>2,00,000 |
| | சாதாரணப் பங்கு முதல் (ரூ.100 பங்குகள்) க/கு ப.<br>சாதாரணப் பங்கு முதல் (ரூ.15 பங்குகள்) க/கு<br>முதல் குறைப்பு க/கு<br>(சாதாரணப் பங்கு முதல் ஒன்றிற்கு ரூ.85 குறைக்கப்பட்டதற்காக) | | 13,00,000 | <br><br>1,95,000<br>11,05,000 |
| | முதல் குறைப்பு க/கு ப.<br>தொழில் நன்மதிப்பு க/கு<br>இலாப நட்ட க/கு<br>குவிவு முன்னுரிமை இலாப ஈவு பாக்கி க/கு<br>பொறித் தொகுதி க/கு<br>கடனாளிகள் க/கு<br>முதல் க/கு<br>(முதல் குறைப்புத் தொகை சில பெயரளவுச் சொத்துக்களை நீக்கவும் சில சொத்துக்களின் மதிப்பை குறைக்கவும் பயன்படுத்தப்பட்டது) | | 13,05,000 | <br>1,00,000<br>9,30,000<br>1,20,000<br>1,00,000<br>20,000<br>35,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப.<br>சாதாரணப் பங்குமுதல் க/கு<br>(8,000 பங்குகள் வெளியிடப் பெற்றது) | | 1,20,000 | 1,20,000 |
| | முன்னுரிமை இலாப ஈவுக் க/கு ப.<br>வங்கி க/கு<br>(இலாப ஈவு செலுத்தப்பட்டது) | | 1,20,000 | 1,20,000 |

## நாகமலை கம்பெனி லிமிடெட் இருப்புநிலைக்குறிப்பு
## 2005 ஜனவரி 1 அன்று

| | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|
| பங்குமுதல்<br>அனுமதித்தது ஒன்று ரூ.15 மதிப்புள்ள சாதாரணப் பங்குகள் ஒன்று ரூ.100 மதிப்புள்ள 7½% பங்குகள் வெளியிட்டதும் ஒப்பியதும் | | நிலைத்த சொத்துக்கள்<br>பொறித்த தொகுதி<br>கழி : மறுஅமைப்புத் திட்டத்தில் நீக்கப்பட்டது | 16,00,000<br><br>1,00,000 | <br><br>15,00,000 |
| ஒன்று ரூ.15 மதிப்புள்ள 21,000 சாதாரணப் பங்குகள் | 3,15,000 | நடப்புச் சொத்துக்கள்<br>கடன் மற்றும் முன்பணம் சரக்கு | | 1,00,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 7½% முன்னுரிமைப் பங்குகள் காப்புகளும் | 8,00,000 | கடனாளிகள்<br>கழி மறுஅமைப்புத் திட்டத்தில் நீக்கப்பட்டது | 1,50,000 | |
| உபரியும் முதல் காப்பு | 35,000 | ரொக்கம் | 20,000 | 1,30,000 |
| நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்குகள்: | | | | 80,000 |
| பலவகை கடனீந்தோர் | 1,40,000 | | | |
| | 17,90,000 | | | 17,90,000 |

சொத்துக்களும் பொறுப்புகளுக்கும் உள்ள வித்தியாசம் முதல்காப்பாகக் கருதப்படுகிறது.

### எடுத்துக்காட்டு 21

2004 ஜீன் அன்று கதிர் கம்பெனி லிமிடெட்டின் இருப்பநிலைக் குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| அனுமதித்தது முதல் 6% குவிவு முன்னுரிமை பங்குகள் 1000 ஒன்று ரூ.100 மதிப்புடையது | | தொழில நன்மதிப்பு | 25,000 |
| | | நிலம் மற்றும் | 65,000 |
| | | கட்டடம் | 55,000 |
| | | பொறி மற்றும் | 6,500 |
| ஒன்று ரூ.100 2000 சாதாரணப் பங்குகள் | 1,00,000 | இயந்திரம் | 52,600 |
| | | மோட்டார் வண்டி | |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 2000 சாதாரணப் பங்குகள் | | சரக்கு | 52,600 |
| | 2,00,000 | கடனாளிகள் | 9,200 |
| | 3,00,000 | ரொக்கம் | 150 |

குறிப்பு

**VI. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**1). சரியா அல்லது தவறா:**

அ). "முறையான திருத்தம்" மற்றும் "முதல் குறைப்பு" என்ற வார்த்தைகள் ஒரே பொருளுடையவை.

ஆ). பங்கு முதலை உயர்த்த நீதி மன்ற அனுமதி தேவையில்லை.

இ). உபரி முதலை திரும்ப அளிப்பது முதல் குறைப்பு அல்ல.

ஈ). அகச் சீரமைப்பிற்கு நிறுமக் கலைப்பு அவசியம்.

உ). பங்கு முனைமக் கணக்கு இருப்பு முதல் குறைப்புக் கணக்கிற்கு மாற்றப்படும்.

ஊ). அகச் சீரமைப்பில் ஒரு நிறுமம் வரிக்கான நோக்குடன் குவிந்த நட்டங்களை வருங் காலத்திற்கு எடுத்துச் செல்ல லாம்.

| | | | |
|---|---|---|---|
| வெளியிடப்பட்ட மற்றும் ஒப்பிய முதல் ஒன்று ரூ.100 மதிப்புள்ள 6% குவிவு முன்னுரிமை பங்குகள் 800 | 1,40,000<br>80,000 | இலாப நட்டக் கணக்கு | 73,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புள்ள 1200 சாதாரணப் பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டது | 1,20,000 | | |
| 5% கடன் பத்திரங்கள் | 50,000 | | |
| வங்கி அதிகப்பற்று | 27,350 | | |
| பற்பல கடனீந்தோர் | 9,100 | | |
| | 2,86,450 | | 2,86,450 |

கடந்த 4 ஆண்டுகளாக முன்னுரிமை பங்கு இலாப ஈவு செலுத்தப்படவில்லை. கம்பெனியின் பொறி மிகவும் பழையதாக இருப்பது கம்பெனியின் முன்னேற்றத்தைப் பாதித்தது. புதிய முதல் தொகை கிடைக்கப் பெற்று அத்துடன் புதிய பொறியும் வாங்கப்பட்டால் நல்ல இலாபத்தை ஈட்டலாம் என இயக்குநர்கள் கருதினர். எனவே அவர்கள் பின்வரும் முதல் குறைப்புத் திட்டத்தை வகுத்தனர்.

1. இருக்கக்கூடிய சாதாரணப் பங்கு ஒவ்வொன்றின் மதிப்பும் ரூ.5 ஆகக் குறைக்கப்பட வேண்டும்.
2. முன்னுரிமை பங்கு இலாப ஈவு பாக்கி முழுவதும் தீர்க்கப்பட வேண்டும்.
3. ஒவ்வொரு முன்னுரிமை பங்கின் மதிப்பும் ரூ.75 ஆக குறைக்கப்பட வேண்டும். பின்னர் மதிப்பு குறைக்கப்பட்ட ஒவ்வொரு முன்னுரிமை பங்கிற்கும் மாற்றாக ஒன்று ரூ.50 மதிப்புள்ள 12% குவிவு முன்னுரிமை பங்கு ஒன்றும் மற்றும் ஒன்று ரூ.5 மதிப்புள்ள சாதாரணப் பங்குகள் 5ம் அளிக்கப்பட வேண்டும்.
4. மேலே உள்ள நடவடிக்கையாகச் செயல்படுத்துவதினால் கிடைக்கும் வரவு இருப்பை பின்வருபவற்றை நீடிக்கப் பயன்படுத்தப்பட வேண்டும் (1) இலாப நட்டக்கணக்கு பற்று இருப்பை நீக்கி (2) பொறி மற்றும் இயந்திரத்தின் மதிப்பை ரூ.19,000 மாகக் குறைக்க வேண்டும். (3) மீதமுள்ளதை தொழில் நன்மதிப்பை நீக்க வேண்டும்.

குறிப்பு

5. வெளியிடப்படாத முன்னுரிமை மற்றும் சாதாரணப் பங்குகள் ஒன்றின் மதிப்பு முறையே 50 மற்றும் ரூ.5 என பிரிக்கப்பட வேண்டும். அத்துடன் அனுமதித்த முதல் மீண்டும் ரூ.3,00,000 மாகவே இருக்க வேண்டும். அதற்குத் தேவையான அளவு சாதாரணப் பங்குகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும்.

6. எல்லாக் கடன் பத்திரங்களும் 10 சதவீதத்தில் மீட்புச் செய்யப்பட வேண்டும். அதே நேரத்தில் விரும்பும் பத்திரதாரர்கள் தங்களது கடன் பத்திரங்களுக்குப் பதிலாக 15% கடன் பத்திரங்களை முகமதிப்பில் பெற்றுக் கொள்ளலாம். புதிய கடன் பத்திரங்கள் கம்பெனியின் நிலம் மற்றும் கட்டடங்களைப் பிணையமாகக் கொண்டுள்ளது.

மேற்கூறிய முதல் குறைப்புத் திட்டத்திற்கு நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு 40,000 புதிய சாதாரணப் பங்குகள் முகமதிப்பில் வெளியிடப்பட்டது. புதிய பங்குகளின் தொகை முழுவதும் விண்ணப்பத்துடன் செலுத்தப்பட வேண்டும். 5% ஒப்புறுதி கழிவில் பங்குகள் முழுவதும் ஒப்புறுதி செய்யப்பட்டு முழுவதும் எடுத்துக் கொள்ளப்பட்டது. கடன் பத்திரதாரர்களில் 20,000 கடன் பத்திரங்களை வைத்துள்ளர்கள். தங்களது கடன் பத்திரங்களை மாற்றிக் கொண்டனர்.

வங்கி அதிகப்பற்று தீர்க்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக கம்பெனி செய்த செலவு ரூ.1,350 இதில் ஒப்புறுதி கழிவு சேரவில்லை.

முதல் குறைப்புத் திட்டத்தைப் பதிவு செய்யத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளையும் மேற்சொன்ன திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் கம்பெனியின் இருப்பநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

2). சரியான பதிலைத் தேர்வு செய்க.

1). அகச் சீரமைப்புத் திட்டத்தில் குவிந்த நட்டத்தை வழக்கொழிக்கும் கணக்கு
அ). பங்கு முதல் க/கு
ஆ). முதல் குறைப்பு க/கு
இ). எதுவும் இல்லை

2). ஒதுக்கப்படாத உறுதியற்ற பொறுப்பு, நிகழவில்லை எனில் வரவு வைக்கப்படுவது
அ). முதல் குறைப்பு க/கு
ஆ). இலாப நட்ட க/கு
இ). எதுவும் இல்லை

3). குவிந்த நட்டங்களை வழக்கொழித்த பின்பு முதல் குறைப்பு கணக்கில் மீதம் உள்ள இருப்பு மாற்றப்படும் கணக்கு.
அ). பொதுக்காப்பு
ஆ). பங்கு முதல்
இ). மூலதனக் காப்பு

4). முதல் குறைப்பிற்கான அனுமதியைப் பெறவேண்டியது
அ). மத்திய அரசிடம்
ஆ). நீதிமன்றத்திடம்
இ). எதுவும் இல்லை

குறிப்பு

**விடை:**

## கதிர் கம்பெனி லிமிடெட் குறிப்பேடு

| | | | ப. ரூ. | வ. ரூ. |
|---|---|---|---|---|
| 2004 ஜீன் 30 | ரூ.100சாதாரணப் பங்குமுதல் க/கு ப.<br>(ரூ.5) சாதாரணப் பங்குமுதல் க/கு<br>முதல் குறைப்பு க/கு<br>(சாதாரணப் பங்குமுதல் குறைக்கப்பட்டது) | | 1,20,000 | <br>6,000<br>1,14,000 |
| | ரூ.100 (6%) குவிவு முன்னுரிமை பங்குமுதல் க/கு ப.<br>ரூ.50 (12%) குவிவு முன்னுரிமை பங்குமுதல் க/கு<br>ரூ.5சாதாரணப் பங்குமுதல் க/கு<br>முதல் குறைப்பு க/கு<br>(முன்னுரிமை பங்குமுதல் குறைக்கப்பட்டு மீண்டும் குவிவ முன்னுரிமை மற்றும் சாதாரணப் பங்குகளாக மாற்றப்படுகிறது) | | 80,000 | <br>40,000<br>20,000<br>20,000 |
| | முதல் குறைப்பு க/கு ப.<br>இலாப நட்ட க/கு<br>பொறி மற்றும் இயந்திரம் க/கு<br>தொழில் நன்மதிப்பு க/கு<br>(சொத்துக்கள் நீக்கப்பட்டது) | | 1,34,000 | <br>73,000<br>36,000<br>25,000 |
| | வங்கி க/கு ப.<br>சாதாரணப் பங்குமுதல் க/கு<br>(8,000 பங்குகள் வெளியிடப் பெற்றது) | | 1,20,000 | <br>1,20,000 |
| | முன்னுரிமை இலாப ஈவுக் க/கு ப.<br>வங்கி க/கு<br>(இலாப ஈவு செலுத்தப்பட்டது) | | 1,20,000 | <br>1,20,000 |

## கதிர் கம்பெனி லிமிடெட் இருப்புநிலைக்குறிப்பு (குறைக்கப்பட்டது)

### 1 ஜீலை அன்று

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| பங்குமுதல் அனுமதித்தது ஒன்றுக்கு ரூ.50 மதிப்புள்ள குவிவு முன்னுரிமை பங்குகள் 1,200 | 60,000 | | நிலைச் சொத்துக்கள் நிலம் மற்றும் கட்டிடம் | | 65,000 |
| ஒன்றுக்கு ரூ.5 மதிப்புள்ள சாதாரணப் பங்குகள் 4,80,000 | 2,40,000 | 3,00,000 | பொறி மற்றும் இயந்திரம் | 55,000 | |
| | | | கழி: முதல் குறைப்பு திட்டத்தில் நீக்கப்பட்டது | 36,000 | 19,000 |
| | | | மோட்டார் வண்டி | | 6,500 |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| வெளியிடப்பட்டது: | | நடப்புச் சொத்துக்கள் கடன்கள் மற்றும் முன்பணம் | | |
| ஒன்று ரூ.5 மதிப்புள்ள 12% குவிவு முன்னுரிமை பங்குகள் 800 | 40,000 | | | |
| ஒன்று ரூ.5 மதிப்புள்ள 45,200 | | சரக்கு | | 52,600 |
| பிணைக் கடன்கள் | 2,26,000 | கடனாளிகள் | | 9,200 |
| 15% கடன் பத்திரங்கள் | 21,000 | கையில் ரொக்கம் | | 150 |
| நடப்பு பொறுப்புகளும் ஒதுக்குகளும் | | பலவகைச் செலவுகள் | | 1,29,800 |
| பலவகை கடனீந்தோர் | 9,100 | மறுஅமைப்புச் செலவுகள் | 1,350 | |
| | | கடன் பத்திர மீட்வு | 10,000 | |
| | | முனைமம் | 2,500 | 13,850 |
| | 2,96,100 | | | 2,96,100 |

| | | |
|---|---|---|
| சாதாரணப் பங்குகள்: | | ரூ. |
| மூலப்பொருட்கள் | | |
| மூல முன்னுரிமை பங்குதாரர்கள் 800 பேருக்கு | | 1,200 |
| பங்கு ஒன்றுக்கு 5 வீதம் அளிக்கப்பட்ட சாதாரணப் பங்குகள் | | 4,000 |
| புதிதாக வெளியிடப்பட்ட பங்குகள் | | 40,000 |
| மொத்தம் | | 45,200 |
| வங்கியில் ரொக்கம் | | |
| பங்கு ஒன்றுக்க ரூ.5 வீதம் 40,000 | | 2,00,000 |
| சாதாரணப் பங்குகளுக்கு பெறப்பட்ட தொகை | | |
| கழி : வங்கி அதிகப்பற்று செலுத்தப்பட்டது | 27,350 | |
| கடன் பத்திரங்கள் (30,000 + 5%) | 31,500 | |
| ஒப்புறுதிக் கழிவு (2,00,000 x 5%) | 10,000 | |
| மறுஅமைப்பு | 1,350 | 70,200 |
| இருப்பு | | 1,29,800 |

## 6.6. கலைப்பு (Liquidation)

ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியானது கம்பெனிகள் சட்டம், 1956ன் படி உருவாக்கப்படுகிறது. இக்கம்பெனி சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுவதால் இச்சட்டத்தில் மூலமாகவே கம்பெனியின் தொழிலை நிறுத்த முடியும். கலைப்பு என்பது சட்டப்படி ஒரு கம்பெனி கலைக்கப்படுதலையும் அக்கம்பெனியின் சட்ட வாழ்வு முடிக்கப்படுதலையும் குறிக்கிறது.

கம்பெனி, கம்பெனிகள் சட்டத்தின்படி கலைக்கப்படுகிறது. இச்சட்டத்தின்படி கீழ்க்கண்ட முறைகளில் கலைக்கப்படலாம்.

1. தொழிலை முடித்து வைத்தல் மூலமாக அல்லது
2. தொழிலை முடிக்காமல் பிரிவு 391ன் படி கம்பெனிகளை ஒன்றிணைத்தல் மற்றும் புனரமைத்தல் மூலமாக அல்லது
3. பிரிவு 560ன் படி கம்பெனிகளின் பதிவாளர் ஒரு தொழில் நடத்தாத கம்பெனியின் பெயரை பதிவேட்டிலிருந்து நீக்குதல் மூலமாக

கம்பெனியின் தொழில் நிறுத்தப்பட்டவுடன் அக்கம்பெனி கலைக்கப்பட்டது எனப்படும். ஒரு நீதிமன்ற ஆணையின் மூலமாக ஒரு கம்பெனி கலைக்கப்பட்ட போது அக்கலைப்பினைக் கட்டாய கலைப்பு என்கிறோம். கம்பெனியின் உறுப்பினர்கள் (தாங்களாகவோ அல்லது கடனீந்தவர்களுடன் சேர்ந்தோ) அக்கம்பெனியை கலைக்கும் போது அக்கலைப்பினை அதன் தன்மைக்கேற்ப உறுப்பினர்களின் தன்னிச்சைக் கலைப்பு என அழைக்கப்படுகிறது. கம்பெனியானது நீதிமன்றத்தின் மேற்பார்வையிலும் கலைக்கப்படலாம்.

இவ்வாறு ஒரு கம்பெனியின் கீழ்க்கண்டவைகள் நடைபெறுகின்றன.

1. கம்பெனியின் உரிமைகளும் சொத்துக்களும் கணக்கிடப்படுகின்றன.
2. கம்பெனியின் சொத்துக்களனைத்தும் (தேவைப்படும் போது பங்கின் மீது அழைக்கப்படாத மூலதனம் என்று அழைக்கப்படும்) விற்றுப் பணமாக்கப்படும்.
3. கடனீந்தோர்களின் கோரிக்கைகளனைத்தும் செலுத்தப்படும்.
4. முடிவாக உள்ள உபரித் தொகையை நிறுவனத்திற்கு அப்பாலுள்ள பொறுப்புகளனைத்தும் தீர்த்த பின்னுள்ள தொகையை) அக்கம்பெனியின் பங்குதாரர்களுக்கு அவர்களுடைய உரிமைகளுக்கேற்ப பகிர்ந்து அளிக்கப்படும்.

மேற்கண்டவைகள் அனைத்தும் நிறைவேற்றுவதாக நியமிக்கப்படும் ஒரு நபரை கலைப்பாளர் என்கிறோம்.

**கலைப்பாளர்களின் கடமைகள்**

அ) கம்பெனியின் பல்வேறு சொத்துக்கள் மற்றும் ஆஸ்திகளை விற்றுப் பெற வேண்டிய தொகையினைப் பெறுதல்

ஆ) கம்பெனிகள் சட்டத்தின்படி பொறுப்புள்ள அனைத்தையும் தீர்த்தல்

இ) பல்வேறு பங்குதாரர்களின் உரிமைகளை நிறைவேற்றுதல்

கலைப்பின் போது நடைபெறும் ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் கலைப்பாளர் தன்னுடைய செலுத்துதல் மற்றும் பெறுதல்களைப் பதிவதற்காக முறையான ஏடுகளை வைத்திருக்க வேண்டியுள்ளது. இந்த விவரங்களை ஒரு கட்டாயக் கலைப்பின் போது நீதிமன்றத்திற்கும் ஒரு தன்னிச்சையான கலைப்பின் போது கம்பெனிக்கும் அக்கலைப்பாளர் கணக்குகளின் முடிவு அறிக்கையைத் தீர்வில் பெறப்பட்ட மொத்தத் தொகை மற்றும் அத்தொகையினைக் கடனீந்தோர்கள் மற்றும் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்து அளித்தது பற்றிய விவரங்கள் அடங்கியிருக்கும். இந்த அறிக்கையினைக் கலைப்பாளரின் முடிவுக் கணக்கறிக்கை என்கிறோம்.

சொத்துக்களை விற்றுப் பெற்ற பணத்தைப் பகிர்ந்தளிக்கும் போது கலைப்பாளர் கீழ்க்கண்ட முறையினைக் கடைபிடிக்க வேண்டும்.

1. பிணைக் கடனீந்தோர்களுக்கு அவர்களுடைய பிணையங்களிலிருந்து கிடைக்கும் தொகையினைச் செலுத்துதல்
2. கலைப்பாளரின் ஊதியத்துடன் சேர்த்து கலைப்புச் செலவுகள் அனைத்தையும் செலுத்துதல் (கலைப்பாளரின் ஊதியத்தில் விற்கப்பட்ட சொத்துக்களின் மீதான ஒரு கமிஷன் தொகையும் பிணையில்லாக் கடனீந்தோர்களுக்கு செலுத்தப்பட்ட தொகையின் மீதான கமிஷன் தொகையும் அடங்கியுள்ளது)
3. முன்னுரிமைக் கடனீந்தோர்களுக்கு செலுத்துதல்
4. கடனீட்டுப் பத்திரங்களுக்குச் செலுத்துதல்
5. பிணையில்லாக் கடனீந்தோர்களுக்குச் செலுத்துதல்

குறிப்பு

6. கம்பெனியில் உபரித் தொகை ஏதுமிருந்தால் அத்தொகையினை வழங்கக் கடமைப்பட்டோர் (Contributaries) களுக்கு பங்குதாரர்களுக்கு அவர்களுடைய உரிமைகளுக்கேற்ப பகிர்ந்தளிக்க வேண்டும்.

கடனீந்தோர்களுக்குச் செலுத்துவதற்காக அழைக்கப் பெறாத மூலதனத் தொகையையும் கலைப்பாளர் அழைப்பு செய்யலாம்.

பகுதி செலுத்தப்பட்ட பங்கினை வாங்கியவரிடமிருந்து பங்கின் மீதான மீதத் தொகை பெறாவிட்டால் ஓராண்டு காலம் வரையிலும் அப்பங்குகளை விற்றவர் அப்பங்குகளின் மீது செலுத்தப்படாத அழைப்புகளை செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார். ஆகவே வழங்கக் கடமைப்பட்டோர் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகிறார்கள்.

பட்டியல் எ யிலுள்ள வழங்கக் கடமைப்பட்டோர்கள்

பட்டியல் பி யிலுள்ள வழங்கக் கடமைப்பட்டோர்கள்

பட்டியல் எ—யிலுள்ள வழங்கக் கடமைப்பட்டோர்கள் கம்பெனியின் கலைப்பு தொடங்கிய தேதியிலிருந்து ஓராண்டிற்குள் உறுப்பினர் தன்மையை இழந்தவர்களாவர். பட்டியல் பி—யிலுள்ள கம்பெனியின் தற்போதைய உறுப்பினர்களாவர்.

**உதாரணம்**

பிணையில்லாக் கடனீந்தோர்களுக்கு ரூ.2000 செலுத்த வேண்டிய ஒரு கலைப்பாளரிடம் ரூ.1,122 உள்ளது. சொத்துக்களை விற்ற பணத்திலிருந்து ஒரு கலைப்பாளர் தன்னுடைய ஊதியத்தைப் பெற்றவுடன் பிணையில்லாக் கடனீந்தோர்களுக்கு அளித்த தொகையில் 2% கமிஷன் பெறுகிறார்.

**விடை**

கலைப்பாளர் ரூபாய் 100ஐச் செலுத்தும் போது ரூ.2யைப் பெறுவதால் மொத்தமாகச் செலவு ரூ.102 ஆகிறது. எனவே ரூ.1,122ன்

குறிப்பு

ரூ.22 (2/102 + 1,222)ஐ கலைப்பாளர் பெற்றுக் கொண்டு ரூ.1,100 பிணையில்லாக் கடனீந்தோர்களுக்கு அளிக்கிறார்.

கலைப்பாளரின் முடிவுக் கணக்கறிக்கை தயாரித்தலுக்கு அதிக விவரங்கள் வேண்டியதில்லை. ஆனால் மாணவர்கள் கீழ்க்கண்டவற்றைக் கவனிக்க வேண்டும்.

ஒருதன்னிச்சையான கலைப்பில் கலைப்பாளரின் ஊதியம் அக்கம்பெனியின் பொதுக்கூட்டத்தில் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு கட்டாயக் கலைப்பில் இந்த ஊதியம் நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படுகிறது. கலைப்பாளரின் ஊதியத்தைக் கணக்கிடும் போது பிணையில்லாக் கடனீந்தோரில் (கணக்கில் ஏதும் சொல்லப்படாத போது) முன்னுரிமைக் கடனீந்தோர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

1. இரட்டைப்பதிவு முறையைப் பயன்படுத்த வேண்டியதில்லை.
2. அங்கீகரிக்கப்பட்ட முறையின்படி இனங்கள் வரிசைப்படுத்தப்பட வேண்டும்.
3. பல்வகையான பங்குதாரர்களின் உரிமைகளை முக்கியமாக உபரித் தொகை இருக்கும் போது சரியான முறையில் கவனிக்க வேண்டும்.

குறிப்பு :

முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு கலைப்பின் போது முன்னுரிமை அளிக்கப்படும். அவர்களுடைய கோரிக்கைகள் முழுவதையும் சாதாரணப் பங்குதாரர்களுக்கு செலுத்துதலுக்கு முன்பே செலுத்திவிட வேண்டும். கம்பெனியின் நடைமுறை விதிகளின் உபரித் தொகையில் முன்னுரிமை பங்குதாரர்களுக்கு உரிடை வழங்கப்படாத போது அந்த உபரி பொதுவாக சாதாரணப் பங்குதாரர்களுக்கே சொந்தமானதாகும்.

4. சொத்துக்களை விற்ற பணத்தின் மீது ஒரு கமிஷன் தொகையும் பிணையில்லாக் கடனீந்தோர்கள் மற்றும் முன்னுரிமை

கடனீந்தோர்களுக்கு செலுத்திய தொகையில் ஒரு கமிஷன் தொகையும் கலைப்பாளரின் ஊதியம் ஆகும்.

எடுத்துக்காட்டு 22

நாதன் அன் கோ லிமிடெட் என்னும் கம்பெனி தன் இருப்பநிலை குறிப்பில் செலுத்தப்பட்ட முதலாக ரூ.1,00,000 மும் நட்டமாக ரூ.1,11,500 இருந்தது. இக்கம்பெனி 2004 மார்ச் 31ம் தேதி தன்னிச்சையாகக் கலைக்கப்பட்டது. இத்தேதியிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு இருந்தன.

இயந்திரம் சரக்கிருப்பு மற்றும் கடனாளிகள் ஏட்டு மதிப்பிற்கு விற்கப்பட்டவை ரூ.79,000 ரொக்கம் ரூ.1,000, கடனீந்தோர்கள் ரூ.40,000, 12% கடனீட்டு பத்திரங்கள் (சொத்துக்களை பொதுப்பிணையாகக் கொண்டுள்ளது) ரூ.50,000. அக்கடனீட்டுப் பத்திரங்கள் மீதான 6 மாதங்களுக்கான வட்டி ரூ.3,000 செலுத்த வேண்டியுள்ளது கடன் பத்திரதாரர்களுக்கு சேர வேண்டிய தொகை 30.9.2004 அன்று செலுத்தப்பட்டது. இதே தேதியில் கடனீந்தோர்களுக்கு ஒரு முடிவான இறுதி ஈவுத் தொகை செலுத்தப்பட்டது. முன்னுரிமை கடனீந்தோர்கள் ரூ.5,000 மீதமுள்ளவைகள் பிணையில்லாக் கடனீந்தோர்களாவர் கலைப்பிற்கான செலவு ரூ.500 ஆகிறது. சொத்துக்களை விற்ற பணத்தின் மீது 3 சதவீதமும், பிணையில்லாக் கடனீந்தோர்களுக்கு (முன்னுரிமை கடனீந்தோர்கள் உட்பட) செலுத்தப்பட்ட தொகையில் 2 சதவீதமும் ஊதியமாக கலைப்பாளருக்கு கொடுக்கப்பட வேண்டும்.

கலைப்பாளரின் முடிவுக் கணக்கறிக்கையை தயாரிக்கவும்

விடை:

## நாதன் அன்கோ லிமிடெட் (தன்னிச்சையான கலைப்பு)

## கலைப்பாளரின் முடிவுக் கணக்கறிக்கை

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் விற்பது இயந்திரம்.... கடனாளிகள்..... | 79,000 | கலைப்புச் செலவுகள் | 500 |
| ரொக்க இருப்பு | 1,000 | (79,000 மீது 3% *ரூ.23,657 மீது 2% ஆகவே ரூ.2,370 + ரூ.473) | |
| | | முன்னுரிமைக் கடனீந்தோர்கள் | 5,000 |
| | | (சொத்துக்களை பொது அடமானமாகக் கொண்டுள்ள கடன் பத்திரதாரர்கள்) தொகை ரூ.50,000 + வட்டி 3,000 | 53,000 |
| | | பிணையில்லாக் கடனீந்தோர்கள் ஒரு ரூபாயில் 53 பைசா ஆகவே ரூ.35,000 த்தில் 53% | 18,657 |
| | 80,000 | | 80,000 |

*தொகை ஏதும் செலுத்தும் முன்பு கலைப்பாளரிடம் ரூ.80,000 இருந்தது. கலைப்பாளர் செலுத்தி கலைப்புச் செலவு ரூ.500 அவர் தன்னுடைய கமிஷன் ரூ.2,370 (79,000 x 3/100 ஐ) எடுத்துக் கொள்வார். கடனீந்தோர்களுக்கு அவர் செலுத்த வேண்டிய தொகை ரூ.55,870 (ரூ.500 + ரூ.2,370 + ரூ.53,000) யை ரூ.80,000 த்திலிருந்து செலுத்திய பின் உள்ள தொகை ரூ.24,130 முன்னரிமை கடனீந்தோர்கள் மற்றும் பிணையில்லாக் கடனீந்தோர்களுக்கு தொகை செலுத்துமுன் கலைப்பாளரின் கமிஷன் செலுத்தப்பட வேண்டியிருப்பதால் இக்கமிஷனை 2/102 x 24,130 = ரூ.473 என்ற முறையில் கணக்கிட வேண்டும்.

குறிப்பு

**VII. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**1). சரியா அல்லது தவறா:**

அ). பட்டியல் "ஏ" குறிப்பிட்டு அடமானம் வைக்கப்படாத சொத்துக்களின் பட்டியல்.

ஆ). முன்னுரிமைக் கடனீந்தோரைச் சேர்ந்தது பட்டியல்படி

இ). கலைப்பாளர் இறுதிக் கணக்குகளுக்கு தெரிவிப்பது பற்றாக்குறை உபரிக் கணக்கு.

ஈ). திவாலான நிறுமம் மட்டுமே கலைக்கப்பட வேண்டும் என்ற தேவையில்லை.

**2). கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). தற்போதைய பங்குதாரர்களை ......... பங்களிப்பாளர்கள் என்பர்.

ஆ). கலைப்பாளர் இறுதி அறிக்கை என்பது ......... கணக்கைப் போன்றது.

இ). கலைப்பாளர் செலுத்தும் செலுத்தல்கள் வரிசையில் முதல் இனம்......

ஈ). கலைப்பாளர் செலத்தும் செலுத்தல்களின் வரிசையில் கடைசியாகச் செலுத்தும் செலுத்தல்கள் வரிசையில் கடைசியாகச் செலுத்தப்படுவது.........

இக்கமிஷனைக் கழித்த பின் (ரூ.24,150 — ரூ.473) உள்ள ரூ.23,657ல் ரூ.50,000த்தை முன்னுரிமை கடனீந்தோர்களுக்கும், மீதித் தொகை ரூ.18,657 = ரூ.23,657 — ரூ.5000 பிணையில்லாக் கடனீந்தோர்களுக்கு அளிக்கப்பட்டது. ரூ.23,657—ன் மீது 2% வீதம் கமிஷன் கணக்கிட்ட போது கமிஷன் தொகை ரூ.437 ஆகும்.

குறிப்பு : பிணையில்லாக் கடனீந்தோர்களாகிய ரூ.35,000 (ரூ.40,000 – 5,000) ஐ முழுவதுமாக செலுத்த முடியாதபடியால் பங்குதாரர்களுக்குத் தொகை கொடுக்க முடியாது.

எடுத்துக்காட்டு 23

கீழ்க்கண்ட விவரங்கள் தன்னிச்சையாகக் கலைக்கப்படும் ஒரு வரையறுக்கப்பட்ட கம்பெனிக்குரியவையாகும். கலைப்பாளருக்கு சொத்துக்களை விற்றுப் பெற்ற பணத்தின் 2 சதவீதமும், பிணையில்லாக் கடனீந்தோருக்கு (முன்னுரிமைக் கடனாளிகள் தவிர) செலுத்தப்பட்டப் பணத்தின் மீது 2 சதவீதமும் ஊதியமாக வழங்கப்பட வேண்டும்.

| | ரூ |
|---|---|
| முன்னுரிமை கடனீந்தோர் | 20,000 |
| பிணையில்லாக் கடனீந்தோர் | 64,000 |
| கடன் பத்திரங்கள் | 20,000 |
| சொத்துக்கள் விற்கப்பட்ட விபரம்: | |
| நிலமும் சட்டங்களும் | 40,000 |
| பொறி | 37,300 |
| மனைத் துணைப் பொருட்கள் | 2,000 |

கலைப்புச் செலவு ரூ.2,000 செலுத்தப்பட்டது. கலைப்பாளரின் முடிவுக் கணக்கறிக்கையை தயாரிக்கவும்.

விடை

**கலைப்பாளரின் ஊதியத்தைக் கணக்கிடல்**

| | | |
|---|---|---|
| சொத்துக்களை விற்றுப் பெற்ற தொகை | | 79,300 |
| கழி: கலைப்பாளர் ஊதியம் $\frac{2}{10}$ x79,300 | 1,586 | |
| கலைப்புச் செலவு | 2,000 | |
| கடன் பத்திரங்கள் | 20,000 | |
| முன்னுரிமைக் கடனீந்தோர் | 20,000 | 43,586 |
| கழி : பிணையில்லாக் கடனீந்தோருக்குச் செலுத்தப்படும் | | |
| தொகை மீதான கலைப்பாளர் கமிஷன் $\frac{2}{102}$ x35,714 | | 700 |
| பிணையில்லாக் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டிய தொகை | | 35,014 |

**கலைப்பாளரின் முடிவு கணக்கறிக்கை**

| பெற்றது | ரூ. | செலுத்தியது | ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்களை விற்ற தொகை | | கலைப்பாளர் ஊதியம்: | |
| நிலமும் கட்டமும் | 40,000 | 79,300ல் 2% 1586 | |
| பொறி | 37,300 | 35,014 2% 700 | 2,286 |
| மனைத்துணைப் பொருள் | 2,000 | கலைப்புச் செலவுகள் | 2,000 |
| | | கடன் பத்திரங்கள் | 20,000 |
| | | கடனீந்தோர் : | |
| | | முன்னுரிமைக் | |
| | | கடனீந்தோர் 20,000 | |
| | | பிணையில்லாக் | |
| | | கடனீந்தோர் 35,014 | 55,014 |
| | 79,300 | | 79,300 |

## 6.7 அருஞ்சொற்கள்:

**பங்கு:**

மூலதனம் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் ஒவ்வொரு பிரிவும் ஒரு பங்காகும்.

**வட்டியில்லா விலை:**

இதில் விற்பனையாளர் தான் வைத்திருந்த காலத்திற்கான வட்டியை விலையில் சேர்க்காமல் சொல்லும் விலை.

**இலாபநட்ட பகிர்வு கணக்கு:**

ஈட்டிய லாபத்தை பல்வேறு வகைகளுக்கு ஒதுக்குவதற்காக நிறுமம் தயாரிக்கும் கணக்கு.

**கொள்முதல் மறுபயன்:**

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை எடுத்துக் கொண்டமைக்காக வாங்கும் நிறுவனம் விற்கும் நிறுவனத்திற்கு கொடுக்கும் விலை.

**முதல் குறைப்பு கணக்கு:**

அகச்சீரமைப்பின் போது, பங்குதாரர்கள், கடன்பத்திரதாரர்கள் மற்றும் கடனீந்தோர்கள் தியாகத்தால் உருவாக்கப்படும் கணக்கு.

**பற்றாக்குறை/உபரி கணக்கு:**

இருப்பு நிலை அறிக்கை வெளிப்படுத்தும் பற்றாக்குறை அல்லது உபரிக்கான காரணத்தை அறிய உதவும் கணக்கு.

## 6.8. தொகுத்தறிவோம்

நீண்ட ஆயுள், தனித்தன்மை, பேரளவு மூலதனம் மற்றும் வரையறு பொறுப்பு ஆகிய காரணங்களினால், பிற வியாபார அமைப்புகளை விட கூட்டு பங்கு நிறுமம் தனித்து விளங்கி, இன்று பேரளவு உற்பத்திக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குகின்றது. பல்வேறு வகை பங்குகளாக, இதன் மூலதனம் பிரிக்கப்பட்டு, பல்வேறு தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களால் வாங்கப்பட்டு, பேரளவு

மூலதனம் திரட்டப்படுகின்றது. பங்கு வெளியிடுதல், பங்கு முதல் செலுத்தாதவர்கள் பங்குகளை பறிமுதல் செய்தல் போன்றவைகளும் இதன் தனி அம்சமாகும். குறிப்பிட்ட சூழ்நிலையில் முன்னுரிமை பங்குகளை விதிக்குட்பட்டு மீட்க இயலும். பணத்தேவையின் போதும், வாக்குரிமை பாதிக்கப்படாமல், நிதித் தேவையை பூர்த்தி செய்ய எண்ணும்பொழுதும், கடன் பத்திரங்கள் பல வகைகளில் வெளியிடப்பட்டு, அதற்கு தகுந்தவாறு மீட்கப்படும். நிறுமத்தின் முதற் கணக்குகள் நிறுமச் சட்டப்படி தயாரிக்கப்பட வேண்டும். போட்டிகளை தவிர்க்கும் பொருட்டும், சீரமைப்புக்கும் நோக்கத்தோடும் நிறுமங்கள், ஈர்ப்பு, புற சீரமைப்பு, ஒருங்கிணைப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. நிறுமத்தை கலைக்காமல் ஏற்பட்ட நட்டத்தை சரிக்கட்டி, எதிர்காலத்தில் நிறுமத்தை நல்வழியில் நடத்தி அகச் சீரமைப்பு உதவுகின்றது. தவிர்க்க முடியாத பட்சத்தில் நிறுமத்தை கலைக்கவும், நிறுமச் சட்டத்தில் விதிகள் உள்ளது. எந்த கடனீந்தோர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் பாதிப்பும், பாரபட்சமும் இன்றி நிறுமத்தை முடிவுக்குக் கொண்டுவர கலைப்பாளர் மூலம் கணக்குகள் தயாரிக்க நிறுமச்சட்டம் வழிவகை செய்கின்றது.

## 6.9 உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

**1). கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). முன்னுரிமை பங்குகள் ஆ). குறைந்த அளவு பங்கெடுப்பு

இ). பங்குகள் ஒப்படைவு ஈ) காப்பு மற்றும் உபரி

உ). சாதாரண பங்குகள்

**2). சரியான பதில்**

1. நற்பெயர் 2. 5% 3. போனஸ் பங்குகள் வெளியீட்டு

4. பங்கு பறிமுதல் க/கு 5. மூலதனக் காப்பு 6. ரூ.4

## II. உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

1. சரியா, தவறா:

அ). தவறு ஆ). தவறு இ). சரி ஈ). தவறு

உ). தவறு

2. காலியிடத்தை நிரப்புக.

அ). முழுமையாக செலுத்தப்படாதது.

ஆ). இலாபம் / முனைமம் இ). போனஸ் பங்குகள்

3. சரியான பதில்: 1. மூலதன மீட்பு காப்பு 2. பொதுக்காப்பு

## III. உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கடன் 2. கடனீந்தோர் 3. 4. கலைப்பு 5. மீட்பு

**சரியா தவறா:**

1. சரி 2. தவறு 3. தவறு 4. சரி 5. சரி

## IV. உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

**1. சரியா தவறா:**

அ). தவறு, ஆ). சரி இ). தவறு ஈ). தவறு உ). சரி

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). 10% ஆ). 11% இ). இடைக்கால

ஈ). சொத்து பிற செலவுகள் உ). செலுத்தப்பட்ட மூலதனம் கழித்து

## V. உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

1. சரியா தவறா:

1. தவறு    2. தவறு    3. சரி    4. தவறு    5. தவறு
6. சரி    7. சரி    8. தவறு    9. சரி    10. தவறு

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. பல்வேறு நபர்களுக்கு    2. ஈர்ப்பு    3. தீர்வு க/கு
4. சாதாரண பங்குகள் க/கு    5. ஒருங்கிணைத்தல்
6. ஈர்ப்பு    7. கொள்முதல் மறுபயன்
8. நற்பெயர் க/கு அல்லது மூலதன காப்பு க/கு
9. சாதாரண பங்குதாரர்கள் க/கு

## VI. உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

1. சரியா தவறா

அ). தவறு    ஆ). சரி    இ). தவறு    ஈ). தவறு    உ). சரி
ஊ). சரி

சரியான பதில்

1. முதல் குறைப்பு க/கு    2. எதுவுமில்லை
3. மூலதனகாப்பு    4. நீதிமன்றத்திடம்

## VII. உங்கள் முன்னேற்றத்தை அறிய உதவும் வினாக்களுக்கான விடைகள்

1. சரியா தவறா

அ). சரி    ஆ). சரி    இ). தவறு    ஈ). சரி

கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ). பட்டியல் ஆ). ரொக்கம் இ). சட்டச் செலவு

ஈ). சாதாரண பங்குதாரர்கள்

## 6.10. மாதிரி வினாக்கள்

1). பிளமிங் கோலிட் 5,000 சாதாரண பங்குகள் ஒன்று ரூ. 10வீதம், முனைமம் ரூ. 2.50 வீதம் வெளியிட்டுள்ளது. விண்ணப்பத்தில் ரூ.2.00, ஒதுக்கலில் ரூ.4.50 (முனைமம் சேர்த்து) முதல் அழைப்பு ரூ .4.00, இறுதி அழைப்பு ரூ.2.00 வீதம் செலுத்தப்பட வேண்டும்.

7,500 பங்குகளுக்கு விண்ணப்பம் பெறப்பட்டு, விகிதாச்சார முறைப்பு 5,000 பங்குகள் ஒதுக்கல் செய்யப்பட்டு, அதிகமாக பெறப்பட்ட விண்ணப்ப பணம், ஒதுக்கீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது.

ரஹீம் என்பவர், 100 பங்குகள் ஒதுக்கப்பட்டவர், ஒதுக்கீடு பணமும், முதல் அழைப்பு பணமும் தரவில்லை. எனவே முதல் அழைப்பு முடிவில் அவரது பங்கு பறிமுதல் செய்யப்பட்டது.

ஹக் என்பவர், 150 பங்குகள் வைத்திருப்பவர் முதல் மற்றும் இறுதி அழைப்பு பணம் தராத காரணத்தால், அவரது பங்கும் இறுதியில் பறிமுதல் செய்யப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளில் 200 பங்குகள் முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளாக, ஹரீம் என்பவருக்காக, ஒன்று ரூ.8வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. அனைத்து நடவடிக்கைகளுக்கு (ரொக்கம் உட்பட) குறிப்பேட்டு பதிவுகளை தருக.

(விடை: மூலதன காப்பிற்கு மாற்றப்பட்டது ரூ.300)

2). ரூ.100 முழுமையாக செலுத்தப்பட்ட ரூ.8,000 முன்னுரிமைப் பங்குகளை நிறுமம் வைத்துள்ளது. 2001, டிசம்பர் 30 அன்று 7 சதவீதம் முனைமத்தில் பங்குகளை மீட்க நிறுமம் முடிவெடுத்தது. நிறுமத்திற்கு போதுமான இலாபம் வைத்துள்ளது. எனினும் நீர்த்த நிதிக்காக பின்வரும் வெளியீடுகளைச் செய்தது.

அ). ரூ.100 மதிப்புள்ள 3,000 கடன் பத்திரங்கள் ஒவ்வொன்றும் ரூ.106க்கு வெளியிடப்பட்டது.

ஆ). ரூ.100 மதிப்புள்ள 2,000 சாதாரணப் பங்குகளை ரூ.111க்கு வெளியிடப்பட்டது.

வெளியிடப்பட்ட பங்குகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்குரிய பணம் பெறப்பட்டது. பங்குகள் முறையாக மீட்கப்பட்டன. தேவையான குறிப்புகளைத் தருக. மேலும் இலாபம் பற்றி நீங்கள் புரிந்து கொண்டதை எழுதுக.

3). 1985, ஜனவரி 1ல், ஒரு லிமிடெட் கம்பெனி ரூ.10 மதிப்புள்ள 14 சதவீதம், 10,000 கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டது. இது மூன்று ஆண்டுகளுக்குப்பின் திருப்பிச் செலுத்த வேண்டியது. மீட்புக்காக ஒரு மூழ்கும் நிதி உருவாக்க முடிவு செய்தனர். ஆண்டுத் தொகை பட்டியலின்படி ரூ.1 ஆண்டுத் தொகைக்கு 10 சதவீத வட்டியில் ரூ.3.3100 வட்டி கிடைக்கும். முதலீட்டின் மீது வருமானம் 10 சதவீதம். முதலீடுகள் பத்து ரூபாயின் மடங்காக இருக்க வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு தேவையான கணக்கைத் தயாரிக்க.

(விடை: ஆண்டு பகிர்வு ரூ.30, 210, பொதுகாப்பு ரூ.1,00,000)

4). கேரளா இண்டஸ்ரீஸ் லிமிடெட் பின்வரும் மீட்புக் கடன் பத்திரங்களை வெளியிட்டன. குறிப்பேட்டில் தேவையான பதிவுகளை எழுதுக.

அ). ரூ.1000 மதிப்புள்ள 500, 10 சதவீதம் கடன் பத்திரங்கள் ஒவ்வொன்றும் முகமதிப்பில் வெளியிடப்பட்டு முகமதிப்பில் மீட்கக் கூடியது.

ஆ). ரூ.200 மதிப்புள்ள 1000, 10 சதவீதம் கடன் பத்திரங்கள் ஒவ்வொன்றும் முகமதிப்பில் வெளியிடப்பட்டு, 5 சதவீதம் முனைமத்தில் மீட்க கூடியது.

இ). ரூ.500 மதிப்புள்ள 700, 7 சதவீதம் கடன் பத்திரங்கள் 10 சதவீதம் கழிவில் வெளியிடப்பட்டு 10 சதவீதம் முனைமத்தில் மீட்கக் கூடியது.

ஈ). ரூ.100 மதிப்புள்ள 7000, 9 சதவீதம் கடன் பத்திரங்கள் ஒவ்வொன்றும் 5 சதவீதம் முனைமத்தில் வெளியிடப்பட்டு முகமதிப்பில் மீட்கக் கூடியது.

5). ஏ லிமிடெட் அனுமதிக்கப்பட்ட முதலாக ரூ.50,00,000 ரூ.10 வீதம் 5,00,000 பங்குகளாகக் கொண்டுள்ளது. இது 1,00,000 பங்குகளை 5 சதவீத முனைமத்தில் வெளியிட்டது.

எல்லா பங்குகளும் பின்வருமாறு ஒப்புறுதி செய்யப்பட்டது.

வினோத் 60,000 பங்குகள் (நிறுவன ஒப்புறுதி 10,000 பங்குகள்)

ரத்தன் 30,000 பங்குகள் (நிறுவன ஒப்புறுதி 4000 பங்குகள்)

விஜய் 10,000 பங்குகள் (நிறுவன ஒப்புறுதி 2000 பங்குகள்)

மொத்த வெளியீட்டில் நிறுவன ஒப்புறுதியைச் சேர்த்து 90,000 பங்குகள் மட்டுமே பங்கெடுக்கப்பட்டன. குறியிடப்பட்ட விண்ணப்பங்கள், நிறுவன ஒப்புறுதி தவிர்த்து பின்வருமாறு:

வினோத் 32,000 பங்குகள்

ரத்தன் 20,000 பங்குகள்

விஜய் 8,000 பங்குகள்

எல்லா ஒப்புறுதியாளர்களுக்கு நிறுவன ஒப்புறுதியின் பயன்களை அளித்து ஒவ்வொரு ஒப்புறுதியாளரின் பொறுப்பைக் கணக்கிடுக.

(விடை: நிறுவன ஒப்புறுதியைத் தவிர்த்து நிகர பொறுப்பு

வினோத் — 9334 பங்குகள்; ரத்தன்—666 பங்குகள்; விஜய்—இல்லை)

6. சக்ஸஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட முதல் ரூ.6,00,000, 3,000, ரூ.100 மதிப்புள்ள 6% முன்னுரிமை பங்குகளையும், ரூ.10 மதிப்புள்ள 30,000 சாதாரணப் பங்குகளையும் கொண்டது.

**31.3.1998 அன்று சோதனைப் பட்டியல்**

| விபரம் | பற்று | வரவு |
|---|---|---|
| முதலீடுகள் | 50,000 | |
| கொள்முதல் | 4,90,500 | |
| கட்டுமானச் செலவு | 18,000 | |
| வினியோகச் செலவு | 35,400 | |
| சரக்கு (1.4.97) | 1,45,200 | |
| சம்பளம் மற்றும் கூலி | 52,000 | |
| வாடகை மற்றும் கட்டணம் | 17,500 | |
| சத்தம் | 8,200 | |
| இறுதி பங்காதாயம் (1996—1997) | 12,000 | |
| முன்னுரிமை பங்காதாயம் (30.9.97 – 6 மாத | 6,000 | |
| காலம்) | 2,000 | |
| கடன் பத்திரங்கள் தள்ளுபடி | 1,000 | |
| தோற்றுவிக்கும் செலவு | 41,500 | |
| பெறவேண்டிய உண்டியல் | 7,800 | |
| வங்கி மேல்வரைப்பற்று வட்டி | 3,750 | |
| கடன்பத்திர வட்டி (30.9.97 வரை—6 மாதம்) | 50,100 | 87,850 |
| பற்பல கடனாளிகள் மற்றும் கடனீந்தோர்கள் | 3,50,000 | |
| வில்லங்கமற்ற சொத்து | 35,000 | |

| | | |
|---|---|---|
| தேய்மானம் ரூ.15,000 கழித்து அறைகலன் | 15,000 | 87,850 |
| 6% முன்னுரிமை பங்குமுதல் | | |
| சாதாரணப் பங்குமுதல் | | |
| 5% வில்லங்கமற்ற சொத்து மீது அடமானம் | | 2,00,000 |
| கொண்ட கடன் பத்திரங்கள் | | 2,00,000 |
| 1998 ஆண்டுக்கு முன்கூட்டி செலுத்திய வரி | | |
| பங்காதாயம் மற்றும் வட்டி | | 1,50,000 |
| இலாப நட்ட கணக்கு | 1,50,000 | |
| விற்பனை (நிகரம்) | | 4,250 |
| மேல்வரைப் பற்றுக்கு அடமானம் உள்ள சரக்கு | | 28,500 |
| மற்றும் | | 6,70,350 |
| பெறவேண்டிய உண்டியல் | | |
| தொழில் நுட்ப வரவு | | |
| | | 1,50,000 |
| | 14,90,950 | 14,90,950 |

31.3.1998 நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு தயாரிக்க மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்க.

அ). இறுதி சரக்கு மதிப்பு ரூ.1,42,500

ஆ). வாடிக்கையாளர் வினியோகிக்க வேண்டிய சரக்கு கொள்முதலில் சேர்ந்தது ரூ.5,000.

இ). மின்சார பொருத்துக்களுக்கு கொடுத்த கூலி ரூ.2,000 சம்பளம் மற்றும் கூலியுடன் சேர்ந்தது. மின்சார பொறுத்துக்கள் அறைகலன் கீழ் பதியப்பட்டன.

ஈ). பெற வேண்டிய உண்டியலில் ரூ.1,500 மதிப்புள்ள அவமதிக்கப்பட்ட உண்டியல் சேர்ந்துள்ளது. ரூ.1,500ல் 50 சதவீதம் பெற வாய்ப்புள்ளது.

உ). மார்ச் 1998க்குப் பின் முதிரும் உண்டியல் ரூ.2,000 தள்ளுபடி செய்யப்பட்டது.

ஊ). அறைகலன் மீது தேய்மானம் 20 சதவீதம்

எ). டிசம்பரில் தள்ளுபடி வழக்கொழிக்கப்பட்டது ரூ.1,000

ஏ). சாதாரணப் பங்கின் மீது அறிவிக்கப்பட்ட பங்காதாயம் 5 சதவீதம்.

ஐ). வரி ஒதுக்கீடு ரூ.8,000

ஒ). தொழில்நுட்பம் 15 ஆண்டுகளில் வழக்கொழிக்க வேண்டும்.

ஓ). இயக்குனர் ஊதியம் ரூ.10,000 சம்பளம் மற்றும் கூலியுடன் இணைந்துள்ளது.

ஔ). முந்தைய வருடங்களின் தொகைகள் நிலை கொள்ளத் தேவையில்லை.

31.3.1998 நாளோடு முடியும் ஆண்டிற்கான சக்ஸஸ் லிமிடெட்டின் நிலைக் குறிப்பை நிறுமச் சட்டம் 1956ன் அட்டவணை VI பகுதி I மற்றும் IIன் படி தயாரிக்கவும்.

7.

| பொறுப்புகள் | தேவா | அனு | சொத்துக்கள் | தேவா | அனு |
|---|---|---|---|---|---|
| பங்கு முதல் ரூ.100 வீதம் சாதாரண பங்கு | 5,00,000 | 3,00,000 | நிலம் & கட்டிடம் | 4,65,000 | 2,55,000 |
| ரூ.100 வீதம் 6% முன்னுரிமை பங்குகள் | 5,00,000 | 2,50,000 | பொறி & எந்திரம் | 5,60,000 | 3,58,000 |
| 5% கடன் பத்திரங்கள் | | 40,000 | அறைகலன்கள் | 79,000 | 34,000 |
| பொதுக்காப்பு | 2,00,000 | 70,000 | சரக்கு | 81,500 | 52,000 |
| லாப & நட்டம் | 1,15,000 | 35,000 | கடனாளிகள் | 56,000 | 24,600 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 3,50,000 | வங்கி | 87,000 | 22,500 |
| | | | ரொக்கம் | 6,400 | 3,900 |
| | | | தோற்றுவிக்கும் செலவுகள் | 55,100 | |
| | 13,90,000 | 7,50,000 | | 13,90,000 | 7,50,000 |

ஒப்பந்தச் சரத்துக்கள் பின்வருமாறு:

அ). கொள்முதல் மறுபயன் பின்வருவனவற்றை அடக்கியது

1). இரு நிறுமங்களின் பொறுப்புகளை எடுத்துக் கொள்வது

2). 5 சதவீத முனைமத்தில் அனு லிமிடெட் கடன் பத்திரங்களை தேவா மற்றும் அனு லிமிடெட் 7 சதவீதம் கடன் பத்திரங்கள் கொடுத்து தீர்ப்பது.

3). இரண்டு நிறுமங்களிலும் உள்ள ஒவ்வொரு முன்னுரிமைப் பங்குகளுக்கும் ரூ.10 மதிப்புள்ள 10 சாதாரண பங்குகளை ரூ.2 முனைம வீதத்தில் வெளியிடுவது.

4). தேவா லிமிடெட்டின் ஒவ்வொரு சாதாரண பங்குக்கும், ரூ.22 ரொக்கமாகவும், ரூ.10 மதிப்புள்ள 10 சாதாரண பங்குகளை ரூ.2 முனைமத்தில் தர வேண்டும். அனு லிமிடெட்டின் ஒவ்வொரு சாதாரண பங்குகளுக்கு ரூ.80 வீதம் ரொக்கமாகவும், ரூ.10 மதிப்புள்ள 5 சாதாரணப் பங்குகள் ரூ.2 முனைமத்தில் தர வேண்டும்.

ஆ). எல்லா சொத்துக்களையும் பொறுப்புக்களையும் புத்தக மதிப்பில் எடுத்துக் கொள்வது. ஆனால் கடனாளிகள் மீது மட்டும் 5 சதவீத ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இ). நடைமுறை மூலதனத்திற்காகவும், மற்றும் கொள்முதல் மறுபயனுக்காகவும் தேவா அனு லிமிடெட் 30,000, ரூ.10 மதிப்புள்ள சாதாரணப் பங்குகளை பங்கு ஒன்றிற்கு ரூ.2.50 முனைமத்தில் வெளியிட முடிவு செய்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

1). தேவா லிமிடெட் ஏட்டில் கணக்குகளை முடிக்க குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதுக.

8. 31.12.2002 அன்று “Z” லிமிடெட் மற்றும் “A” லிமிடெட் இருப்பு நிலைக் குறிப்புக்கள் பின்வருமாறு:

| பொறுப்புகள் | தேவா | அனு | சொத்துக்கள் | தேவா | அனு |
|---|---|---|---|---|---|
| பங்குமுதல் (ரூ.10) | 2,00,000 | 4,00,000 | பற்பல சொத்து (நற்பெயர் இல்லை) | 3,10,000 | 6,00,000 |
| காப்பு & உபரி | 40,000 | 1,00,000 | | | |
| 7% கடன்பத்திரங்கள் (ரூ.100) | 1,00,000 | — | 'A' லிமி. கடன் | 30,000 | |
| 'Z' லிமி. கடன் | | 30,000 | முதலீடு 'A' லிமி பங்கு | 50,000 | |
| பிற பொறுப்புக்கள் | 50,000 | 70,000 | | | |
| | 3,90,000 | 6,00,000 | | 3,90,000 | 6,00,000 |

பின்வரும் நிபந்தனைகளை 'A' லிமிடெட் 'Z' லிமிடெட்டை எடுத்துக் கொண்டது.

அ). 'A' லிமிடெட் பங்கு ஒன்று ரூ.11 வீதம் தேவையான எண்ணிக்கையில் பங்குகளை வெளியிட்டது மற்றும் 'Z' லிமி. பங்குதாரர்களுக்கு பங்கு ஒன்றிற்கு 50 பைசா வீதம் ரொக்கம் செலுத்தியது.

ஆ). 7 சதவீதம் கடன்பத்திரங்களை 8 சதவீதம் முனைத்தில் செலுத்த தேவையான 8 சதவீதம் கடன் பத்திரங்களை ரூ.90 வீதம், "A" லிமிடெட் வெளியிட்டது.

இ). இரண்டு நிறும ஏடுகளிலும் குறிப்பேட்டு பதிவுகளையும் மற்றும் முக்கிய கணக்குகளையும் தயாரிக்க. ஈர்ப்பிற்கும் பின் 'A' லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பை வரைக.

(விடை : கொள்முதல் மறுபயன் ரூ.2,83,000, தீர்வு நட்டம் ரூ.15,000, 'A' லிமிடெட் இருப்புநிலைக்குறிப்பு மொத்தம் ரூ.2,83,000).

ராகு லிமி. சந்திரா லிமி. 30.06.2002 அன்று ஈர்க்க முடிவெடுத்தது. அந்நாளில் இருப்பநிலைக்குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | நிலைச்சொத்துக்கள் | |
| 50,000 சாதாரணப் | | கட்டிடம் | 3,00,000 |
| பங்குகள் ரூ.10 வீதம் | 5,00,000 | அறைகலன் | 25,000 |
| பொதுகாப்பு | 2,50,000 | இயந்திரம் | 5,55,000 |
| இலாபநட்டக்கணக்கு | 1,20,000 | நடப்புச் சொத்துக்கள் | |
| 5% கடன்பத்திரங்கள் | 1,00,000 | சரக்கு | 70,000 |
| கடனீந்தோர்கள் | 30,000 | கடனாளிகள் | 35,000 |
| | | வங்கி ரொக்கம் | 10,000 |
| | | ரொக்கம் | 5,000 |
| | 10,00,000 | | 10,00,000 |

சந்திரா லிமிடெட்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை எடுத்துக்கொள்ள ராகு லிமிடெட்டின் ஒப்புக் கொண்டது. நடப்புச் சொத்துக்களை புத்தக மதிப்பில் எடுத்தது. ஆனால் நிலைச்சொத்துக்கள் பின்வருமாறு மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| கட்டிடம் | ரூ.3,50,000 |
| அறைகலன் | ரூ. 15,000 |
| இயந்திரம் | ரூ.6,00,000 |

நற்பெயருக்கு செலுத்த வேண்டியது ரூ.50,000 கொள்முதல் மறுபயன் ரூ.2,55,000ம் ரொக்கமாகவும், மீதித் தொகை ராகு லிமிடெட்டில் முழுமையாகச் செலுத்தப்பட்ட சாதாரணப் பங்குகளாக செலுத்தப்பட்டது. 1996 ஜுலை 1ந் தேதி ஈர்ப்பு முறையாக நடைபெற்றது. ஈர்ப்புச் செலவு ரூ.5,000த்தை சந்திரா லிமிடெட் செலுத்தியது.

சந்திரா லிமிடெட்டின் புத்தகத்தை முடிக்க தேவையான குறிப்பேட்டு பதிவுகளைக் காண்பிக்க.

(விடை: கொள்முதல் மறுபயன் ரூ.11,05,000; தீர்வு இலாபம் ரூ.1,30,000)

10. சேது லிமிடெட்டின் பங்கு முதல் பின்வருமாறு:

அ). 10,000 6% முன்னுரிமைப் பங்குகள் ரூ.100 வீதம், மற்றும்

ஆ). 50,000 சாதாரணப் பங்குகள் ரூ.10 வீதம்

பங்குகள் முழுமையாகச் செலுத்தப்பட்டன. தோற்றுவிக்கும் செலவுகள் ரூ.20,000 போக 1996ம் ஆண்டு முடிவில் குவிந்த நட்டங்கள் ரூ.3,50,000. மேலும், ரூ.14,00,000 புத்தக மதிப்புள்ள நிரந்தரச் சொத்துக்கள் ரூ.4,00,000 வரை அதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அதிக மதிப்பீடு மற்றும் தோற்றுவிக்கும் செலவுகள், நட்டங்கள் ஆகியவற்றை நீக்குவதற்காக முதலைக் குறைக்கும் திட்டத்தை நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இந்தத் திட்டத்தின் கீழ் 6% முன்னுரிமைப் பங்குகள் ரூ.60 வீதம் 7½% முன்னுரிமைப் பங்குகளாக மாற்றப்பட வேண்டும். மேலும் மூன்றாண்டுகளாக உள்ள முன்னுரிமைப் பங்காதாய நிலுவை ரத்து செய்ய வேண்டும்.

இந்த திட்டம் நிறைவேற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளை குறிப்பிடுக. (விடை: மொத்த முதல் குறைப்பு ரூ.8,00,000 முதல் குறைப்பு கணக்கு மூலதன காப்புக் கணக்கிற்கு மாற்றுவது ரூ.3,000).

11. பின்வருபவை யுனைடெட் இன்டஸ்ட்ரிஸ் லிமிடெட்டின் 31.12.2000 நாளன்று இருப்பு நிலைக் குறிப்பு.

| பொறுப்புக்கள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட முதல் | | காப்புரிமை | 8,50,000 |
| 10,000 முன்னுரிமைப் | | கட்டிடம் | 1,30,800 |
| பங்கு— கள் ரூ.100 | 10,00,000 | இயந்திரம் | 42,200 |
| வீதம் | | பற்பல கடனாளிகள் | 76,500 |
| 10,000 சாதாரணப் | 10,00,000 | சரக்கு | 55,000 |
| பங்கு— கள் ரூ.100 | | | |
| வீதம் | | தள்ளுபடி | 18,000 |
| 20,00,000 பங்கு | | தோற்றுவிக்கும் | 12,000 |
| வெளியீட்டு ஏற்பு முதல் | 7,50,000 | செலவுகள் | 1,15,000 |
| 7,500 முன்னுரிமைப் | | இலாப நட்ட க/கு | 500 |
| பங்குகள் முழுமையாக | 5,00,000 | கையிருப்பு ரொக்கம் | |
| செலுத்தப்பட்டது. 5000 | 30,000 | | |
| சாதாரணப் பங்குகள் | 20,000 | | |
| முழுமையாக | 13,00,000 | | 13,00,000 |
| செலுத்தப்பட்டது பற்பல | | | |
| கடனீந்தோர்கள் | | | |
| வங்கி மேல்வரைபற்று | | | |

நிறுமம் பெருத்த நட்டம் அடைந்தது. எனவே பின்வரும் சீரமைப்புத் திட்டம் பின்பற்றப்பட்டது.

அ). முன்னுரிமைப் பங்குகள் சம எண்ணிக்கையுள்ள ரூ.50 வீதம் முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளாக்கப்பட்டன.

ஆ). சாதாரணப் பங்குகள் சம எண்ணிக்கையுள்ள ரூ.25 மதிப்புள்ள சாதாரணப் பங்குகளாக்கப்பட்டன.

இ). இதில் பெற்றத் தொகையில் கட்டிடத்தில் ரூ.30,800ம் சரக்கில் ரூ.15,000ம், இயந்திரம் மற்றும் கடனாளிகள் 25 சதவீதமும் வழக்கொழிக்கப்பட்டன. மேலும் பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி, தோற்றுவிக்கும் செலவுகள் மற்றும் இலாப நட்டக் கணக்கு வழக் கொழித்தது போக எஞ்சிய தொகைக்கு காப்புரிமை வழக்கொழிக்கப்பட்டது.

நடவடிக்கைகளுக்கு குறிப்பெழுதி, சீரமைப்பிற்கு பின் உள்ள இருப்பு நிலைக் குறிப்பைத் தயாரிக்க.

(விடை: மொத்த முதல் குறைப்பு ரூ.7,50,000, காப்புரிமை வழக்கொழித்து ரூ.5,35,460 இருப்பு நிலைக் குறிப்பு மொத்தம் ரூ.5,50,000).

12. கலைப்பு ஆணையின்படி லக்கி நிறுமம் 30.6.2002 அன்று கலைக்கப்பட்டது. பின்வரும் விபரங்கள் உள்ளது.

| பொறுப்புக்கள் | ரூ. |
|---|---|
| சாதாரணப் பங்கு முதல் 30,000 பங்குகள் ரூ.10 | 3,00,000 |
| 6% முன்னுரிமைப் பங்கு முதல் 4,500 பங்குகள் ரூ.100 வீதம் | 4,50,000 |
| அழைப்பு நிலுவை (எதிர்பார்க்கப்படும் பெறுதல் ரூ.3,000) | 6,000 |
| 5% முதல் அடமானக் கடன்பத்திரங்கள் மொத்த சொத்தின் மீது அடமானம் கொண்டது | 3,00,000 |
| கடனீந்தோர்கள் — முழுமையான பிணையம் (பி.லிட். பங்குகள் மதிப்பு ரூ.60,000) | 52,500 |
| கடனீந்தோர்—பகுதிப் பிணையம் (காமா லிட். பங்குகள் மதிப்பு ரூ.30,000) | 60,000 |
| முன்னுரிமைக் கடனீந்தோர்கள் | 11,250 |
| பிணையமில்லா கடனீந்தோர்கள் | 4,05,000 |
| வங்கி மேல்வரைப் பற்று (மொத்தச் சொத்தில் இரண்டாம் நிலைப் பிணையம்) | 30,000 |
| கையிருப்பு ரொக்கம் | 3,300 |

| | | |
|---|---|---|
| புத்தகக் கடன்—நல்லவை | 55,500 | |
| ஐயம் (37½% எதிர்பார்ப்பது) | 12,000 | |
| வராக்கடன் | 6,750 | 74,250 |
| சரக்கு (எதிர்பார்க்கும் மதிப்பு ரூ.2,92,000) | | 3,15,000 |
| இயந்திரம் (எதிர்பார்க்கும் மதிப்பு ரூ.80,000) | | 90,000 |
| அறைகலன் (எதிர்பார்க்கும் மதிப்பு ரூ.12,000) | | 18,000 |

கடனீந்தோர்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் தொடர்பான இருப்பு நிலை அறிக்கைத் தயாரிக்க.

(விடை: அ). கடனீந்தோர் பற்றாக்குறை ரூ.2,28,450

ஆ). பங்களிப்பாளர்கள் பற்றாக்குறை ரூ.9,75,450)

13. அன்பு லிட்டில் 31.12.1998 அன்று தன்னார்வக் கலைப்பு ஏற்பட்டது. ஏட்டில் நாளது தேதியில் இருந்த இருப்புக்கள் பின்வருமாறு:

| விபரம் | ரூ. | விபரம் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல்: | | நிலம் ரூ கட்டிடம் | 2,50,000 |
| அங்கீகரிக்கப்பட்டது | | இயந்திரம் | 6,25,000 |
| மற்றும் ஏற்கப்பட்டது | | காப்புரிமை | 1,00,000 |
| 5,000, 6% குவிவு | | சரக்கு | 1,37,500 |
| முன்னுரிமைப் பங்குகள் | | கடனாளிகள் | 2,75,000 |
| ரூ.100 வீதம் | | வங்கி ரொக்கம் | 75,000 |
| முழுமையாக | | இலாப நட்ட க/கு | 3,00,000 |
| செலுத்தப்பட்டது. | 5,00,000 | | |
| 2,500 சாதாரண | | | |
| பங்குகள் ரூ.100 வீதம் | | | |
| 75 செலுத்தப்பட்டது. | 1,87,000 | | |

| | | | |
|---|---|---|---|
| 7,500 பங்குகள் ரூ.100 வீதம் 60 செலுத்தப்பட்டது. | 4,50,000 | | |
| 5% அடமானக் கடன் பத்திரங்கள் | 2,50,000 | | |
| வட்டி நிலுவை | 12,500 | | |
| கடனீந்தோர் | 3,62,500 | | |
| | 17,62,500 | | 17,62,500 |

ரொக்கம் தவிர்த்து சொத்துக்கள் விற்றத் தொகையில் 3 சதவீதம் மற்றும் பிணையில்லாக் கடனீந்தோர் (முன்னுரிமை கடனீந்தோர் தவிர்த்து வினியோகத்தில் 2 சதவீதம்).

முன்னுரிமை கடனீந்தோர் சேர்த்து கடனீந்தோர்கள் ரூ.37,500 மற்றும் நிலம் மற்றும் கட்டிடம் மீதான அடமானக் கடன் ரூ.1,25,000 இரண்டு வருடம் முன்னுரிமை பங்காதாயம் நிலுவையாக உள்ளது. சொத்துக்கள் விற்றது பின்வருமாறு: நிலம் மற்றும் கட்டிடம் ரூ.3,00,000 இயந்திரம் ரூ.5,00,000 காப்புரிமை ரூ.75,000, சரக்கு ரூ.1,50,000.

கடனாளிகள் ரூ.2,00,000, கலைப்புச் செலவு ரூ.27,250, கலைப்பாளர் இறுதிக் கணக்கறிக்கையைத் தயாரிக்க.

(விடை: கலைப்பாளர் ஊதியம் ரூ.40,750, சாதாரணப் பங்குதாரர்களுக்கு 2,500 பங்குகளுக்கு ரூ.15.95 வீதமும் 7500 பங்குகளுக்கு ரூ.0.95 வீதமும் செலுத்த வேண்டும்).

குறிப்பு

# பாடம் 7

# பிடிப்புக் கம்பெனி

## கட்டமைப்பு

7.0. அறிமுகம்

7.1. கற்றல் நோக்கங்கள்

7.2. பிடிப்புக் கம்பெனிகளின் வகைகள்

7.3. கணக்கியல் முறை

7.4. இலாப நட்டக் கணக்குகள் ஒருங்கிணைப்பு

7.5. அருஞ்சொற்கள்

7.6. தொகுத்தறிவோம்

7.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் வினாக்களின் விடைகள்:

7.8. மாதிரி வினாக்கள்

## 7.0. அறிமுகம்

உலகின் எல்லா நாட்டிலும், கூட்டுப் பங்கு நிறுமம் தன் வரையறு பொறுப்பு மூலம், தொழில் வளர்ச்சியிலும் நாட்டின் முன்னேற்றத்திலும் பெரும் பங்கு வகிக்கின்றது. கூட்டுப் பங்கு நிறுவனத்தின் முக்கிய அம்சம், அதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் வழிமுறையாகும். அதாவது பெரும்பான்மை பங்குகளை வைத்திருப்பதன் மூலம், அதன் முழு நிர்வாகத்தையும், கொள்கைகள் முடிவு எடுக்கும் அதிகாரத்தையும் எவரும் தன் கையில் கொண்டு வந்து விடலாம். எனவே ஒரு நிறுமத்தை கலைக்காமலும், புதிதாக தோற்றுவிக்காமலும் அதன் நிர்வாகத்தை மாற்றிவிடலாம். ஒரு நிறுமம் இவ்வாறு தன் மூலதனத்தை வைத்து, பல நிறுமங்களை கட்டுப்படுத்தி, பொருள் பல்வகைப்படுத்துதல், சந்தையை கட்டுப்படுத்துதல், கச்சாப்பொருளை பங்கிடல் மற்றும் வரியை மிச்சப்படுத்துதல் என பலவகை நன்மைகளை அடைய முடியும். ஆனால்

இதன் மூலம் சில நிறுமங்கள் சந்தை சர்வாதிகாரியாக மாறிவிடாமல் தடுக்கும் பொருட்டு அந்தந்த நாட்டு அரசுகள் இதற்கென உள்ள பல சட்ட ஷரத்துக்கள் மூலம் கட்டுப்படுத்தி வருகின்றன.

## 7.1. கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப் பிரிவை படித்த பின்பு நீங்கள்,

- பிடிப்பு நிறுமத்தின் கோட்பாடுகளை அறிய முடியும்.
- முழுவதும் அல்லது பகுதி பிடிக்கப்பட்டுள்ள துணை நிறுமங்களை வேறுபடுத்த இயலும்.
- ஒருங்கிணைந்த இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்க முடியும்.

எந்த ஒரு கம்பெனி மற்றொரு கம்பெனியில் இயக்குநர் அவையின் அமைப்பில் ஆதிக்கம் செலுத்துவதாக இருக்கிறதோ, எந்த ஒரு கம்பெனி மற்றொரு கம்பெனியின் சாதாரணப் பங்கு முதலில் பாதிக்கும் மேற்பட்ட பங்குகளைத் தன்வசம் வைத்திருக்கிறதோ அந்த கம்பெனி பிடிப்புப் கம்பெனி (Holding Company) எனப்படும். அக்கம்பெனியின் பிடியில் அடங்கிய மற்ற கம்பெனி துணைக் கம்பெனி (Subsidiary) எனப்படும். உதாரணமாக 'அ' என்னும் கம்பெனி 'ஆ' என்னும் கம்பெனியிலுள்ள 6 இயக்குநர்களில் ஐவரை நியமிக்கும் உரிமை பெற்றுள்ளது. அல்லது அ என்னும் கம்பெனி 'ஆ' என்னும் கம்பெனியின் சாதாரண பங்கு முதலான ரூ.20,00,000த்தில் ரூ.12,00,000 மதிப்புள்ள பங்குகளை தன்வசம் வைத்துள்ளது என்று கொள்வோமானால், 'அ' என்பது பிடிப்புக் கம்பெனியாகும். 'ஆ' என்பது துணைக் கம்பெனியாகும். இதையே சற்று நீட்டி 'அ' என்னும் கம்பெனி 'இ' என்ற கம்பெனிக்கு துணைக் கம்பெனி என்று கொண்டால் 'ஆ' என்னும் கம்பெனி 'அ' என்னும் கம்பெனிக்கு மட்டுமில்லாமல் 'இ' என்னும் கம்பெனிக்கும் துணைக் கம்பெனியாகக் கருதப்படும். 'இ' கம்பெனி மற்ற இரு கம்பெனிகளுக்கும் பிடிப்புக் கம்பெனி ஆகும்.

இத்தகைய ஒரு அமைப்பானது, கம்பெனிகளின் தனித்துவத்தைப் பாதிக்காமலேயே அவற்றின் நலன்களை ஒருங்கிணைக்க வகை செய்கின்றது. துணைக் கம்பெனிகள் பெயரளவிற்குத்தான் தன்னிச்சையாகச் செயல்படுகின்றன. ஆனால் நடைமுறையில் பிடிப்புக் கம்பெனியின் கட்டுப்பாட்டிற்குள்தான் செயல்படமுடியும். மேலும் பிடிப்புக் கம்பெனியானது தனது துணைக் கம்பெனியின் மூலதனத்தைப் பயன்படுத்தி பிற கம்பெனிகளையும் துணைக் கம்பெனிகளாக ஆக்கிக் கொள்ள முடிகின்றது.

## 7.2. பிடிப்புக் கம்பெனிகளின் வகைகள்

**1. தாய் பிடிப்புக் கம்பெனி (Parent Holding company)**

ஏற்கனவே நடைபெற்றுவரும் ஒரு கம்பெனியானது புதிதாகத் துணைக்கம்பெனிகளை ஏற்படுத்திக் கொண்டால், அதற்கு தாய் பிடிப்புக் கம்பெனி என்று பெயர்.

**2. தோற்றுவிக்கப்பட்ட .பிடிப்புக் கம்பெனி (Offspring Holding Company)**

ஏற்கனவெ செயல்பட்டு வரும் கம்பெனிகளை ஒருங்கிணைக்கம் நோக்குடன் புதிதாகத் தோற்றுவிக்கும் பிடிப்புக் கம்பெனி இவ்வகையைச் சேர்ந்ததாகும்.

**3. தலைமை பிடிப்புக் கம்பெனி (Primary Holding Company)**

பிடிப்புக் கம்பெனி தொகுப்பில் தலைமையிடத்தில் இருக்கும் கம்பெனியே இதுவாகும். இந்த கம்பெனியானது வேறெந்த ஒரு கம்பெனிக்கும் துணைக் கம்பெனியாக இருக்காது.

**4. இடைப்பட்ட பிடிப்புக் கம்பெனி (Intermediate Holding Company)**

பல துணைக் கம்பெனிகளுக்குப் பிடிப்புக் கம்பெனியாகவும், தானே மற்றொரு கம்பெனிக்குத் துணைக் கம்பெனியாகவும் இருந்தால் அதற்கு இடைப்பட்ட பிடிப்புக் கம்பெனி என்று பெயர்.

**5. தூய பிடிப்புக் கம்பெனி (Pure Holding Company)**

தனக்கென்று தனியாகத் தொழில் எதுவும் நடத்தாமல், பிற கம்பெனிகளுக்குப் பிடிப்புக் கம்பெனியாக மட்டும் செயல்படும் கம்பெனியாகும்.

**6. கலைப்பு பிடிப்புக் கம்பெனி (Mixed Holding Company)**

பிற கம்பெனிகளுக்குப் பிடிப்புக் கம்பெனியாக இருப்பதோடல்லாது தனக்கென ஒரு தொழிலையும் நடத்தி வரும் கம்பெனியாகும்.

**7. முழு உரிமைப் பிடிப்புக் கம்பெனி (Fully Owned Holding Company)**

துணைக் கம்பெனியின் அனைத்துப் பங்குகளையும் தன்வசம் பெற்றிருக்கும் பிடிப்புக் கம்பெனியாகும்.

**8. நிதி பிடிப்புக் கம்பெனி (Finance Holding Company)**

துணைக் கம்பெனிகளின் நிருவாகத்தில் பங்கு பெறுவதையே முக்கிய நோக்மாகக் கொள்ளாது அவற்றிற்கு நிதி வசதி அளித்து இலாபம் சம்பாதிப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்ட கம்பெனியாகும்.

**9. முதலீட்டுப் பிடிப்பு கம்பெனி (Investment Holding Company)**

உண்மையில் இது முதலீட்டு டிரஸ்ட் அமைப்பேயாகும். நிருவாகத்தில் பங்கேற்பதற்காகவன்றி உறுப்பினர்களுக்குப் பலதரப்பட்ட முதலீட்டின் பலன்களை அளிக்கும் பொருட்டும், பிற கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்யம் கம்பெனியே இதுவாகும்.

## 7.3. கணக்கியல் முறை

பிடிப்புக் கம்பெனி மற்றும் அதனுடைய துணைக் கம்பெனியின் நிதி ஆண்டு ஒரே தேதியில் முடிவடைய வேண்டும் பிரிவு 213(1)ன் படி மத்திய அரசானது பிடிப்புக் கம்பெனி அல்லது துணைக் கம்பெனியின் நிதி ஆண்டினை தள்ளிப் போடலாம். ஆனால் அப்படிச் செய்யும் பொழுது, பிடிப்புக் கம்பெனி மற்றும் துணைக் கம்பெனியின் நிதி அண்டின் கால இடைவெளி ஆறு மாதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.

பிரிவு 212ன் படி, பின்வரும் துணைக் கம்பெனியின் ஆவணங்களை பிடிப்புக் கம்பெனியின் இருப்புநிலைக்குறிப்புடன் இணைக்க வேண்டும்.

அ) துணைக்கம்பெனி இருப்புநிலைக்குறிப்பின் ஒரு படிவம்

ஆ) துணைக் கம்பெனி இலாப நட்ட க/குன் ஒரு படிவம்

இ) துணைக் கம்பெனி இயக்குநர்கள் அறிக்கையின் ஒரு படிவம்

ஈ) துணைக் கம்பெனியில் பிடிப்புக் கம்பெனிக்கு உள்ள இலாபத்தில் உள்ள உரிமைகளை விளக்கும் அட்டவணை.

**பிடிப்புக் கம்பெனியினுடைய கணக்குகளை வைக்கும் முறை**

**1) முதல் முறை**

பிடிப்புக் கம்பெனியினுடைய இலாப நட்ட க/கு மற்றும் அதனுடைய இருப்புநிலைக் குறிப்பை, துணைக் கம்பெனியின் இருப்பு நிலைக்குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குடன் சேர்த்துச் சமர்ப்பித்தல்.

**2) இரண்டாவது முறை**

கம்பெனியினுடைய நிதி நிலைமையை முழுமையான தெரிவிக்கும் பொருட்டு, பிடிப்புக் கம்பெனி மற்றும் அதனுடைய துணைக் கம்பெனியின் ஒருங்கிணைந்த இருப்பு நிலைக் குறிப்பையும் இலாப நட்ட கணக்கையும் தயாரித்து சமர்ப்பித்தல்.

ஆனால், கம்பெனிச் சட்டம் 1956ன் படி, பிடிப்புக் கம்பெனியானது முதல் முறையைத்தான் பின்பற்ற வேண்டும்.

**எடுத்துக்காட்டு 1**

‘H’ லிமிடெட் மற்றும் அதனுடைய துணைக்கம்பெனி S லிமிடெட்டின் சுருக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பொறுப்புகள் | H லிமிடெட் | S லிமிடெட் | சொத்துக்கள் | H லிமிடெட் | S லிமிடெட் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| பங்குமுதல் (ரூ.10 மதிப்புடையது) | 1,10,000 | 4,00,000 | நிலம் மற்றும் கட்டிடங்கள் | 27,500 | 17,500 |

குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பங்கு முனைமம் | 14,000 | —— | பொறி மற்றும் இயந்திரம் | 35,000 | 19,500 |
| பொதுக் காப்பிருப்பு | —— | 10,000 | | | |
| பற்பல கடனாளிகள் | 19,500 | 15,000 | மனைத்துணைப் பொருட்கள் | 6,000 | 2,500 |
| இலாப நட்ட க/கு | 14,000 | 3,000 | சரக்கிருப்பு | 20,000 | 13,500 |
| செலுத்துவதற்குரிய உண்டியல் | —— | 5,000 | பற்பல கடனாளிகள் | 28,500 | 15,500 |
| | | | முதலீடுகள் S லிமிடெட்டின் 3,600 பங்குகள் | 39,000 | —— |
| | | | வங்கியில் ரொக்கம் | 1,500 | 4,000 |
| | 1,57,500 | 73,000 | | 1,57,500 | 73,000 |

பின்வருவனவற்றை மனதில் கொண்டு, ஒருங்கிணைந்த இருப்புநிலைக் குறிப்பு ஒன்றைத் தயார் செய்க.

அ) 'S' லிமிடெட்டின் பங்குகளை ஏற்றுக் கொண்ட தேதியன்று 'S' லிமிடெட்டின் காப்புத் தொகையானது (Reserve Account) ரூ.3,000 ஆகவும் இலாப நட்ட கஃகு வரவு இருப்பு ரூ.1,000 ஆகவும் இருந்தன.

ஆ) ஏற்றுக் கொண்ட தேதியன்று, 'S' லிமிடெட்டின் பின்வரும் சொத்துக்கள் 'H' லிமிடெட் மறுமதிப்பீடு செய்தது.

i. பொறி மற்றும் இயந்திரம் (ரூ.22,500 ஆக இருந்ததை) ரூ.27,000 ஆக மதிப்பிடப்பட்டது.

ii. மனைத்துணைப் பொருட்கள் (ரூ.3,000 ஆக இருந்ததை) ரூ.1,800 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் புது மதிப்பீட்டுத் தொகையானது கணக்குப் புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை.

இ) 'S' லிமிடெட்டில் சேர்க்கப்பட்டள்ள சரக்கிருப்பில், ரூ.5,000 மதிப்புள்ள சரக்கானது 'S' லிமிடெட்டினால் அடக்க விலையுடன் 25 சதவீதம் கூட்டி சப்ளை செய்யப்பட்டவை ஆகும்.

ஈ) 'S' லிமிடெட்டினால் சேர்க்கப்பட்டுள்ள கடனீந்தோரில் ரூ.3500 H லிமிடெட்டினால் சரக்கு சப்ளை செய்ததற்காக ஆகும்.

விடை

| | |
|---|---|
| மூலதன லாபம் | ரூ. |
| பொதுக் காப்பிருப்பு | 3,000 |
| இலாப நட்ட க/கு (இருப்பு) | 1,000 |
| பொறி மற்றும் இயந்திரத்தின் மதிப்பு ஏற்றம் (ரூ.27,000 — ரூ.22,500) | 4,500 |
| | 8,500 |
| கழி : மனைத்துணைப் பொருட்களின் இறங்கிய மதிப்பு (ரூ.3000 — ரூ.1800) | 1,200 |
| | 7,300 |
| பிடிப்புக் கம்பெனியின் பங்கு | 6,750 |
| சிறுபான்மையின் பங்கு | 730 |

மறுமதிப்பீட்டினால் ஏற்படும் தேய்மானத்தை கணக்கிடுதல்

இயந்திரத்தின் ஏட்டு மதிப்பு:

| | |
|---|---|
| ஏற்றுக் கொண்ட தேதியன்று | 22,500 |
| ஒருங்கிணைந்த தேதியன்று | 19,500 |
| ∴ தேய்மானத்திற்காக ஒதுக்கியது | 3,000 |

இயந்திரத்தை மறுமதிப்பீடு செய்வதினால் ஏற்படும் வித்தியாசம் (ரூ.27,000 – 22,500) = ரூ.4,500

வித்தியாசத்தின் மீதான தேய்மானம்:

$$\frac{3000 \times 5400}{22{,}500} = \text{ரூ.}600$$

| | |
|---|---|
| மனைத் துணைப் பொருட்கள் மீது தேய்மானம் | ரூ. |
| (3000 – 2500) | 500 |

மனைத்துணைப் பொருட்களை மறுமதிப்பீடு

செய்வதால்

| | | |
|---|---|---|
| ஏற்படும் வித்தியாசம் (3,000—1,800) | 1,200 | |
| ∴ உண்மையான தேய்மானம் $\frac{500 \times 1800}{300}$ | | |
| அதிகப்படியாக ஒதுக்கப்பட்ட தேய்மானம் (500—300) | 200 | |
| நடைமுறை இலாபம் | | |
| கொடுக்கப்பட்ட இருப்பு | | 3,000 |
| கூட்டுக : பொதுக்காப்பிருப்புக்கு மாற்றப்பட்ட தொகை (ரூ.10,000 — ரூ.3,000) | | 7,000 |
| மனைத்துணைப் பொருட்கள் மீது ஒதுக்கப்பட்ட அதிகப்படியான தேய்மானம் | | 200 |
| | | 10,200 |
| கழி : கம்பெனியை ஏற்றுக் கொண்ட தேதியன்று உள்ள இருப்பு | 1,000 | |
| இயந்திரத்தின் ஏறிய மதிப்பிலான தேய்மானம் | 600 | 1,600 |
| | | 8,600 |
| பிடிப்புக் கம்பெனியின் பங்கு | 7,740 | |
| சிறுபான்மையினரின் பங்கு | 860 | |
| சிறுபான்மையினரின் நலன் | | |
| பங்குகளின் செலுத்திய மதிப்பு | | 4,000 |
| மூலதன இலாபம் | | 730 |
| நடைமுறை இலாபம் | | 860 |
| | | 5,590 |
| நன்மதிப்பு | | |
| பங்குகளுக்காக வழங்கிய தொகை | | 39,000 |
| கழி: முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகள் | 36,000 | |
| மூலதன இலாபம் | 6,570 | |
| | | 42,570 |
| மூலதனக் காப்பு | (—) | 3,570 |

ஒன்று சேர்ந்த இலாப நட்ட க/கு

| | |
|---|---|
| H லிமிடெட்டின் இலாபம் | 14,000 |
| கூட்டுக: லிமிடெட்டில் உள்ள இலாபத்தில் ங்கு | 7,740 |
| | 21,740 |
| கழி : கைக்கு வராத சரக்கிருப்பின் மேல் உள்ள | 1,000 |
| இலாபம் $5{,}000 \times \frac{25}{125}$ | |
| | 20,740 |

(சிறுபான்மையினரின் பங்கு சரிக்கட்டப்படவில்லை)

**‘H’ லிமிடெட் மற்றும் அதனுடைய துணைக் கம்பெனி S லிமிடெட்டின்**

**ஒருங்கிணைந்த இருப்பு நிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் (ஒவ்வொன்றும் ரூ.10 மதிப்புள்ள பங்குகள்) | 1,10,000 | நிலம் மற்றும் கட்டிடங்கள் | 45,000 |
| பங்கு முனைமம் | 14,000 | பொறி மற்றும் இயந்திரம் | 58,400 |
| மூலதனக் காப்பு | 3,570 | சரக்கிருப்பு | |
| இலாப நட்டக் க/கு | 20,740 | 33,500 | |
| சிறுபான்மையினரின் நலன் | 5,590 | கழி: கைக்கு வராத | |
| பற்பல கடனீந்தோர் | 31,000 | இலாபத்தின் மீதான காப்பு | 32,500 |
| | | 1,000 | |
| செலுத்துவதற்குரிய உண்டியல் | 5,000 | பற்பல கடனாளிகள் | 40,500 |
| | | வங்கியில் ரொக்கம் | 6,000 |
| | 1,89,900 | | 1,89,900 |

**எடுத்துக்காட்டு 2**

2003 ஜீன் 30 தேதியன்று ‘B’ லிமிடெட்டின் 90% சாதாரண பங்குகளை ‘A’ லிமிடெட் ரூ.6,00,000ற்கு வாங்கியது. வாங்கிய தேதியன்று இருப்புநிலைக்குறிப்பு எதுவும் தயாரிக்கப்படவில்லை. ‘B’

குறிப்பு

லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்புக்கள் 2002 டிசம்பர் 31ம் தேதியன்றும், 2003 டிசம்பர் 31ம் தேதியன்றும் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| பொறுப்புக்கள் | 31.12.02 | 31.12.03 | சொத்துக்கள் | 31.12.02 | 31.12.03 |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| பங்குமுதல் 20,000 சாதாரண பங்குகள் பங்கு ஒன்று ரூ.10 வீதம் | 2,00,000 | 2,00,000 | நிகர சொத்துக்கள் | 6,00,000 | 7,56,000 |
| நடைமுறை காப்பு | 4,00,000 | 4,40,000 | நன்மதிப்பு | 1,00,000 | 1,00,000 |
| இலாப நட்டக்க/கு | 1,00,000 | 1,74,000 | | | |
| உத்தேசிக்கப்பட்ட இலாப ஈவு | –– | 42,000 | | | |
| | 7,00,000 | 8,56,000 | | 7,00,000 | 8,56,000 |

**'A' லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பு 2003 டிசம்பர் 31ம் தேதியன்று**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் 2,00,000 சாதாரணப் பங்குகள் ரூ.10 வீதம் | 20,00,000 | நிகர சொத்துக்கள் | 30,00,000 |
| காப்பு: மூலதனம் 2,00,000; நடைமுறை 10,00,000 | 12,00,000 | முதலீடுகள்: 'B' லிமிடெட்டில் 18,000 சாதாரண பங்குகள் அடக்க விலையில் | 6,00,000 |
| இலாப நட்ட க/கு | 4,00,000 | | |
| | 36,00,000 | | 36,00,000 |

'B' லிமிடெட் கொடுக்க உத்தேசித்துள்ள இலாப ஈவிற்கு 'A' லிமிடெட் இன்னும் தன் கணக்கேடுகளில் பதிவு ஏதும் இதுவரை செய்யவில்லை. 2003 டிசம்பர் 31ம் தேதியன்று 'A' லிமிடெட்டின் ஒருங்கிணைந்த இருப்புநிலைக்குறிப்பைத் தயார்செய்க.

விடை:

1) பிடிப்புக் கம்பெனியின் ('A' லிமிடெட்டின்) பங்கு 90% அல்லது (9/10)

2) ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலைக்குறிப்பில் முதல் 2,00,000 பங்குகள் ரூ.10வீதம் ரூ.20,00,000

| 3) 'B' லிமிடெட்டின் | 'B' லிமிடெட்டில் *ப.வா.மு. | 'B' லிமிடெட்டில் *ப.வா.பி. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| அ) இலாபம் 1,00,000 + ½ x 74,000 | 1,37,000 | |
| இலாபம் ½ x 74,000 | ------ | 37,000 |
| ஆ) நடைமுறைக்காப்பு | | |
| 4,00,000 + ½ x 40,000 | 4,20,000 | ------ |
| நடைமுறைகாப்பு ½ x 40,000 | ------ | 20,000 |
| இ) உத்தேசிக்கப்பட்ட இலாபம் ½ x 42,000 | 21,000 | ------ |
| உத்தேசிக்கப்பட்ட இலாபம் ½ x 42,000 | ----- | 21,000 |

ப.வா.மு – பங்குகளை வாங்கு முன்

ப.வா.பி – பங்குகளை வாங்கிய பின்

4) நன்மதிப்பு

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| பங்குகளுக்காக செலுத்தப்பட்ட தொகை | | 6,00,000 |
| அ) இலாபம் 1,00,000 + ½ x 74,000 | 1,37,000 | |
| கழி: ஏற்கனவே உள்ள பங்குகளின் முக மதிப்பு | 1,80,000 | |
| பங்குகளை வாங்கு முன்பு | | |
| இலாபம் $\frac{9}{10}$ x1,37,000 | 1,23,300 | |
| நடைமுறை காப்பு $\frac{9}{10}$ x 4,20,000 | 3,78,000 | |
| உத்தேசிக்கப்பட்ட இலாப ஈவு $\frac{9}{10}$ x 21,000 | 18,900 | 7,00,200 |
| மூலதனக்காப்பு | (–) | 1,00,200 |

5) சிறுபான்மையினரின் நலன்

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட பங்குகளின் மதிப்பு | 20,000 |
| கூட்டு ப.வா.மு. | |
| இலாபம் $\frac{1}{10} \times 1,37,000$ | 13,700 |
| காப்பு $\frac{1}{10} \times 4,20,000$ | 42,000 |
| ப.வா.பி. | |
| இலாபம் $\frac{1}{10} \times 37,000$ | 3,700 |
| காப்பு $\frac{1}{10} \times 20,000$ | 2,000 |
| | 81,400 |
| உத்தேசிக்கப்பட்ட இலாப ஈவு | |
| ப.வா.மு. $\frac{1}{10} \times 21,000$ | 2,100 |
| ப.வா.பி. $\frac{1}{10} \times 21,000$ | 2,100 |
| | 4,200 |

6) ஒருங்கிணைக்கப்பட்ட இலாப நட்ட க/கு

| | |
|---|---|
| 'A' லிமிடெட்டில் | 4,00,000 |
| கூட்டு ப.வா.பி. இலாபம் $\frac{9}{10} \times 3700$ | 33,300 |
| ப.வா.பி. இலாப ஈவு $\frac{9}{10} \times 21000$ | 18,900 |
| | 4,52,200 |

7) ஒருங்கிணைக்கப்பட்ட காப்பு க/கு

அ) மூலதன காப்பு

| | |
|---|---|
| 'A' லிமிடெட்டில் | 2,00,000 |
| கூட்டுக மூலதன காப்பு (4)ல் வந்தபடி | 1,00,200 |
| | 3,00,200 |

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949 அளிக்கும் வங்கியின் இலக்கணமாவது "கேட்டவுடனே அல்லது வேறெந்தக் காலத்திலோ திருப்பிச் செலுத்தும் நிபந்தனையுடன் பொதுமக்களின் வைப்புகளை ஏற்றுக் கொள்வதும், இந்த வைப்புகளை கடன் கொடுப்பது, முதலீடு செய்வது ஆகிய வினைகளில் ஈடுபடுத்துவதும் காசோலை பணவிடை ஆணை போன்றவற்றை விடுத்தோ அல்லது பிறவகைகளிலோ இந்த வைப்புகளை உரிய வாடிக்கையாளர் திரும்ப பெறுமாறு செய்வதும் வங்கித் தொழிலாகும்". இச்சடத்தின் 6வது பிரிவு வங்கிக் கீழ்காணும் தொழில்களை செய்ய வழிவகை செய்கிறது.

1. நல்லதோர் வட்டி விகிதத்தில் ஒரு குறிப்பிட்ட அல்லது குறிப்பிடப்படாத காலத்திற்கென சேமிப்பாளர்களிடமிருந்து பணம் பெறுதல்
2. பெறப்பட்ட பணத்தை நல்லதோர் உட்டி விகிதத்தில் கடன் வழங்குவது மற்றும் முதலீட செய்வது
3. பணவிடைகள், உண்டியல்கள் போன்றவை சம்பந்தமாக வாடிக்கையாளர்களின் கணக்குகளில் ஏற்படும் அனைத்து ரொக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்
4. இலாப ஈவுகள் மற்றும் வட்டிகளை வசூலித்தல் பிணையங்களை வாங்குதல் மற்றும் விற்றல் ஆகியவற்றில் வாடிக்கையாளருக்கு முகவராக இருத்தல்
5. வாடிக்கையாளரின் சார்பில் பல நிறுவனங்களுக்கு தவணைகளில் தொகைகளை செலுத்துதல்
6. வாடிக்கையாளரின் பத்திரங்கள், பிணையங்கள் நகைகள் போன்றவற்றை பாதுகாத்து வைத்தல்
7. கடன்கள் மற்றும் முன்பணங்கள் தருதல். வாணிக உறுதிக் கடிதம் மற்றும் சுற்றுமறை நோட்டுகள் ஆகியன வழங்கல். மாற்று உண்டியல்களைக் கழிவு செய்தல்

8. பொறுப்புரிமை அமைப்புகளை அமைத்தல் மற்றும் நிறைவேற்றுதல். சொத்துக்களை நிருவகிக்கும் நிறைவேற்றாளர் மற்றும் பொறுப்புரிமையாக இருத்தல் ஆகியன
9. உத்திரவாதம் இழப்பீடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நடத்துதல்
10. அரசு அல்லது உள்ளாட்சி போன்றவற்றிற்கு முகவராக இருத்தல்
11. வங்கியின் கோருரிமைகள் சம்பந்தமாக கம்பெனியின் பொறுப்பில் உள்ள சொத்துக்களை நிர்வாகத்தில் மற்றும் விற்பனை செய்தல்
12. வங்கிக் கம்பெனிக்கு தேவையான வேலைகள் அல்லது கட்டிடம் எடுத்தல், கட்டுதல், நிர்வகித்தல் மற்றும் புதுப்பித்தல் போன்றவை
13. எந்தவொரு கம்பெனி அல்லது கூட்டு அமைப்பில் வழங்கப்பட்ட பங்குகள், பங்கு தொகுப்பு, கடன் பத்திரங்கள் அல்லது கடன் பத்திரங்களின் தொகுப்பு ஆகியனவற்றை கையாளுதல் மற்றும் அவ்வாறு வழங்கப்பட்டதற்காக பணம் கொடுத்தல் ஆகியன.

## 8.2. முக்கிய வங்கி சட்ட விதிமுறைகள்

இந்தியாவில் வங்கித் தொழிலை செய்து கொண்டிருக்கின்ற வங்கிக் கம்பெனிகள் கடைபிடிக்க வேண்டிய அனைத்து விதிமுறைகளும் வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமான சில விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 1. குறைந்த அளவு முதல்

இந்தியாவில் வங்கித் தொழிலை நடத்தி வரக்கூடிய எந்தவொரு கம்பெனியின் முதலும், அதன் அனுமதித்த முதலின் பாதியளவிற்கும் குறைவாக ஒப்பிய முதல் இருத்தல் கூடாது. அதன் ஒப்பிய முதலின் பாதியளவிற்கும் குறைவாக செலுத்தப்பட்ட முதல் இருக்கக்கூடாது. கம்பெனியின் முதலில் சாதாரண அல்லது நேர்மைப் பங்குகள் மற்றும் 1944, ஜீலை 1ஆம் தேதிக்கு முன்பு வழங்கப்பட்ட முன்னுரிமைப் பங்குகள் ஆகியன மட்டும் அடங்கியுள்ளன. இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட

ஆகியன மட்டும் அடங்கியுள்ளன. இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட வங்கிகளது செலுத்தப்பட்ட முதல் மற்றும் காப்புகளின் குறைந்தபட்ச அளவு ரூ.5 லட்சமாக இருக்க வேண்டும்.

**2. கமிஷன் தரகு போன்றவை செலுத்துதல்**

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் வங்கிகள் பங்குகளை வெளியிடுவதற்காக கமிஷன், தரகு போன்ற செலுத்துதல் அப்பங்கின் செலுத்தப்பட்ட முதலில் 2½ சதவீதத்திற்கு மிகுவதை தடை செய்கின்றது.

**3. இலாப ஈவு செலுத்துதல்**

சட்டத்தின் பிரிவு 15ன் படி வங்கியின் மூலதனச் செலவுகளாகிய தொடக்கச் செலவுகள் அமைப்புச் செலவுகள், தரகு பங்குகளின் மீது செலுத்தப்பட்ட கமிஷன் போன்றவற்றை நீக்காத வரையிலும் வங்கி லாப ஈவு அளித்தல் தடுக்கப்படுகின்றது,

**4. காப்பு நிதி**

சட்டத்தின் பிரிவு 17ன் படி இலாப ஈவு வழங்குவதற்கு முன்பாக இலாபத்தில் குறைந்த அளவு 20 சதவீதத்தை காப்புநிதிக்கு மாற்ற வேண்டும். மைய வங்கியிடம் அனுமதி பெற்றால் மட்டுமே ஒரு வங்கியானது காப்புநிதிக்கு இவ்வாறு மாற்றாமல் இருக்கலாம்.

**5. ரொக்க நிதி**

இச்சட்டத்தின் படி ஒவ்வொரு வங்கியும் ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை ரொக்க நிதியாக மைய வங்கியிடம் (RBI) வைத்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. அதன்படி ஒவ்வொரு வங்கியும் தங்களுடைய காலப் பொறுப்புகள் மற்றும் கேட்புப் பொறுப்புகள் ஆகியவற்றிற்கு 3 சதவீதத்திற்கு குறையாமல் ரொக்க நிதியாக வைக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதை 15% அளவிற்கு உயர்த்த ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் உள்ளது.

**6. கணக்கியல் கொள்கைகளை வெளிப்படையாக கூறுதல்**

1991 மார்ச் 30ஆம் தேதியோடு முடிவடையும் கணக்காண்டிலிருந்து வங்கிகள் தங்களுடைய கணக்கியல் கொள்கைகள் மற்றும் முக்கிய நடவடிக்கைகளைப் பற்றி கணக்கியல் குறிப்புகளோடு நிதிநிலை அறிக்கைகளில் தெரியப்படுத்த வேண்டும்.

## 8.3. வங்கியில் பயன்படுத்தப்படும் கணக்குகளும் கையேடுகளும்

**1. பெறுதல் மற்றும் செலுத்தல்களுக்கான காசாளரின் கையேடுகள்**

தினந்தோறும் காசாளர் தான் பெறுகின்ற காசோலைகள், ரூபாய் நோட்டுகள், நாணயங்கள் முதலியனவற்றை தன்னுடைய 'தினசரி பெறுதல் கையேட்டில்' குறித்துக் கொள்வார். செலுத்துகின்ற காசாளர் தன் செலுத்துதல் அனைத்தையும் தினசரி செலுத்துதல் கையேட்டில் குறித்துக் கொள்வார்.

**2. ரொக்க இருப்பு ஏடு**

ஒரு நாளின் தொடக்கத்தில் கையிருப்பிலுள்ள ரொக்கம் மற்றும் ரூபாய் நோட்டுக்களின் தொடக்க இருப்பு அந்நாள் முழுவதும் பெற்ற மொத்த ரொக்ம் அந்நாளின் செலுத்தப்பட்ட மொத்த ரொக்கம் மற்றும் ரூபாய் நோட்டுக்கள் ஆகியவற்றையும் அந்நாளின் முடிவில் கையிருப்பில் உள்ள இருப்புத் தொகையும் காண்பிப்பதற்காக ரொக்க இருப்பு ஏடு உபயோகப்படுத்தப்படுகிறது.

**3. உண்டியல்களின் குறிப்பேடு**

வரவுக்குரிய மற்றும் செலுத்த வேண்டிய உண்டியல்களில் உள்ள நபர்களின் பெயர்கள், அவ்வுண்டியல்களின் தொகைகள் மற்றும் இவ்வுண்டியல்களின் முதிர்வு நாட்கள் ஆகிய விவரங்கள் இந்த ஏட்டில் பதியப்படுகின்றன. மேலும் வாடிக்கையாளர்கள் வசூலிப்பதற்காக அனுப்பிய

உண்டியல்கள் "வசூலுக்காக பெறப்பட்ட உண்டியல்களின் பதிவேடு" என்னும் ஏட்டில் பதியப்படுகின்றன. இவ்வாறு வாடிக்கையாளர்களுக்குப் பதிலாக வங்கி ஏற்றுக்கொண்ட உண்டியல்கள் "ஏற்பு பதிவு ஏடு" எனும் ஏட்டில் பதியப்படுகிறது.

**4. நடப்புக் கணக்குகள் குறிப்பேடு**

நடப்புக் கணக்கில் பணம் சேமிக்கின்ற ஒவ்வொரு வாடிக்கையாளரின் கணக்கையும் பதிவதற்காக இவ்வேடு பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு கணக்கிலும் வாடிக்கையாளரின் பெயர், அவருடைய முகவரி, பதவி, அசல், தொகை வட்டி விகிதம், தினசரி இருப்புகள் ஆகியன பதியப்படுகின்றன.

**5. நிலைத்த வைப்புப் பதிவேடு**

இவ்வேட்டில் ஒவ்வொரு வைப்பாளரின் கணக்கும் எழுதப்பட்டிருக்கும் இக்கணக்கில் வைப்புத் தொகை, வைப்புத் தேதி, வட்டி விகிதம், திரும்பச் செலுத்தும் தேதி முதலியன பற்றிய விவரங்கள் அடங்கியிருக்கும்.

**6. சேமிப்பு வங்கிக் கணக்குகள் பேரேடு**

இவ்வேட்டில் சேமிப்பு வங்கிக் கணக்குகளில் தங்களுடைய பணத்தை வைத்திருக்கும் வாடிக்கையாளரின் கணக்குகள் அடங்கியிருக்கும்.

**7. கடன்கள் பேரேடு**

கடன் பெற்ற ஒவ்வொரு வாடிக்கையாளரின் கணக்கும் இப்பேரேட்டில் அடங்கியிருக்கும், அசல் கடன் தொகையோடு வட்டி விகிதம் திரும்பச் செலுத்துவதற்கான நிபந்தனைகள், நியமிக்கப்பட்டவரின் பெயர் ஒப்படைத்த பிணையங்கள் பற்றிய விவரங்களும் ஒவ்வொரு கணக்கிற்கும் பதியப்பபடுகின்றன.

**8. முதலீடுகள் பதிவேடு**

வங்கியின் முதலீடுகளின் முகமதிப்பு, அசல் தொகை வட்டி மற்றைய நிபந்தனைகள் பற்றிய விவரங்கள் எழுதப்படுகின்றன.

**9. நிலையான ஆணைகள் அடங்கிய ஏடு**

ஈட்டுறுதிக் கட்டணம், சங்கம் இதழ்களுக்கான சந்தா வாடகை முதலியவற்றை செலுத்துதல் மற்றும் வசூல்கள் செய்தலுக்காக வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற நிலையான ஆணைகளைப் பதிவதற்காக இவ்வேடு பராமரிக்கப்படுகிறது.

**10. பொதுப் பேரேடு**

வங்கியில் பராமரிக்கப்படும் துணைப் பேரேடுகளுக்கான கட்டுப்பாடு கணக்குகள் இதில் அடங்கியுள்ளன. இப்பேரேட்டில் வங்கியின் சொத்துக்கள் மற்றும் செலவுகள் பற்றிய கணக்குகள் அடங்கும்.

மேலும் பங்குப் பிணையங்கள் பதிவேடு அணிகலன்கள் பதிவேடு பாதுகாப்புகள் பதிவேடு ஆகியவைகளும் வங்கிகளில் பராமரிக்கப்படுகின்றன.

கம்பெனிகள் சட்டத்தின்படி பட்டியலில் சேர்க்கப்படாத ஒவ்வொரு வங்கிக் கம்பெனியும், அவ்வங்கியின் காலப் பொறுப்புகள் மற்றும் கேட்புப் பொறுப்புகள் மீது ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு சமமான ஒரு தொகையினை ‘ரொக்க காப்பு’ என தானே ரொக்கமாகவோ அல்லது ரிசர்வ் வங்கியில் தொடங்கப்பட்டிருக்கும் ஒரு கணக்கிலோ அல்லது பாதித் தொகையை தன்னிடம் ரொக்கமாகவும் மற்றும் பாதித் தொகையை ரிசர்வ் வங்கியின் கணக்கிலும் வைத்திருக்க வேண்டும். மேலும், காலத் தவணைகளில் இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு ஆகியன போன்ற பல விவர அறிக்கைகளை வங்கி ரிசர்வ வங்கியிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டிற்கும்

வங்கிகள் முடிவுக் கணக்குகளாகிய இருப்புநிலைக்குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்க வேண்டும்.

**கழிவு செய்த உண்டியல்கள் மீதான தள்ளுபடி**

உண்டியல்களைக் கழிவு செய்தல் வங்கியின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். இவ்வாறு உண்டியல்களைக் கழிவு செய்யும் போது கழிவுக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். ஆனால் கணக்குகளை முடிக்கின்ற தேதியில் சில உண்டியல்கள் இன்னும் முதிர்வடையாமல் இருந்தால் அவ்வாண்டு முடிவடைந்த பின் உள்ள காலத்திற்காக கழிவின் ஒரு பகுதியைக் கணக்கிட்டு அதனைப் பெற்ற கழிவுத் தொகையிலிருந்து கழித்து உண்மையான வருமானத்தை கணக்கிட வேண்டும். இவ்வாறான ஈட்டப்படாத கழிவினை "கழிவு செய்த உண்டியல்கள் மீதான தள்ளுபடி" என அழைக்கிறோம். இதனை ஏடுகளில் கழிவுக் கணக்கில் பற்று வைத்து "கழிவு செய்த உண்டியல்கள் மீதான தள்ளுபடி" கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

**வராக்கடன் மற்றும் வராக்கடன் ஒதுக்கு**

மற்றைய வணிகங்களில் ஏற்படுவது போல், வங்கிகளிலும் 'வராக்கடன்கள்' ஏற்படுவதால் வழக்கமான பதிவு செய்யப்பட்டு வராக்கடன் ஒதுக்கு ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் இவ்வாறான வராக்கடன்களை ஒவ்வொரு ஆண்டும் அவைகளுக்குரிய தலைப்புகளில் கீழ் காண்பித்தால் வங்கியின் நன்மதிப்பு கெடுவதோடல்லாமல் வங்கியில் பொதுமக்களுக்குள்ள நம்பிக்கையும் குறைந்து விடும். எனவே வங்கியின் வராக்கடன்களை நீக்கியது அல்லது வரா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒதுக்கு பற்றிய விவரத்தை வெளியிடச் சட்டம் அனுமதிப்பதில்லை. எனினும் இவ்வாறான ஒரு ஒதுக்கின் இருப்பு வெளியிடப்பட்ட கணக்குகளில் முறையாகக் காண்பிக்கப்படும் இவ்வாறு தேவைப்படும் வராக்கடன் தொகையானது வட்டி, கழிவு மற்றும் ஏனைய வருமானங்களிலிருந்து குறைக்கப்படுகிறது.

மீதமுள்ள வருமானங்களில் இருப்பு இலாப நட்டக்கணக்கில் அட்டவணை 16ல் காண்பிக்கப்படுகிறது. இதேபோல் முதலீடுகள் தங்கம் மற்றும் வெள்ளி நிலம், கட்டிடங்கள் மற்றுமுள்ள ஏனைய சொத்துக்களை விற்றல் அல்லது மறுமதிப்பீட்டின் போது ஏதாவதொரு நட்டம் ஏற்பட்டாலும் அதனையும் வருமானத்திலிருந்து கழிக்க வேண்டும்.

உதாரணமாக வட்டி மற்றும் கழிவு வருமானங்கள் ரூ.35,00,000 மாகவும், வராக்கடன்கள் ரூ.20,000 மாகவும் தேவைப்படும் ஒதுக்க (ஐயக்கடன்களுக்காக) ரூ.40,000 மாகவும் இருந்தால் இலாப நட்டக் கணக்கில் அட்டவணை 13ல் வட்டி மற்றும் கழிவு வருமானம் ரூ.35,00,000 காண்பிக்கப்பட வேண்டும். வராக்கடன் ரூ.20,000 ஐயக்கடன் ஒதுக்கு ரூ.40,000 இலாப நட்டக் கணக்கில் அட்டவணை 16ல் தனியாக ஒதுக்குகள் மற்றும் நிகழ்வடையாப் பொறுப்புகள் என்று காண்பிக்கப்படுகிறது. இதில் ஐயக்கடன் ஒதுக்கு இருப்புநிலைக்குறிப்பில் அட்டவணை 5ல் (பிற பொறுப்புகள் மற்றும் ஒதுக்குகள்) கீழ் காண்பிக்கப்படும்.

**ஐயக்கடன்களின் மீதான வட்டி**

ஐயக்கடன்களின் மீதான வட்டி நேரடியாக வட்டிக் கணக்கின் வரவுப் பக்கத்தில் சேர்க்கப்படாமல் வட்டி இடைநிலைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அதற்கான பற்று ஐயக்கடனாகிய கடன் கணக்கில் எழுதப்படும் வட்டி இடைநிலைக் கணக்கினை பெறப்பட்ட வட்டித் தொகைக்கு மட்டுமே பற்று வைக்க வேண்டும். இக்கணக்கிலுள்ள மீதமுள்ள தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டு கணக்கு முடிக்கப்படும். ஒரு வருமானத்தை பெறாதவரை அல்லது அதனை பெறுவதற்கான உறுதி இல்லாதவரையிலும் அவ்வருமானத்தை ஒரு வருமானம் எனக் கருதமுடியாது என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவே இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

முன் பணங்கள் (Advances)

பொதுவாக ஒரு வங்கியின் மொத்தச் சொத்தில் 55% முதல் 60% சொத்து அவ்வங்கி அளித்த முன்பணமே ஆகும். வங்கி முன்பணம் அளிக்கும் போது ஏதாவது தவறு அல்லது முறைகேடு வங்கிக்கு நட்டம் ஏற்படும். இந்த நட்டத்தை முடிவாக சேமிப்பு வைப்பாளர்கள் தான் ஏற்க வேண்டியுள்ளது. ஏனெனில் வங்கியின் உரிமையாளர்களின் நிதி (பங்கு முதல் மற்றும் காப்புகள்) மொத்தப் பொறுப்பில் 5மு அதிகமாயிருக்காது. எனவே இந்த விஷயத்தில் வங்கியானது சில விவரங்கை வெளியிட வேண்டுமென சட்டம் வலியுறுத்துகிறது. வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949ன் படி கடன்கள் முன்பணங்கள், ரொக்கக் கடன்கள் மற்றும் அதிகப் பற்றுகள் ஆகியன பற்றிய அட்டவணைக் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்.

1. நல்ல கடன்கள் எனக் கருதப்படுபவை இவைகளுக்காக வங்கி முழுவதுமாக பிணையங்கள் வைத்துள்ளது.
2. வங்கியிடம் ஆட்பிணை (Personal Security)யைத் தவிர வேறு பிணையம் இல்லாமலும் நல்ல கடன்கள் எனக் கருதப்பட்டவை.
3. கடனாளிகளின் ஆட்பிணையோடு ஒன்று அல்லது அதிகமான நபர்களின் சொந்தப் பொறுப்புகளையும் பிணையமாகக் கொண்டுள்ள நல்ல கடன்கள்
4. ஒதுக்கப்படாத ஐயம் அல்லது வராக்கடன் எனக் கருதப்படுபவை
5. வங்கியின் இயக்குநர்கள் அல்லது அதிகாரிகள் தனித்தனியாகவோ அல்லது வேறு நபர்களுடன் சேர்த்து கூட்டாகவோ கொடுக்க வேண்டிய கடன்கள்.
6. வங்கியின் இயக்குநர்கள் மற்றும் கூட்டாளிகளாகவுள்ள கம்பெனிகள் அல்லது கூட்டு நிறுவனங்கள் செலுத்த வேண்டிய கடன்கள்
7. வங்கியின் இயக்குநர்கள் அல்லது மேலாண்மையாளர்கள் அல்லது அதிகாரங்கள் ஆகியோருக்கு ஆண்டின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கப்படும் கடன்களின் அதிகபட்ச மொத்தத் தொகை

8. வங்கியின் இயக்குநர்கள் உரிமையுள்ள கம்பெனிகள் அல்லது கூட்டு நிறுவனங்களுக்கு அவ்வாண்டில் அளிக்கப்படும் கடன்களின் அதிகபட்ச மொத்தத் தொகை

9. பிற வங்கிகளிடமிருந்து பெற வேண்டியவை

## 8.4. இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு தயாரித்தல்

1991—92 நிதி ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்த திருத்தியமைக்கப்பட்ட வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி வங்கி இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு தயாரிப்பு மாதிரி படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**படிவம் — B**

**மாதிரி இலாப நட்டக் கணக்கு**

**2005 மார்ச் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஆண்டிற்கு**

| | அட்டவணை எண் | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|---|
| I. வரவுகள் | | | |
| வட்டி பெற்றது | 13 | | |
| இதர செலவுகள் | 14 | | |
| மொத்தம் | | | |
| II. செலவுகள் | | | |
| வட்டி செலுத்தியது | 15 | | |
| நடைமுறை செலவுகள் ஒதுக்கீடுகள் மற்றும் நிகழ்வடையாப் பொறுப்புகள் | 16 | | |
| மொத்தம் | | | |
| III. இலாபம் / மற்றும் நட்டம் | | | |
| நிகர இலாபம் / நட்டம் (—) | | | |
| நடப்பு ஆண்டிற்கு இலாபம் நட்டம் (—) கொண்டு வரப்பட்டது | | | |
| மொத்தம் | | | |
| IV. பகிர்வுகள் | | | |
| காப்பு நிதிக்கு மாற்றப்பட்டது | | | |
| வேறு நிதிக்கு மாற்றப்பட்டது | | | |

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| ஒதுக்கப்பட்ட இலாப ஈவு இருப்பநிலை குறிப்பிற்கு எடுத்து செல்லப்படும் இலாபம் / நட்டம் | | | |
| மொத்தம் | | | |

## அட்டவணை 13 வட்டி பெற்றது

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. முன்பணம், உண்டியல்கள் மீது பெற்ற வட்டி கழிவு | | |
| 2. முதலீடு மீது வருமானம் | | |
| 3. பிற வங்கிகளிடமிருந்து உள்ள இருப்பின் மீது பெற்ற வட்டி | | |
| 4. இதர வட்டி வரவுகள் | | |

## அட்டவணை 14 இதர வரவுகள்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. கமிஷன் செலவாணி மற்றும் தரகு | | |
| 2. முதலீடு விற்பனை இலாபம் | | |
| 3. முதலீடு மறுமதிப்பீட்டு இலாபம் | | |
| 4. நிலம் கட்டிடம் மற்றும் இதர சொத்துக்கள் விற்பனை இலாபம் | | |
| 5. பரிமாற்ற நடவடிக்கை இலாபம் | | |
| 6. பிற நிறுவனங்களின் இலாப பங்கு வரவு (பங்காதயம்) | | |
| 7. இதர பலவகை வரவுகள் | | |
| மொத்தம் | | |

## அட்டவணை 15 வட்டி செலுத்தியது

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. வைப்புகள் மீது வட்டி செலுத்திய வட்டி | | |
| 2. பிற வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள் மீது செலுத்திய வட்டி | | |
| 3. இதர வட்டி செலுத்தல்கள் | | |
| மொத்தம் | | |

## அட்டவணை 16 நடைமுறைச் செலவுகள்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. தொழிலாளர்களின் ஒதுக்கீடுகளுக்கு செலுத்தியது | | |
| 2. வாடகை வரி மற்றும் மின்சார கட்டணம் | | |
| 3. அதிகக் கூலி, எழுதுபொருள் | | |
| 4. விளம்பரச் செலவு | | |
| 5. தேய்மானம் | | |
| 6. இயக்குநரின் கட்டணம் மற்றும் செலவுகள் | | |
| 7. தணிக்கையாளரின் கட்டணம் | | |
| 8. சட்ட செலவுகள் | | |
| 9. தபால் செலவுகள் | | |
| 10. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | | |
| 11. காப்பீடு | | |
| 12. பிற செலவுகள் | | |
| மொத்தம் | | |

# படிவம் — A

## மாதிரி இருப்பு நிலை குறிப்பு

## 2005 மார்ச் 31ஆம் தேதியன்று

| | அட்டவணை எண் | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|---|
| முதல் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குமுதல் | 1 | | |
| காப்பு நிதி மற்றும் பிற இலாப பகுதிகள் | 2 | | |
| வைப்புகள் | 3 | | |
| கடன்கள் | 4 | | |
| பிற பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | 5 | | |
| மொத்தம் | | | |
| சொத்துக்கள் | | | |
| ரொக்கம் மற்றும் மைய வங்கியில் இருப்பு | 6 | | |
| பிற வங்கிகளில் இருப்பு கேட்டவுடன் மற்றும் குறைந்த கால அறிக்கையில் பெறப்படும் பணம் | 7 | | |
| முதலீடுகள் | 8 | | |
| முன் பணங்கள் | 9 | | |
| நிலையான சொத்துக்கள் | 10 | | |
| பிற சொத்துக்கள் | 11 | | |
| மொத்தம் | | | |
| நிகழ்வடையாப் பொறுப்புகள் | | | |
| வசூலுக்கான உண்டியல்கள் | 12 | | |

### அட்டவணை 1 பங்குமுதல்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட முதல் | | |
| வெளியிடப்பட்ட முதல் | | |
| ஒப்பிய முதல் | | |
| அழைக்கப்பட்ட முதல் | | |

### அட்டவணை 2 காப்புநிதி மற்றும் மிகுநிதிகளும் (Reserves and Surplus)

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. சட்டமுறை காப்பு நிதி | | |
| 2. மூலதன காப்பு | | |
| 3. பங்கு முனைமம் (Share Premium) | | |
| 4. வரவும் மற்ற காப்புகளும் | | |
| 5. இலாப நட்டக் கணக்கு இருப்பு | | |
| மொத்தம் | | |

### அட்டவணை 3 வைப்புகள்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. கேட்பு வைப்புகள் | | |
| அ) வங்கிகளிடமிருந்து | | |
| ஆ) பிறரிடமிருந்து | | |
| 2. சேமிப்பு கணக்கு வைப்புகள் | | |
| 3. கால வைப்புகள் | | |
| அ) வங்களிடமிருந்து | | |
| ஆ) பிறரிடமிருந்து | | |
| மொத்தம் | | |

### அட்டவணை 4 கடன்கள்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. உள்நாட்டிற்குள் பெற்ற கடன்கள் | | |
| அ) மைய வங்கியிடமிருந்து | | |
| ஆ) பிற வங்கிகளிடமிருந்து | | |
| இ) பிற நிறுவனங்களிடமிருந்து | | |
| 2. வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்கள் | | |
| மொத்தம் | | |

### அட்டவணை 5 பிற பொறுப்புக்களும் காப்புகளும்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. செலுத்தவேண்டிய உண்டியல்கள் | | |
| 2. அலுவலகங்களுக்கிடையிலான சரிகட்டுதல்கள் (நிகர) | | |
| 3. வட்டி செலுத்தப்பட வேண்டியது | | |
| 4. பிற (காப்புகள் உட்பட) | | |
| மொத்தம் | | |

### அட்டவணை 6 ரொக்கம் மற்றும் மைய வங்கியில் இருப்பு

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. கையிருப்பு, ரொக்கம் (வெளிநாட்டு பணமும் சேர்த்து) | | |
| 2. மைய வங்கியில் உள்ள இருப்பு | | |
| அ) நடப்பு கணக்கில் | | |
| ஆ) பிற கணக்கில் | | |
| மொத்தம் | | |

## அட்டவணை 7 பிற வங்கிகளில் இருப்பு மற்றும் கேட்டவுடன் மற்றும் குறைந்த கால அறிக்கை பெற்றவுடன் பெறப்படும் பணம்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. இந்தியாவில் | | |
| அ) வங்கிகளில் இருப்பு | | |
| ஆ) கேட்டவுடன் மற்றும் குறுகிய கால அறிக்கையில் பெறப்படும் பணம் | | |
| மொத்தம் (அ + ஆ) | | |
| 2. வெளிநாட்டில் | | |
| அ) நடப்பு கணக்கில் | | |
| ஆ) இதர வைப்பு கணக்குகளில் | | |
| இ) கேட்டவுடன் மற்றும் குறுகிய கால அறிக்கையில் பெறப்படும் பணம் | | |
| மொத்தம் (1 + 2) | | |

## அட்டவணை 8 முதலீடுகள்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. உள்நாட்டு முதலீடுகள் | | |
| 2. வெளிநாட்டு முதலீடுகள் | | |
| மொத்தம் | | |

## அட்டவணை 9 – முன்பணம்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. உள்நாட்டில் கொடுக்கப்பட்ட முன்பணம் | | |
| 2. வெளிநாடுகளில் கொடுக்கப்பட்ட முன்பணம் | | |
| மொத்தம் | | |

## அட்டவணை 10 – நிலையான சொத்துக்கள்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| கட்டிடம் | | |
| இதர நிலை பொருட்கள் | | |
| மொத்தம் | | |

## அட்டவணை 11 – பிற சொத்துக்கள்

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. உள் அலுவலக சரிகட்டல்கள் (நிகரம்) | | |
| 2. கூடிய வட்டி | | |
| 3. முன்பே செலுத்திய வட்டி ஆரம்ப இடத்தில் கழிக்கப்பட்ட வரி | | |
| 4. எழுதுபொருட்களும் தபால் தலைகளும் | | |
| 5. கோருரிமைக்காக பெறப்பட்ட வங்கி சாரா சொத்துக்கள் | | |
| 6. பிற வகையில் | | |
| மொத்தம் | | |

## அட்டவணை 12 – நிகழ்வடையா பொறுப்புகள்

## (Contingent Liabilities)

| | 31.3.05 நடப்பு ஆண்டு | 31.3.04 முந்திய ஆண்டு |
|---|---|---|
| 1. கடன்கள் என்று அங்கீகரிக்கப்பட்டபடி வங்கிக்கு எதிரான கோரல்கள் | | |
| 2. பகுதி செலுத்தப்பட்ட முதலீடுகளுக்கான பொறுப்பு | | |
| 3. எதிர்கால மாற்று ஒப்பந்தங்கள் தொடர்பான பொறுப்பு | | |

குறிப்பு

| | | |
|---|---|---|
| 4. அமைப்பாளர்கள் சார்பாக தரப்பட்ட உறுதிமொழிகள் | | |
| அ) இந்தியாவில் | | |
| ஆ) இந்தியாவுக்கு வெளியே | | |
| 5. ஏற்பு, ஒப்புறுதிகள் மற்றும் இதர பொறுப்புகள் | | |
| 6. இதர இனங்கள் | | |
| மொத்தம் | | |

எடுத்துக்காட்டு : 1

வேணி லெட்சுமி வங்கியினுடைய 2005 மார்ச் 31ந் தேதியோடு முடிவடையும் ஆண்டிற்கான இருப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய்) |
|---|---:|
| நடப்பு வைப்புகள் | 2,27,50,000 |
| சேமிப்பு கணக்குகள் | 82,60,000 |
| நிரந்தர மற்றும் கால வைப்புகள் | 1,75,90,000 |
| பற்பல கடனீந்தோர் | 2,28,000 |
| பெற வேண்டிய உண்டியல்கள் | 9,05,000 |
| முதல் 1,00,000 பங்குகள் ரூ. 50 வீதம் | 50,00,000 |
| வட்டி மற்றும் கழிவு பெற்றது | 79,00,000 |
| செலவாணி மற்றும் கமிஷன் பெற்றது | 8,77,000 |
| இலாப நட்டக் கணக்கு (1.4.04) | 4,26,000 |
| கையிருப்பு ரொக்கம் | 6,54,000 |
| வங்கியில் ரொக்க இருப்பு | 30,00,000 |
| **முதலீடுகள்** | |
| அரசாங்க பத்திரங்கள் | 1,70,00,000 |
| பங்குகள் | 79,50,000 |
| உண்டியல்கள் வாங்கியது மற்றும் கழிவு செய்யப்பட்டது | 1,77,50,000 |

| | |
|---|---|
| அலுவலக பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | 2,50,000 |
| சொத்துக்களின் மீது தேய்மானம் | 2,50,000 |
| வட்டி செலுத்தியது | 6,00,000 |
| செலவாணி மற்றும் கமிசன் செலுத்தியது | 50,000 |
| சம்பளம் | 12,00,000 |
| இயக்குநர் கட்டணம் | 50,000 |
| தபால் செலவுகள் | 2,00,000 |
| சில்லரை செலவுகள் | 1,50,000 |
| நிலமும் கட்டிடமும் | 15,00,000 |
| கேட்டவுடன் பெறப்படும் பணம் | 7,50,000 |
| வசூலிக்கப்படும் வேண்டிய உண்டியல்கள் | 90,50,000 |
| பிற வங்கிகளுக்கு கொடுக்க வேண்டிய பிணைய கடன்கள் | 61,00,000 |
| வாடிக்கையாளர் பொறுப்புக்கான வாடிக்கையாளர் ஏற்புகள் | 75,84,000 |
| உண்டியல்கள் கழிவு செய்ததில் தள்ளுபடி | 7,000 |
| வங்கி கிளை சரி கட்டுதலின் (வரவு) | 22,78,000 |
| காப்பு நிதி | 62,50,000 |
| வாடிக்கையாளர் ஏற்புக்கான பொறுப்புகள் | 75,84,000 |
| கடன்கள் மற்றும் ரொக்க கடன்கள் | 1,68,50,000 |
| வங்கி சாரா சொத்துக்கள் | 25,000 |
| கால கடன்கள் | 40,00,000 |
| முதலீட மீது கூடிய வட்டி | 4,37,000 |

2005 மார்ச் 31ஆம் தேதியோடு முடியும் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கையும் இருப்புநிலைக் குறிப்பையும் பின்வருவனவற்றைக் கணக்கில் கொண்டு தயாரிக்கவும்.

1. வரிக்கு தேவைப்படும் ஒதுக்கீடு 5,00,000
2. நடப்பு கணக்கில் அதிகப் பற்றுக்காக வைக்கப்பட்டுள்ள தொகை 4250000
3. கணக்கு ஒன்றில் 50.000 ஐயக்கடன்
4. வர வேண்டிய ரூ. 25,000க்காக சொத்து ஒன்று அது ரூ. 18,000 விற்பனை செய்யப்பட்டது அதில் ஏற்பட்ட நட்டம் கணக்கில் சரிகட்டப்படவில்லை.

**விடை**

**வேணி லெட்சுமி வங்கியின் இலாப நட்டக் கணக்கு**
**2005, மார்ச் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஆண்டிற்கு**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | அட்டவணை எண் | 31.3.05 |
|---|---|---|
| I. வரவுகள் | | |
| வட்டி பெற்றது | 13 | 2,900 |
| இதர வரவுகள் | 14 | 877 |
| மொத்தம் | | 3,777 |
| II. செலவுகள் | | |
| வட்டி செலுத்தியது | 15 | 657 |
| நடைமுறை செலவுகள் | 16 | 1,850 |
| ஒதுக்கீடுகள் மற்றும் நிகழ்வடையாப் பொறுப்புகள் | | 550 |
| மொத்தம் | | 3,057 |
| III. இலாபம் | | |
| நிகர இலாபம் நடப்பு ஆண்டிற்கு | | 720 |
| இலாபம் கொண்டு வரப்பட்டது | | 426 |
| மொத்தம் | | 1,146 |

| | | |
|---|---|---|
| IV. பகிர்வுகள் | | |
| காப்பு நிதிக்கு மாற்றப்பட்டது | | 144 |
| இருப்புநிலைக் குறிப்பிற்கு எடுத்துச் செல்லப்படும் இலாபம் | | 1,002 |
| மொத்தம் | | 1,146 |

**வேணி லெட்சுமி வங்கியின் இருப்புநிலைக் குறிப்ப**

**2005 மார்ச் 31ஆம் தேதியில்**

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| முதல் மற்றும் பொறுப்புகள் | அட்டவணை எண் | 31.3.05 தேதியன்று |
|---|---|---|
| பங்கு முதல் | 1 | 5,000 |
| காப்புநிதி மற்றும் பிற இலாப மிகுதிகள் | 2 | 7,396 |
| வைப்புகள் | | |
| வைப்புகள் | | 52,850 |
| கடன்கள் | 4 | 6.100 |
| பிற பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | 5 | 3,013 |
| | | 74,359 |

| சொத்துக்கள் | அட்டவணை எண் | 31.3.05 தேதியன்று |
|---|---|---|
| ரொக்கம் மற்றம் மைய வங்கியில் இருப்பு | 6 | 654 |
| பிற வங்கிகளில் இருப்பு மற்றும் கேட்டவுடன் குறைந்த கால அறிக்கையிலும் பெறப்படும் பணம் | 7 | 3,750 |
| முதலீடுகள் | 8 | 24,950 |
| முன் பணங்கள் | 9 | 42,800 |

| | | |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 10 | 1,750 |
| பிற சொத்துக்கள் | 11 | 455 |
| | | 74359 |
| நிகழ்வடையாப் பொறுப்புகள் | 12 | 7.584 |
| வசூலிக்கான உண்டியல்கள் | | 9,050 |

### அட்டவணை 3 வைப்புகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | 31.3.05 தேதியன்று |
|---|---|---|
| கேட்பு வைப்புகள் | | 27,000 |
| சேமிப்பு வங்கி வைப்புகள் | | 8,260 |
| கால வைப்புகள் | | 17,590 |
| மொத்தம் | | 52,250 |
| கேட்பு வைப்புகள் | 22,750 | |
| கூட்டு : வங்கி அதிகப் பற்று | 4,250 | |
| | 27,000 | |

### அட்டவணை 5 பிற பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | 31.3.05 தேதியன்று |
|---|---|---|
| அலுவலகங்களுக்கிடையிலான | | 2,278 |
| சரிகட்டுதலின் (நிகரம்) | | |
| பிற (காப்புகள் உள்பட) | | |
| பற்பல கடனீந்தோர் | 227 | |
| உண்டியல் கழிவு செய்ததில் தள்ளுபடி | 8 | |
| வரி ஒதுக்கீடு | 500 | 735 |
| மொத்தம் | | 3,013 |

## அட்டவணை 9 முன்பணங்கள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| | 31.3.05 தேதியன்று |
|---|---|
| உண்டியல்கள் வாங்கியது மற்றும் கழிவு செய்த்தது | 17,750 |
| ரொக்க கடன் அதிக பற்று மற்றும் கடன் | 21,000 |
| காலக் கடன்கள் | 4,000 |
| மொத்தம் | 3,013 |

## அட்டவணை 11 பிற சொத்துக்கள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| | 31.3.05 தேதியன்று |
|---|---|
| கூடிய வட்டி | 437 |
| வங்கி சாரா சொத்துக்கள் (Non Banking Assets) | 18 |
| மொத்தம் | 3,013 |

**எடுத்துக்காட்டு : 2**

தமிழ்நாடு வங்கியின் 31.3.05 ஆம் தேதியோடு முடிவடையும் ஆண்டிற்கான இருப்பு சோதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பங்கு முதல், 10,000 ரூ. 100 வீதம் | | 10,00,000 |
| கேட்டவுடன் அல்லது குறைந்த கால அறிக்கையில் பெறப்படும் பணம் | 6,00,000 | |
| உண்டியல்கள் கழிவு செய்ததது | 2,00,000 | |
| நிலை வைப்புகள் | | 25,00,000 |
| சேமிப்பு வங்கி வைப்புகள் | | 10,00,000 |
| நடப்பு கணக்குகள் | | 12,00,000 |
| அரசு பத்திரங்களில் முதலீடுகள் | 25,00,000 | |

குறிப்பு

| | | |
|---|---|---|
| வட்டி மற்றம் தள்ளுபடி | | 8,00,000 |
| செலுத்தவேண்டிய உண்டியல்கள் | | 1,00,000 |
| கையிருப்பு உண்டியல்கள் | 4,00,000 | |
| கடன்கள் மற்றும் அதிகப்பற்று (கால கடன்கள் 10,00,000) | 23,00,000 | |
| ரொக்க கடன்கள் | 9,00,000 | |
| | பற்று ரூ. | வரவு ரூ. |
| இலாப நட்டக் கணக்கு 1.1.04 | | 1.50,000 |
| பிற வங்கியிலுள்ள ரொக்கம் | 1,46,000 | |
| ஓய்வு ஊதிய நிதி | | 50,000 |
| பிற வங்கிகளிடமிருந்து கடன்கள் | | 8,00,000 |
| வாடகை பெற்றது | | 20,000 |
| கோரப்படாத இலாப ஈவு | | 10,000 |
| கமிசன், செலாவணி மற்றம் தரகு | | 1,80,000 |
| மைய வங்கியில் வைத்துள்ள ரொக்கம் | 1,15,000 | |
| தணிக்கை கட்டணம் | 18,000 | |
| வைப்புகள் மீது செலுத்திய வட்டி | 3,00,000 | |
| சம்பளம் | 1,50,000 | |
| அச்சுக் கூலி மற்றும் எழுது பொருள் | 17,000 | |
| விளம்பரங்கள் | 5,000 | |
| தபால் செலவுகள் | 10,000 | |
| வங்கி உடமைகள் மீது தேய்மானம் | 20,000 | |
| சில்லரை செலவுகள் | 6,000 | |
| இயக்குநர் கட்டணம் | 8,000 | |
| கட்டிடம் (கழி) தேய்மானம் | 5,00,000 | |
| மனை துணை பொருட்கள் (கழி தேய்மானம்) | 65,000 | |
| காப்பு நிதி | | 5,00,000 |
| வங்கி சாரா சொத்துக்கள் | 40,000 | |
| | 83,10,000 | 83,10,000 |

பின்வரும் தகவல்களை கருத்தில் கொள்க.

1. கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் சராசரி தேதியாகிய ஜீன் 13ல் முதிர்வடைகின்றன (கருணை நாட்கள் உட்பட) அனைத்து உண்டியல்களும் ஆண்டு ஒன்றிற்கு 10 சதவீதத்தில் கழிவு செய்யப்பட்டுள்ளது.
2. ஐயக் கடன்களுக்கு ரூ. 20,000 ஒதுக்குக.
3. வசூலிக்கப்பட்ட வேண்டிய உண்டியல்கள் மதிப்பு 2,00,000
4. வாடிக்கையாளர் சார்பில் ஏற்புகள் மதிப்பு ரூ. 40,000
5. வரிக்காக ரூ. 1,00,000 ஒதுக்கீடு செய்க
6. மறு கழிவு செய்யப்பட்ட உண்டியலுக்காக ரூ. 25,000 பொறுப்பு உள்ளது.
7. 2005 ஆம் ஆண்டிற்கு 10 சதவீதம் இலாப ஈவு வழங்க இயக்குநர்கள் தீர்மானித்துள்ளனர்.
8. முதலீடுகளின் மீது கூடிய வட்டி ரூ. 23,000

2005 மார்ச் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஆண்டிற்கு இலாப நட்டக் கணக்கும் இருப்புநிலைக் குறிப்பும் தயாரிக்கவும்.

**தமிழ்நாடு வங்கியின் இலாப நட்டக் கணக்கு**

**2005 மார்ச் 31ம் தேதியொடு முடிவடையும் ஆண்டிற்கு**

(ரூ. ஆயிரத்தில்)

| | அட்டவணை எண் | 31.3.05 முடிவடையும் ஆண்டிற்கு |
|---|---|---|
| I. வரவுகள் | | |
| வட்டி பெற்றது | 13 | 819 |
| இதர வரவுகள் | 14 | 200 |
| மொத்தம் | | 1,019 |
| II. செலவுகள் | | |
| வட்டி செலுத்தியது | 15 | 310 |

குறிப்பு

உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்க உதவும் வினாக்கள் :

I. சரியா தவறா எனக் கூறவும்.

அ). ஒரு வங்கி நிறுமத்தின் கணக்கியல் ஆண்டு 31 மார்ச்ல் முடிவடையும்.

ஆ). வரி ஒதுக்கீடு 1.4.1991க்கு பின்பு வங்கி இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படுகின்றது.

இ). வங்கி நிறுமத்தின் ஏற்பு முதல் அங்கீகரிக்கப்பட்ட முதலில் குறைந்தது பாதியா வது இருக்க வேண்டும்.

ஈ). ஒரு வங்கி நிறுமம் தனது இயக்குநர்களுக்கு கடன் வழங்க இயலாது.

உ). 1.4.91க்கு முன்னால் வங்கி நிறுமம் இலாப நட்ட பகிர்வு கணக்கைத் தயாரிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| நடைமுறை செலவுகள் | 16 | 234 |
| ஒதுக்கீடுகள் மற்றும் நிகழ்வடையாப் பொறுப்புகள் | | 120 |
| மொத்தம் | | 664 |
| III. இலாபம் | | |
| நிகர இலாபம் நடப்பு ஆண்டிற்கு | | 355 |
| இலாபம் கொண்டு வரப்பட்டது | | 150 |
| மொத்தம் | | 505 |
| IV. பகிர்வுகள் | | |
| காப்பு நிதிக்கு மாற்றப்பட்டது | | 71 |
| தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு | | 100 |
| இருப்புநிலைக் குறிப்பிற்கு எடுத்துச் செல்லப்படும் இலாபம் | | 334 |
| மொத்தம் | | 505 |

**தமிழ்நாடு வங்கியின் இருப்புநிலைக்குறிப்பு**

**1995 மார்ச் 31ஆம் தேதியில்**

(ரூ. ஆயிரத்தில்)

| முதல் மற்றும் பொறுப்புகள் | அட்டவணை எண் | 31.3.05 தேதியன்று |
|---|---|---|
| பங்கு முதல் | 1 | 1,000 |
| காப்பு நிதி மற்றும் பிற இலாப மிகுதிகள் | 2 | 905 |
| வைப்புகள் | 3 | 4,700 |
| கடன்கள் | 4 | 800 |
| பிற பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | 5 | 36 |
| | | 7,769 |

(ரூ. ஆயிரத்தில்)

| சொத்துக்கள் | அட்டவணை எண் | 31.3.05 தேதியன்று |
|---|---|---|
| ரொக்கம் மற்றும் மைய வங்கியில் இருப்பு | 6 | 515 |
| பிற வங்கிகளில் இருப்பு மற்றும் கேட்டவுடனும் குறைந்த கால அறிக்கையிலும் பெறப்படும் பணம் | 7 | 746 |
| முதலீடுகள் | 8 | 2,500 |
| முன்பணங்கள் | 9 | 3,380 |
| நிலையான சொத்துக்கள் | 10 | 565 |
| பிற சொத்துக்கள் | 11 | 63 |
| | | 7,769 |
| நிகழ்வடையாப் பொறுப்புகள் | | 65 |
| வசூலுக்கான உண்டியல்கள் | 12 | 200 |

அட்டவணை 5 பிற பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்

| | | (ரூ.ஆயிரத்தில்) 31.03.05 |
|---|---|---|
| செலுத்தப்பட வேண்டிய உண்டியல்கள் | | 100 |
| உண்டியல் கழிவு செய்ததில் தள்ளுபடி | | 4 |
| ஓய்வூதிய நிதி | | 50 |
| பிற (காப்புகள் உட்பட) | | |
| வருமான வரி ஒதுக்கு | 1,00,000 | |
| தீர்மானிக்கப்பட்ட இலாப ஈவு | 1,00,000 | |
| கேட்கப்படாத இலாப ஈவு | 10,000 | |
| | 2,10,000 | 210 |
| மொத்தம் | | 364 |

குறிப்பு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). 1.4.91க்கு முன்னால் வங்கி நிறுமத்தின் வராக் கடன் ஒதுக்கீடானது இலாப நட்டக் கணக்கில் வரவு பக்கத்தில் வட்டி வருமானத்தில்......... காண்பிக்கப்படும்.

ஆ). கழிவு செய்யப்பட்ட மாற்றுச் சீட்டின் தள்ளுபடி ஒரு ............ ஆகும்.

இ). 1.4.91க்கு பின்பு வங்கியின் இலாப பகிர்வுகள் ........... கணக்கில் பதியப்படுகின்றன.

ஈ). வங்கியின் செலுத்தப்பட்ட முதல், ஏற்பு முதலில் ..........யாவது இருக்க வேண்டும்.

### அட்டவணை 9 முன்பணங்கள்

| | (ரூ. ஆயிரத்தில்) |
|---|---|
| | 31.3.05 |
| கொள்முதல் செய்யப்பட்ட மற்றும் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் | 200 |
| ரொக்கக்கடன் அதிக பற்றுகள் மற்றும் கேட்புக் கடன்கள் | 2,200 |
| காலக்கடன்கள் | |
| கழி : வராக்கடன் ஒதுக்கு | 980 |
| மொத்தம் | 3,380 |

### அட்டவணை 11 பிற சொத்துக்கள்

| | (ரூ. ஆயிரத்தில்) |
|---|---|
| | 31.3.05 |
| கூடிய வட்டி | 23 |
| வங்கி சாரா சொத்துக்கள் | 40 |
| மொத்தம் | 63 |

### அட்டவணை 14 இதர வரவுகள்

| | (ரூ. ஆயிரத்தில்) |
|---|---|
| | 31.3.05 |
| கமிஷன் செலவாணி மற்றும் தரகு | 180 |
| வாடகை பெற்றது | 20 |
| மொத்தம் | 200 |

அட்டவணை 16 நடைமுறைச் செலவுகள்

| | (ரூ. ஆயிரத்தில்) |
|---|---|
| | 31.3.05 |
| தொழிலாளர்களுக்கு செலுத்தியது மற்றும் ஒதுக்கு | 150 |
| அச்சுக்கூலி மற்றும் எழுதுபொருள் | 17 |
| விளம்பரங்கள் | 5 |
| வங்கி உடமைகள் மீது தேய்மானம் | 20 |
| இயக்குநர் கட்டணம் மற்றும் செலவுகள் | 8 |
| தணிக்கையாளர் கட்டணம் மற்றும் செலவுகள் | 18 |
| தபால் செலவுகள் | 10 |
| பிற செலவுகள் | 6 |
| மொத்தம் | 234 |

குறிப்புகள்

1. உண்டியல் கழிவு செய்ததில் தள்ளுபடி:

தள்ளுபடி 73 நாட்களுக்குள் கணக்கிடப்பட வேண்டும்

ஏப்ரல் — 30 நாட்கள்

மே — 31 நாட்கள்

ஜீன் — 12 நாட்கள்

மொத்தம் — 73 நாட்கள்

$\frac{2,00,000 \times 10 \times 73}{100 \times 365}$ = ரூபாய் 4,000

8.5. அருஞ்சொற்கள்:

சட்டபூர்வ காப்பு:

வங்கிகள் ஒழுங்கு முறைச் சட்டம் 1949ன் படி அனைத்து வங்கிகளும் அதனதன் இலாபத்தில் உருவாக்கும் காப்பு

குறிப்பு

**தள்ளுபடி செய்யப்பட்ட மாற்றுச்சீட்டின் மேல்வட்டம்:**

அடுத்த நிதி ஆண்டிற்குரிய தள்ளுபடியை நடப்பு ஆண்டில் பெற்ற வகையில் இது ஒரு முன் கூட்டி பெற்ற வருமானம்.

**செயல்படுத்தப்படாத சொத்து:**

ஆறு மாதத்திற்கு மேல் (தற்பொழுது மூன்று மாதம்) வட்டியோ அல்லது தவணைத் தொகையோ வசூலிக்கப்படாத கடன்கள்.

## 8.6. தொகுத்தறிவோம்:

அனைத்து வங்கிகளும், வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் 1949க்கு கட்டுப்பட்டவையாகும். வைப்புகளை ஏற்பதும், அதன்மூலம் கடன்கள் தருவதும் வங்கிகளின் அடிப்படை பணிகளாகும். வங்கிகளின் பணிகள் பொது மக்களின் நம்பிக்கையைப் பொறுத்தது. இந்த நம்பிக்கைக்கு எந்த ஊறும் விளையா வண்ணம் வங்கிகள் தங்கள் முடிவு கணக்கை தயாரிக்க சட்ட ஷரத்துக்கள் உதவுகின்றன. அதாவது வராக் கடன், வராக் கடன் காப்பு, வரி ஒதுக்கீடுகளை நேரடியாக காண்பிக்காமல், மறைமுகமாக சரிக்கட்டுதல் மூலமாக வெளிப்படுத்துகின்றன. இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்புகள், சட்டபூர்வ படிவத்தின்படி அட்டவணைகள் மற்றும் வரிசை எண் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் வங்கிகளுக்கு சில சிறப்பு சலுகைகள் காண்பிக்கப்பட்டாலும், இதன் செயல்பாட்டிலும் நடைமுறைகளிலும் அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, மைய வங்கியான ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன.

## 8.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் வினாக்களின் விடைகள்:

**I. சரியா, தவறா?**

அ). சரி, ஆ). தவறு, இ). சரி, ஈ). சரி உ). சரி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). கழித்து, ஆ). பொறுப்பு, இ). இலாப நட்டக் கணக்கு, ஈ). பாதி

## 8.8. மாதிரி வினாக்கள்

1). கழிவு செய்யப்பட்ட மாற்றுச்சீட்டு தள்ளுபடி எவ்வாறு உருவாகின்றது மற்றும் எவ்வாறு கையாளப்படுகின்றது?

2). ஒதுக்கீடுகள் மற்றும் உறுதியற்ற நிகழ்வுக்கு காப்பு வரைக.

3). பாதுகாப்பு வங்கியின் 31.3.1996 நாளேடு முடியும் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கை பின்வரும் விபரங்களிலிருந்து தயாரிக்க.

| | ரூ. '000 | | ரூ. '000 |
|---|---|---|---|
| வைப்பின் வட்டி | 3,200 | கழிவு செய்த மா.சீட்டு மீது | 1,490 |
| கமிஷன் (வ) | 100 | கழிவு | 1,600 |
| கடன்மீது வட்டி | 2,490 | மேல்வரைப்பற்று வட்டி | 2,320 |
| சில்லறை கட்டணம் | 100 | ரொக்கக் கடன் வட்டி | 16 |
| வாடகை ரூ வரி | 200 | இயக்குனர் கட்டணம் | 35 |
| பணியாளர்களுக்குச் செலுத்தியது | 500 | தணிக்கையாளர் கட்டணம் | |
| | | வழக்கொழிக்க வேண்டிய வராக்கடன் | 300 |

(விடை: நிகர இலாபம்: ரூ.36,49,000)

4). வாசுகி வங்கி லிட்டின் 31.3.96 நாளோடு முடியும் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கை பின்வரும் விபரங்களிலிருந்து தயாரிக்க. செயல் குறிப்பு விளக்கங்களையும் தருக.

| | ரூ. '000 | | ரூ. '000 |
|---|---|---|---|
| கடன் மீது வட்டி | 300 | சேமிப்பு வைப்பு வட்டி | 87 |
| காலக்கெடு வைப்பு வட்டி | 275 | அஞ்சல் தந்தி & | 10 |
| கழிஷன் | 10 | முத்திரை | 20 |
| மாற்றம் மற்றும் தரகு | 20 | அச்சு & எழுதுபொருள் | 10 |
| சம்பளம் மற்றும் படிகள் | 150 | சில்லறை செலவுகள் | 15 |

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| மா.சீட்டு தள்ளுபடி | 152 | வாடகை | |
| (மொ) | 240 | வரி மற்றும் உரிமம் | 10 |
| ரொக்கக் கடன் வட்டி | | தணிக்கைக் கட்டணம் | 10 |
| நடப்புக் கணக்கில் | | | |
| தற்காலிக | 30 | | |
| மேல்வரைப்பற்றின் | | | |
| மீது வட்டி | | | |
| | | | |

**கூடுதல் விபரங்கள்:** ரூ.

அ). கழிவு செய்யப்பட்ட மாற்றுச்சீட்டு தள்ளுபடி 30,000

ஆ). நிர்வாக இயக்குனர் சம்பளம் 30,000

இ). வராக்கடன் 40,000

ஈ). வருமான வரி ஒதுக்கீடு 55 சதவீதம் (ஆயிரம் ரூபாய்களில்)

உ). கடன் மீது வட்டி கணக்கில் தவறுதலாக ஐயக்கடன் வட்டி ரூ.4,000 வரவு வைக்கப்பட்டது.

ஊ). பங்காதாயத்திற்கு ஒதுக்கீடு ரூ.15,000

(விடை: நிகர இலாபம் ரூ.27,000)

5). 1996, மார்ச் 31ம் நாளன்று நியூவங்கி லிட்டின் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு வங்கியின் இலாப நட்டக் கணக்கைத் தயாரிக்க.

| | ரூ. '000 | | ரூ. '000 |
|---|---|---|---|
| வட்டி மற்றும் கழிவு பெற்றது | 3,695 | பணியாளர்களுக்கு செலுத்தியது | 200 |
| வைப்பின் மீது செலுத்திய | | இயக்குனர் கட்டணம் மற்றும் | |
| வட்டி | 2,032 | படிகள் | 30 |
| வெளியிட்ட மற்றும் ஏற்ற | | வாடகை மற்றும் வரி | |
| முதல் | 1,000 | செலுத்தியது | 100 |
| பிரிவு 17ன்படி சட்டக் காப்பு | 800 | அஞ்சல் மற்றும் தந்தி | 50 |
| கமிஷன், மற்றும் தரகு | 200 | முதலீடு விற்ற இலாபம் | 200 |
| வாடகை பெற்றது | 55 | வங்கிச் சொத்தின் தேய்மானம் | 30 |
| தணிக்கைக் கட்டணம் | 5 | எழுதுபொருள் | 50 |
| | | விளம்பரம் & பிரச்சாரம் | 15 |

**கூடுதல் விபரங்கள்:**

அ). ஒரு வாடிக்கையாளருக்கு ரூ.10,00,000 கடன் கொடுக்கப்பட்டதில், அவர் திவலா ஆனதால் 50 சதவீதம் மட்டுமே அவர் சொத்துக்களிலிருந்து பெற முடியும். அவரிடமிருந்து வரவேண்டிய வட்டி 18 சதவீதம், ஒதுக்கப்படவில்லை.

ஆ). தணிக்கையாளர்கள் அறிவுறுத்தலின்படி மற்ற கடன்கள் மீது ரூ.1,50,000க்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இ). 1.4.95 அன்று கழிவு செய்யப்பட்ட மாற்றுச்சீட்டு தள்ளுபடி ரூ.12,000. 31.3.96 அன்று இதன் தள்ளுபடி ரூ.16,000.

ஈ). வருமான வரிக்கு ரூ.6,50,000 ஒதுக்கிடுக.

உ). இயக்குனர்கள் 10 சதவீதம் பங்காதாயம் தர விரும்புகின்றனர்.

(விடை: நிகர இலாபம் ரூ.5,22,000)

6). உங்களுக்கு ஏ, பி, சி லிட்டின் 31.3.96 நாளை பேரேட்டு இருப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. சட்ட முறைப்படி இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பைத் தயாரிக்க.

| | ரூ. '000 | | ரூ. '000 |
|---|---|---|---|
| சட்டக்காப்பு | 1,200 | கமிஷன் | 45 |
| வராக்கடன் வழக்கொழிக்கப் | | ரொக்கம் | 225 |
| பட்டது | 128 | வட்டி ஈட்டிய | 550 |
| இயக்கச் செலவுகள் | 182 | ரிசர்வ் வங்கி இருப்பு | 2,030 |
| நடப்புக் கணக்கு | 20,245 | வெ. நாட்டு வங்கியிருப்பு | 1,206 |
| வட்டி செலுத்தியது | 160 | வசூலுக்கான மாற்றுச் சீட்டு | 1,500 |
| வைப்புக் கணக்கு | 6,920 | வங்கிகளிடமிருந்து கடன் | 6,482 |
| இலாப நட்டக் கணக்கு | | ரொக்க கடன் மற்றும் | |
| இருப்பு கீஃகொ | 229 | மேல்வரைப்பற்று | 15,457 |
| வாடிக்கையாளருக்காக பெற | | முதலீடுகள் | 9,882 |
| வேண்டிய மாற்றுச் சீட்டு | 1,50 | மாற்றுச் சீட்டு கழிவு | 6,228 |
| கழிவு | 244 | செய்தது | 2,217 |
| புறங்குறிப்பு & உத்தரவாதம் | 575 | கட்டிடம் | 2,000 |
| | | பங்குமுதல் | |

**கூடுதல் விபரங்கள்:**

1). கழிவு செய்யப்பட்ட மாற்றுச்சீட்டு தள்ளுபடி ரூ.64,000 ஒதுக்க வேண்டும்.

2). இந்த ஆண்டு வங்கி தந்த இடைக்கால பங்காதாயம் ரூ.2,00,000.

(விடை: நிகர இலாபம் ரூ.30,500, இருப்பு நிலைக் குறிப்பு மொத்தம் ரூ.3,72,45,000)

# பாடம் 9

# காப்பீட்டுக் கணக்குகள்

கட்டமைப்பு

9.0. அறிமுகம்

9.1. கற்றல் நோக்கங்கள்

9.2. ஆயுள் காப்பீட்டுத் தொழில் உபயோகப்படுத்தப்படும் பல வாசகங்கள்

9.3. இருப்புநிலைக் குறிப்பு மாதிரி (பொது காப்பீட்டுத் தொழில்)

9.4. இலாப நட்டக் கணக்கு மாதிரி

9.5. அருஞ்சொற்கள்:

9.6. தொகுத்தறிவோம்

9.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் வினாக்களின் விடைகள்

9.8. மாதிரி வினாக்கள்

## 9.0. அறிமுகம்:

ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கை அல்லது ஒரு நிறுவனத்தின் முன்னேற்றப் பாதையில் தடைக்கற்களாக குறுக்கிடுவது ‘இடராகும்’. இடரானது இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படும். இடரினால் ஏற்படும் நட்டம், ஒருவரை அல்லது ஒரு நிறுவனத்தை மட்டும் பாதிக்கவிடாமல், அதை பரவலாக்குவதே காப்பீடாகும். இடரினால் ஏற்படும் நட்டம் பங்கிடப்படுகின்றது. இதற்கு அவர்கள் முனைமம் எனப்படும் பங்கீட்டுத் தொகையை செலுத்த வேண்டும். இது காப்பீட்டு நிறுமம் என்று அழைக்கப்படும். அரசு அல்லது தனியார் காப்பீட்டு நிறுமத்தினால் செயல்படுத்தப்படுகின்றது. காப்பிடுகள் ஆயுள், பொது மற்றும் சமுதாயக் காப்பீடு என பல வகைப்படும். அரசு மட்டுமே

செயல்படுத்தி வந்த காப்பீடு வணிகத்தை 1990க்குப் பின்பு தனியார் மயமாக்கியதால், பெருமளவில் விழிப்புணர்வு ஏறப்படுத்தப்பட்டு இன்று அனைத்து மக்களும் மற்றும் நிறுவனங்களும் ஏதேனும் ஒருவகையில் தங்களுக்கு ஏற்படும் நட்டங்களை பரவலாக்கி வருகின்றனர். இன்று விவசாய விளைபொருட்கள் மற்றும் கால்நடைகள் கூட காப்பீட்டுத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

## 9.1. கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பிரிவைப் படித்த பின்பு நீங்கள்

— காபீட்டு ஒப்பந்தத்தை வரையறுக்க முடியும்

— காப்பீட்டு கணக்கியலில் பயன்படுத்தப்படும் பல முக்கிய பதங்களின் அர்த்தங்களை விவரிக்க இயலும்.

— பல்வேறு காப்பீட்டு வணிகங்கள் மேற்கொள்ளும் காப்பீட்டு நிறுவனங்களின் இறுதிக் கணக்குகளை தயாரிக்க முடியும்.

காப்பீடு அளிப்பவர் என்ற ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட தொகையினை — காப்பீட்டுக் கட்டணம் என்ற மறுபயனை—பெற்றுக்கொண்டு காப்பீடு பெறுபவர் என்ற மற்றொரு நபருக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்தலுக்காக அவர்களிடையே உருவாக்கப்பட்ட ஒரு ஒப்பந்தமே காப்பீடு ஆகும். எதிர்பாராமல் ஏற்பட்ட நட்டங்களிலிருந்து விடுபட விரும்பும் அனைத்து நபர்களிடமிருந்தும் காப்பீடு அளிப்பவர் காப்பீட்டுக் கட்டணங்களை பெறுகிறார். ஏற்பட்ட நட்டத்திற்குச் சமமான அல்லது ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள நட்டத்தின் அளவிற்கான தொகையை அந்நட்டத்தால் அவதியுறும் நபருக்கு காப்பீடு அளிப்பவர் செலுத்துகிறார். நட்டத்தால் அவதியுறாத நபர்கள் தாங்கள் செலுத்திய காப்பீட்டுக் கட்டணத்தை மட்டும் இழக்கின்றனர். ஒரு காப்பீடு ஒப்பந்தத்தின் விதிகள் அடங்கிய ஒரு பத்திரத்தை பாலிசி என்கிறோம். ஆனால் ஆயுள் காப்பீட்டில் காப்பீடு பெறுபவர் ஒரு குறிப்பிட்ட வயதினை அடைந்தாலோ அல்லது அவர்

இறந்து விட்டாலோ தொகையை செலுத்தலுக்கான ஓர் உறுதி இங்கு இருப்பதால் ஆயுள் காப்பீட்டினை ஆயுள் காப்புறுதி என்றும் அழைக்கலாம். ஏற்படும் நட்டம் அம்சத்தின் தன்மைக்கேற்ப "தீ"க்காப்பீடு, கடல் காப்பீடு, பல்வகைக் காப்பீடு போன்று பல்வேறு காப்பீட்டு ஒப்பந்தங்கள் உள்ளன. ஆயுள் காப்பீட்டினைத் தவிர ஏனைய அனைத்து காப்பீடுகளும் பொதுக் காப்பீட்டினுள் அடங்கும். பொதுக் காப்பீட்டுத் தொழில்களை 1971ல் மத்திய அரசு தானே எடுத்துக் கொண்டு 1972ல் அவைகளைத் தேசிய மயமாக்கிறது. இப்போது இதில் தனியார் துறையினரும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## 9.2. ஆயுள் காப்பீட்டுத் தொழில் உபயோகப்படுத்தப்படும் பல வாசகங்கள்

**காப்பீடு அளிப்பவரும் காப்பீடு பெறுபவரும்**

ஒரு காப்பீடு ஒப்பந்தத்தில் காப்பீடு அளிப்பவர் என்பவர் காப்பீட்டுக் கட்டணம் எனும் ஒரு மறுபயனைப் பெற்றுக் கொண்டு காப்பீடு பெறுவார் எனும் மற்றொரு நபருக்கு ஏற்படும் நட்டத்தினை ஈடு செய்ய உறுதி அளிப்பவர் ஆவார்.

**பாலிசி**

காப்பீடு ஒப்பந்தத்தின் வாசகர்கள் அடங்கிய ஒரு பத்திரமே பாலிசி ஆகும்.

**ஆயுள் பாலிசியும் காலவரைப் பாலிசியும்**

காப்பீடு பெறுபவர் இறக்கும் பொழுது மட்டும் ஆயுள் பாலிசி முதிர்வடைகிறது. காப்பீடு பெறுபவர் ஒரு குறிப்பிட்ட வயதினை அடைந்த போது அல்லது அவ்வயதினை அடைவதற்குள் அவர் இறந்து விட்டால் அப்போது காலவரையறை முதிர்வடைகிறது,

## மேலூதியம்

இலாபத்தின் ஒரு பங்கினை ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவிலிருந்து ஒரு பாலிசியின் உடையவர் பெறுதலை மேலூதியம் என்கிறோம். 'மீள்வு மேலூதியம்' என்பது பாலிசி முதிர்வடையும் போது மட்டுமே செலுத்தப்படுகிறது. ஆனால், 'ரொக்க மேலூதியம்' உடனடியாகச் செலுத்தப்படுகிறது. 'காப்பீட்டுக் கட்டணத்தில் குறைக்கப்படும் மேலூதியம்' என்பது ரொக்கமாகச் செலுத்தப்பட வேண்டியதாக இருந்தாலும் பாலிசியின் உடையவர் இத்தொகையினை தான் கொடுக்க சரிகட்டிக் கொள்கிறார். "இடைக்கால மேலூதியம்" என்பது இலாபத்தினை மதிப்பிடாதபோது ஒரு முதிர்வடையும் பாலிசிக்காக செலுத்தப்படும் மேலூதியம் ஆகும். காலம் வைத்திருக்க வேண்டியிருப்பதால் நடப்பாண்டில் பெற்ற காப்பீட்டுக் கட்டணங்கள் முழுவதையும் அவ்வாண்டில் வருமானம் எனக் கொள்ளுதல் சரியன்று. அதே நேரத்தில் ஒவ்வொரு முடிவடையாப் பாலிசிக்கும் தனித்தனியாக கணக்கிடுதலும் மிகச் சிரமமானதாகும். எனவே அவ்வாறான காப்பீட்டுக் கட்டணத்தில் ஒரு சரியான பகுதியை முடிவடையா நட்டவச்சத்தினைச் சமாளிப்பதற்காக அடுத்த ஆண்டிற்கு மாற்ற வேண்டும். இதனை முடிவடையா நட்டவச்சக் காப்பு என அழைக்கின்றோம்.

## அதிகப்படியான காப்பு

வசூலான காப்பீட்டுக் கட்டணத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையினை எடுத்து நிதியாண்டின் இறுதித் தேர்வில் செலுத்த வேண்டியுள்ள பாலிசிகள் கோரிக்கைகளைச் செலுத்துதலுக்குத் தேவையான தொகைக்காக முடிவடையா நட்டவச்சக் காப்பு உண்டாக்கப்பட்டிருந்தாலும் விவேகமுள்ள கம்பெனிகள் இன்னும் அதிகமான காப்புகளை உருவாக்க முயற்ச்சிக்கின்றன. இவ்வாறு கம்பெனியின் நிலைத் திடப்படுத்தலுக்காக நிகர காப்பீட்டுக் கட்டணத்திற்குச் சமமாக உருவாக்கப்பட்ட காப்பு அதிகப்படியான காப்பு இருக்கும் பட்சத்தில்

அதனைக் கணக்கின் வரவுப் பக்கத்தில் எழுத வேண்டும். ஆண்டின் இறுதியில் இதே தொகையினை மதிப்பையாவது மறுபடியும் அதிகப்படியான காப்பாக உருவாக்கப்பட வேண்டும்.

**மறு காப்பீடு**

ஒரு குறிப்பிட்ட காப்பீடு ஒப்பந்தத்தால் கணக்கு நட்டத்தினை குறைத்தலுக்காக ஒரு காப்பீட்டுக் கம்பெனி பாலிசித் தொகையின் ஒரு பகுதி அல்லது சில நட்டங்களை மற்றொரு காப்பீட்டுக் கம்பெனியில் காப்பீடு செய்கிறது. உதாரணமாக X என்னும் கம்பெனியில் ஒரு கட்டிடம் 50,000க்கு காப்பீடு செய்கிறது. X கம்பெனி தன்னுடைய நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்காக அதே கட்டிடத்தை Y என்னும் கம்பெனியில் காப்பீடு செய்யலாம். இங்கு X கம்பெனிக்கும் Y கம்பெனிக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம் மறு காப்பீடு ஆகும். மேலும் Y கம்பெனி தன்னுடைய நட்டத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பினால், அதே கட்டிடத்தை Z என்னும் கம்பெனியில் காப்பீடு செய்துவிடலாம். இவ்வாறு செய்தலை திரும்ப ஒப்படைத்தல் என்கிறோம். மறு காப்பீடுக் கட்டணத்தின் மீது ஒரு கமிஷனை அளிக்கிறது. இங்கு செலுத்துகின்ற கம்பெனியில் இக்கமிசன் ஏற்ற மறுகாப்பீட்டின் மீதான கமிசன் என ஒரு பற்றிருப்பாக இருக்கும். இக்கமிசனைப் பெறுகின்ற கம்பெனியில் இக்கமிசன் ஒரு வருமானம் ஆகும். இதனை அளித்த மறுகாப்பீட்டினை மீதான கமிசன் என அழைக்கலாம்.

**சராசரி ஷரத்து**

பாலிசியின் தொகை காப்பீடு பொருளின் மதிப்பினைக் காட்டிலும் குறைவாயிருக்கும் போது, இச்சரத்தின்படி காப்பீடு பெறுபவர் மொத்த நட்டத்தைக் காட்டிலும் ஒரு குறைவான தொகையைப் பெறுவார். குறை காப்பீடு செய்தலை தவிர்த்தலுக்காகவே இச்சரத்து உருவாக்கப்பட்டது.

உதாரணமாக ரூ.20,000 மதிப்புள்ள சரத்து ரூ.15,000க்கு உருவாக்கப்பட்டது. இங்கு ஏற்பட்ட நட்டம் ரூ.12,000 மானால் காப்பீடு அளிப்பவரால் ஏற்கப்பட்ட கோரிக்கை ரூ.9,000.

$$\left\{\frac{15000}{2000} \text{x} 12000\right\}$$ மாகும்.

**பின் நிகழ்கின்ற நட்டம்**

ஒரு தீ விபத்து ஏற்படும் பொழுது அவ்விபத்தினால் வணினத்தின் சொத்துக்களாகிய சரக்குகள் கட்டிடம் நிலம் போன்றவைகள் மட்டும் அழிவதில்லை. அச்சொத்துக்களை மறுபடியும் சரி செய்தல் வரையிலும் அந்நிறுவனத்தின் வணிகஞ் செய்யும் திறனம் தீ விபத்தினால் பாதிக்கப்படுகிறது. உற்பத்தி பாதிக்கப்பட்டபோது, இதன் காரணமான அந்நிறுவனத்தின் இலாபமும் பாதிக்கப்படுகிறுது. மேலும் இங்கு மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற நடைமுறைச் செலவுகள் மீட்க முடியாது.

**விடு மதிப்பு**

ஒரு பாலிசியின் உடையவர் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதலை நடுவில் நிறுத்திக் கொண்டு பாலிசியினை திரும்ப ஒப்படைத்த பொழுது, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவிலிருந்து விடு மதிப்பு என ஒரு குறிப்பிட்ட தொகையினை அப்பாலிசியினை உடையவர் பெறுகிறார். செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணங்களின் எண்ணிக்கையின் விகிதத்திற்கேற்ப பாலிசியின் தொகை குறிக்கப்பட்டு செலுத்தப்படுகிறது.

**கோரிக்கைகள்**

கோரிக்கை என்பது ஒரு காப்பீட்டுக் கம்பெனியினால் செலுத்தப்பட வேண்டிய தொகையே ஆகும். ஒரு ஆயுள் காலப் பாலிசியில் இத்தொகை அப்பாலிசியின் உடையவர் இறந்த போது செலுத்தப்பட வேண்டும். காலவரையறைப் பாலிசியில் இத்தொகை அப்பாலிசியின் உடையவர் ஒரு

குறிப்பிட்ட வயதை அடைந்த போதோ அல்லது அவ்வயதினை அடையும் முன் அவர் இறந்த போதோ செலுத்தப்பட வேண்டும். பாலிசியில் சொல்லப்பட்ட வயதினை பாலிசியின் உடையவர் அடைந்த போது செலுத்தப்படும் கோரிக்கைகள் முதிர்வினாலான கோரிக்கைகள் என்கிறோம்.

**தீக்காப்பீடு**

தீ காப்பீடு என்பது ஒரு வகையான காப்பீடு ஆகும். இக்காப்பீட்டில் காப்பீட்டுப் பாலிசியில் அடங்கியுள்ள காலத்தில் பெற்றவருடைய சொத்திற்கு தீயினால் ஏற்பட்ட அழிவு அல்லது சேதத்தால் அவருக்கு உண்டான ஒரு நட்டத்தை சரி செய்தலுக்கு உறுதியளிக்கிறார். இக்காப்பீடு தீயினால் ஏற்படும் நட்டங்களுக்கெதிராக ஏற்படுத்தப்பட்ட ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். காப்பீடு பெறுபவர் காப்பீட்டுக் கட்டணத்தை ஆண்டுத் தொகையாகவோ அல்லது அரையாண்டுத் தொகையாகவோ செலுத்துகிறார். தீ விபத்து ஏற்பட்ட போது தீயினால் ஏற்பட்ட நட்டம் அல்லது பாலிசியில் குறிக்கப்பட்டுள்ள தொகையின் அளவு ஆகிய இரண்டில் குறைவானதோர் தொகை காப்பீடு பெறுபவருக்குச் செலுத்தப்படும்.

**நட்டவச்சம்**

தற்காலிக பாதுகாப்புக் குறிப்பு (ஊழளநச ழெவந) வழங்கப்பட்டவுடனேயே அப்பாலிசியின் மீதான நட்டவச்சம் ஆரம்பித்து விடுகிறது. இது அப்பாலிசியின் காலம் முழுவதும் தொடர்ந்திருக்கிறது. ஒரு தீ பாலிசியினால் பாதுகாக்கப்படுகிறது. தீயினால் ஏற்பட்ட நட்டத்தை மட்டுமேயாகும். பாதுகாப்புக் குறிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து முறையான பாலிசி வழங்கப்படும் தேதி வரையிலும் அக்குறிப்பு ஒரு தற்காலிகப் பாலிசியாகப் பயன்படுத்தப்படுகிறது. காப்பீடு பெறுபவரிடமிருந்து ஒரு காப்பீட்டிற்கான வேண்டுகோளைப் பெற்றவுடன் இப்பாதுகாப்புக் குறித்து வழங்கப்படுகிறது.

### கடல் காப்பிடு

கடல் அபாயங்களான தீ விபத்து, கடற்கொள்ளை திருடு கப்பலைத் தாக்க அதன் சரக்குகளை கடலில் எறிதல் போன்றவற்றால் ஏற்படும் நட்டங்களை காப்பீடு அளிப்பவர் ஈடு செய்வதற்காகச் செய்யப்படும் ஒரு வகையான காப்பீடே கடல் சார் காப்பீடு எனப்படுகிறது. இவ்வாறு ஈடு செய்தலுக்கு மறுபயனாக காப்பீடு பெறுபவர் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துகிறார். இவ்வகையான காப்பீடு கடல் கடந்த வணிகத்திற்கு பெரிதும் உதவுகிறது.

### முடிவடையா நட்டவச்சக் காப்பு

தீ அல்லது கடல் காப்பீட்டுப் பாலிசிகள் ஒரு குறைந்த காலத்திற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. பொதுவாக அவைகளின் காலம் ஒரு ஆண்டு என நிர்ணயிக்கப்படுகிறது. இப்பாலிசிகள் ஒரு ஆண்டின் பல தேதிகளில் வழங்கப்படுகிறது. ஆகவே கணக்குகளை முடிக்கின்ற கடைசி நாளன்று பல பாலிசிகள் முதிர்வடையாமல் உள்ளன. அடுத்து வருகின்ற ஆண்டிலும் இப்பாலிசிகளை கொஞ்ச சில நேரங்களில் வேறு கட்டிடங்களை வாடகைக்கு அமர்த்தலாம். செலவுகளனைத்தையும் மொத்தமாக பின் நிகழ்கின்ற நட்டம் என்கிறோம். ஒரு பாலிசியினை எடுக்கும் போது ஒரு கோரிக்கையில் மேற்கூறிய நட்டத்தைச் சேர்ப்பதற்காக இந்த பின் நிகழ்கின்ற நட்டமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

### இரட்டைக் காப்பீடு

ஒரு சொத்து அல்லது பொருளினை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காப்பீடு அளிப்பாளர்களிடம் காப்பீடு செய்யும் பொழுது அக்காப்பீட்டை இரட்டை அல்லது பன்மடங்குக் காப்பீடு என்கிறோம். இதனை இலாபம் ஈட்டுவதற்கான ஒரு முறையாக உபயோகப்படுத்த முடியாது. எடுக்கப்பட்ட பாலிசிகளின் எண்ணிக்கை மற்றும் காப்பீட்டுத் தொகை எவ்வாறிருந்தாலும் காப்பீடு அளிப்பவர்களில் ஒருவரிடமோ

அல்லது எல்லாரிடமிருந்தோ காப்பீடு பெறுபவர் தனக்கு ஏற்பட்ட நட்டத்தைக் காட்டிலும் அதிகமான தொகையைப் பெற முடியாது.

இந்திய காப்பீட்டுச் சட்டம் 1938ன்படி காப்பீட்டுக் கம்பெனியானது வருவாய் கணக்கு, இலாப நட்டக் கணக்கு, இலாப நட்டப் பகிர்வுக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகிய முடிவு கணக்குகளைத் தயாரிக்க வேண்டும். இதற்கென பரிந்துரைக்கப்பட்டுள்ள படிவங்கள் உள்ளன.

ஒரு ஆண்டிற்கான கம்பெனியின் பெறுதல் மற்றும் செலுத்துதல்களை முடிவடையா நட்டவச்சக் காப்பு, அதிகப்படியான காப்பு மற்றும் வருவாய் கணக்கின் இருப்பு ஆகியவற்றைக் காண்பித்தல் வருவாய்க் கணக்கின் நோக்கமாகும். சட்டத்தின்படி தீ மற்றும் விபத்துக் காப்பீட்டுக் கம்பெனிகளில் வசூலிக்கப்பட்ட நிகரக் காப்பீட்டுக் கட்டணத்தில் 40 சதவீதத்தை முடிவடையா நட்டவச்சக் காப்பிற்கு ஒதுக்க வேண்டும். ஆனால் இக்காப்பீட்டிற்கு 50 சதவீதம் வரை ஒதுக்குவதற்கு வருமான வரித்துறையினர் அனுமதிக்கின்றனர். இதே போல் கடல் காப்பீட்டிற்கு வசூலிக்கப்பட்ட காப்பீட்டுக் கட்டணத்தில் 100 சதவீதத்தை முடிவடையா நட்ட வச்சக் காப்பிற்காக ஒதுக்க வேண்டும்.

வருவாய் கணக்கில் வரவு வைக்க வேண்டியவைகள்:

அ). ஆண்டின் தொடக்கத்திலுள்ள முடிவடையா நட்ட வச்சக் காப்பிற்கான தொகை

ஆ). மறு காப்பீட்டுக் கட்டணத்தைக் கழித்த பின்னுள்ள காப்பீட்டு கட்டணங்கள்

இ). வட்டியும், இலாப ஈவும் (கழி வருமான வரி) மற்றைய வருமானங்கள் ஆகியன வருவாய்க் கணக்கில் பற்று வைக்க வேண்டியவைகள்

வருவாய்க் கணக்கில் பற்று வைக்க வேண்டியவைகள்

அ). கோரிக்கைகள் (மறுகாப்பீட்டிலான தொகையை கழித்த பின்)

ஆ). முகவர்களுக்குச் செலுத்தப்பட்ட கமிசன்

இ). நிர்வாகச் செலவுகள்

ஈ). இதர செலவுகள் மற்றும் நட்டங்கள்

உ). ஆண்டிறுதியில் தேவைப்படும் முடிவடையாக் காப்பு

எந்தவொரு குறிப்பிட்ட காப்பீட்டையும் சாராத செலவுகள் நட்டங்கள் மற்றும் இலாபங்கள் அனைத்தும் எழுதப்படுகின்ற இலாப நட்டக் கணக்கிற்கே வருவாய்க் கணக்கில் உள்ள இலாபம் அல்லது நட்டமும் மாற்றப்படுகிறது.

## 9.3. இருப்புநிலைக் குறிப்பு மாதிரி (பொது காப்பீட்டுத் தொழில்)

**பகுதி II**

**படிவம் A**

| பொறுப்புகள் | சொத்துக்கள் |
|---|---|
| பங்குதாரர்களின் முதல்: | கடன்கள்: |
| அனுமதிக்கப்பட்டது | இந்தியாவிற்குள் சொத்து மீதான |
| ஒப்பியது | அடமானங்கள் |
| அழைக்கப்பட்டது | இந்தியாவிற்கு வெளியே சொத்து |
| கழிக்க: செலுத்தப்படாத அழைப்புக்கள் | மீதான அடமானங்கள் |
| காப்பு மற்றும் நிகழ்வடையா | முனிசிபல் மற்றும் இதர பொது |
| கணக்குகள் | நிறுவனங்கள் தந்த பத்திரங்கள் மீது |
| முதலீடு காப்பு கணக்கு | பங்குகள் மீது |
| இலாப நட்டப் பகிர்வு கணக்கு இருப்பு | வீடு மதிப்புக்கு உட்பட்ட காப்பீடு |
| | அளிப்பரிவன் பாலிசிகள் மீது |
| | துணைக் கம்பெனிகளுக்கு |

குறிப்பு

| | |
|---|---|
| நிதிகள் மற்றும் கணக்குகளின் இருப்பு | துணைக் கம்பெனிகளின் கடன் |
| ஆயுள் காப்பீட்டு நிதி | பத்திரங்கள் துணைக் கம்பெனிகளின் |
| தீ காப்பீட்டுத் தொழில் கணக்கு | சாதாரணப் பங்குகள் |
| கடல் காப்பீட்டுத் தொழில் கணக்கு | |
| பல்வகைக் காப்பீட்டுத் தொழில் | முதலீடுகள் |
| கணக்கு | இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்பு |
| ஓய்வூதியக் கணக்குகள் | இந்திய அரசுப் பத்திரங்கள் |
| | பிரிட்டிஷ், பிரிட்டிஷ் காலனிய பிரிட்டிஷ் |
| | டொமினியன் அரசு பத்திரங்கள் |
| | வெளிநாட்டு அரசு பத்திரங்கள் |
| கடன்கள் மற்றும் முன் பணங்கள் | இந்திய முனிசிபல் பத்திரங்கள் |
| செலுத்துதற்குரிய உண்டியல்கள் | பிரிட்டிஷ் மற்றும் காலனி பத்திரங்கள் |
| தரப்பட வேண்டிய கோரிக்கைகள் | வெளிநாட்டுப் பத்திரங்கள் |
| தொடர்பான எதிர்பார்க்கப்படும் | இந்திய அரசு அல்லது ஒரு மாநில |
| பொறுப்பு | அரசால் வட்டி உறுதி செய்யப்பட்ட |
| தரப்பட வேண்டிய இலாப ஈவுகள் | பத்திரங்கள் |
| காப்பீட்டுத் தொழில் நடத்தும் இதர | பிரிட்டிஷ் அல்லது எந்தவொரு காலனி |
| நபர்கள் அல்லது நிறுவனங்களுக்குத் | அரசால் வட்டி உறுதி செய்யப்பட்ட |
| தரப்பட வேண்டிய தொகைகள் | பத்திரங்கள் |
| தரப்பட வேண்டிய செலவுகள் மற்றும் | எந்தவொரு வெளிநாட்டு அரசாலும் |
| வரிகள் உள்ளிட்ட பற்பல கடனீந்தோர் | வட்டி உறுதி செய்யப்பட்ட பத்திரங்கள் |
| காப்பீடு தருபவர் தர வேண்டிய இதர | இந்தியாவின் எந்தவொரு ரயில்வேயின் |
| தொகைகள் | கடன் பத்திரங்கள் |
| நிகழ்வடையாப் பொறுப்புகள் | இந்தியாவிற்கு வெளியே எந்தவொரு |
| | ரயில்வேயின் கடன் பத்திரங்கள் |
| | இந்தியாவுக்கு வெளியே எந்தவொரு |
| | ரயில்வேயின் முன்னுரிமைப் பங்குகள் |
| | ரயில்வேயின் சாதாரணப் பங்குகள் |
| | i). இந்தியாவின் ii). இந்தியாவுக்கு |
| | வெளியே பதிவு செய்யப்பட்ட கம்பெனி |
| | களின் இதர கடன் பத்திரதாரர்கள் |

| | |
|---|---|
| <br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>———————<br><br>ரூ. | i). இந்தியாவில் ii). இந்தியாவுக்கு வெளியே உள்ள துணைக் கம்பெனிகளின் கட்டடங்கள்<br>குத்தகை மற்றும் சொந்த நிலங்களின் வாடகைகள்<br>ஏஜென்டுகளின் இருப்புகள்<br>வரவேண்டிய பிரிமியங்கள்<br>வர வேண்டிய வட்டி, லாப ஈவு, வாடகை காப்பீட்டு தொழில் நடத்த பிற மனிதர்கள், நிறுவனங்களிடமிருந்து வர வேண்டிய தொகைகள்,<br>பற்பல கடனாளிகள்<br>வரவுக்குரிய உண்டியல்<br>ரொக்கம்<br>வைப்பு கணக்கில் வங்கிகளில்<br>நடைமுறை கணக்கில் வங்கிகளில்<br>குறைந்த காலத்தில் எடுக்கக் கூடியது<br>இதர கணக்குகள்<br>———————————<br>ரூ. |

## 9.4. இலாப நட்டக் கணக்கு மாதிரி

### படிவம் — B

### 20..... முடிய ஓராண்டுக்கானது

ப வ

| | |
|---|---|
| காப்பீடு தருபவரின் இலாபத்தின் மீதான இந்திய (மத்திய அரசு) வரிகள் | வட்டி இலாப, ஈவு, வாடகை பெற்றது |
| நிர்வாகச் செலவுகள் | கழிக்க இவற்றின் மீதான வருமான வரி முதலீடுகள் விற்றதில் இலாபம் |
| முதலீடுகள் விற்றதில் நட்டம் | முதலீடுகளின் மதிப்பு உயர்வு |

| | |
|---|---|
| காப்புகள் ஒதுக்கீடு | வருவாய்க் கணக்குகளிலிருந்து |
| முதலீடுகள் மீது தேய்மானம் | இலாபம் மாற்றப்பட்டது. |
| வருவாய் கணக்குகளின் | மாற்றல் கட்டணங்கள் |
| நட்டம் மாற்றப்பட்டது | இதர வருமானம் |
| இதர செலவுகள் | நட்ட இருப்பு பகிர்வு |
| இலாப இருப்பு பகிர்வு கணக்கிற்கு | கணக்கிற்கு கொண்டு |
| கொண்டு செல்லப்பட்டது | செல்லப்பட்டது. |
| ———————— | ———————— |
| ரூ. | ரூ. |

## படிவம் — C

### இலாப நட்டக் பகிர்வுக் கணக்கு

### 20..... முடிய ஓராண்டுக்கானது

| ப | வ |
|---|---|
| கடந்த ஆண்டு நட்ட இருப்பு | கடந்த ஆண்டு இலாப இருப்பு |
| நடப்பு ஆண்டு இலாபநட்டக் | கழிக்க: கடந்த ஆண்டுக்கான |
| கணக்கின் (படிவம் Bயின்படி) நட்ட | இலாப ஈவுதரப்பட்டது |
| இருப்பு நடப்பு ஆண்டுக் கணக்கில் | நடப்பு ஆண்டு இலாப நட்டக் |
| இலாப ஈவு தரப்பட்டது குறிப்பிட்ட | கணக்கின் (படிவம் Bயின் படி) |
| நிதி அல்லது கணக்கிற்கு | இலாப இருப்பு |
| மாற்றப்பட்டது | இருப்பு நிலைக்குறிப்பிற்கு கொண்டு |
| இருப்பு நிலைக் குறிப்பிற்கு கொண்டு | செல்லப்படும் நட்ட இருப்பு |
| செல்லப்படும் இலாப இருப்பு | |
| ———————— | ———————— |
| ரூ. | ரூ. |

## படிவம் — D

## வருவாய் கணக்கு (ஆயுள் காப்பீட்டுத் தொழிலுக்கு)

### 20... முடிய ஓராண்டுக்கானது

| | இந்தியா விற்குள் தொழில் | இந்தியா விற்கு வெளியே தொழில் | மொத்தம் | | இந்தியா விற்குள் தொழில் | இந்தியா விற்கு வெளியே தொழில் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. | ரூ. |
| பாலிசிகளின் பேரில் கோரிக்கைகள் | | | | ஆண்டுத் துவக்கத்தில் நிதியின் இருப்பு | | | |
| கோரிக்கைகளுக்கான ஒதுக்கீடு | | | | மறு காப்பீடு போக பிரீமியம் | | | |
| மறு காப்பீடு: | | | | i). முதலாண்டு பிரிமியம் | | | |
| மரணம் | | | | அதிகபட்ச பிரிமியம் | | | |
| முதிர்வு | | | | காலம் இரண்டு ஆண்டுகள் | | | |
| மறு காப்பீடு போக ஆண்டுத் தொகைகள் | | | | மூன்று ஆண்டுகள் | | | |
| விடு மதிப்புகள் | | | | நான்கு ஆண்டுகள் | | | |
| மறு காப்பீடு போக ரொக்க போனசுகள் | | | | ஐந்து ஆண்டுகள் | | | |
| மறு காப்பீடு போக பிரிமியம் குறைப்பில் போனஸ் | | | | ஆறு ஆண்டுகள் | | | |
| நிர்வாகச் செலவுகள்: | | | | ஏழு ஆண்டுகள் | | | |
| 1. காப்பீடு ஏஜெண்டுகளுக்கு கமிசன் | | | | எட்டு ஆண்டுகள் | | | |
| 2. சம்பளம் | | | | ஒன்பது ஆண்டுகள் | | | |
| 3.போக்குவரத்துச் செலவுகள் | | | | பத்து ஆண்டுகள் | | | |
| | | | | பதினோரு ஆண்டுகள் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. இயக்குநர்கள் ஊதியம் | | | | பதின்ரெண்டு ஆண்டுகள் |
| 5. தணிக்கையாளர் ஊதியம் | | | | அல்லதுஆயுள் முழுக்க |
| 6. மருத்துவக் கட்டணம் | | | | உள்ளிட்ட அதற்கு மேற்பட்ட காலம் |
| 7. சட்டச் செலவுகள் | | | | ii). புதுப்பிக்கப்பட்ட பிரிமியங்கள் |
| 8. விளம்பரங்கள் | | | | iii). ஒற்றை பிரிமியங்கள் |
| 9. அச்சுக் கூலி எழுதுபொருள் | | | | மறு காப்பீடு போக அனுமதிக்கப்பட்ட ஆண்டுத் |
| 10. இதர நிர்வாகச் செலவுகள் | | | | தொகைகளுக்கான மறுபயன் |
| 11. சொந்த அலுவலகக் கட்டட வாடகைகள் | | | | வருமானவரி போக வட்டி, இலாப ஈவு மற்றும் |
| 12. இதர அலுவலகங்களுக்கான வாடகைகள் | | | | வாடகைகள் |
| வராக் கடன்கள் | | | | பதிவுக் கட்டணங்கள் |
| பிரிட்டிஷ் இண்டியன் டொமினியன் | | | | இதர வருமானங்கள் |
| மற்றும் வெளிநாட்டு வரிகள் | | | | இலாப நட்டக் கணக்கிற்கு |
| இதர செலவுகள் | | | | மாற்றப்பட்ட நட்டம் |
| இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்ட | | | | பகிர்வுக் கணக்கிலிருந்து மாற்றப்பட்டது |
| இலாபம் | | | | |
| இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்படும் | | | | |
| நடப்பு ஆண்டு இறுதியிலான | | | | |
| நிதி இருப்பு | | | | |

## படிவம் — F

## வருவாய் கணக்கு மாதிரி

### (தீ காப்பீடு, கடல் காப்பீடு, பல்வகைக் காப்பீடு தொழில்களுக்கானது)

### 20... முடிய ஓராண்டுக்கானது

| ப. | வ. |
|---|---|
| காப்பீடு போக பாலிசிகள் மீதான கோரிக்கைகள்: | ஆண்டு துவக்கத்தில் இருப்பு |
| நடப்பு ஆண்டில் தரப்பட்டது | எதிர்பாராத நட்டங்களுக்கான காப்பு |
| ஆண்டு இறுதியில் தரப்பட வேண்டியது | கூடுதல் காப்பு |
| | மறு காப்பீடு போக பிரிமியம் |
| கழிக்க: கடந்த ஆண்டில் தரப்பட வேண்டியது | வருமான வரி போக வட்டி |
| கமிசன் | இலாப ஈவு மற்றும் வாடகை |
| நேரடித் தொழில் மீது கமிசன் | நிராகரிக்கப்பட்ட மறு காப்பீடு மீதான கமிசன் |
| ஒப்புக் கொள்ளப்பட்ட மறு காப்பீட்டின் மீது கமிசன் | இதர வருமானம் |
| நிர்வாகச் செலவுகள் | இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்ட கடன்கள் |
| வராக்கடன் | இலாப நட்டப் பகிர்வு கணக்கிலிருந்து மாற்றப்பட்டது. |
| பிரிட்டிஷ் இந்தியன் டொமினியன் மற்றும் வெளிநாட்டு வரிகள் | |
| இதர செலவுகள் | |
| இருப்பு நிலைக் குறிப்பில் காண்பிக்கப்படும் நடப்பு ஆண்டு இறுதியிலான இருப்பு | |
| எதிர்பாராத நட்டங்களுக்கான காப்பு | |
| கூடுதல் காப்பு | |
| ——————— ரூ. | ——————— ரூ. |

எடுத்துகாட்டு: 1

பாரத் ஆயுள் காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட்டின் சோதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| செலுத்திய பங்கு முதல் பங்கு ஒன்று | —— | —— | 1,00,000 |
| ரூ.10 வீதம் | —— | —— | 29,72,300 |
| ஆயுள் காப்பீட்டு நிதி (ஜனவரி 1ல்) | —— | 15,000 | —— |
| பங்காதாயம் செலுத்தியது | —— | 31,500 | —— |
| பாலிசிதாரர்களுக்கு செலுத்திய மேலூதியம் | —— | —— | 1,61,500 |
| காப்பீட்டுக் கட்டணம் பெற்றது | —— | 1,97,000 | —— |
| கோரிக்கைகள் செலுத்தியது | —— | 9,300 | —— |
| செலுத்திய கமிசன் | —— | 32,300 | —— |
| நிர்வாகச் செலவுகள் | —— | 4,92,200 | —— |
| அடமானச் சொத்துக்கள் | —— | —— | 1,12,700 |
| வட்டி பங்காதாயம் பெற்றது | —— | 9,300 | —— |
| முகவரிடமுள்ள இருப்புகள் | —— | 40,000 | |
| வில்லங்கமில்லாச் சொத்துக்கள் | | 23,05,000 | |
| முதலீடுகள் | —— | 1,73,000 | —— |
| கம்பெனி பாலிசி மீதுள்ள கடன் | —— | 27,000 | —— |
| வைப்புகள் | | 7,300 | |
| கையில் ரொக்கம் | | 7,000 | |
| திரும்பிய பாலிசிகள் | | | |
| | | 33,46,500 | 33,46,500 |

2005 டிசம்பர் 31ஆம் தேதியிலான கம்பெனியின் வருவாய்க் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பை கீழ்க்கண்ட விவரங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு தயாரிக்கலாம்.

| | ரூ. |
|---|---|
| 1. கோரிக்கைகள் ஏற்கப்பட்டு செலுத்தப்படாமலிருப்பது | 9,300 |
| 2. வட்டி வேண்டியது | 19,300 |
| 3. காப்பீட்டுக் கட்டணம் பெற வேண்டியது | 12,000 |
| 4. கொடுபடாமலிருக்கும் நிர்வாகச் செலவு | 200 |

**விடை**

பாரத் ஆயுள் காப்பீட்டு கம்பெனி லிமிடெட்டின் வருவாய்க் கணக்கு

2005 டிசம்பர் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஓராண்டிற்கு

| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| கோரிக்கைகள் செலுத்தியது | 1,97,000 | | வருட ஆரம்ப நாள் காப்பீட்டு நிதி | | 29,72,300 |
| கூட்டு கோரிக்கைகள் ஏற்கப்பட்டு செலுத்தப்படாமல் இருப்பது | 9,300 | 2,06,300 | | | |
| | | | காப்பீட்டுக் கட்டணம் பெற்றது | 1,61,000 | |
| | | | கூட்டு வரவேண்டியது | 12,000 | 1,73,500 |
| பாலிசிதாரர்களுக்கு செலுத்திய மேலூதியம் | | 31,500 | வட்டி பங்காதாயம் பெற்றது | 1,12,700 | |
| | | | கூட்டு: வரவேண்டியது | 19,300 | 1,32,000 |
| செலுத்திய கமிசன் | | 9,300 | | | |
| நிர்வாகச் செலவுகள் | 32,300 | | | | |
| கூட்டு கொடுபடாமலிருப்பது | 200 | 32,500 | | | |
| திரும்பிய பாலிசிகள் | | 7,000 | | | |
| பங்காதாயம் செலுத்திய | | 15,000 | | | |
| வருட முடிவிலுள்ள ஆயுள் காப்பீட்டு நிதி இருப்பு | | 29,76,200 | | | |
| | | 32,77,800 | | | 32,77,800 |

பாரத் ஆயுள் காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்பு

2005 ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதியன்று

| பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பங்கு முதல் | | கடன் | 4,92,200 |
| செலுத்திய பங்கு முதல் | | அடமானச் சொத்து | |
| 1000 பங்குகள் | 1,00,000 | கம்பெனி | 1,73,600 |
| பங்கு ஒன்று ரூ.10 வீதம் | 29,76,200 | பாலி மீதுள்ள கடன் | |
| ஆயுள் காப்பீட்டு நிதி | | | |
| இழப்பு | 9,300 | முதலீடுகள் | 23,05,000 |
| செலுத்தப்படாமலிருக்கும் | | முதலீடுகள் | |
| கோரிக்கைகள் | | வில்லங்கமில்லாச் | 40,000 |
| | 200 | சொத்துக்கள் | 9,300 |
| கொடுபடாமலிருக்கும் | | முகவரிடமுள்ள | 19,300 |
| நிர்வாகச் செலவுகள் | | இருப்புகள் | |
| | | வரவேண்டிய வட்டி | 12,000 |
| | | பெறவேண்டிய | |
| | | காப்பீட்டுக் கட்டணம் | 27,000 |
| | | ரொக்கம் | 7,300 |
| | | வைப்புக்கள் | |
| | | கையில் ரொக்கம் | |
| | 30,85,700 | | 30,85,700 |

**எடுத்துக்காட்டு: 2**

கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு ஆசியன் பொதுக் காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட்டின் 2005 டிசம்பர் 31ஆம் தேதியன்று உள்ள தீ வருவாய்க் கணக்கு, கடல் வருவாய்க் கணக்கு மற்றும் இலாப நட்டக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்கலாம்.

| | ரூ. |
|---|---|
| வராக்கடன் 'தீ' | 5,000 |
| வராக்கடன் (கடல்) | 12,000 |
| தணிக்கையாளர் கட்டணங்கள் | 1,300 |
| இயக்குநர் கட்டணங்கள் | 5,000 |
| பங்கு மாற்றல் கட்டணங்கள் | 800 |
| வராக்கடன் மீட்கப்பட்டது | 1,200 |
| 'தீ' நிதி (2004 ஜனவரி 1) | 2,50,000 |
| கடல் நிதி (2004 ஜனவரி 1) | 8,20,000 |
| கோரிக்கைகள் செலுத்தியது மற்றும் செலுத்த வேண்டியது (தீ) | 1,90,000 |
| சேலவாணியில் ஏற்பட்ட வேறுபாடு (வ) | 300 |
| இதர வரவுகள் | 5,000 |
| நிலத்தை விற்றதில் இலாபம் | 60,000 |
| மறு காப்பீட்டுக் கட்டணத்தைக் கழித்த பின் தீக்காப்பீட்டுக் | 6,00,000 |
| கட்டணங்கள் | 10,80,000 |
| மறு காப்பீட்டுக் கட்டணத்தைக் கழித்த பின் கடல்க்காப்பீட்டுக் | 3,80,000 |
| கட்டணங்கள் | 30,000 |
| கோரிக்கைகள் செலுத்தியது மற்றும் செலுத்த வேண்டியது (கடல்) | 54,000 |
| கமிசன் செலுத்தியது (தீ) | 50,000 |
| கமிசன் செலுத்தியது (கடல்) | 35,000 |
| 2004 ஜனவரி 1ல் உள்ள அதிகப்படியான காப்பு (தீ) | 14,000 |
| தேய்மானம் | 1,45,000 |
| வட்டி இலாப ஈவு முதலியன பெற்றது | 4,00,000 |
| நிர்வாகச் செலவுகள் (தீ) | 10,000 |
| நிர்வாகச் செலவுகள் (கடல்) | 20,000 |
| மறு காப்பீடு அளித்ததால் ஈட்டிய கமிசன் (தீ) | |
| மறு காப்பீடு அளித்ததால் ஈட்டிய கமிசன் (கடல்) | |

வழக்கமாயுள்ள காப்புகளுடன், தீக் காப்பீட்டிலுள்ள அதிகப்படியான காப்புகளுடன் வசூலிக்கப்பட்ட காப்பீட்டுக் கட்டணத்தில் 5 சதவீதத்தை அதிகமாகச் சேர்க்கவும்

**விடை:**

ஆசியான் பொதுக் காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட்டின் தீ வருவாய்க் கணக்கு

2005 டிசம்பர் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஓராண்டிற்கு

| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| கோரிக்கைகள் (கழி: மறு காப்பீடு செய்யப்பட்டவை) செலுத்தியது | ? | | 1993 ஜனவரி 1ல் தீ நிதி | 2,50,000 | |
| கூட்டு: ஆண்டின் இறுதியில் செலுத்தப்படாதிருப்பவை | ? | | அதிகப்படியான காப்பு | 50,000 | 3,00,000 |
| கழி: ஆண்டின் தொடக்கத்தில் செலுத்தப்படாதிருப்பவை | ? | 1,90,000 | | | |
| கமிசன் | | 30,000 | காப்பீடு கட்டணம் (மறு காப்பீட்டுக் கட்டணங்கள் கழிந்த பின்) | | 6,00,000 |
| நிர்வாகச் செலவுகள் | | 1,45,000 | | | |
| வராக்கடன் | | 5,000 | மறு காப்பீடு அளித்ததால் பெற்ற கமிசன் | | 10,000 |
| இலாபம்: இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது | | 1,60,000 | இந்தியாவிற்கு அப்பாலுள்ள காப்பீடுகளிலிருந்து பெற்ற காப்பீட்டுக் கட்டணங்கள் 89,000 ஊகிக்கப்பட்டது) | | |
| முடிவடையா நட்டவச்சக் காப்பு வசூலிக்க காப்பீடுக் கட்டணத்தில் 50% | 30,000 | | | | |
| அதிகப்படியான காப்பு | 80,000 | | | | |
| இந்தியாவிற்கு அப்பாலுள்ள கோரிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட்ட கோரிக்கைகள் ரூ.45,000(ஊகிக்கப்பட்டது) | | 3,80,000 | | | |
| | | 9,10,000 | | | 9,10,000 |

ஆசியான் பொதுக் காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட்டின் 'கடல்' வருவாய்க் கணக்கு மற்றும் இலாப நட்டக் கணக்கு

2005 டிசம்பர் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஓராண்டிற்கு

| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| கோரிக்கைகள் (கழி மறு காப்பீடு செய்யப்பட்டவை) செலுத்தியது | ? | | கடல் நிதி 1993 ஜனவரி 1ல் | | |
| கூட்டு ஆண்டின் இறுதியில் செலுத்தப்படாமலிருப்பவை | ? | | காப்பீட்டுக் கட்டணங்கள் (மறுகாப்பீட்டுக் கட்டணத்தை கழித்த பின்) | | |
| கழி:ஆண்டின் தொடக்கத்தில் செலுத்தப்படாமலிருப்பவை | ? | 3,80,000 | மறு காப்பீடு அளித்ததால் கிடைத்த கமிசன் | | |
| கமிசன் | | 54,000 | நட்டம் இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது | | |
| நிர்வாகச் செலவுகள் | | 4,00,000 | | | |
| வராக்கடன் | | 12,000 | | | |
| முடிவடையா நட்டவச்சக் காப்பு வசூலிக்கப்பட்ட காப்பீட்டுக் கட்டணத்தின் 100% | | 10,80,000 | | | |
| | | 19,26,000 | | | 19,26,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இந்தியாவிற்கு அப்பாலுள்ள | | | இந்தியாவிற்கு அப்பாலுள்ள | | |
| கோரிக்கை யாளர்களுக்கு | | | காப்பீடுகளிலிருந்து பெற்ற காப்பீட்டுக் | | |
| செலுத்தியது 1,10,000 | | | கட்டணங்கள் 3,00,000 | | |
| (ஊகிக்கப்பட்டது) | | | (ஊகிக்கப்பட்டது) | | |
| நிர்வாகச் செலவுகள் | 1,300 | | வட்டி இலாப ஈவு மற்றும் | | |
| தணிக்கையாளர் கட்டணங்கள் | 5,000 | 6,300 | வாடகைகள் | | |
| இயக்குநர் கட்டணங்கள் | | 35,000 | (எந்தவொரு குறிப்பிட்ட கணக்கு | ? | 14,000 |
| தேய்மானம் | | | அல்லது நிதிக்கும் | | 60,000 |
| நட்டம்: கடல் வருவாய்க் | | 6,000 | சம்பந்தப்பட்டதல்ல) | | |
| கணக்கிலிருந்து மாறுபட்டது | | | கழி:இவைகள் மீதான வருமானவரி | | 1,60,000 |
| பகிர்வு கணக்கிற்கு கொண்டு | | 1,94,000 | நிலத்தை விற்றதில் கிடைத்த | | 1,200 |
| செல்லப்பட்ட இருப்பு | | | இலாபம் | | 800 |
| | | | இலாபம்: தீ வருவாய்க் | | 5,000 |
| | | | கணக்கிலிருந்து மாற்றப்பட்டது | | 300 |
| | | | மீட்கப்பட்ட வராக்கடன் | | |
| | | | மாற்றல் கட்டணங்கள் | | |
| | | | இதர வரவுகள் | | |
| | | | செலவாணியில் ஏற்பட்ட வேறுபாடு | | |
| | | 2,41,300 | | | 2,41,300 |

குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் வினாக்கள்:**

**I. சரியா, தவறா?**

அ).வருவாய்க் கணக்கிற்கான படிவம் எல்லா காப்பீட்டு வணிகத்திற்கும் பொருந்தும்.

ஆ). மதிப்பீட்டு இருப்பு நிலைக் குறிப்பு ஆயுள் காப்பீட்டுக்கு மட்டும் தயாரிக்கப்படுகிறது.

இ). ஒரு காப்பீட்டு நிறுவனத்திற்கு பெறப்பட்ட மறுகாப்பீட்டில் கமிஷன் ஒரு செயலாகும்.

ஈ). கடல் காப்பீட்டில் முனைமத்தில் 100 சதவீதம் காப்பாக ஒதுக்கப்படுகிறது.

உ). வருவாய் கணக்கில் நடப்பாண்டு செலுத்தப்பட்ட மொத்த கோரிக்கைத் தொகை பற்று வைக்கப்படுகின்றது.

**எடுத்துக்காட்டு: 3**

பஞ்சாப் பொது காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட்டின் இருப்புச் சோதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2005 டிசம்பர் 31ஆம் தேதியன்று

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முகவர் இருப்புகள் | 50,000 | பங்கு முதல் (5000 பங்குகள் பங்கு ஒன்று ரூ.100/- வீதம்) | 5,00,000 |
| கோரிக்கைகள் செலுத்தியது மற்றும் செலுத்த வேண்டியது | | செலவாணியில் ஏற்பட்ட வேறுபாடு | 500 |
| தீ | 40,000 | பெற்ற காப்பீடு கட்டணங்கள் | |
| கடல் | 1,60,000 | தீ | 4,20,000 |
| கமிசன்: | | | |
| தீ | 42,000 | கடல் | 7,50,000 |
| கடல் | 85,000 | வராக்கடன் திரும்பப் பெற்றது | 3,000 |
| நிர்வாகச் செலவுகள்: | | பற்பல கடனீந்தோர் | 80,000 |
| தீ | 20,000 | வட்டி பங்காதாயம் பெற்றது | 24,000 |
| கடல் | 1,80,000 | கோரிக்கைகள் | |
| வராக்கடன்கள்: | | செலுத்தப்படாமலிருப்பவை | |
| தீ | 7,000 | தீ | 8,000 |
| கடல் | 15,000 | கடல் | 13,500 |
| முதலீடுகள் | 5,20,000 | பங்கு மாற்றியதில் லாபம் | 1,000 |
| தணிக்கையாளர் கட்டணம் | 2,000 | 2005 ஜனவரி 1ல் தீ நிதி | 5,00,000 |
| இயக்குநர் கட்டணம் | 4,000 | | |
| வில்லங்கமில்லா சொத்து | 8,50,000 | | |
| பற்பல கடனாளிகள் | 25,000 | | |
| அலுவலக மனைத்துணை | 30,000 | | |
| தொடக்கச் செலவுகள் | 1,00,000 | | |
| ரொக்கம் | 60,000 | | |
| வட்டி பங்காதாயத்தின் மீது வருமான வரி | 9,400 | | |
| வங்கி இருப்பு | 1,00,000 | | |
| | 23,00,000 | | 23,00,000 |

வழக்கமாக உள்ள காப்புகளுக்கு வழி செய்து வருவாய் கஃகு இலாபநட்டக் கஃகு இருப்பு நிலை குறிப்பை தயாரிக்க

## விடை:

### பஞ்சாப் பொதுக் காப்பீட்டுக் கம்பெனியின் தீ வருவாய்க் கணக்கு
### 2005 டிசம்பர் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஓராண்டிற்கு

| | ரூ. | ரூ. | | ரூ. |
|---|---|---|---|---|
| கோரிக்கைகள் (கழிக்க | | | 'தீ' நிதி | 5,00,000 |
| மறுகாப்பீடு செய்யப்பட்டவை | | | | |
| செலுத்தியது | 32,000 | | | |
| நடப்பாண்டில் செலுத்தியது | | | | |
| கூட்டு:ஆண்டின் இறுதியில் | | 40,000 | காப்பீட்டு | |
| செலுத்தப்படாதிருப்பது | 8,000 | | கட்டணங்கள் | |
| கமிஷன் | | 42,000 | 40,000 | |
| நிர்வாகச் செலவுகள் | | 20,000 | (மறுகாப்பீட்டு | |
| வராக் கடன்கள் | | 7,000 | கட்டணத்தைக் | |
| இலாபம் — இலாபநட்ட | | | கழித்த பின் | 4,20,000 |
| கணக்கிற்கு | | 6,01,000 | | |
| மாற்றப்பட்டது | | | | |
| முடிவடையா நட்ட அச்சுக்காப்பு | | | | |
| வசூலிக்கப்பட்ட காப்பீட்டு | | | | |
| கட்டணத்தில் 50% | | 2,10,000 | | |
| | | 9,20,000 | | 9,20,000 |

## விடை:

### பஞ்சாப் பொதுக் காப்பீட்டுக் கம்பெனியின் கடல் வருவாய்க் கணக்கு
### 2005 டிசம்பர் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஓராண்டிற்கு

| | ரூ. | ரூ. | | ரூ. |
|---|---|---|---|---|
| கோரிக்கைகள் (கழி | | | 'கடல்' நிதி | |
| மறுகாப்பீடு செய்யப்பட்டவை | | | காப்பீட்டுக் கட்டணங்கள் | |
| நடப்பாண்டில் செலுத்தியது | 1,46,500 | | (மறுகாப்பீட்டுக் கட்டணத்தைக் | |
| கூட்டு:ஆண்டின் இறுதியில் | | | கழித்த பின் | 7,50,000 |
| செலுத்தப்படாமல் இருப்பவை | 13,500 | 1,60,000 | நட்டம்—இலாப நட்டக் | |
| | | | கணக்கிற்கு | |
| கமிஷன் | | 85,000 | மாற்றப்பட்டது | 4,40,000 |
| நிர்வாகச் செலவுகள் | | 1,80,000 | | |
| வராக் கடன்கள் | | 15,000 | | |
| முடிவடையா நட்ட அச்சுக்காப்பு | | | | |
| வசூலிக்கப்பட்ட காப்பீட்டு | | | | |
| கட்டணத்தில் 700மூ | | 7,50,000 | | |
| | | 11,90,000 | | 11,90,000 |

குறிப்பு

**II. சரியான பதிலை தருக.**

1). முனைமம் குறைக்கும் போனஸ் வருவாய்க் கணக்கில் ஒரு

அ). செலவு

ஆ). வருமானம்

இ). இரண்டும் இல்லை

2). எந்த வணிகத்திலும் சேர்க்க முடியாத மேலாண்மை செலவுகள் பதியப்படுவது

அ). வருவாய் க/கு

ஆ). இலாப நட்ட க/கு

இ).இலாப நட்ட பகிர்வு க/கு

3). கோரிக்கைக்கான சட்ட கட்டணம் இங்கு பதியப்படுகிறது.

அ). வருவாய் க/கு

ஆ). இலாப நட்ட க/கு

இ).இலாப நட்ட பகிர்வு க/கு

பஞ்சாப் பொதுக் காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட் இலாப நட்டக் கணக்கு
2005, மார்ச் 31ஆம் தேதியோடு முடிவடையும் ஆண்டிற்கு

| | ரூ. | | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|
| நட்டம் | | இலாபம் | | |
| கடல், வருவாய்க் | | தீ வருவாய்க் கணக்கிலிருந்து | | |
| கணக்கிலிருந்து மாற்றப்பட்டது | 4,40,000 | மாற்றப்பட்டது | | 6,01,000 |
| தணிக்கையான கட்டணம் | 200 | வட்டி பங்காதாயம் | 24,000 | |
| இயக்குநர் கட்டணம் | 4,000 | கழி: வருமான வரி | 9,400 | 14,600 |
| இருப்பு இலாபம் இருப்பு | | பங்கு மாற்றியதில் | | |
| நிலைக் குறிப்பிற்கு கொண்டு | | இலாபம் | | 4,000 |
| செல்லப்பட்டது | 1,74,100 | வராக்கடன் திரும்பப் | | |
| | | பெற்றது | | 500 |
| | | செலாவணியில் ஏற்பட்ட | | |
| | | வேறுபாடு | | |
| | 6,20,100 | | | 6,20,100 |

பஞ்சாப் பொதுக் காப்பீட்டுக் கம்பெனி லிமிடெட் இருப்பு நிலைக் குறிப்பு
2005, டிசம்பர் 31ஆம் தேதியன்று உள்ளபடி

| பொறுப்புக்கள் | | | சொத்துக்கள் | | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| பங்கு முதல் | | | முதலீடுகள் | | 5,20,000 |
| அனுமதித்தது | | | | | |
| பங்கு ஒன்று ரூ.... | | | வில்லாங்கமில்லாச் | | 8,50,000 |
| பங்குகள் ஒப்பியது | | | சொத்து | | 50,000 |
| வெளியிட்டது | | | முகவர் | | |
| செலுத்தியது: | | | இருப்புக்கள் | | |
| பங்கு ஒன்று ரூ.100/- | | | | | 25,600 |
| வீதம் 5000 பங்குகள் | | 5,00,000 | | | 60,000 |
| | | | பற்பல கடனாளிகள் | | |
| நிதி இருப்பு | 2,10,000 | | ரொக்கம் | | |
| தீ | 7,50,000 | | | | |
| கடல் | | 9,60,000 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வங்கியிருப்பு | | 1,00,000 |
| காப்பு | | | அலுவலக | | 30,000 |
| இலாப நட்ட கஃகு | | 1,74,000 | மனைத்துணை | | 1,00,000 |
| கோரிக்கைகள் | | | தொடக்கச் செலவு | | |
| செலுத்தப்படாமல் | | | | | |
| இருப்பது | 8,000 | | | | |
| தீ | 13,500 | 21,500 | | | |
| கடல் | | | | | |
| பற்பல கடனீந்தோர் | | 80,000 | | | |
| | | 17,35,000 | | | 17,35,000 |

## 9.5. அருஞ்சொற்கள்:

**காலாவதியாகாத இடர் காப்பு:**

பொது காப்பீட்டு நிறுவனங்கள் தாங்கள் பெற்ற முனைமத்தின் அடிப்படையில் ஏற்படுத்தும் காப்பு.

**மதிப்பீட்டு இருப்பு நிலைக் குறிப்பு:**

ஆயுள் காப்பீடு நிறுமம், இலாபம் கணக்கிடுவதற்காக தயாரிக்கும் கணக்கு.

**ஆயுள் காப்பீடு நிதி:**

ஆயுள் காப்பீடு வருவாய் கணக்கில் செலவுக்கு மீறிய வருமான இருப்பாகும்.

## 9.6. தொகுத்தறிவோம்:

காப்பீடு என்பது ஒருவர் தனக்கு ஏற்பட்ட நட்டத்தை பலருடன் பகிர்ந்து கொள்வதாகும். இது இரண்டு நபர்களுக்குள் ஏற்படும் ஒரு ஒப்பந்தமாகும். மேலும் இது ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படும் ஒன்றாகும். இந்த ஒப்பந்தம் எழுத்து வடிவம் பெறும்பொழுது 'பாலிசி' என்கிறோம். காப்பீடு பெறுபவர் மற்றும் காப்பீடு தருபவர் என இரண்டு தரப்புகள் இங்கு உண்டு. காப்பீடு பெறுபவர் முனைமம் செலுத்துகிறார்.

ஆயுள் காப்பீடு தொடர்ச்சியாக நடைபெறும் பாலிசியாகும். ஆனால் பொதுக்காப்பீடான தீ விபத்து, மற்றும் கடல் காப்பீடு போன்றவைகள் ஒரு ஆண்டிற்கு மட்டுமே பொருந்தும். ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும். இடர்கள் நிறைந்திருப்பதால், காப்பீடு நிறுமங்கள், தங்கள் வணிகத்தின் இடருக்கு தகுந்தாற்போல, காப்புகள் உருவாக்க வேண்டும். இவை முனைமத்தின் அடிப்படையில் இருக்கும். காப்பீட்டு நிறுவனங்களுக்குள், இடரை பகிரும்பொருட்டு, மறுகாப்பீடு செய்துகொள்கிறார்கள். இதற்காக கமிஷன் செலுத்தப்படும் அல்லது பெறப்படும். ஒரு காப்பீடு நிறுவனம் பல்வேறு காப்பீடு வணிகங்களில் ஈடுபடலாம்.

## 9.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் வினாக்களின் விடைகள்:

**சரியா, தவறா?**

அ). தவறு, ஆ). சரி, இ). சரி, ஈ). சரி, உ). தவறு

**சரியான பதில் தருக.**

1. செலவு   2. இலாப நட்டக் க/கு   3. வருவாய் க/கு

## 9.8. மாதிரி வினாக்கள்

1). கீழ்க்காணும் தொகையிலிருந்து 31.03.2002 அன்று முடியும் ஆண்டிற்கான ஸ்டார் அஸ்யூரன்ஸ் நிறுமத்தின் வருவாய் கணக்கை முறையான படிவத்தில் தயாரிக்க.

| விபரம் | ரூ. |
|---|---|
| இறப்புக் கோரிக்கை செலுத்தியது | 1,42,000 |
| முதிர்வுக் கோரிக்கை செலுத்தியது | 70,200 |
| முனைமம் | 14,12,100 |
| வழங்கப்பட்ட ஆண்டுத் தொகை மறுபயன் | 1,64,000 |
| ரொக்க போனஸ் | 4,800 |

| | |
|---|---|
| மேலாண்மைச் செலவு | 63,800 |
| கமிஷன் | 19,140 |
| வட்டி வாடகை பங்காதாயம் (நிகர மதிப்பு) | 1,95,700 |
| மூலத்தில் பிடித்த வருமான வரி | 12,400 |
| ஒப்படைவ | 23,600 |
| முனைமம் குறைக்கும் போனஸ் | 1,800 |
| பங்குதாரர்களுக்கு அளிக்கப்பட்ட பங்காதாயம் | 9,000 |
| ஆரம்ப ஆயுள் காப்பீட்டு நிதி | 30,45,000 |
| இறப்புக் கோரிக்கை கொடுபட வேண்டியது | 22,000 |
| முதிர்வுக் கோரிக்கை கொடுபட வேண்டியது | 16,000 |

விடை: ஆயுள் காப்பீட்டின் இறுதி இருப்பு ரூ.43,78,860

2). ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்துகொள்ளும். 1997—1998 ஆம் ஆண்டிற்கான பங்காதாயம் ரூ.32,000 கொடுப்பதற்கு முன்பாக 31.3.1998 அன்று அதன் ஆயுள் காப்பீட்டின் நிதி ரூ.41,92,000. அதன் உண்மை மதிப்பு ஒப்பந்தப்படி நிகர பொறுப்பு ரூ.40,40,000. 31.03.1998 நாளோடு முடியும் ஆண்டில் இடைக்கால போனஸ் பாலிசிதாரர்களுக்கு வழங்கியது ரூ.40,000. இப்பொழுது பாலிசிதாரர்களுக்கு வழங்க இருக்கக் கூடிய போனஸை காண்பிக்கும் பட்டியலைத் தயாரிக்க.

விடை: உபரி ரூ.1,52,000. பாலிசிதாரர்களுக்குரியது ரூ.1,12,000

3). ஓரியண்டல் பொதுக் காப்பீட்டு நிறுவனத்தின் 31.03.2002 நாளைய

1). வருவாய் கணக்கு 2). கடல் வருவாய் கணக்கு

3). இலாப நட்ட கணக்கு தயாரிக்க.

| விபரம் | தீ | கடல் | பொது |
|---|---|---|---|
| கமிஷன் செலுத்தியது | 90,000 | 1,08,000 | |
| செலுத்திய மற்றும் செலுத்த வேண்டிய கோரிக்கை | 1,80,000 | 3,80,000 | |
| வராக்கடன் | 5,000 | 12,000 | |
| கொடுக்கப்பட்ட மறுகாப்பீட்டின் ஈட்டிய கமிஷன் | 30,000 | 60,000 | |
| | 1,45,000 | 4,00,000 | |
| மேலாண்மைச் செலவுகள் | 6,00,000 | 10,80,000 | |
| முனைமம் கழி: மறுகாப்பீடு | 10,000 | | |
| ஆய்வு செலவு | 50,000 | | |
| கூடுதல் காப்பு (ஆரம்பம்) | 25,000 | 8,20,000 | |
| ஆரம்ப நிதி | | | 1,200 |
| வராக்கடன் மீட்கப்பட்டது | | | 800 |
| பங்கு மாற்றக் கட்டணம் | | | 5,000 |
| இயக்குனர் கட்டணம் | | | 1,200 |
| தணிக்கையாளர் கட்டணம் | | | 60,000 |
| நிலம் விற்ற இலாபம் | | | 5,000 |
| சில்லரை வரவுகள் | | | 300 |
| செலவாணி வேறுபாடு (வரவு) | | | 14,000 |
| வட்டி பங்காதாயம் போன்றவை பெற்றது | | | 35,000 |
| தேய்மானம் | | | |

வழக்கமான காப்புடன் தீ காப்பீட்டிற்கு நிகர முனைமத்தில் 5 சதவீதம் கூடுதல் காப்பை உயர்த்தவும்

விடை: தீக் காப்பீட்டு இலாபம் — ரூ.1,20,000, கடல் காப்பீட்டு நட்டம் ரூ.20,000, இலாப நட்ட பகிர்வு கணக்கு இருப்பு ரூ.1,40,100.

# பாடம் 10

# மின்சாரக் கம்பெனிகள் கணக்கு

கட்டமைப்பு

10.0. அறிமுகம்

10.1. கற்றல் நோக்கங்கள்

10.2. மூலதன அஸ்திவாரம்

10.3. நிச்சயமான இலாபம்

10.4. அருஞ்சொற்கள்

10.5. தொகுத்தறிவோம்

10.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

10.7. மாதிரி வினாக்கள்

## 10.0. அறிமுகம்

இன்றைய நவீன மனிதனின் அடிப்படை தேவைகளில் ஒன்றாக, மின்சாரம் ஆகிவிட்டது. அன்றாட வாழ்க்கையின் அடிப்படை தேவைகளான, வெளிச்சம், காற்று, பொழுதுபோக்கு, போக்குவரத்து போன்றவைகளுக்கும், பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையான தொழிற்சாலைகளுக்கும், மின்சாரம் இன்றியமையாத ஒரு பொருளாக மாறிவிட்டது. இத்தகைய தேவையை பூர்த்தி செய்யும் கடமையை இன்று அரசாங்க நிறுமங்கள் மற்றும் தனியார் நிறுமங்களும் ஈடுபட்டுள்ளன. ஆனால், மிகுந்த பொருட் செலவும், அதிக முதலீடும் தேவைப்படும் இந்த தொழில் மெதுவாக சர்வாதிகார போக்கை வளர்த்துவிடக் கூடாது என்பதில் அரசு கவனமாக உள்ளது. எனவே, இத்தகைய நிறுமங்களின் கணக்குகள் தயாரிப்பதிலும், நடவடிக்கைகளை வெளிக் கொணர்வதிலும் பல சட்ட ஷரத்துக்களை பின்பற்றி வலியுறுத்தி வருகின்றது. மேலும் இந்த

நிறுமங்கள் அதிக இலாபம் ஈட்டாமல் இருக்கவும், ஈட்டிய இலாபத்தின் பெரும்பங்கு நுகர்வோருக்கு பயன்படுத்தவும் சட்ட ஷரத்துக்கள் இயற்றப்பட்டுள்ளன. எனவே இத்தகைய நிறுமங்கள் இதற்கென கொடுக்கப்பட்டுள்ள சட்ட பூர்வ அட்டவணைகளை பின்பற்றி, கணக்குகள் தயாரிக்க வேண்டும்.

## 10.1. கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப் பிரிவை படித்த பின்பு நீங்கள்

- மின்சார கம்பெனியின் கணக்கியலில் உள்ள தனிச் சிறப்பம்சத்தை புரிந்து கொள்ள முடியும்
- மின்சாரக் கம்பெனியின் இறுதிக் கணக்கை தயாரிக்க இயலும்.
- மின்சார கம்பெனியின் நியாயமான இலாபம், மற்றும் உபரி இலாபத்தை கையாளும் முறைகள் பற்றி தெரிந்து கொள்ள முடியும்.

மின்சாரக் கம்பெனிகள் பொதுப் பயன்பாடு நிறுவனங்கள் என்பதால் அவற்றை அரசு தன் கட்டுப்பாட்டில் கொண்டுள்ளது. மின்சாரச் சட்டம் 1910 மற்றும் மின்சார (விநியோகம்) சட்டம் 1948 ஆகியவை இந்த நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகின்றன. கம்பெனிச் சட்டம் 1956ன்படி இவற்றின் கணக்குகள் எழுதப்பட வேண்டும். அதே நேரத்தில் மின்சார (விநியோகம்) சட்டம் 1948ன் நிதி தொடர்பான சரத்துக்களும் பின்பற்றப்பட வேண்டும். மின்சாரக் கம்பெனியின் கணக்கு ஆண்டு மார்ச் 31ல் முடிய வேண்டும்.

மின்சாரக் கம்பெனியின் நிலைத்த சொத்துக்கள் கீழ்வருமாறு தொகுக்கப்பட வேண்டும். 1). நிலம், 2). கட்டடம், 3). பொறி—நீராவி, டீசல் மற்றும் இதரவை 4). விநியோகத் துறைகள்—தரைக்கு மேலே, தரைக்கு கீழே, 5). சேவைகள், 6). மீட்டர்கள், 7). தெருவிளக்கு, 8).

மனைத்துணைப் பொருள் மற்றும் சாதனங்கள், 9). மோட்டார் வாகனங்கள்.

மின்சார (விநியோகம்) சட்டம் 1948ன் நிதி தொடர்பான சரத்துக்கள் வருமாறு— மிக உயர்ந்த லாபம் ஈட்டக் கூடாது என்று சட்டம் கட்டுப்பாடு விதிக்கிறது. ஒரு நியாயமான லாபமே (சுநயளழயெடிடந சுநவரசு) ஈட்டப்பட வேண்டும் என்கிறது. அது கீழ்வருபவற்றை உள்ளடக்கியுள்ளது.

1). “மூலதன அஸ்திவாரம்” என்பதில் இரண்டு சதவீதம் மற்றும் ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ள விகிதம்

2). நிகழ்வடையா செலவினங்களுக்கான காப்பின் அடிப்படையில் செய்யப்பட்ட முதலீடுகள் தவிர இதர முதலீடுகள் மூலம் வரும் வருமானம்

3). மின்சார வாரியம் தந்துள்ள கடன்களின் ½ சதவீதத் தொகை

4). வளர்ச்சிக்கான காப்பு இருப்பில் ½ சதவீதத் தொகை

## 10.2. மூலதன அஸ்திவாரம் (Capital Base)

மூலதன அஸ்திவாரம் (Capital Base) என்பது கீழ்வருமாறு கணக்கிடப்படுகிறது.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| 1. தேய்மானத்திற்கு ஒதுக்கீடு | | 1. வாடிக்கையாளர்கள் பங்களிப்பு போக உள்ள நிலைத்த சொத்துக்களின் ஒரிஜினல் அடக்கவிலை | |
| 2. கற்பனைச் சொத்துக்கள் நீக்கப்பட்டது | | 2. கற்பனைச் சொத்துக்களின் அடக்க விலை | |
| 3. மின்சார வாரியம் தந்த கடன்கள் | | 3. முற்றுப்பெறா உற்பத்தியின் ஒரிஜினல் அடக்க விலை | |
| 4. வாடிக்கையாளர்கள் தந்த முன்பண வைப்புத் தொகை | | 4. நிகழ்வடையா | |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 5. வளர்ச்சிக்கான காப்பு<br>6. கட்டணம் மற்றும் லாபஈவு கட்டுப்பாடு காப்பு<br>7. வாடிக்கையாளர்களுக்கு தரப்பட வேண்டிய இருப்பு — மூலதன அஸ்திவாரம் | | | செலவினங்களுக்கான காப்பு அடிப்படையில் செய்யப்பட்ட கட்டாய முதலீடுகள்<br>5. நடைமுறை மூலதனம், சரக்கிருப்பு, ரொக்க, இருப்பு வங்கி இருப்பு ஆகியவற்றின் சராசரி | |

## 10.3. நிச்சயமான இலாபம் (Clear Profit)

நிச்சயமான இலாபம் எனப்படுவது மொத்த வருமானத்திற்கும் மொத்தச் செலவுகள் மற்றும் குறிப்பிட்ட ஒதுக்கீடுகளுக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

**வருமானம்**

1. மின்சாரம் விற்பனை
2. மீட்டர் வாடகை
3. பல்புகள் விற்பனை மற்றும் பழுது பார்த்தல் போன்றவை
4. வாடகை
5. மாற்றத்திற்கான கட்டணம்
6. முதலீடுகளிலிருந்து வட்டி போன்றவை
7. இதர வருவாய்கள்

**கழிக்க: நடைமுறைச் செலவுகள்**

1. மின் உற்பத்தி மற்றும் கொள்முதல்
2. விநியோகம் மற்றும் விற்பனைச் செலவுகள்
3. வாடகை வரி (வருமானம் அல்லது இலாபம் மீதான வரி தவிர)

4. மின்சார வாரியம் தந்த கடன்கள் மீது வட்டி
5. முன்பண வைப்புத் தொகை மீதான வட்டி
6. வராக்கடன்
7. தணிக்கையாளர் கட்டணம்
8. நிர்வாகச் செலவுகள்
9. தேய்மானம்
10. இதர அனுமதிக்கப்பட்ட செலவுகள்
11. பிளஃப் மற்றும் கிராஜீட்டி போன்றவைக்கு ஒதுக்கீடு
12. தொழிலாளர்களுக்கு போனஸ்

**கழிக்க: சிறப்பு ஒதுக்கீடுகள்**

1. முந்தைய நட்டங்கள்
2. வருமானம் மற்றும் இலாபத்தின் மீதான வரி
3. கற்பனைச் சொத்துக்கள் நீக்கம்
4. நிகழ்வடையாச் செலவினங்களுக்கான காப்பிற்கு ஒதுக்கீடு
5. தேய்மானம் பாக்கி
6. வளர்ச்சிக்கான காப்பு
7. மாநில அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடுகள்

நியாயமான இலாபத்தைக் காட்டிலும் நிச்சயமான இலாபம் கூடுதலாக இருக்கலாம். அந்தக் கூடுதலில் மூன்றில் ஒரு பங்கை, ஆனால் நியாயமான இலாபத்தில் 5% மிகாமல் மின்சாரக் கம்பெனி தனது இஷ்டப்படி பயன்படுத்தலாம். மீதியில் ஒரு பாதி கட்டணங்கள் மற்றும் இலாப ஈவுக் கட்டுப்பாடு காப்பிற்கு மாற்றப்பட வேண்டும். மறுபாதி சிறப்புத் தள்ளுபடி அல்லது கட்டணக் குறைப்பிற்காக வாடிக்கையாளர்கள் தள்ளுபடி காப்பிற்கு மாற்றப்பட வேண்டும்.

எந்தவொரு ஆண்டிலும் நியாயமான இலாபத்தைக் காட்டிலும் நிச்சயமான இலாபம் அதிகமாக இருப்பது என்பது நியாயமான இலாபத்தில் 15மூக்கு மிகக் கூடாது. நியாயமான இலாபத்தைக் காட்டிலும் நிச்சயமான இலாபம் குறைவாக இருந்தால் இலாப ஈவு வழங்கக் கட்டணம் மற்றும் இலாப ஈவு கட்டுப்பாடு காப்பைப் பயன்படுத்தலாம்.

**எடுத்துக்காட்டு: 1**

மதுரை மின்சாரக் கம்பெனி ரூ.26,90,500 இலாபம் ஈட்டியது. 2006 மார்ச் 31 முடிந்த ஆண்டுக்கு ரூ.5,00,000 கடன் பத்திரங்களுக்கான வட்டி விகிதம் ½% போக இது கணக்கிடப்பட்டது. கீழ்வரும் விபரங்களிலிருந்து இலாபம் எவ்வாறு பிரித்தாளப்பட்டது என்பதை விவரிக்கவும்.

| | ரூ. |
|---|---|
| நிலைத்த சொத்துக்களின் ஒரிஜினல் அடக்கவிலை | 2,00,00,000 |
| நீக்கப்பட்ட மொத்த தேய்மானம் | 40,00,000 |
| மின்சார வாரியத்திலிருந்து கடன் | 30,00,000 |
| காப்பு நிதி (4% அரசு பத்திரங்களில் முதலீடுகள்) | 20,00,000 |
| நிகழ்வடையா செலவுகளுக்கான காப்பு நிதி முதலீடுகள் | 5,00,000 |
| கட்டணம் மற்றும் இலாப ஈவு கட்டுப்பாடு காப்பு | 1,00,000 |
| வாடிக்கையாளர்களின் முன்பண வைப்புத் தொகை | 4,00,000 |
| தொடக்கச் செலவுகள் சராசரி (நிகரம்) | 10,00,000 |
| நடைமுறைச் சொத்துக்களின் மாதாந்திர சராசரி (நிகரம்) | 50,00,000 |

வங்கி விகிதம் 10% என்று அனுமானித்து கொள்க.

விடை:

## மூலதன அஸ்திவாரம் கணக்கிடல்

| | | ரூ. |
|---|---|---|
| நிலைத்த சொத்துக்களின் ஒரிஜினல் அடக்கவிலை | | 2,00,00,000 |
| தொடக்கச் செலவுகள் | | 10,00,000 |
| நடைமுறைச் சொத்துக்களின் மாதாந்திர சராசரி | | 50,00,000 |
| நிகழ்வடையா செலவுகளுக்கான காப்பு நிதி முதலீடுகள் | | 5,00,000 |
| கழிக்க: | | |
| நிலைத்த சொத்துக்களின் மீது தேய்மானம் | 40,00,000 | |
| மின்சார வாரியத்திலிருந்து கடன் | 30,00,000 | |
| கடன் பத்திரங்கள் | 5,00,000 | |
| வாடிக்கையாளர்களின் முன் பண வைப்புத் | 4,00,000 | |
| தொகை | 1,00,000 | 80,00,000 |
| கட்டணம் மற்றும் இலாப ஈவு கட்டுப்பாட்டு காப்பு | | |
| மூல அஸ்திவாரம் | | 1,85,00,000 |

**நியாயமான இலாபம் கணக்கிடல்:**

| | ரூ. |
|---|---|
| மூலதன அஸ்திவாரம் ரூ.1,85,00,000ல் 12% | 22,20,000 |
| மின்சார வாரியம் தந்த கடன் ரூ.30,00,000 ல் ½% | 15,000 |
| கடன் பத்திரங்கள் ரூ.5,00,000ல் ½% | 2,500 |
| காப்பு நிதியிலிருந்து வருமானம் (முதலீடுகள் ரூ.20,00,000ல் 4%) | 80,000 |
| நியாயமான இலாபம் | 23,17,500 |

குறிப்பு

| | | |
|---|---|---|
| நியாயமான இலாபம் | = ரூ. | 26,90,500 |
| நியாயமான இலாபம் | = ரூ. | 23,17,500 |
| உபரி | = ரூ. | 3,73,000 |
| உபரியில் 1/3 | = ரூ. | 1,24,333 |
| நியாயமான இலாபத்தில் 5% | = ரூ. | 1,15,875 |

பின்னதற்கு முன்னது கூடுதலாக இருந்தால் பின்னதையே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக பிரித்தாளப்பட்டது.

| | | |
|---|---|---|
| கம்பெனி இஷ்டம் போலப் பயன்படுத்த | = ரூ. | 1,15,875 00 |
| கட்டணம் மற்றும் இலாப ஈவு கட்டுப்பாடு காப்பிற்கு | = ரூ. | 1,28,562 50 |
| வாடிக்கையாளர் சிறப்பு தள்ளுபடி காப்பிற்கு | = ரூ. | 1,28,562 50 |
| | = ரூ. | 3,73,000 00 |

**எடுத்துக்காட்டு: 2**

2006ம் ஆண்டு மார்ச் 31ம் தேதியில் பிரைட் எலக்ட்ரிக் கம்பெனியின் இருப்புச் சோதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. தேவையானவற்றுக்கு 2005ம் வருடம் மார்ச் 31ல் தொகைகள் கொடுக்கப்பட்டுள்ளன. 2006ம் வருடம் செப்டம்பர் 30ல் பங்கு ஒன்றுக்கு அழைப்புக் கட்டணமாக ரூபாய் 10 கொடுக்கப்பட வேண்டும். பங்கு அழைப்புத் தொகையில் பாக்கி ஏதும் இருப்பின் 5மூ வட்டி வசூலிக்கப்படும்.

2006ஆம் வருடம் மார்ச் 31ந் தேதி

| 2006ம் வருடம் மார்ச் 31ந் தேதியில் தொகை | | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 2,00,000 | சாதாரண பங்கு முதல் 5000 பங்குகள் ஒன்று ரூ.100 வீதம் ரூ.50 அழைக்கப்பட்டது. | | 2,50,000 |
| 1,50,000 | 6% பிணைகடன் பத்திரங்கள் | | 1,50,000 |
| 10,000 | தேய்மான நிதி | | 10,000 |
| | அழைப்புத் தொகை பாக்கி | 10,000 | |
| 93,000 | நிலம் | 93,000 | |
| 40,000 | கட்டிடம் | 50,000 | |
| 60,000 | இயந்திரம் | 1,00,000 | |
| 50,000 | முக்கிய இணைப்பு (Mains) | 80,000 | |
| 10,000 | மோட்டார்ஸ் முதலியன | 20,000 | |
| 5,000 | மீட்டர்ஸ் | 15,000 | |
| 3,000 | எலக்ட்ரிகல் கருவிகள் | 4,000 | |
| 16,000 | வயர் மற்றும் உதிரி கருவிகள் | 23,500 | |
| 2,500 | மனைதுணைப் பொருட்கள் | 2,500 | |
| | எரிவாயு மற்றும் கரி | 19,000 | |
| | ஆயில் கழிவு, இன்ஜின் ரூம் பொருட்கள் | 7,500 | |
| | சரக்கிருப்பின் கரி, ஆயில் கழிவு முதலியன | 1,000 | |
| | கூலி | 30,000 | |
| | புதுப்பித்தல் மற்றும் பழுது பார்த்தல் | 5,000 | |
| | வரியும் கட்டணமும் | 3,000 | |
| | சம்பளம் (மேலாளர், செயலாளருக்கு) | 15,000 | |
| | இயக்குநர் சம்பளம் | 10,000 | |
| | அச்சிடுதலும் மற்றும் உதிரி பொருட்களும் | 6,000 | |

குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| | பற்பல செலவுகள் | 3,000 | |
| | மீட்டர் விற்பனை | | |
| | ஒப்பந்த விற்பனை | | |
| | மீட்டர் வாடகை | | |
| | பற்பல கடனீந்தோர்கள் | | 87,500 |
| | பற்பல கடனாளிகள் | 45,000 | 50,000 |
| | ரொக்கம் | 33,000 | 3,000 |
| | எதேச்சையாக ஏற்படும் செலவுகளுக்கான | | 10,000 |
| | காப்பு | | 15,000 |
| | | 5,75,500 | 5,75,500 |

1. தேய்மானம் கட்டிடம் 2 ½% இயந்திரம் 7½%: முக்கிய இணைப்பு 5% மோட்டார்ஸ் 10%: எலக்ட்ரிகல் கருவிகள் 15%
2. எதேச்சையாக ஏற்படும் செலவுக்கான காப்பிற்கு நிலைத்த சொத்துக்களின் அடக்கவிலையில் ½% மாற்றுக.
3. அதிகப்படியான நிலைத்த சொத்துக்கான தேய்மானம் 6 மாதங்களுக்கு கணக்கிடப்பட வேண்டும்.

வருமானக் கணக்கு, முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயார் செய்க.

விடை:

2006 ஆண்டு மார்ச் 31 முடிய உள்ள பிரைட் எலக்ட்ரிகல் கம்பெனியின் வருமானக் கணக்கு.

| | ரூ. | ரூ. | | ரூ. |
|---|---|---|---|---|
| A. உற்பத்தி | | | | |
| நிலக்கரி மற்றும் | 19,000 | | மீட்டர் விற்பனை | 87,500 |
| எரிபொருள் | | | | |
| ஆயில் கழிவு மற்றும் | 7,500 | | ஒப்பந்தத்தில் | 50,000 |
| என்ஜின் | 30,000 | | விற்பனை | 3,000 |
| ரூம் பொருட்கள் | | | மீட்டர் வாடகை | |
| கூலி | 5,000 | 61,500 | | |
| பழுது பார்த்தல் மற்றும் | | | | |
| புதுப்பித்தல் | | | | |
| B. விநியோம் | | | | |
| C. பொதுவிளக்குகள் | | | | |
| D. வரி வாடகை | | | | |
| முதலியன | | 3,000 | | |
| வரி மற்றும் கட்டணம் | | | | |
| E. மேலாண்மைச் | 10,000 | | | |
| செலவுகள் | 15,000 | | | |
| இயக்குநர் சம்பளம் | | | | |
| செயலாளர் சம்பளம் | 6,000 | | | |
| அச்சிடுதல் மற்றும் உதிரிப் | 3,000 | 34,000 | | |
| பொருட்கள் | | | | |
| இதர செலவுகள் | | | | |
| G.தேய்மானம் | | | | |
| கட்டிடத் தேய்மானம் | 1,125 | | | |
| இயந்திரம் | 6,000 | | | |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| இயந்திரம் | 6,000 | | | |
| முக்கிய இணைப்பு | 3,250 | | | |
| மோட்டார்ஸ் | | | | |
| மீட்டர்ஸ் | 1,500 | | | |
| எலக்டிரிகல் கருவிகள் | 1,500 | | | |
| | 525 | | | |
| | 13,900 | | | |
| கூட்டு: தேய்மான நிதி | | | | |
| வட்டி 4% | 400 | 14,300 | | |
| (ரூ.10,000) | | | | |
| | | 1,12,800 | | |
| மொத்தச் செலவு | | 27,700 | | |
| இருப்பு நிகர வருமான கணக்கிற்கு மாற்றப்பட்டது | | | | |
| | | 1,40,500 | | 1,40,500 |

பற்று 2006 ஆண்டு மார்ச் 31 முடிய வருமானக் கணக்கு வரவு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கடன் பத்திரங்கள் மீதான வட்டி | 9,000 | இருப்பு கீ/கொ (முந்திய ஆண்டுக்கு) | |
| | | இருப்பு வருமானம் கணக்கிலிருந்து | 27,700 |
| எதேச்சையாக ஏற்படும் செலவுக்கான காப்பு | 1,940 | கொண்டு வரப்பட்டது | |
| மாற்றப்பட்டது ½% ரூ.3,88,000 | | வரவேண்டிய வட்டி (பங்கு அழைப்புத் தொகை பாக்கிக்காக) (ரூ.10,000க்கு 5% மாதத்திற்கு) | 250 |
| | 17,010 | | |
| இருப்பு கீ/இ | | | |
| | 27,950 | | 27,950 |

### பற்று 2006 ஆண்டு மார்ச் 31 முடிய பெறுதல் செலுத்துதல் கணக்கு வரவு

| செலவுகள் | 2008 மார்ச் 31 வரை | நடப்பு ஆண்டில் | மொத்தம் | பெறுதல் | 2005 மார்ச் 31 வரை | நடப்பு ஆண்டில் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| நிலம் | 93,000 | — | 93,000 | | | | |
| கட்டிடம் | 40,000 | 10,000 | 50,000 | | | | |
| இயந்திரம் | 60,000 | 40,000 | 1,00,000 | பங்கு | 2,00,000 | 40,000 | 2,40,000 |
| முக்கிய இணைப்பு | 50,000 | 30,000 | 80,000 | மூலதனம் | | | |
| மோட்டார்ஸ் | 10,000 | 10,000 | 20,000 | 6% கடன் | 1,50,000 | — | 1,50,000 |
| மீட்டர்ஸ் | 5,000 | 10,000 | 15,000 | பத்திரங்கள் | | | |
| வயர் மற்றும் | | | | | | | |
| பொருட்கள் | 16,000 | 7,500 | 23,500 | | | | |
| எலக்ரிகல் | | | | | | | |
| உதிரிப் பொருட்கள் | 3,000 | 1,000 | 4,000 | | | | |
| மனைத்துணைகள் | | | | | | | |
| உதிரிப் பொருட்கள் | 2,500 | — | 2,500 | | | | |
| மொத்தச் | 2,79,500 | 1,08,500 | 3,88,000 | | | | |
| செலவுகள் | — | — | 2,000 | | | | |
| | 2,79,500 | 1,08,500 | 3,90,000 | | 3,50,000 | 40,000 | 3,90,000 |

### பிரைட் எலக்ரிக் கம்பெனியின் 2000ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதியில் பொது இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புக்கள் | | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்கு | | | முதல் கணக்கு | |
| தொகை பெற்றது | | 3,90,000 | செலவு செய்த தொகை | 3,88,000 |
| பற்பல கடனீந்தோர்கள் | | 10,000 | கையிருப்பு சரக்கு | 1,000 |
| எதேச்சையாக ஏற்படும் | | | | |
| செலவுக்கான காப்பு | | 16,940 | கடனாளிகள் | 45,000 |
| நிகர வருமானக் கணக்கு இருப்பு | | 17,010 | | |
| தேய்மான நிதி: | | | அழைப்புத்தொகை | |
| ஆரம்ப இருப்பு | 10,000 | | பாக்கிக்கான வட்டி | 250 |
| கூடுதல் நடப்பாண்டில் | 14,300 | 24,300 | ரொக்கம் | 33,000 |
| கடன் பத்திரங்களுக்கான | | | | |
| வட்டி | | 9,000 | | |
| | | 4,67,250 | | 4,67,250 |

குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**I. சரியா / தவறா?**

அ. மின்சார கம்பெனியின் மூலதனக் கணக்கின் இருப்பு பொது இருப்பு நிலைக் குறிப்பிலும் எழுதப்படும்.

ஆ. நிகர வருவாய் கணக்கு ஆரம்ப இருப்போடு தயாரிக்கப்படும்.

இ. நியாயமான இலாபம் கணக்கிட வங்கி விகிதத் தோடு 2% கூட்டிக் கொள்ள வேண்டும்.

ஈ. மின்சார கம்பெனிகள் தாங்கள் ஈட்டிய உபரி இலாபத்தில் 15% வரை அவர்கள் இஷ்டப்படி பயன்படுத்திக் கொள்ளலாம்.

உ. மின்சார கம்பெனி கணக்குகளில், தேய்மானம் வருவாய் கணக்கில் எழுதப்படும்.

ஊ. கடன்பத்திரத்தின் மீது உள்ள வட்டி நிகர வருவாய் கணக்கில் எழுதப்படும்.

எ. கம்பெனிச் சட்டம் 1956ன் படி மின்சார கம்பெனிகளின் கணக்குகளில் எழுதப்பட வேண்டும்.

## 10.4. அருஞ்சொற்கள்

**மூலதன அஸ்திவாரம்:**

நியாயமான இலாபம் கணக்கிட, மின்சார கம்பெனியின் சொத்துக்களில் இருந்து பொறுப்புகள் கழிக்கப்பட்டு இது கணக்கிடப்படுகின்றது.

**கட்டணங்கள் மற்றும் இலாப ஈவு கட்டுப்பாடு காப்பு:**

நியாயமான இலாபத்திற்கு மேல் ஈட்டிய உபரி இலாபத்தின் ஒரு பகுதி இக்காப்பிற்கு மாற்றப்படும்.

## 10.5. தொகுத்தறிவோம்

பெரும்பான்மையான மின்சார கம்பெனிகள், பொதுப்பயன்பாடு நிறுவனங்கள் என்பதால், அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. ஆனால் தனியார்மயம் மற்றும் உலக மயமாக்கல் அடிப்படையில் தற்பொழுது தனியாரும் இதில் அனுமதிக்கப்பட்டு மின்சார உற்பத்தியில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அதிக இலாபம் ஈட்டாமல் இருக்க, எவ்வளவு நியாயமான இலாபம் இருக்க வேண்டும், உபரி இலாபத்தை எவ்வாறு கையாள வேண்டும் என மின்சார விநியோகச் சட்டம் விளக்குகின்றது. இது சர்வாதிகாரப் போக்கை தடுக்கவும், மேலும் உபரி இலாபம் நுகர்வோரின் பயன்பாட்டிற்கு மாற்றிவிடவும் உதவுகின்றது. இறுதிக் கணக்கிற்கும், கம்பெனிச் சட்டம், சட்டபூர்வ படிவங்களை வகுத்துள்ளது. அதன்படி இருப்பு நிலைக் குறிப்பு இரண்டு பகுதிகளாக தயாரிக்கப்படுகின்றது.

## 10.6. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

**I. சரியா / தவறா?**

அ). சரி, ஆ). சரி, இ). சரி, ஈ). தவறு, உ). சரி, ஊ). சரி, எ). சரி

## 10.7. மாதிரி வினாக்கள்

1). நியாயமான இலாபம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது. மேலும் மின்சார கம்பெனிகள் உபரி இலாபத்தை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை விவரிக்கவும்.

2). கீழே கொடுக்கப்பட்டுள்ள, கிரேட் எலக்ரிக் கம்பெனியின் விபரத்திலிருந்து எவ்வாறு இலாபத்தை கையாளுவது என கணக்கிடவும்.

| | ரூ. |
|---|---|
| பங்கு முதல் | 10,00,000 |
| காப்பு நிதி (4½% வட்டியில் முதலீடு) | 5,00,000 |
| நிகழ்வடையா செலவினங்களுக்கான காப்பு (5% கடன்பத்திரத்தில் முதலீடு) | 1,00,000 |
| மாநில மின்சார வாரியத்திலிருந்து கடன் | 6,00,000 |
| 8% கடன் பத்திரங்கள் | 2,00,000 |
| வளர்ச்சி காப்பு | 1,00,000 |
| நிலைச் சொத்து | 20,00,000 |
| தேய்மான காப்பு | 5,00,000 |
| நுகர்வோர் வைப்பு | 5,50,000 |
| நிலைச் சொத்தின் மேல் நுகர்வோர் கொடுத்தது | 10,000 |
| தொடமுடியாத சொத்து | 50,000 |
| கட்டணங்கள் மற்றும் இலாப ஈவு கட்டுப்பாடு காப்பு | 50,000 |
| நடப்பு சொத்துக்கள் (சராசரி) | 2,00,000 |

நிறுமம் நடப்பு ஆண்டு 2002ல் ரூ.75,000 (வரிக்கு பின்பு இலாபம் ஈட்டியுள்ளது.

விடை: மூலதன அஸ்திவாரம் ரூ.3,40,000, நிலையான இலாபம் ரூ.64,400

குறிப்பு

# பாடம் 11

# இரட்டை கணக்குமுறை

கட்டமைப்பு

11.0. அறிமுகம்

11.1. கற்றல் நோக்கங்கள்

11.2. இரட்டைக் கணக்கு முறையின் முக்கியத்தும்

11.3. இரட்டைக் கணக்கு முறையின் குறைபாடுகள்

11.5. அருஞ்சொற்கள்

11.6. தொகுத்தறிவோம்

11.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

11.8. மாதிரி வினாக்கள்

## 11.0. அறிமுகம்:

கனரக தொழிற்சாலைகள் ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அடிப்டையாக விளங்குகின்றது. இவ்வகை தொழிற்சாலைகளில் பெருமளவு முதல் நிலைச் சொத்தில் முடக்கப்பட்டிருக்கும். அதாவது இயந்திரங்கள், தளவாடங்கள் இதில் அடங்கும். மின்சாரம் தயாரிப்பு, சுரங்கங்கள், இரயில்வே போக்குவரத்து போன்ற தொழில்கள் இதில் அடங்கும். எனவே இத்தகைய தொழில் நிறுவனத்தின் கணக்கு தயாரிப்பில், மூலதன சொத்துக்களுக்கும், மூலதன பொறுப்புகளுக்கும் முக்கிய பங்கு கொடுக்கப்படுகின்றன. இவையே, இந்த கணக்குகளை பிற கணக்கு முறைகளில் இருந்து வேறுபடுத்துகின்றன. மேலும் பழைய கட்டிடம் அல்லது இயந்திரம் புதுப்பிக்கப்படும் பொழுதும், அல்லுது கழிக்கப்பட்டு புது கட்டிடம் அல்லது இயந்திரம் வாங்கப்படும் பொழுதும், தனி கவனம் செலுத்தப்பட்டு, அந்த நடவடிக்கைகள் தனியாக வேறுபடுத்தி

குறிப்பு

பதியப்படுகின்றன. இவை எல்லாம் கனரக தொழில் நிறுவனங்களின் இலாபம் மற்றும் நட்டங்களை நல்ல முறையில் கணக்கிடவும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சிறந்த முறையில் வெளிக்கொணரவும் உதவுகின்றன.

## 11.1. கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப் பிரிவை படித்த பின்பு நீங்கள்

— இரட்டைக் கணக்கு முறைக்கும் ஒற்றை கணக்கு முறைக்கும் உள்ள வேறுபாடுகளை அறிய முடியும்.

— சொத்து புதுப்பிக்கப்படும் பொழுது, அதில் உள்ள மூலதன செலவுகளை, வருவாய் இன செலவுகள் என பிரிக்க இயலும்.

— இரட்டை கணக்கு முறையில் முடிவு கணக்குகளை தயாரிக்க முடியும்.

இரட்டைக் கணக்கு முறை என்பது தனிவகையான கணக்கு முறையன்று, இம்முறை நாம் ஏற்கனவே படித்தறிந்த முறையைச் சார்ந்ததேயாகும். சாதாரணக் கணக்கு முறைக்கும் இரட்டைக் கணக்கு முறைக்கும் ஓரிரு வேறுபாடுகள் உண்டு. பொதுவாக இருப்புச் சோதனை தயார் செய்வது வரை இவ்விரு முறையிலும் வித்தியாசம் ஏதும் இல்லை. ஆனால் வருமானக் கணக்கு தயார் செய்வதிலும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிப்பதிலும் இரட்டைக் கணக்கு முறையில் உள்ள வேறுபாடுகளைக் காண்போம். பொதுவாக பொதுப் பயன்பாட்டு நிறுவனங்கள் (Public Utility) இரட்டைக் கணக்கு முறையில் கணக்குகளைத் தயார் செய்கின்றன.

1. இருப்புநிலைக் குறிப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டு முதல் பகுதியில் அனைத்து நிலைத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கணக்குகள் தயாரிக்கப்படும். இக்கணக்கில் பற்று மற்றும் வரவுப் பகுதியில் மூன்று பத்திகள் இருக்கும் முதல் பத்தியில் முந்திய ஆண்டு முடிவு வரையிலான

தொகையும் இரண்டாம் பத்தியில் நடப்பாண்டிற்கான தொகையும் மூன்றாம் பத்தியில் இவ்விரு பத்திகளின் கூட்டுத் தொகையும் அடங்கியிருக்கும். அதாவது நிலைத் சொத்துக்கள் வாங்குதலையும் நிலைத்த பொறுப்புக்களை தீர்வு செய்வதும் இக்கணக்கின் பற்றுப் பகுதியிலும் நிலைத்த சொத்துக்களை விற்பனை செய்வது, நிலைத்த பொறுப்புக்களை ஏற்படுத்துல் போன்றவை வரவுப் பகுதியிலும் எழுதப்படும். ஆகவே இருப்பு நிலைக் குறிப்பின் இப்பகுதியை மூலதனப் பெறுதல் செலுத்தல் கணக்கு (Receipts and Expenditure Capital Account) எனலாம். (இதை மூலதனக் கணக்கு என்றும் கூறலாம்).

இருப்புநிலைக் குறிப்பின் இரண்டாவது பகுதியினை பொது இருப்பு நிலைக் குறிப்பு (General Balance Sheet) எனலாம். நாம் சாதாரணமாக தயார் செய்யும் இருப்பு நிலைக் குறிப்பு போலவே இதைத் தயார் செய்யலாம். மூலதனப் பெறுதல் செலுத்தல் கணக்கில் (மூலதனக் கணக்கு குறிப்பிட்ட தொகைகள் நீங்கலாக உள்ள அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் (நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்) பொது இருப்புநிலைக் குறிப்பில் இடம் பெறும். மேலும் மூலதனக் கணக்கில் கணக்கின் மொத்த வரவு இருப்புத் தொகை பொது இருப்பு நிலைக் குறிப்பின் பொறுப்புக்கள் பகுதியிலும் இடம் பெறும். இரட்டைக் கணக்கு முறையிலும் இலாப நட்டக் கணக்கு என்பது வருமானக் கணக்கு (Revenue Account) என்றும் இலாப நட்டப் பகிர்வு கணக்கு என்பது நிகர வருமானக் கணக்கு (Net Revenue Account) என்றும் அழைக்கப்படும். இருப்பினும் இக்கணக்கு முறையிலும் ஓரிரு வேறுபாடுகள் உள்ளன.

a). வட்டி பெறுதலும் கொடுத்தலும் நிகர வருமானக் கணக்கில் முறையே வரவும் பற்றும் வைக்கப்படும் வருமானக் கணக்கில் இவை எழுதப்படுவதில்லை.

b). நிலைத்த சொத்துக்களின் மீதான தேய்மானம் வருமானக் கணக்கில் பற்று வைக்கப்பட்டு தேய்மான காப்புக் கணக்கில் வரவு

வைக்கப்படும். இவ்வாறு உள்ள மொத்த தேய்மான காப்புக் கணக்கு பொது இருப்பு நிலைக் குறிப்பின் பொறுப்புகள் பகுதியில் காண்பிக்கப்படும்.

இரட்டைக் கணக்கு முறைக்கும் ஒற்றைக் கணக்கு முறைக்கும் (சாதாரண முறை) உள்ள வித்தியாசம் கீழ்வரும் எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளது.

**இரட்டைக் கணக்கு முறை**

**மூலதனப் பெறுதல் செலுத்தல் கணக்கு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நிலைத்த சொத்துக்கள் வாங்கியது | 75,000 | சாதாரண பங்கு வெளியிடுதல் | 1,00,000 |
| இருப்பு | 25,000 | | |
| | 1,00,000 | | 1,00,000 |

**பொது இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புக்கள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| மூலதனக் கணக்கு இருப்பு | 25,000 | சரக்கு | 29,000 |
| மற்ற பொறுப்புக்கள் | | கடனாளிகள் | 1,000 |
| கடனீந்தோர் மற்றும் | | | |
| செ.வ.உ. முதலியன) | 10,000 | ரொக்கம் | 8,000 |
| தேய்மான நிதி | 3,000 | | |
| | 38,000 | | 38,000 |

**ஒற்றைக் கணக்கு முறை**

**இருப்பு நிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | 1,00,000 | நிலைத்த சொத்துக்கள் 75,000<br>கழி: தேய்மானம் 3,000 | 72,000 |
| மற்ற பொறுப்புகள் | 10,000 | சரக்கு | 29,000 |
| | | கடனாளிகள் | 1,000 |
| | | ரொக்கம் | 8,000 |
| | 1,10,000 | | 1,10,000 |

## 11.2. இரட்டைக் கணக்கு முறையின் முக்கியத்தும்

1. ஏடுகளில் நிலைத்த சொத்துக்கள் அடக்கவிலையில் தான் காண்பிக்கப்படும். தேய்மானம் கழித்துக் காண்பிக்கப்படுவதில்லை. ஆகவே
2. நிலைத்த சொத்துக்களின் மீதான தேய்மான நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இக்கணக்கு முதலில் இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புக்கள் பகுதியில் காண்பிக்கப்படும்.
3. அனைத்து நீண்டகால கடன்களும், (கடன் மற்றும் கடன் பத்திரங்கள்) மூலதன வகையினைச் சேர்ந்ததாகக் கருதப்படும். ஆகவே இவற்றிற்கான வட்டி வருமான பகிர்வு கணக்கில் முதலுக்கான இலாப ஈவு போல பற்று வைக்கப்படும்.
4. முதல் மற்றும் கடன் பத்திரங்களின் மீதான தள்ளுபடி, மற்றும் முனைமம் போன்றவை மூலதனவகை கணக்குகளிலேயே நிறுத்தி வைக்கப்படும்.
5. புதுப்பித்தலுக்கான காப்புகள் எல்லாம் நடப்பு வருமானக் கணக்கில் காண்பிக்கப்படும்.
6. மூலதனப் பெறுதல் செலுத்தல் கணக்கின் இருப்பு பொது இருப்பு நிலைக் குறிப்பிற்கு மாற்றப்படும்.

## 11.3. இரட்டைக் கணக்கு முறையின் குறைபாடுகள்

1. சாதாரண இருப்புநிலைக் குறிப்பு போல பொது இருப்பு நிலைக் குறிப்பில் நிலைத்த சொத்துக்களின் மதிப்பு தெளிவாகக் காண்பிக்கப்படுவதில்லை. மூலதனக் கணக்கில் சொத்துக்கள் அடக்க விலையில் காண்பிக்கப்பட்டு, அவற்றிற்கான தேய்மானம், பொது இருப்பு நிலைக் குறிப்பின் பொறுப்புக்கள் பகுதியில் காண்பிக்கப்படுகின்றன.
2. குறுகிய கால சொத்துக்களின் சில மூலதனக் கணக்கில் காண்பிக்கப்படுகின்றன.
3. சொத்துக்களைப் பழுது பார்த்தல், மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கான செலவினங்களை வருமானக் கணக்கில் கணக்கிட்டு எழுதுவது மிகவும் சிரமமான காரியமாகும்.
4. முடிவுக் கணக்குகள் தயார் செய்வது, இம்முறையில் எளிதானதல்ல. இருப்பினும் இரட்டைக் கணக்கு முறையில் இரயில்வே, எலக்ட்ரிக் கம்பெனிகள், எரிவாயு கம்பெனி போன்ற நிறுவனங்கள் தமது கணக்குகளைத் தயாரிக்க அரசு சில சிறப்பு விதிகளை விதித்திருக்கிறது.

**எடுத்துக்காட்டு: 1**

கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து பெறுதல் செலுத்துதல் கணக்கையும் பொது இருப்புநிலைக் குறிப்பையும் இரட்டைக் கணக்கு முறையில் 31.12.2006 தயாரிக்கவும்.

1. ஒப்பிய முதல் 10,000 பங்குகள் பங்கு ஒன்று ரூ.100/- வீதம்
2. வெளியிட்ட மற்றும் செலுத்திய முதல் 5,000 பங்குகள், பங்கு ஒன்ற ரூ.100/- வீதம் நடப்பு ஆண்டில் வெளியிட்ட 500 பங்குகள் உட்பட
3. 7 ½ கடன் பத்திரங்கள் ரூ.1,00,000/-

4. காப்பு நிதி ரூ.1,50,000/-

5. கடனீந்தோர்கள் ரூ.50,000/-

6. கடனாளிகள் ரூ.1,10,000/—

7. வங்கியில் ரொக்கம் ரூ.30,000/—

8. காப்புநிதி முதலீடுகள் ரூ.1,50,000/— (சந்தை விலை ரூ.1,80,000/—)

9. சரக்கிருப்பு ரூ.60,000/—

10. நிகர வருமானக் க/கு ரூ.40,000/—

11. நிலைத்த சொத்துக்கள் 31.12.2005 வரை செலவு : கட்டிடம் ரூ.2,00,000/— இயந்திரங்கள் ரூ.3,00,000/—

12. 2006ம் ஆண்டில் செலவ : இயந்திரங்கள் ரூ.70,000/—

13. தேய்மான நிதி : இயந்திரங்கள் ரூ.50,000: கட்டிடம் ரூ.30,000/—

2006ம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதியன்று ஒற்றைக் கணக்கு முறையில் இருப்புநிலைக் குறிப்பையும் காண்பிக்கவும்.

விடை

**இரட்டைக் கணக்கு முறையில் .............. லிமிடெட்டின்**

**2006ம் ஆண்டு டிசம்பர் 31 முடிய பெறுதல் செலுத்தல் கணக்கு**

| செலவுகள் | 2005 டிசம் 31 வரை | நடப்பு ஆண்டில் | மொத்தம் | பெறுதல் | 2005 டிசம் 31 வரை | நடப்பு ஆண்டில் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. | ரூ. |
| கட்டிடம் | 2,00,000 | —— | 2,00,000 | பங்கு முதல் (500 பங்குகள் பங்கு ஒன்று ரூ.100 வீதம்) | 4,50,000 | 50,000 | 5,00,000 |
| இயந்திரம் | 3,00,000 | 70,000 | 3,70,000 | 17½ % கடன் பத்திரங்கள் | 1,00,000 | —— | 1,00,000 |
| மொத்தச் செலவுகள் | 5,00,000 | 70,000 | 5,70,000 | மொத்தப் பெறுதல் | 5,50,000 | 50,000 | 6,00,000 |
| | | | 30,000 | | | | |
| | 5,00,000 | 70,000 | 6,00,000 | | 5,50,000 | 50,000 | 6,00,000 |

குறிப்பு

................ லிமிடெட்டின்

பொது இருப்புநிலைக் குறிப்பு 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதியன்று

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்கு தொகை பெற்றது பெறுதல் செலுத்துதல் கணக்கின்படி | 6,00,000 | முதல் கணக்கு தொகை செலவு செய்தது (பெறுதல் செலுத்துதல் கணக்கின்படி) | 5,70,000 |
| கடனீந்தோர்கள் | 50,000 | சரக்கிருப்பு | 60,000 |
| நிகர வருமானக் க/கு | 40,000 | கடனாளிகள் | 1,10,000 |
| காப்புநிதி | 1,50,000 | முதலீடுகள் (சந்தை விலை ரூ.1,80,000) | 1,50,000 |
| தேய்மான நிதி | 80,000 | வங்கியிருப்பு | 30,000 |
| | 9,20,000 | | 9,20,000 |

ஒற்றைக் கணக்கு முறையில்

............... லிமிடெட்டின்

பொது இருப்புநிலைக்குறிப்பு 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் தேதியன்று

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் ஒப்பியது 10,000 பங்குகள் பங்கு ஒன்று ரூ.100/— வீதம் | 10,00,000 | நிலைத்த சொத்து கட்டிடம் 2,00,000 கழி : தேய்மானம் 30,000 | 1,70,000 |
| வெளியிட்ட செலுத்திய முதல் 5000 பங்குகள் | 5,00,000 | இயந்திரங்கள் 3,00,000 கூட்டு : நடப்பு ஆண்டில் வாங்கியது 70,000 கழி : தேய்மானம் 50,000 | 3,20,000 |
| காப்பு மற்றும் மிகுதி காப்பு நிதி | 1,50,000 | | |
| இலாப நட்டக்க/கு | 40,000 | காப்பு நிதி முதலீடுகள் | 1,50,000 |

| | | | |
|---|---|---|---|
| பிணைக்கடன்கள் | —— | முதலீடுகள் சந்தைவிலை (ரூ.1,80,000 | |
| பிணையில்லாக்கடன்கள் 7½ % கடன் பத்திரங்கள் | 1,00,000 | நடைமுறைச் சொத்துகள் | 60,000 |
| | | சரக்கிருப்பு | 1,10,000 |
| | | கடனாளிகள் | 30,000 |
| | | வங்கியிருப்பு | — |
| | | இதர செலவு | |
| | 8,40,000 | | 8,40,000 |

## 11.4. சொத்துக்கள் புதுபிக்கப்படுதல்

இரட்டைக் கணக்கு முறையில் மூலதன செலவிற்கும் இடையில் உள்ள வேறுபாடு மிகவும் முக்கியமானதொன்றாகும். அதுவும் ஒரு சொத்திற்குப் பதிலாக இன்னொன்றைப் புதுபித்துக் கொண்டு வரும் போது மிகவும் முக்கியமானதாகிவிடுகிறது. ஏனெனில் செலவில் எவ்வளவு மூலதனச் செலவு? எவ்வளவு நடைமுறை செலவு என்பதனைக் கணிக்க வேண்டியிருப்பது ஒரு முக்கிய பிரச்சனையாகும். ஒற்றைக் கணக்கு முறையில், ஒரு சொத்திற்கு பதில் இனனொன்றைக் கொண்டு வரும் பொழுது, பழைய சொத்தை முழுவதுமாக செலவெழுதிவிட்டு, புதிய சொத்தை மூலதனச் செலவாக்குவது தான் இருந்து வரும் நடைமுறை. ஆனால் இரட்டைக் கணக்கு முறையில் கீழ்க்கண்ட நடைமுறை பின்பற்றப்படுகிறது.

1. புதுபிக்கப்பட்ட சொத்தொன்றைக் கொண்டு வந்த பின்னர் பழைய சொத்தின் ஆரம்ப அடக்கவிலை அச்சொத்து கணக்கு ஏடுகளில் தொடர்ந்தும் காண்பிக்கப்படும்.
2. பழைய சொத்தை இப்பொழுது புதுப்பித்து கட்டி முடிப்பதனால் அதற்கு தற்போது ஆகும் அடக்கவிலை எவ்வளவு எனக் கண்டுபிடித்து அதிலிருந்து உபயோகப்படுத்தப்பட்ட பழைய பொருள்களின் விலை மதிப்பையும், பழைய பொருள்களை விற்று வந்த ரொக்க மதிப்பையும் கணித்து கழித்து மீதமுள்ள தொகையை வருவாய்க் கணக்கில் செலவாக நட்டமாக எழுதப்படும்.

1. மதிப்பையும், பழைய பொருள்களை விற்று வந்த ரொக்க மதிப்பையும் கணித்து கழித்து மீதமுள்ள தொகையை வருவாய்க் கணக்கில் செலவாக நட்டமாக எழுதப்படும்.

3. மொத்தக் கட்டுமானச் செலவிலிருந்து பழைய சொத்தை இப்போது புதுப்பித்து கட்டி முடிப்பதனால் அதற்கு தற்போது ஆகும் அடக்கவிலையை கழித்தால் வரும் மீதித் தொகையை மூலதனச் செலவாக எழுதப்படும்.

**எடுத்துக்காட்டு 2**

ஒரு மின்சார நிலையம் 1950ல் ரூ.50,00,000 செலவில் கட்டப்பட்டது. அது சனவரி 2000ல் ரூ.80,00,000 செலவில் புதுபிக்கப்பட்டது. 1950லிருந்து பொருள்களின் விலை 20% உயர்ந்து விட்டது. பழைய பொருட்களின் ரூ.4,00,000 புது நிலையம் கட்டுவதில் உபயோகப்படுத்தப்பட்டு அந்தத் தொகை மேலே சொன்ன ரூ.80,00,000ல் சேர்க்கப்பட்டு உள்ளது. பழைய பொருள்களை விற்பதில் ரூ.5,00,000 ரொக்கமாக வந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்யத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**விடை**

**மூலதன வருவாய் ரொக்கப் பகுதிகளைக் கணக்கிட**

| | ரூ. |
|---|---|
| 1) மின்சார நிலையத்தின் ஆரம்ப அடக்கச் செலவு | 50,00,000 |
| கூட்டு பொருள்களின் விலை உயர்வு 20மூ | 10,00,000 |
| தற்போதைய அடக்கம் | 60,00,000 |
| | |
| 2) மொத்தக் கட்டுமானச் செலவு | 80,00,000 |

| | |
|---|---|
| கழி : பழைய பொருள்களை மீண்டும் உபயோகப்படுத்திய வகைக்கு | 4,00,000 |
| புதுபித்தல் கணக்கிற்கு வங்கி கணக்கிற்கு | 76,00,000 |
| 3) மொத்தக் கட்டுமான செலவு | 80,00,000 |
| கழி : பழைய நிலையத்தை இப்பொழுது கட்டினால் | 60,00,000 |
| நிலைய மூலதனக் கணக்கிற்கு | 20,00,000 |
| 4) பழைய மின்சார நிலையத்தை இப்பொழுது கட்டினால் ஏற்படும் அடக்கச் செலவு | 60,00,000 |
| பழைய பொருட்கள் மறுபடி உபயோகப்படுத்தப்படுகிறது | 4,00,000 |
| | 56,00,000 |
| கழி : பழைய பொருள்கள் விற்றது | 5,00,000 |
| நட்டமாக வருவாய் கணக்கிற்கு | 51,00,000 |

### குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 1990 ஜனவரி | புதுப்பித்தல் க/கு ப.<br>வங்கி க/கு<br>(மொத்தக்கட்டுமானச் செலவில் பழைய பொருள்களை மீண்டும் உபயோகப்படுத்தியது போக) | | 76,00,000 | 76,00,000 |
| | வங்கி க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(பழைய பொருள்களை விற்றதில் வந்ததற்காக) | | 5,00,000 | 5,00,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலைய க/கு ப.<br>வருவாய் க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(மூலதனச் செலவை நிலையக் கணக்கிற்கும் நட்டத்தை வருவாய் கணக்கிற்கும் செலவாக பற்று எழுதியதற்காக) | | 20,00,000<br>51,00,000 | <br><br>71,00,000 |

**எடுத்துக்காட்டு 3**

மின்சாரக் கம்பெனியொன்று மெயின் ஒன்றை ரூ.5,00,000 செலவில் போட்டது சில ஆண்டுகள் கழிந்த பின்பு பழைய மெயினின் நீளத்தைப் போல பாகம் துணை மெயினின் ரூ.1,50,000 செலவில் போடப்பட்டது. மீதமுள்ள பழைய மெயினின் நீளத்திற்கு ரூ.6,00,000 செலவில் புதுபித்தல் நடைபெற்றது. கூலி முன்பிருந்ததைவிட 15% தற்போது கூடுதலாகி உள்ளது. ரூ.8,000 பெறுமான பழைய பொருட்கள் ரொக்கத்திற்கு விற்கப்பட்டன. ரூ.10,000 பெறுமான பழைய பொருட்கள் புதுபித்தலுக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன; மேலும் ரூ.5,000 பெறுமான பழைய பொருட்கள் துணை மெயின் போடுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட நடவடிக்கைகளை குறிப்பேட்டுப் பதிவுகளில் பதிவு செய்யலாம்.

**விடை**

**மூலதன வருவாய் ரொக்கப் பகுதிகளைக் கணக்கிட**

| | பாகம் மெயின் | பாகம் துணை மெயின் | மொத்தம் |
|---|---|---|---|
| 1) மொத்தக் கட்டுமானச் செலவு | 6,00,000 | 1,50,000 | 7,50,000 |

| | | | |
|---|---|---|---|
| கழி : பழைய பொருள்கள் மறுபடி | 10,000 | 5,000 | 15,000 |
| உபயோகித்தது புதுபித்தல் க/கு வங்கி க/கு | 5,90,000 | 1,45,000 | 7,35,000 |

| | ரூ. |
|---|---|
| 2) ¾ பாக பழைய மெயின் ஆரம்ப செலவு (5,00,000 x ¼) | 4,00,000 |
| கூட்டுகள் கூலி உயர்வு 15மூ $\left(4{,}00{,}000 \times \frac{15}{100}\right)$ | 60,000 |
| தற்போதைய அடக்கம் | 4,60,000 |

3) மொத்தக் கட்டுமானச் செலவு

| | |
|---|---|
| 4/5 பாக பழைய மெயின் 6,00,000 | |
| துணை மெயின் 1,50,000 | 7,50,000 |
| கழிக்க : பழைய மெயினை இப்போது கட்டினால் தற்போதை அடக்கம் (2) | 4,60,000 |
| மூலதன செலவு க/கு | 2,90,000 |

| | |
|---|---|
| 4) பழைய மெயினை இப்போது கட்டினால் ஏற்படும் அடக்கச் செலவு | 4,60,000 |
| கழிக்க : பழைய பொருள்களை மறுபடியும் உபயோகப்படுத்தியது (10,000 + 5,000) | 15,000 |
| | 4,45,000 |
| கழிக்க : பழைய பொருள்களை விற்றது | 8,000 |
| நடைமுறை வருவாய் க/கு = நட்டம் | 4,37,000 |

குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | புதுப்பித்தல் க/கு ப.<br>வங்கி க/கு<br>(மொத்தக்கட்டுமானச் செலவில் பழைய பொருள்களை உபயோகப்படுத்தியது போக) | | 7,35,000 | 7,35,000 |
| | வங்கி க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(பழைய பொருள்களை விற்றதற்காக) | | 8,000 | 8,000 |
| | மெயின் க/கு ப.<br>வருவாய் க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(மூலதனச் செலவை மெயின் கணக்கிற்கும் மீதத்தை வருவாய் கணக்கிற்கும் பற்று எழுதியதற்காக) | | 2,90,000<br>4,37,000 | 7,27,000 |

**எடுத்துக்காட்டு : 4**

ஒரு எரிபொருள் நிலையம் ரூ.1,76,000 செலவில் புதுபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அந்த எரிபொருள் நிலையம் ரூ.5,60,000 செலவில் கட்டப்பட்டிருந்தது. அதில் பொருள்களும் கூலியும் 1:3 என்ற விகிதத்தில் இருந்தன. தற்போது பொருள்களின் விலை 12%ம், கூலி 15%ம், கூடிவிட்டன. பழைய பொருள்கள் ரூ.25,000 பெறுமானமுடையவை. புது

நிலையம் கட்டுவதில் உபயோகப்படுத்தப்பட்டது. பழைய பொருள்கள் விற்றதில் வந்த ரொக்கம் ரூ.40,000. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

விடை:

**மூலதன வருவாய் ரொக்கப் பதிவுகளை கணக்கிட**

| | |
|---|---|
| 1) மொத்த கட்டுமானச் செலவு | 17,60,000 |
| கழி : பழைய பொருள்களை மீண்டும் உபயோகப்படுத்திய வகைக்கு | 25,600 |
| புதுப்பித்தல் கணக்கிற்கு ரொக்கச் செலவாக | 17,34,400 |

| | மொத்தம் | பொருள் 7 | கூலி 3 |
|---|---|---|---|
| 2) எரிபொருள் நிலையத்தின் ஆரம்ப அடகக் விலை | 5,60,000 | 3,92,000 | 1,68,000 |
| கூட்டு : விலையில் கூடுதல் வகைக்காக: | | | |
| அ) எரிபொருள் 3,92,000 $x\frac{12}{100}$ | 47,040 | 47,040 | ——— |
| ஆ) கூலி 1,68,000 $x\frac{15}{100}$ | 25,200 | ——— | 25,200 |
| | 6,32,240 | 4,39,040 | 1,93,200 |

| | ரூ. |
|---|---|
| 3) மொத்தக் கட்டுமானச் செலவு | 17,60,000 |
| கழி : தற்போதைய அடக்கச் செலவு | 6,32,240 |
| நிலைய மூலதன க/கு | 11,27,760 |

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**I. சரியா / தவறா?**

அ). இரட்டைக் கணக்கு முறையில் தேய்மானம் சொத்துக் கணக்கில் வரவு பக்கம் எழுதப்படும்.

ஆ). இரட்டைப் பதிவு முறையில் மூலதன பெறுதல் செலுத்தல் கணக்கு மூலம் நடப்பு வருடத்தில் வாங்கிய இயந்திரத்தின் மதிப்பை அறிந்து கொள்ள முடியும்.

இ). கடன் பத்திரங்கள், பொது இருப்பு நிலைக் குறிப்பில் எழுதப்படும்.

ஈ). இரட்டை கணக்கு முறையில் கடன் பத்திரத்தின் மீது உள்ள வட்டி நிகர வருவாய் கணக்கில் எழுதப்படும்.

| | |
|---|---|
| 4) எரிபொருள் நிலையத்தின் தற்போதைய அடக்கம் | 6,32,240 |
| கழி : பழைய பொருள்களை மறுபடி உபயோகப்படுத்தியது | 25,600 |
| | 6,06,640 |
| கழி : பழைய பொருள்களை விற்றதில் ரொக்கம் | 40,000 |
| வருவாய் க/கு நட்டம் | 5,66,640 |

குறிப்பேடு

| | | | ப. | வ. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | புதுப்பித்தல் க/கு ப.<br>வங்கி க/கு<br>(மொத்தக்கட்டுமானச் செலவில் பழைய பொருள்களை மீண்டும் உபயோகப்படுத்தியது போக) | | 17,34,400 | 17,34,000 |
| | வங்கி க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(பழைய பொருள்களை விற்றதில் வந்த ரொக்கம்) | | 40,000 | 40,000 |
| | நிலைய க/கு ப.<br>வருவாய் க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(மூலதனச் செலவை நிலைய கணக்கிற்கும் நட்டத்தை வருவாய் கணக்கிற்கும் பற்றுமாக) | | 11,27,760<br>5,66,640 | 16,94,400 |

குறிப்பு

II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ). இரட்டைக் கணக்கு முறையில் இலாப நட்ட க/கு மற்றும் இலாப நட்ட பகிர்வு க/கு முறையே............ மற்றும் ......... என்று அழைக்கப்படும்.

ஆ). சொத்தை புதுப்பிக்கும் பொழுது, பழைய பொருட்கள் விற்று கிடைத்த தொகை ....... கணக்கில் எழுதப்படும்.

இ). இரட்டை கணக்கு முறையில் தேய்மானம் ............. கணக்கில் எழுதப்படும்.

எடுத்துக்காட்டு:5

நியூ சினிமாவின் உரிமையாளர்கள் தங்கள் சினிமாவில் உள்ள ஒலி இயந்திரம் சரியில்லை என்ற புகாரின் பேரில் அதைப் புதுப்பிக்கும் வகையில் நவீன பெரிய ஒலி இயந்திரம் ஒன்றை ரூ.50,000 செலவில் 2.1.2003 அன்று பொருந்தினார்கள். பழைய ஒலி இயந்திரமோ ரூ.20,000க்கு வாங்கப்பட்டிருந்தது. தற்போது பொருள்களின் விலை 50% கூடியுள்ளது. பழைய இயந்திரம் 2.1.03 அன்று ரூ.5,000க்கு விற்கப்பட்டது. உரிய குறிப்பேட்டு மற்றும் இயந்திரம் புதுபித்தல் கணக்குகளைப் பேரேட்டில் காட்டுக.

விடை

மூலதன வருவாய் மற்றும் ரொக்க இனங்களைக் காண

| | ரூ. |
|---|---|
| 1) பழைய ஒலி இயந்திரத்தின் விலை | 20,000 |
| கூட்டுக : 50% பொருள்களின் விலை உயர்வு $\left[20{,}000 \text{x} \frac{50}{100}\right]$ | 10,000 |
| பழைய ஒலி இயந்திரம் தற்போதைய அடக்கம் | 30,000 |
| 2) பழைய ஒலி இயந்திரம் தற்போதைய அடக்கம் | 30,000 |
| கழி : பழைய ஒலி இயந்திரம் விற்றதில் வந்தது | 5,000 |
| வருவாய் கணக்கிற்கு | 25,000 |
| 3) புதிய ஒலி இயந்திரத்தின் விலை | 50,000 |
| கழி : பழைய ஒலி இயந்திரத்தின் தற்போதைய அடக்கம் | 30,000 |
| மூலதன கணக்கிற்கு | 20,000 |
| 4) புதிய ஒலி இயந்திரத்தின் விலை (வங்கி க/கு) | 50,000 |

## குறிப்பேடு

| | | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 2003 ஜன.2 | புதுப்பித்தல் க/கு ப.<br>வங்கி க/கு<br>(புதிய ஒலி இயந்திரத்திற்காக) | | 50,000 | 50,000 |
| | வங்கி க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(பழைய ஒலி இயந்திரத்தை விற்றதற்காக) | | 5,000 | 5,000 |
| | ஒலி இயந்திர க/கு ப.<br>வருவாய் க/கு ப.<br>புதுப்பித்தல் க/கு<br>(மூலதனச் செலவை ஒலி, இயந்திரக் க/குகும் நட்டத்தை வருவாய் க/கு) | | 20,000<br>25,000 | 45,000 |

## பேரேடு

### ஒலி இயந்திர க/கு

ப. வ.

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| 1.1.2003 | இருப்பு கீ/கொ | 20,000 | ? | இருப்ப கீ/கு | 40,000 |
| " | புதுபித்தல் க/கு | 20,000 | | | |
| | | 40,000 | | | 40,000 |
| | இருப்பு கீ/கொ | 40,000 | | | |

புதுபித்தல் க/கு

ப. வ.

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| 2.1.2003 | வங்கி க/கு | 50,000 | 2.1.2003 | வங்கி க/கு | 5,000 |
| | | | " | ஒலி இயந்திர க/கு | 20,000 |
| | | | " | வருவாய் க/கு | 25,000 |
| | | 50,000 | | | 50,000 |

## 11.5. அருஞ்சொற்கள்

**புதுப்பித்தல் கணக்கு:**

இரட்டை கணக்கு முறையில், சொத்துக்கள் புதுப்பிக்கப்படும் பொழுது, மூலதன வருவாய் இனம் என பிரிப்பதற்காக தொடங்கப்படும் கணக்கு.

**தற்போதைய அடக்கம்:**

இரட்டைக் கணக்கு முறையில் சொத்துக்ள் புதுப்பிக்கப்படும் பொழுது, பழைய சொத்தின் இன்றைய மதிப்பு.

## 11.6. தொகுத்தறிவோம்

இரட்டைக் கணக்கு முறையை, இரட்டை பதிவு கணக்கியலோடு ஒப்பிட்டு தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. இரட்டை கணக்கு முறை என்பது, கனரக தொழில்களின் மூலதன பெறுதல் செலுத்துதல் மற்றும் பிற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தனித்தனியாக காண்பிப்பதாகும். சொத்துக்கள் தேய்மானம் கழிக்காமல் பதியப்படுகின்றது. சொத்துக்களை புதுப்பிக்கும் பொழுது, பழைய சொத்து கணக்குகளை முடிக்காமல் அதை தொடர்ச்சியாக பதிந்து, புதுச் சொத்துக்கள் பழைய சொத்தின் மேல் புதுப்பித்தது போல் எழுதப்படுகின்றது. எனவே, சொத்துக்கள் புதுப்பிக்கப்படும் பொழுது, மூலதன கணக்கு வருவாய் கணக்கு என இரண்டாக பிரித்து எழுதுகின்றோம். இலாப நட்டக் கணக்கும் இரு பிரிவுகளாக, அதாவது வருவாய் க/கு மற்றும் நிகர வருவாய் க/கு என தயாரிக்கப்படுகின்றது.

## 11.7. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

**I. சரியா / தவறா?**

அ). தவறு, ஆ). சரி, இ). தவறு, ஈ).சரி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). வருவாய் க/கு, நிகர வருவாய் க/கு ஆ). புதுப்பித்தல்,

இ). தேய்மான காப்பு க/கு

## 11.8. மாதிரி வினாக்கள்

1). இரட்டை கணக்கியல் முறையின் நன்மை மற்றும் தீமைகளை விவரிக்கவும்.

2). இரட்டை கணக்கியல் முறையில் சொத்துக்களை புதுப்பிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை விளக்குக.

3). ஒரு புகை வண்டி நிலையம் ரூ.3,00,000 செலவில் 1980ல் கட்டப்பட்டது. 2010ம் வருடம் இந்த நிலையம் ரூ.16,00,000 செலவில் மாற்றிக் கட்டப்பட்டது. 1980 முதல், தற்போது கச்சாப் பொருட்கள் விலை 250%மும், கூலி விகிதம் மூன்று மடங்காகவும் உயர்ந்துள்ளது. பழைய நிலையத்தில் கச்சாப் பொருள் மற்றும் கூலியின் விகிதாச்சாரம் 2:3 ஆகும். ரூ.2,50,000 மதிப்புள்ள பழைய பொருட்கள், புதிய நிலையத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தொகை ரூ.16,00,000 சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் பழைய பொருள் விற்றதில் ரூ.42,000ம் கிடைத்துள்ளது. பதிவு எழுதி, புதுப்பித்தல் கணக்கு தயாரிக்கவும்.

(விடை: வருவாய் இனம்: ரூ.7,73,000 மூலதன இனம் — ரூ.7,60,000)

4). கீழ் உள்ள விவரங்களிலிருந்து எலக்ரிக் லைட்டிங் மற்றும் பவர் நிறுமத்தின், வருவாய், நிகர வருவாய் க/கு, மூலதன கணக்கு மற்றும் பொது இருப்பு நிலைக் குறிப்பு 31—12—2000ல் உள்ளபடி தயாரிக்கவும்.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 54,900 | சரக்கிருப்பு கையில் | 700 |
| கடன் பத்திரம் | 20,000 | ரொக்கம் | 300 |
| நிலம் 31.12.99 | 1,50,000 | மின்சார உற்பத்தி | 3,000 |
| நிலம் வாங்கியது | 500 | செலவு | 600 |
| இயந்திரம் 31.12.99 | 60,000 | மின்சார விநியோக | 400 |
| இயந்திரம் வாங்கியது | 500 | செலவு | 1,200 |
| மெயின் 31.12.99 | 20,000 | வாடகை வரி | 2,000 |
| மெயின் மேல் | | மேலாண்மை செலவு | 13,200 |
| தற்போது செலவழித்தது | 5,100 | தேய்மானம் | 300 |
| பற்பல கடனீந்தோர் | 100 | மின்சாரம் விற்பனை | 1,000 |
| தேய்மான நிதி | 25,000 | மீட்டர் வாடகை | 2,000 |
| பற்பல கடனாளிகள் | 4,000 | கடன்பத்திர வட்டி | |
| பிற கடனாளிகள் | 50 | இலாப ஈவு | 2,850 |
| | | நிகர வருவாய் இருப்பு (31.12.99) | |

(விடை: வருவாய் ரூ.6,300, நிகர வருவாய் — 6150, பொது இருப்பு நிலைக் குறிப்பு மொத்தம் ரூ.1,06,150)

குறிப்பு

## பாடம் 12

# விலை அளவு மாற்றங்களுக்கான கணக்கு

கட்டமைப்பு

12.0. அறிமுகம்

12.1. கற்றல் நோக்கங்கள்

12.2. சென்ற கால அடக்கவிலை அடிப்படையிலான கணக்கு முறை ஏற்படுத்தும் பிரச்சனைகள்

12.3. கணக்கியல் முறைகள்

12.5. நடப்பு அடக்கவிலை கணக்கியல்

12.6. அருஞ்சொற்கள்

12.7. தொகுத்தறிவோம்

12.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

12.9. மாதிரி வினாக்கள்

## 12.0. அறிமுகம்:

அகராதியின் வரையறைப்படி பணவீக்கம் என்பது கணிசமாக விலை உயர்தல் — பொதுவான விலை அளவு உயர்தல்— பணத்தின் மதிப்பு குறைதல் — என அர்த்தம் கொள்ளலாம். எதிர் மறையாக பணச் சுருக்கமும் ஏற்படலாம். அப்பொழுது அதன் அர்த்தம் மேற்சொன்னவற்றின் எதிர் பதமாக இருக்கும். எனவே பணவீக்கம், பண சுருக்கம் என்று சொல்லாமல் விலை அளவு மாற்றம் கணக்கு என்கிறோம். பொதுவான சூழ்நிலையில், ஒரு வளரும் நாட்டில் விலை அளவு ஓரளவு எப்பொழுதும் உயர்ந்து கொண்டே இருக்கும். அதாவது பணவீக்கம் தான் பெருமளவு ஒரு நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும். பணம் மற்றும் பொருள்களின் உறவுகளின் மாற்றம் தான் இன்றைய பொருளாதார நிலையின் அடிப்படை. இச்சூழ்நிலையில் நிறுமங்கள் தங்கள் இலாப

குறிப்பு

நட்டத்தை மற்றும் சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களை எவ்வாறு காண்பிக்க வேண்டும், உண்மைத்தன்மையை எவ்வாறு வெளிக் கொணர்வது என்பது தான் இன்றைய கணக்காளர்களின் முக்கிய நோக்கம். மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் ஒருதொழில் நிறுமத்தின் வளர்ச்சி எல்லாம் பணவீக்கத்தை சார்ந்துள்ளது என்பது உண்மை.

## 12.1. கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப் பிரிவை படித்த பின்பு நீங்கள்

— விலை அளவு மாறுதல் கணக்கியல் தேவைகளை நியாயப்படுத்த முடியும்.

— பல்வேறு விலை அளவு மாறுதல் கணக்கியல் முறைகளை விளக்க இயலும்.

— விலை அளவு மாறுதல் கணக்கிற்கு பொருத்தமான கணக்கியல் சரிக்கட்டுக்களை கையாள இயலும்.

சென்ற கால அடக்கவிலை அடிப்படையிலான (Historical Cost Based) கணக்கியல் முறை தேவையான கணக்கியல் விபரங்களைத் தருவதில்லை என்கிற உணர்வு பொதுவாக உள்ளது. அது மட்டுமல்லாது ஒரு குறிப்பிட்ட தேதியிலான நிதி மற்றும் இதர விபரங்கள் பற்றி ஒரு சிதைந்த காட்சியையும் அது தந்துவிடக் கூடும். இதன் மூல காரணம் விலையில் ஏற்படும் மாற்றங்கள். எனவே பணவீக்கத்தை கணக்கியல் கொண்ட கணக்கியல் நுட்பத்தை (Inflation Accounting Technique) கண்டறியும் முயற்சிகள் நடந்து வந்தன.

## 12.2. சென்ற கால அடக்கவிலை அடிப்படையிலான கணக்கு முறை ஏற்படுத்தும் பிரச்சனைகள்

1. விலை உயர்வு காலத்தில் — பணவீக்க காலத்தில் இந்த முறை பெரும் இடையூறாக அமைந்து விடுகிறது. உதாரணமாக கடந்த

கால மதிப்புகளில் சொத்துக்களுக்கு தேய்மானம் தரப்பட்டுள்ளது. அப்படி சேர்ந்துள்ள தொகை தற்போது புதிதாகச் சொத்துக்கள் வாங்கப் போதுமானதாக இருக்காது. சொத்துக்கள் வாங்கவே சிரமப்படும் என்றால், புதிதாக வந்துள்ள தொழில் நுட்பத்தை வாங்குவதில் இன்னும் சிரமம் வரும்.

2. இலாபம் அல்லது நட்டம் அல்லது இதர நிதி நிலைமையானது நடந்து முடிந்த ஆண்டின் வருவாய், செலவுகளைக் கொண்டு இணைக்கப்பட்டுள்ளது. இப்போது நிலவும் வருவாய், செலவுகளோடு அது பொருந்தி வராது. ஆகவே, ஆண்டு முதலில் கணிக்கப்படும் இலாபம் அல்லது நட்டம் ஒரு மாயத் தோற்றமாக இருக்கும்.
3. பயன்படுத்தப்பட்ட சரக்கிருப்பை மீண்டும் பெறுவதற்கான விலை சேர்க்கப்படாததால் நிறுவனத்தின் செயல்திறனை முழுமையாக அறிய முடியாது.

## 12.3. கணக்கியல் முறைகள்

விலையில் ஏற்படும் மாற்றங்களையும் எடுத்துக் கொள்ளும் கணக்கியல் முறைகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் கீழ்வரும் மூன்று முறைகள் முக்கியமானவை.

1. சரக்கிருப்பை மதிப்பிடுவதற்கு – LIFO (Last in First Out) கடைசியாக வருவது முதலில் போகிறது முறையைப் பயன்படுத்திக் கொண்டு நிலைத்த சொத்துக்களை அவ்வப்போது மறுமதிப்பீடு செய்வது.
2. நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல் முறை (True Current Purchasing Power Accounting Method – CPPA)
3. நடப்பு அடக்கவிலை கணக்கியல் முறை (The Current Cos Accounting Method – CCA)

**நிலைத்த சொத்துக்களை அவ்வப்போது மதிப்பீடு செய்யும் முறை**

அமெரிக்காவில் வரி விதிப்புக்காக அடக்கவிலை கணக்கிடும் போது LIFO முறை ஏற்கப்படுகிறது. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடும் போது இந்த முறையைப் பின்பற்றுவதும் நிலைத்த சொத்துக்களை அவ்வப்போது மறுமதிப்பீடு செய்வதும் விலையில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தைக் கணிசமாகக் குறைக்கும் எனப்படுகிறது. சொத்துக்களை அவ்வப்போது மறுமதிப்பீடு செய்வது துல்லியமான தேய்மான ஒதுக்கீடு செய்ய பெரிதும் உதவும். மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இப்படி மறுமதிப்பீடு செய்யலாம். அல்லது விலைவாசிக் குறியீட்டு எண்களை அடிப்படையாகக் கொண்டும் மறுமதிப்பீடு செய்யலாம். LIFO முறையானது சரக்குகளின் நடப்பு அடக்கவிலையை முன்வைக்கிறது என்பதை நோக்கவும்.

**நிறைகள்**

1. இந்த முறையைப் பயன்படுத்தினால் ஒரு நிறுவனம் அதனுடைய செயல் திறனைப் பாதுகாக்க முடியும். குறைந்தபட்சம் நிலைத்த சொத்துக்கள் மற்றும் இறுதிச் சரக்கிருப்பு விஷயத்திலாவது அதைப் பாதுகாக்க முடியும்.
2. பணவீக்க காலத்தில் செயல்திறனைப் பாதுகாக்க இது நடைமுறைத் தீர்வாக இருக்கும்.
3. சகலரும் ஏற்கத்தக்க வேறொரு முறை கண்டு பிடிக்கப்படும் வரை இதனையொரு சமரச ஏற்பாடாக ஏற்கலாம்.

**வரம்புகள்**

1. இதுவொரு சமரச ஏற்பாடே தவிர, முழுமையான தீர்வு அல்ல.
2. LIPO முறையில் இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பீடு நடப்பு காலத்தியதாக இருக்கும் எனச் சொல்ல முடியாது. அதற்கும் அது மாறுபட்டிருக்கலாம்.

## 12.4. நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல்

பண மதிப்பில் ஏற்படும் மாற்றங்களின் பாதிப்பிலிருந்து கணக்குளை விடுவிக்கிற நோக்கை நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல் (Current Purchasing Power Accounting) கொண்டிருக்கிறது. குறிப்பாக நிதிநிலை அறிக்கையில் ஏற்படும் பாதிப்புகளைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கப்படும் நாளில் குறிக்கப்படும் ரூபாயை ஒரே சீரான ரூபாயாக மாற்றியமைக்க இந்த முறை முயலுகிறது. இதற்காக ரூபாயின் வாங்கும் சக்தியில் ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கும் குறியீட்டு எண் (Index) ஒன்றை உருவாக்க வேண்டியுள்ளது. இதற்காக நுகர்வுப் பொருட்களின் விலைகள் பயன்படுத்தப்படுகின்றன. குறியீட்டு எண்ணைக் கொண்டு அடக்கவிலைகள் மாற்றியமைக்கப்படுகின்றன. இதற்காக வணிக நடவடிக்கைகள் அனைத்தும் அந்த ஆண்டு முழுவதும் சமச்சீராக நடைபெற்றதாக அனுமானித்துக் கொள்ளப்படுகிறது.

இந்த முறையானது வணிக நடவடிக்கைகளை பணம் சார்ந்த இனம், பணம் சாரா இனம் என்று பிரித்துக் கொள்கிறது. உதாரணமாக, ரொக்கம், கடனாளிகள், வரவுக்குரிய உண்டியல்கள் போன்றவை பணம் சார்ந்த சொத்துக்கள், கடன் பத்திரங்கள், கடனீந்தோர்கள் பணம் சார்ந்த பொறுப்புகள், பணவீக்க காலத்தில் பணம் சார்ந்த பொறுப்புக்களைக் கொண்டிருப்பவருக்கு ஒரு வகை ஆதாயம் இருக்கும். மறுபுறம், பணம் சார்ந்த சொத்துக்களைக் கொண்டிருப்பவருக்கு ஒரு வகை நட்டம் இருக்கும். பண மதிப்பு குறைந்து போய்விடுவதாக இந்த நிலை. சரக்கிருப்பு, கட்டடம் போன்றவை பணம் சாரா இனங்கள் ஆகும்.

வழக்கமான நிதிநிலை அறிக்கையை இந்த முறையில் மீண்டும் எழுதிக் காண்பிக்க சில சரிகட்டல்கள் செய்ய வேண்டியிருக்கும்.

ஒப்பு நோக்கு

| விஷயம் | வழமையான முறை | மதிப்பீடு செய்யும் முறை | நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல் முறை |
|---|---|---|---|
| கணக்குகள் | மெய்யாலும் தொகை பெறப்பட்ட அல்லது தரப்பட்டதன் அடிப்படையில் பராமரித்தல் | அவ்வப்போது மறுமதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையில் பராமரித்தல் | உரிய குறியீட்டு எண் அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்ட தொகைகளின் அடிப்படையில் பராமரித்ல் |
| தேய்மானம் | தரப்பட்ட மெய்யான தொகைகளின் அடிப்படையில் கணக்கீடு செய்தல் | சொத்துக்களின் தற்போதைய மதிப்புகளின் அடிப்படையில் கணக்கீடு செய்தல் | உரிய அளவுமானி அடிப்படையில் சரிக்கட்டி கணக்கிடு செய்தல் |
| நோக்கங்கள் | மெய்யான தொகைகளின் அடிப்படையிலான அடக்கவிலையைக் கொண்டு இலாபத்தைக் கணக்கிடுதல். இதே அடிப்படையில் நிதி நிலையை தருதல் | இது உள்முகமான (ஐறெயசன டுழழமைெ) கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. நிறுவனத்தினுடைய செயல்திறனைப் பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டது. | முதலீட்டாளர்கள் நோக்கில் வாங்கும் சக்தியைப் பராமரிப்பதை இது கருத்தில் கொள்கிறது. இது வெளிமுகமாக (Outward Looking) கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. |

**நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல் முறை**

**குறியீட்டு எண்ணைப் (Index) பயன்படுத்துதல்**

இந்த முறையின் கீழ் குறியீட்டு எண்ணைப் பயன்படுத்துவது எப்படி என்பதைக் காணலாம். கணினி ஒன்றை 1.1.2005ல் ரூ.60,000க்கு

வாங்கினோம். அப்போது விலை குறியீட்டு எண் (Price Index) 150 ஆக இருந்தது. அதுவே 31.12.2005ல் 200 ஆகும். எனவே, 31.12.2005ல் தயாரிக்கப்படும் இருப்புநிலைக் குறிப்பில் அதன் மதிப்பு இவ்வாறு இருக்கும்.

கணினியின் மாற்றியமைக்கப்பட்ட மதிப்பு $= \dfrac{60,000 \times 200}{150}$ ரூ.80,000

இப்படி பணம் சார்ந்த தொகைகள் மாற்றியமைக்கப்பட்டு, அதன் காரணமாக வரும் ஆதாயம் அல்லது நட்டம் கணக்கிடப்படும் குறிப்பாக இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்படும் பொழுது,

**உதாரணம்**

| விபரங்கள் | 01.01.2005 ரூ. | 31.12.2005 ரூ. |
|---|---|---|
| ரொக்கம் | 10,000 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 40,000 | 50,000 |
| கடனீந்தோர் | 30,000 | 40,000 |
| பொது வைப்புகள் | 40,000 | 40,000 |

1.1.2005ல் சில்லறை விலை குறியீட்டு எண் 200

31.12.2005ல் சில்லறை விலை குறியீட்டு எண் 300

அந்த ஆண்டின் சராசரி குறியீட்டு எண் 240

மேற்கண்ட விபரங்களைக் கொண்டு நிகர விளைவு கீழ்வருமாறு தீர்மானிக்கப்படும்.

1. பொறுப்புகளின் மீது நடப்பு வாங்கும் சக்தியில் ஏற்பட்ட மாற்றத்தின் தாக்கம்:

1.1.2005ல் பொறுப்புகள் (கடனீந்தோர் + பொது வைப்புகள்) பொது விலைகளின் படி $= \dfrac{70,000 \times 300}{200}$ ரூ. 1,05,000

கூடுதல் $\dfrac{10,000 \times 300}{240}$ ரூ. 12,500

1,17,500

| | |
|---|---|
| ஆனால், பொறுப்புகள் (31.12.2005ல்) | 80,000 |
| பணம் சார்ந்த பொறுப்புகளைக் கொண்டிருப்பதில் கிடைத்த ஆதாயம் | 37,500 |

2) சொத்துக்களின் மீது நடப்பு வாங்கும் சக்தியில் ஏற்பட்ட மாற்றத்தின் தாக்கம் 1.1.2005ல் சொத்துக்கள் (ரொக்கம் + பற்பல கடனாளிகள்)

| | | | |
|---|---|---|---|
| $\frac{50,000 \times 300}{200}$ | = | ரூ. | 75,000 |
| கூடுதல் ரூ $\frac{20,000 \times 300}{240}$ | = | ரூ. | 25,000 |
| | | | 1,00,000 |
| ஆனால், பணம் சார்ந்த சொத்துக்கள் (31.12.2005) | = | ரூ. | 70,000 |
| பணம் சார்ந்த சொத்துக்களில் கிடைத்த ஆதாயம் | | | 30,000 |

ஆக, பணம் சார்ந்த சொத்துகளில் கிடைத்த நிகர லாபம் = ரூ.7,500 (ரூ.37,500 — ரூ.30,000)

**விற்பனையின் அடக்கவிலை (Cost of Sales) மற்றும் சரக்கிருப்பு**

இவற்றுக்காக குறியீட்டு எண் பயன்படுத்தப்படும். ஆனால் சரக்கிருப்பானது LIFO அல்லது FIFO முறையில் (முதலில் வருவது முதலில் போகிறது) பராமரிக்கப்படுகிறது என்பது கணக்கில் கொள்ளப்படும்.

**உதாரணம்:**

ஆர்.கே.லிமிடெட் LIFO முறையைப் பின்பற்றுகிறது. கீழ்வரும் விபரங்களிலிருந்து விற்பனையின் அடக்கவிலை மற்றும் இறுதிச் சரக்கிருப்பை நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல் முறையில் கண்டுபிடித்திடுக.

| | ரூ. |
|---|---|
| 31.12.2005ல் ஆரம்பச் சரக்கிருப்பு | 10,000 |
| 2006ல் கொள்முதல் | 56,000 |
| 31.12.2006ல் இறுதிச் சரக்கிருப்பு | 12,000 |
| 31.12.2005ல் பொது விலை குறியீட்டு எண் | 150 |
| 2006க்கான சராசரி | 180 |
| 31.12.2006ல் | 240 |

**விடை**

விற்பனையின் அடக்கவிலை

| | ரூ. |
|---|---|
| ஆரம்பச் சரக்கிருப்பு | 10,000 |
| கொள்முதல் | 56,000 |
| | 66,000 |
| கழிக்க : இறுதிச்சரக்கிருப்பு | 12,000 |
| LIFO அடிப்படையிலான மதிப்பு | 54,000 |

நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல் முறையில்

$$\frac{54,000 \times 240}{180} = \text{ரூ.}72,000$$

இறுதிச் சரக்கிருப்பு (LIFO அடிப்படையில்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்பச் சரக்கிருப்பிலிருந்து | = 10,000 | $\left(\frac{10,000 \times 240}{150}\right)$ | = | 16,000 |
| நடப்புக் கொள்முதலிலிருந்து | = 2,000 | $\left(\frac{2,000 \times 240}{180}\right)$ | = | 2,666 |
| | = ரூ.12,000 | | = | 18,666 |

**இலாபத்தைக் கணக்கிடுதல்**

இதற்கு இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று – நிகர மாறுதல் முறை, இரண்டு – வருமான முறை

நிகர மாறுதல் முறையில் ஏற்கனவெ உள்ள இருப்புநிலைக் குறிப்பான குறியீட்டு எண்ணைப் பயன்படுத்தி நடப்பு வாங்கும் சக்தி முறையிலான இருப்புநிலைக் குறிப்பாக மாற்றப்படுகிறது. பணம் சார்ந்த இனங்கள் இப்படி மாற்றியமைக்கப்படும். அதன் விளைவானது பொது விலை அளவின்படியிலான இலாபம் அல்லது நட்டமாகக் காண்பிக்கப்படும். சாதாரணப் பங்கு முதலும் இப்படி மாற்றியமைக்கப்படும். சாதாரணப் பங்கு முதலில் ஏற்படும் மாற்றத்திற்குச் சமமாக இலாபம் இருக்கும் என்கிற கணக்கியல் கோட்பாட்டின்படி இது செய்யப்படுகிறது.

வருமான முறையின் கீழ் வழுமையான முறையில் தயாரிக்கப்பட்ட இலாபநட்டக் கணக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் உள்ள அனைத்து இனங்களுக்கு மாற்றியமைக்கப்படுகின்றன. பணம் சார்ந்த இனங்கள் மூலம் வரும் ஆதாயம் அல்லது நட்டம் பொது விலை அளவின்படியிலான இலாபம் அல்லது நட்டமாகத் தீர்மானிக்கப்படும்.

**உதாரணம்:**

**கே.எம்.ஜியின் இருப்புநிலைக்குறிப்பு**

**1.1.2005ல்**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 20,000 | இயந்திரம் | 30,000 |
| 10% கடன் பத்திரங்கள் | 12,000 | சரக்கிருப்பு | 4,800 |
| பற்பல கடனீந்தோர் | 7,200 | பற்பல கடனாளிகள் | 2,400 |
| | | ரொக்கம் | 2,000 |
| | 39,200 | | 39,200 |

### 31.12.2005ல் முடியும் ஆண்டுக்கான இலாபநட்டக்கணக்கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ஆரம்பச் சரக்கிருப்பு | 4,800 | விற்பனை | 20,000 |
| கொள்முதல் | 9,200 | இறுதிச்சரக்கிருப்பு | 4,000 |
| விற்பனையின் மீது மொத்த இலாபம் | 10,000 | | |
| | 24,000 | | 24,000 |
| தேய்மானம் | 3,000 | மொத்த இலாபம் | 10,000 |
| நடப்புச் சொத்துக்கள் | 1,600 | | |
| கடன் பத்திரங்கள் மீது வட்டி | 1,200 | | |
| நிகர லாபம் | 4,200 | | |
| | 10,000 | | 10,000 |

**கூடுதல் செய்திகள்**

அ) ஆண்டு முழுக்க கடனாளிகள் மற்றும் கடனீந்தோர் நிலையாக இருந்தன.

ஆ) குறியீட்டு எண்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| 1.1.2005ல் | 200 |
| ஆண்டின் சராசரி | 240 |
| 31.12.2005ல் | 300 |

இ) FIFO முறை பின்பற்றப்பட்டது.

நடப்பு வாங்கும் சக்தி கணக்கியல் முறையில் விலை அளவில் ஏற்பட்ட மாற்றங்களைச் சரிக்கட்டி 2005க்கான முடிவுக் கணக்கைத் தயாரிக்கவும்.

விடை

| வழமையான முறை | | | நடப்பு வாங்கும் சக்தி முறை | | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | | | ரூ. |
| விற்பனை | | 20,000 | $\frac{20,000 \times 300}{240}$ | | 25,000 |
| விற்பனையின் அடக்கவிலை: | | | $\frac{4,800 \times 300}{200}$ | 7,200 | |
| ஆரம்பச் சரக்கிருப்பு | 4,800 | | $\frac{9,200 \times 300}{240}$ | 11,500 | |
| கொள்முதல் | 9,200 | | | 18,700 | |
| | 14,000 | | $\frac{4,000 \times 300}{240}$ | 5,000 | 13,700 |
| கழி : இறுதிச்சரக்கிருப்பு | 4,000 | 10,000 | | | 11,300 |
| மொத்த இலாபம் | | 10,000 | | | |
| மறைமுகச் செலவுகள்: | | | $\frac{1,600 \times 300}{240}$ | 2,000 | |
| நடப்புச் செலவுகள் | 1,600 | | $\frac{3,000 \times 300}{200}$ | 4,500 | |
| தேய்மானம் | 3,000 | | | 1,200 | 7,700 |
| கடன் பத்திரம் மீது வட்டி | 1,200 | 5,800 | | | 3,600 |
| நிகர லாபம் | | 4,200 | | | |
| விலை அளவில் ஆதாயம் | | | | | 5,100 |
| கிடைத்த ஆதாயம் | | 4,200 | | | 8,700 |

**வருமானம் சார்ந்த இனங்கள் மீதான ஆதாயம்**

அ) கடன் பத்திரங்கள் மற்றும் கடனீந்தோர்கள் 19,200

1.1.2005ல்

மாற்றத்தால் $\left(\frac{19,200 \times 300}{200}\right)$ 28,800

பொறுப்புகளின் மீது ஆதாயம் 9,600

ஆ) சொத்துக்கள் ரொக்கம் மற்றும் பற்பல கடனாளிகள் 13,600

ரொக்கம் + பற்பல கடனாளிகள் $\frac{4,400 \times 300}{200}$ 6,600

கூடுதல் செலவு $\frac{9,200 \times 300}{240}$

(ரூ.11,200* — 2,000 = 9,200) 18,100

11,500

4,500

பணம் சார்ந்த இனங்களின் மீது நிகர ஆதாயம் 5,100

**31.12.2005ல் இருப்புநிலைக்குறிப்பு**

| வழமையான முறை | | நடப்பு வாங்கும் சக்தி முறை | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| பொறுப்புகள் | | $\frac{20,000 \times 300}{200}$ | 30,000 |
| பங்கு முதல் | 20,000 | | |
| கடன் பத்திரங்கள் | 12,000 | | 12,000 |
| பற்பல கடனீந்தோர் | 7,200 | | 7,200 |
| கிடைத்த ஆதாயம் | 4,200 | | 8,700 |
| | 43,400 | | 57,900 |

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**I. சரியா / தவறா?**

அ). மரபு சார்பு கணக்கியலில் தயாரிக்கப்படும் நிதி அறிக்கைகள் நடப்பு பொருளாதார உண்மைகளைப் பிரதிபலிக்க தவறுகின்றன.

ஆ). விலை மட்டக் கணக்கியலும் மற்றும் பணவீக்கக் கணக்கியல் ஒன்றே.

இ). நடப்பு வாங்கு திறன் முறை 'பிடிப்புகள்' மற்றும் 'இயக்க' இலாபங்களை கலந்தது.

ஈ). நடப்பு வாங்கும் திறன் முறையிலுள்ள மாற்றும் வீதம் கடந்த கால விபரங்களை நடப்பு விலையில் மாற்றிக் கூறப்பயன்படுகின்றன.

உ). பொது விலை மட்டம் இலாபம் அல்லது நட்டம் நடப்பு வாங்கும் திறன் முறையில் பணம் சார்பு இனங்களின் இலாப அல்லது நட்டத்தைப் பிரதிபலிக்கின்றது.

| சொத்துக்கள்: | | | | |
|---|---|---|---|---|
| *ரொக்கம் | | 10,000 | | 10,000 |
| பற்பல கடனாளிகள் | | 2,400 | | 2,400 |
| சரக்கிருப்பு | | 4,000 | $\frac{4,000 \times 300}{240}$ | 5,000 |
| இயந்திரம் | 30,000 | | $\frac{27,000 \times 300}{200}$ | |
| கழி தேய்மானம் | 3,000 | 27,000 | | 40,500 |
| | | 43,400 | | 57,900 |

*ரொக்க இறுதி இருப்பு

| | | |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 2,000 |
| கூட்டுக: விற்பனை | | 20,000 |
| | | 22,000 |
| கழி: கொள்முதல் | 9,200 | |
| நடப்புச் செலவுகள் | 1,600 | |
| கடன் பத்திரம் மீது வட்டி | 1,200 | 12,000 |
| | | 10,000 |

வட்டிக் கொடுப்பதற்கு முன்பான ரொக்கம் 10,000 + 1,200 = 11,200

## 12.5. நடப்பு அடக்கவிலை கணக்கியல்

விலைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கில் கொள்வதற்கு மற்றொரு முறை உள்ளது. அதன் பெயர் "நடப்பு அடக்கவிலை கணக்கியல்" (Current Cost Accounting) ஆகும். இதன் கூறுகள் வருமாறு:

1. பணமே பிரதான அலகாக இருக்கும்.
2. சொத்துக்களும் பொறுப்புகளும் "தொழிலுக்கான அவற்றின் மதிப்பின" (வுாநசை எயடரந வழ வாந டீரளைநௌள) அடிப்படையில் காட்டப்படும். தொழிலுக்கான மதிப்பு என்றால் அந்தச் சொத்து தொலைந்து போனால் எவ்வளவு நட்டம் வருமோ அதற்குச் சமமான மதிப்பு. அந்தச் சொத்தை தற்போது வாங்கினால் என்ன செலவாகமோ அதை எடுத்துக் கொள்கின்றன சில நிறுவனங்கள்.

குறிப்பு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). நிதி அறிக்கைகளை பொது விலை மட்டத்தின் மாற்றங்களை பிரதிபலிக்கச் செய்யுமாறு திருப்பிக் கூறும் ஒரு நுட்பத்தை ............. என்பர்.

ஆ). நடப்பு வாங்கும் திறன் மற்றும் நடப்பு அடக்க விலை கணக்கியல் கலந்த முறையை............ முறை என்பர்.

இ). எந்த இனங்களின் தொகையை ஒப்பந்தப்படி பணம் சார்பு அலகுகளால் நிர்ணயிக்கப்படுகின்றதோ அதனை ........ என்று அழைப்பர்.

ஈ). சொத்தின் நடப்பு மதிப்பிற்கும் மற்றும் அதனின் ............ உள்ள வேறுபாட்டால் கிடைக்கும் இலாபத்தை பிடிப்புகள் இலாபம் என்பர்.

உ). விற்ற பொருளின் நடப்பு மதிப்பு அதனின் நடப்பு அடக்க விலையை விட அதிகமாக இருப்பதை............ என அழைப்பர்.

3. தொழிலுக்கான மதிப்பைக் கணக்கில் கொண்டு வந்தபிறகு இலாபம் கண்டுபிடிக்கப்படும். இதற்காக மூன்று சரிக்கட்டல்கள் செய்யப்படும். அவை:

   a. தேய்மானச் சரிக்கட்டல்கள்
   b. விற்பனையின் அடக்கவிலைச் சரிகட்டல்கள் (Cost of Sales Adjustment – COSA)
   c. பணம் சார்ந்த நடைமுறை முதல் (Working Capital) சரிகட்டல் (MWCA)

இந்த மூன்று சரிக்கட்டல்களையும் சேர்த்து கணக்கில் கொள்ளும் வகையில் “கியரிங்” (Gearing) சரிக்கட்டல்கள் எனும் ஒன்று செய்யப்படுகிறது.

**உதாரணம்**

**லோகோ & கோ தொடர்பான விபரங்கள் வருமாறு**

| எண் | விபரம் | ஆரம்பம் (ரூ.’000) | இறுதி (ரூ.’000) |
|---|---|---|---|
| 1. | நிகர கடன் : மாற்றக்கூடிய கடன் பத்திரம் மற்றும் தர வேண்டிய வரி | 14,000 | 14,000 |
| | கடனீந்தோர் | 2,000 | 1,400 |
| | வங்கி அதிக வட்டி | 6,000 | 4,600 |
| | வரி | 1,500 | 1,400 |
| | | 23,500 | 21,400 |
| | கழி : ரொக்கம் | 4,000 | 6,000 |
| | | 19,500 | 15,400 |

| | | | |
|---|---|---|---|
| 2. | பங்கு முதல் | 37,080 | 47,056 |
| | நடப்பு அடக்கவிலை இருப்புநிலைக் குறிப்பிலிருந்து காப்புகள் | 500 | 600 |
| | மொத்த பங்குதாரர் நலன் | 37,580 | 47,656 |
| 3. | நடப்பு அடக்கவிலைச் சரிகட்டல் : | | |
| | தேய்மானம் | | 1,700 |
| | நிலைத்த சொத்துக்கள் விற்றது | | 1,800 |
| | விற்பனையின் அடக்கவிலைச் சரிகட்டல் | | 1,620 |
| | பணம் சார்ந்த நடைமுறை முதல் சரிக்கட்டல் | | 1,120 |
| | | | 6,240 |

**கணக்கீடு செய்க**

அ) கியரிங் சரிக்கட்டல் விகிதம்

ஆ) நடப்பு அடக்கவிலை சரிக்கட்டல், கியரிங் சரிகட்டல்களைக் கணக்கில் கொண்டு

**விடை**

| விபரம் | ஆரம்பம் (ரூ.'000) | இறுதி (ரூ.'000) |
|---|---|---|
| நிகரக் கடனின் சராசரி – L | 19,500 | 15,400 |
| மொத்த பங்குதாரர் நலனின் சராசரி – S | 37,580 | 47,656 |
| மொத்த சராசரி – L + S | 57,080 | 63,056 |

$$L = \frac{19{,}500 \text{x} 15{,}400}{2} = 17{,}450$$

$$L + S = \frac{57{,}080 \text{x} 63{,}056}{2} = 60{,}068$$

கியரிங் சரிக்கட்டல் விகிதம் $= \frac{L}{L+S} x100$

$= \frac{17,450}{60,068} x100 = 29.1\%$

| | ரூ. ('000) |
|---|---|
| மொத்த நடப்பு அடக்கவிலைச் சரிக்கட்டல் | 6,240 |
| கழி : கியரிங் சரிக்கட்டல் (29.1%) $\left(6,240x\frac{29.1}{100}\right)$ | 1,815 |
| கியரிங் சரிகட்டலுக்கப் பிறகான நடப்பு அடக்கவிலைச் சரிக்கட்டல் | 4,425 |

## 12.6. அருஞ்சொற்கள்

**பணவீக்கக் கணக்கியல்:**

எல்லா பொருளாதார நிகழ்ச்சிகளை நடப்பு அடக்க விலையில் பதியும் கணக்கியல் நுட்பமே பண வீக்கக் கணக்கியல்.

**பணம் சார்பு இனங்கள்:**

பொதுவிலை மட்டத்தில் மாற்றங்கள் எவ்வாறாயினும் ஒப்பந்தப்படி எந்த இனங்களின் தொகைகளை பணம் சார்பு அலகுகளால் குறிப்பிடுகிறோமோ அதுவே பணம் சார்பு இனங்கள்.

**பணம் சார்பற்ற இனங்கள்:**

எந்த இனங்களை பணம் சார்பு தொகையால் கூற இயலாதோ அதனை பணம் சார்பற்ற இனங்கள் என்பர்.

## 12.7. தொகுத்தறிவோம்

பண வீக்கத்தின் விளைவு என்னவெனில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் விலைகள் உயரும் பொழுது, கடந்த கால கணக்கியல்

முறையில் தயாரித்தக் கணக்குகள் உண்மையான இலாபம் மற்றும் நிதி அறிக்கையில் உண்மையான மதிப்பை அளிக்கத் தவறுகின்றன. விலை மட்ட மாற்றத்தை கணக்கியலாக்க இரண்டு முறைகள் உண்டு. நடப்பு வாங்கு திறன் முறையில், பொருத்தமான மாற்று வீதங்களை பயன்படுத்தி நிதி அறிக்கைகள் மறுபடியும் தயாரிக்கப்படுகின்றது. நடப்பு அடக்க விலை கணக்கியல் முறையில் சொத்துக்கள் நடப்பு அடக்க விலையில் மதிப்பிடப்படுகின்றன. அதாவது மறு அமைவு அடக்கவிலையில் தேவையான ஒதுக்கீடுகள் மற்றும் சரிக்கட்டுதலுக்குப் பின் அதாவது தேய்மானச் சரிக்கட்டு, பணம் சார்பு நடப்பு முதல் சரிக்கட்டு, விற்பனை அடக்க விலை சரிக்கட்டுதலுக்கு பின் இலாபம் அல்லது நட்டம் கண்டுபிடிக்கப்படுகின்றது. ஆனால் நடப்பு அடக்க விலை கணக்கியல் முறையில் முக்கியக் குறைபாடு பணம் சார்பு சொத்துக்களின் இலாபம் அல்லுது நட்டங்களை புறக்கணிப்பதாகும். ஆனால் நடப்பு வாங்கும் திறனில் இந்த இலாபம் அல்லது நட்டமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## 12.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

**I. சரியா / தவறா?**

அ). சரி, ஆ). தவறு, இ). தவறு, ஈ). சரி, உ).சரி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). நடப்பு வாங்கு திறன் கணக்கியல்

ஆ). ஒட்டு முறை

இ). பணம் சார்பு இனங்கள் ஈ). உண்மை அடக்க விலை

உ). இயக்க வருமானம்

## 12.9. மாதிரி வினாக்கள்

1). மீறு அமைவு அல்லது நடப்பு அடக்க விலைக் கணக்கு என்றால் என்ன? அதன் உபயோகங்களை விவரி.

2). சிறு குறிப்பு வரைக.

அ). பணம் சார்பு சொத்துக்கள்

ஆ). ஊக்குவிப்பு சரிக்கட்டு

இ). விற்பனை அடக்க விலைச் சரிக்கட்டு

3). பின்வரும் விபரங்களிலிருந்து முதலில் விற்ற பொருளின் அடக்க விலை (முதலில் வந்தது முதலில் செல்வது) பின் மாற்ற ரூபாயைக் கண்டுபிடி. பின்பு அதனையே 2002 இறுதியில் வாங்கு திறன் ரூபாய்க்கு திருப்பிக் கூறுக.

4). 1.1.2002 அன்று சரக்கிருப்பு ரூ.20,000

2002ல் கொள்முதல் செய்தது ரூ.1,50,000

31.12.2002 அன்று சரக்கிருப்பு ரூ.30,000

பொது விலை அட்டவணை முறை

1.1.2002அன்று 100

ஆண்டு சராசரி 120

31.12.2002 அன்று 150

(விடை: விற்ற பொருளின் அடக்க விலை ரூ.1,80,000)

5). ஜனவரி 1, அன்று ஒரு நிறுமத்தின் பணம் சார்பு இனங்கள் பின்வருமாறு

| விபரம் | ரூ. | விபரம் | ரூ. |
|---|---|---|---|
| கடனாளிகள் | 50,000 | செலுத்த வேண்டிய மா.சீ | 12,000 |
| பெறுதற்குரிய ம.சீ. | 15,000 | கடனீந்தோர்கள் | 23,000 |
| ரொக்கம் | 15,000 | | |
| | 80,000 | | 80,000 |

இந்த ஆண்டில் பணம் சார்பு இனங்களை பாதித்த நடவடிக்கைகள்:

அ). ஆண்டு முழுவதும் சீராக நடந்த விற்பனை ரூ.1,98,000

ஆ). ஆண்டு முழுவதும் சீராக நடந்த கொள்முதல் ரூ.1,32,000

இ). ஆண்டு முழுவதும் சீராக செலவழித்த இயக்கச் செலவுகள் ரூ.33,000

ஈ). ஜீலை 1 அன்று விற்ற இயந்திரம் ரூ.13,000

பொது விலை அட்டவணை பின்வருமாறு:

| | |
|---|---|
| ஜனவரி 1 அன்று | 90 |
| ஆண்டு சராசரி | 110 |
| ஜீலை 1 அன்று | 120 |
| டிசம்பர் 31 அன்று | 120 |

| | |
|---|---|
| (விடை: நிகர பணம் சார்பு சொத்துக்கள் | 1,07,000 |
| கழி: வாங்கும் திறன் நட்டம் | 18,000 |
| நிகர பணம் சார்பு சொத்துக்கள் | 89,000 |

# பாடம் 13

# மனித வளக் கணக்கீடு

கட்டமைப்பு

13.0. அறிமுகம்:

13.1. கற்றல் நோக்கங்கள்:

13.2. நோக்கங்கள்

13.3. மதிப்பிடும் முறைகள்

13.4. மனிதவளக் கணக்கின் நன்மைகள்

13.5. வரம்புகள்

13.6. அருஞ்சொற்கள்

13.7. தொகுத்தறிவோம்

13.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

13.9. மாதிரி வினாக்கள்

## 13.0. அறிமுகம்:

கடந்த நூற்றாண்டில் தொழிற்சாலைகள் மற்றும் வியாபாரங்கள் சிறிய அளவிலும் மற்றும் எளிமையாகவும் இருந்தன. பணிபுரிபவர்கள் 'வேலையாட்கள்' என்றும், அவர்களுடைய பங்களிப்பு பற்றி கவலைப்படாமலும் தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. அவர்கள் வெறும் ஒரு தொழிற் கருவியைப் போலவே நடத்தப்பட்டனர். அவர்களுடைய திறமை, அறிவு, மற்றும் அனுபவம் யாவும் ஒரு பொருட்டாக மதிக்கப்படவில்லை. ஒரு அனுபவம் வாய்ந்த ஒரு தொழிலாளி அல்லது அலுவலர் நிறுவனத்தின் சொத்து என்று கருதப்படவில்லை. ஆனால், தற்பொழுது உலகமயமாக்கல் தனியார் மயம், நவீன சந்தை, பொருட்கள் மற்றும் சேவை ஆகியவை உழைக்கும் சக்தி என்ற பதத்தை

வித்தியாசமாக நோக்க வைத்துள்ளது. எனவே அவர்கள் கூலியாட்களை என்ற பார்வையோடு மாறி, எதிர்கால தொழிற்சாலை வளர்ச்சிக்கு அவர்கள் ஒரு சொத்து என்று பாவிக்கும் கருத்து பரவத் தொடங்கியுள்ளது. மனிதனின் எதிர்பார்ப்பு வெறும் கூலியுடன் நின்றுவிடாமல், மேலும் கௌரவம், தகுதிநிலையடைதல், மற்றும் அதிகாரம், பிறரால் மதிக்கப்படுதல் என்ற பல எதிர்பார்ப்புகளில் முடிகின்றது. எனவே மனிதர்கள் ஒரு நீண்ட கால வளமாக கருதப்படுகின்றனர்.

## 13.1. கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப் பிரிவை படித்த பின்பு நீங்கள்

- மனித வளக் கணக்கியலின் தேவையை உணர முடியும்.
- மனித வளக் கணக்கியலை வரையறுக்க முடியும்.
- மனித வளத்தை மதிப்பிடு செய்யும் பல்வேறு அணுகுமுறையை விவரிக்க முடியும்.
- இந்தியாவில் மனிதவள கணக்கியல் மேம்பாட்டை நியாயப்படுத்த இயலும்.

மனிதவளம் என்பது ஒரு முக்கியமான மதிப்புமிக்க சொத்து. அது இல்லாமல் எந்தவொரு நிறுவனமும் பன்முக வளர்ச்சியைக் காண முடியாது. ஒரு நிறுவனத்தின் மெய்யான சொத்தாக அங்கே பணிபுரிவோரின் ஆற்றலும் திறமையும் இருக்கும். நன்கு கட்டமைக்கப்பட்ட நாணயமிக்க மனித வளம் என்பது இயந்திரங்கள்—கட்டடங்களை விட மிகவும் அருமையான சொத்தாகும்.

எனினும், சில விற்பன்னர்கள் மனித வளத்தை ஒரு சொத்தாக ஏற்பதில்லை. அதற்கு அவர்கள் கூறும் காரணம் அதை வேண்டும் போது விற்று காசாக்க முடியாதே என்பது. இது மேம்போக்கான வாதம். தன்னுடைய திறமைமிக்க பணியாளர்களைக் கொண்டு ஒரு நிறுவனம்

தனித்துவமான பொருளாதார நலனை நிச்சயம் பெற முடியும். அந்த வகையில் அது சொத்து தான்.

சொத்து என்றதும் அதை மதிப்பிடுகிற பிரச்சனை எழுகிறது. துரதிருஷ்டவசமாக மனித வளத்தை மதிப்பிடுவதற்கு அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு முறை இல்லை. இதனை இதர சொத்து மதிப்புகளைப் போல இதை இருப்புநிலைக் குறிப்பில் காட்டுவதில்லை.

**பொருள்**

மனித வளத்திற்கான செலவை முதலீடாகக் கருத வேண்டும். காரணம், இது பண மதிப்பிலான ஆதாயத்தை தருகிறது. இந்தக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே "மனித வளக் கணக்கு". நிறுவனத்தில் உள்ள மனிதர்களின் மதிப்பு மற்றும் அதற்கான செலவை அளவிடுவதே மனித வளக் கணக்கு. பணியாளர்களைத் தேர்வு செய்ய, வேலைக்கு அமர்த்த, பயிற்சி கொடுக்க மற்றும் அவர்களை வளர்த்தெடுக்க ஆகும் செலவுகளைக் கணக்கிடுவதும், நிறுவனத்திற்கு அவர்களின் பொருளாதார மதிப்பைக் கணக்கிடுவதும் இதில் அடங்கியுள்ளது. ஒரு நிறுவனத்தின் கணக்கு ஏடுகளில் மனித ஆதாரங்களின் பணியை முறையாக மதிப்பிடுகிற, பதிவு செய்கிற, முன் வைக்கிற கலையே மனித வளக் கணக்கு ஆகும்.

## 13.2. நோக்கங்கள்

மனித வளக் கணக்கின் பிரதான நோக்கங்கள் வருமாறு—

i) மனித ஆதாரத்தை சொத்தாக பாவிப்பது

ii) அதற்கான மதிப்பைக் கணக்கிடுவது

iii) அதை இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்துவது

iv) மனித ஆதாரத்தை உரிய முறையில் நிர்வாகம் செய்ய உதவுவது.

## 13.3. மதிப்பிடும் முறைகள்

மனித ஆதாரத்தை மதிப்பிடுவதற்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு முறையை உருவாக்குவது கடினமே. எனினும் சில முக்கியமான முறைகள் உள்ளன. அவை—

### 1. வாங்கும்போது ஆன செலவு

கட்டடம், இயந்திரம் போன்ற இதர சொத்துக்கள் அவை வாங்கும் போது என்ன விலை கொடுக்கப்பட்டதோ அதன் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இந்த வழமையான முறையை மனித வளத்தை மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தலாம். அதாவது, மனிதர்களைத் தேர்வு செய்ய, வேலைக்கு அமர்த்த, பயிற்சி கொடுக்க மற்றும் வளர்த்தெடுக்க என்ன செலவாகிறதோ அவற்றை எல்லாம் மனித வளத்தின் மதிப்பாகக் கருதலாம். பிற சொத்துக்களுக்கு தேய்மானம் வழங்கப்படுகிறது. அப்படியே இந்தச் சொத்திலிருந்தும் தேய்மானத்தை கழிக்கலாம். இந்த முறை புரிந்து கொள்ளவும், நடைமுறைப்படுத்தவும் மிக எளிதானது. ஆனால், கட்டடம்— இயந்திரத்திற்கு தேய்மானம் கொடுப்பது போல் மனிதர்களுக்கும் தருவதில் சிரமம் உண்டு. காலம் செல்லச் செல்ல ஆற்றல் வெளிப்பாடு மனிதர்களுக்கு குறைவதும் உண்டு, கூடுவதும் உண்டு. இந்த இயந்திரகதியான முறையில் மனித வளத்தின் நடப்பு மதிப்பீடு துல்லியமாக வெளிப்படாமல் போகலாம்.

### 2. மாற்றும்போது ஆகும் செலவு

தற்போது பணியில் இருப்பவர்களை நீக்கி விட்டு புதிதாகப் பணியாளர்களை நியமித்தால் என்ன செலவு ஆகுமோ அதை மனிதவளத்தின் மதிப்பாகக் கொள்வது இந்த முறை ஆகும். தற்போதுள்ள அனுபவமிக்க பணியாளர்களைப் போன்றவர்களை உருவாக்குவதற்கான சகல செலவுகளையும் இது கணக்கில் கொள்கிறது. தற்போதுள்ளவர்களை பணியில் அமர்த்தும் போது ஆன செலவையும், தற்போது ஆகக் கூடிய

செலவையும் இது ஒருங்கிணைக்கிறது. இருப்புநிலைக்குறிப்பில் இது நடப்பு மதிப்பைத் தருவதால் முந்தைய முறையைக் காட்டிலும் இது யதார்த்த பூர்வமானதாகும். ஆனால், இதிலுள்ள சிக்கல் என்னவென்றால் இருப்பவர்களை மாற்றினால் ஆகும் ஒட்டுமொத்தச் செலவைத் துல்லியமாகக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிது அல்ல.

### 3. மாற்றுப் பயன்பாடு

ஒரு சொத்துக்கு மாற்றுப் பயன்பாடு இருக்கும் போது அதைக் கணக்கில் கொண்டு அதன் மதிப்பை நிர்ணயிக்கலாம். இதையே மனிதவள மதிப்பீட்டுக்கும் பயன்படுத்தலாம். ஆனால் இதை அனைத்து மனிதர்களுக்கம் பயன்படுத்த முடியாது. குறிப்பாக ஒரு நிறுவனத்தின் உயர் அதிகாரிகளை மாற்றுப் பயன்பாடு அடிப்படையில் மதிப்பிட முடியாது. இடைநிலை அதிகாரிகளை மதிப்பிடுவதும் கூடக் கடினமே.

### 4. தரப்படுத்தப்பட்ட மதிப்பீடு

இது தரப்படுத்தப்பட்ட அடக்கவிலை (Standard Cost) கருத்தியலை அடிப்படையாகக் கொண்டது. மனித வளத்தை மதிப்பிடுவதற்கு மனிதர்களைத் தேர்ந்தெடுப்பது, வேலைக்கு அமர்த்துவது பயிற்சி தருவது மற்றும் வளர்த்தெடுப்பது ஆகியவற்றுக்கு ஆகக் கூடிய தரப்படுத்தப்பட்ட செலவுகளைப் பயன்படுத்துவது. இப்படி நிச்சயிக்கப்பட்ட தர மதிப்பீட்டை நடப்பு மதிப்பீட்டோடு ஒப்பிட்டுப் பார்த்து வேறுபாடுகளை அறியலாம், அவற்றைக் களைய முனையலாம்.

### 5. எதிர்கால வருமானங்களின் தற்காலத்திய மதிப்பு முறை

இந்த முறையை பிராச் லெவ் மற்றும் அபா சுவார்ட்ஸ் என்பவர்கள் 1971ல் உருவாக்கினார்கள். இது இந்தியாவில் பிரபலமாக உள்ளது. விரைவில் மரணமடையக்கூடும் என்பதை மனதில் கொண்டு ஊழியர்கள்

குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**I. சரியா / தவறா?**

அ). வழக்கமான கணக்கியலில் நடைமுறை மனித வளத்தை முழுமையாக நிராகரிக்கின்றது.

ஆ). வரலாற்று அடக்க விலை மதிப்பீடு அணுகுமுறையானது மனித வளத்தை தேர்வு செய்து பயிற்சியளித்து மேம்படுத்த ஆகும் உண்மையான செலவுகளை கணக்கில் கொள்கின்றது.

இ). சந்தர்ப்பவாத அடக்க விலை அணுகுமுறையானது, வெளியிலிருந்து உடனடியாக கிடைக்கும் பணியாட்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றது.

ஈ). எதிர்கால ஈட்டின் நிகழ் மதிப்பு மாதிரியானது மறு அமைவு அடக்கவிலை அணுகுமுறையின் அடிப்படையிலானது.

உ). வெகுமதி மதிப்பீட்டு மாதிரி மற்றும் நிகரப் பயன் மாதிரி ஒரே விதியின் அடிப்படையிலானது.

ஊ). கூட்டப் பெற்ற ஊதிய அணுகுமுறை மாதிரியானது ஒரு நிகழ் மதிப்பு அணுகுமுறையின் ஒரு வகையாகும்.

எதிர்காலத்தில் ஈட்டப்போகிற வருமானங்களின் தற்காலத்திய மதிப்பு (Present Value of Future Earnings) கணக்கிடப்படுகிறது. காலவாரியாக வருமானங்கள் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கழிவு செய்யப்பட்டு அவற்றின் தற்காலத்திய மதிப்பு கண்டுபிடிக்கப்படுகிறது. ஒரு தனிமனிதனின் மதிப்பைக் கண்டறிய அவர்கள் கீழ்வரும் வாய்ப்பாட்டை வழங்கியுள்ளார்கள்.

$$V_r = \frac{l(t)}{(1+R)^{t-r}}$$

Vr = இத்தனை ஆண்டு வயதுள்ள ஒரு தனிநபரின் மதிப்பு

l(t) = ஓய்வு பெறும் வரையிலான அந்தத் தனிமனிதனின் ஆண்டு வருமானங்கள்

t = ஓய்வு பெறும் வயது

R = கழிவு செய்வதற்கான விகிதம்

மனிதர்களின் மதிப்பைக் கண்டறிய ஒரு சூத்திரம் கிடைப்பதால் இந்த முறையைப் பயன்படுத்துவது எளிது. ஆனால், ஒரு தனிமனிதனின் எதிர்கால வருமானங்களை முன்கூட்டியே கண்டறிவது அவ்வளவு எளிதான விஷயமல்ல. ஓய்வு பெறுவது அல்லது மரணம் தவிர வேறு சில காரணங்களாலும் ஒருவர் ஒரு நிறுவனத்தை விட்டு வெளியேறலாம் என்பதை இந்த முறை கணக்கில் கொள்ளத் தவறியுள்ளது.

### 6. பொருளாதார மதிப்பு முறை

ஒரு சொத்தின் மதிப்பு என்பது பொருளாதாரவாதியின் கண்ணோட்டத்தில் அதன் எதிர்காலப் பொருளாதாரப் பலன்களின் தற்காலத்திய மதிப்பிற்குச் சமமாகும். இதை மனித வளத்திற்கும் பயன்படுத்தலாம். இதன்படி எதிர்காலப் பலன்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அது போல அவற்றின் தற்கால மதிப்புகளைக் கண்டறிவதற்கு ஏற்ற ஒரு கழிவு விகிதத்தையும் நிச்சயிக்க வேண்டும். ஒரு தனிப்பட்ட

ஊழியரால் கிடைக்கக் கூடிய எதிர்காலப் பொருளாதார நலன்களைக் கண்டறிவதும் கடினம், உரிய கழிவு விகிதத்தை நிச்சயிப்பதும் கடினம்.

**7. மொத்தப் பணம் வழங்கல் முறை**

பேராசிரியர் எஸ்.கே. சக்கரவர்த்தி இதனை உருவாக்கினார். இதன்படி நிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள் அல்லாதவர்களின் மதிப்புகளைத் தனித்தனியே கண்டறியலாம். அதாவது, நபர்களின் சராசரி ஊதியத்தை கணக்கிட்டு அதை சராசரி வேலை காலத்தோடு பெருக்குவது. ஆட்களைத் தேர்வு செய்வது, பயிற்சி அளிப்பது, வளர்த்தெடுப்பது ஆகியவற்றுக்கான செலவு தனியாக பதிவு செய்யப்படும். இது ஒத்திவைக்கப்பட்ட (Deferred) நடைமுறைச் செலவாகக் கருதப்பட்டு, அது நிறுவனத்தின் இருப்புநிலைக்குறிப்பில் காண்பிக்கப்படும்.

**8. மொத்தச் செலவு முறை**

பேராசிரியர் என். தாஸ்குப்தாவைப் பொறுத்தவரை ஒரு தனிமனிதரைத் தற்போதைய நிலைக்கு உயர்த்த அரசும் அந்த நிறுவனமும் என்னவெல்லாம் செலவு செய்தனவோ அவை அனைத்தின் மொத்தமும் அந்த மனிதனின் மதிப்பு ஆகும். இதன்படி அந்த நிறுவனம் அந்தத் தனிமனிதருக்காகச் செய்யும் செலவோடு கல்விச் செலவு உள்ளிட்ட சகல செலவுகளும் சேரும்.

## 13.4. மனிதவளக் கணக்கின் நன்மைகள்

1. மனித வளத்தின் மதிப்பை இந்தக் கணக்கு தருகிறது. இதனால் மனித வளத்தில் போடப்பட்ட முதலீட்டின் மீது கிடைக்கும் வருவாயை எளிதில் கணக்கிடலாம்.
2. இதற்காக ஊழியர்கள் பற்றிய விரிவான பதிவேடுகள் தயாரிக்கப்படுகின்றன. இது மனிதர்களைத் தேர்வு செய்ய, பயிற்சி அளிக்க நிர்வாகம் செய்ய நிர்வாகத்திற்கு உதவுகிறது.

குறிப்பு

**II. சரியான விடை தருக.**

1). மனித வளத்தை பணத்தின் அடிப்படையில் மதிப்பிட முதலில் முயன்றவர்
அ). வில்லியம் பெட்டி
ஆ). வில்லியம் சி.பைல்
இ). ஸ்யில்ட்ஸ்

2). மறு அமைவு அடக்க விலை அணுகுமுறையை, மனித வளத்தை மதிப்பிட உருவாக்கியவர்.
அ). பைல்
ஆ). ரெனிலிஸ் லின்ஸ்ட்
இ). டேவிட் வாஸ்டன்

3). நிதிப்பட்டியலில் மனித வள மதிப்பீட்டை வெளிப்படுத்தும் விதமானது
அ). நிதிப்பட்டியலின் ஒரு பகுதியாக
ஆ). பின் சேர்க்கை விபரங்கள்
இ). சட்ட பூர்வமான கடமை.

4). இந்திய நிறுவனங்கள் பின்பற்றும் மனித வள மதிப்பீட்டைத் தந்தவர்
அ). மொரிஸா
ஆ). ஃபிளேம் ஹோல்ட்ஸ்
இ). லிவ் மற்றும் ஸ்குவார்ட்ஸ்

3. ஊழியர்கள் ஓய்வு பெறும் போது அங்கே புதியவர்கள் நியமிக்கவே எண்ணம் எழும். அந்தப பணியிடம் இப்போதும் தேவைதானா என்கிற கேள்வியை இந்த மனிதவளக் கணக்கு எழுப்பி விடை காணுகிறது. தேவையில்லை என்றால் அந்தப் பணியிடத்தை நிரப்ப வேண்டியதில்லை. நிறுவனத்திற்கு செலவு குறைகிறது.
4. மனித வளத்தை ஒரு மாறும் சொத்து (Variable Asset) என இந்த கணக்கியல் கருதுவதால் இந்த நிறுவனத்தில் முறையாக ஒதுக்கீடு செய்ய உதவுகிறது. தகுதி வாய்ந்த இடத்தில் தகுதி வாய்ந்தவர் பொருத்தப்படுவார். இது தேவையற்ற ஊழியர் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரும்.
5. மனிதர்களின் திறமை, ஆற்றல், அர்ப்பணிப்பு உணர்வும் ஒரு முக்கியமான சொத்தாகக் கருதப்படுகிறது, மதிக்கப்படுகிறது என்பது ஊழியர்கள் மத்தியில் உற்சாகத்தை உருவாக்கும். இது உற்பத்தி திறனை அதிகரிக்கும். தனி மனித குணநலன்களில், நடவடிக்கையில் சாதகமான தாக்கத்தை உருவாக்கும்.
6. மனிதவளம் மிகுந்து தேவைப்படுகிற அல்லது தனித்துவமாகத் தேவைப்படுகிற கல்வித்துறை மற்றும் கலைத்துறைகளில் இந்தக் கணக்கு மிக அவசியம்.
7. இப்படி மனிதவளக் கணக்கு பராமரிக்கப்படுகிறது என்பது முதலீட்டாளர்களை இந்த நிறுவனத்தில் முதலீடு செய்யத் தூண்டும்.
8. நிர்வாகம் தனது தலைமைப் பண்புகளை மற்றும் நிர்வாகப் பணிகளை வளர்த்துக் கொள்ளவும் இது உதவும்.

## 13.5. வரம்புகள்

1. மனிதர்களின் ஆயுள் நிச்சயமில்லாத ஒன்றாக இருப்பதால் அதனை மதிப்பீடு செய்வது மிகச் சிரமம்.
2. மனிதர்களை வேலைக்கு எடுக்கிறோமே தவிர அவர்களை விலைக்கு வாங்குவதில்லை. அந்த வகையில் கட்டடம்—இயந்திரம் போன்ற சொத்தக்களாக மனிதர்களைக் கருத முடியாது.
3. மனித வளத்தின் மதிப்பைக் கண்டறிய திட்டவட்டமான ஒரு முறையோ அல்லது தெளிவான வழிகாட்டதல்களோ இல்லை.
4. ஊழியர்களின் மதிப்பை ஒரு சொத்து போல இருப்புநிலைக்குறிப்பில் காட்டினால் அதையே ஆதாரமாகக் கொண்டு ஊழியர்கள் தனி வெகுமதி கோரக் கூடும்.
5. வரிச் சட்டங்கள் மனித வளத்தை ஒரு சொத்தாக ஏற்பது இல்லை. எனவே இந்த விவரம் கருத்தியல் தளத்தில் மட்டுமே இயங்குகிறது.

இந்த வரம்புகளையும் தாண்டி இதன் நன்மைகளே மிஞ்சி நிற்பதால் அண்மைக் காலமாக இந்தியக் கம்பெனிகள் பலவும் மனிதவளக் கணக்கில் அக்கறை காட்டுகின்றன. கம்பெனி இயக்குனர்கள் அறிக்கையில் மனித வளம் பற்றியும் விபரங்கள் கொடுக்கப்படுகின்றன. இருப்புநிலைக்குறிப்பிலும் இதை ஏற்கிக் காட்டுகிற கம்பெனிகளும் உண்டு.

மனிதவளக் கணக்கு என்பது இன்னும் ஓர் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இது மேலும் வளர்த்தெடுக்கப்படும் வாய்ப்பு உள்ளது. எதிர்காலத்தில் கணக்காளர்களுக்கு இதுவொரு தேவையான சவாலாக, எதிர்கொள்ள வேண்டிய சவாலாக இருக்கும்.

## 13.6. அருஞ்சொற்கள்

**மனிதவளக் கணக்கியல்:**

மனித வளத்தை அடையாளம் கண்டு, அதைப் பற்றிய தகவல்களை திரட்டி, பதிவு செய்து பின் அதை வேண்டுபவர்களுக்கு தெரிவிக்கும் கணக்கியல்.

**மனிதவளத்தில் முதலீடு:**

மனித வளங்களை தேர்வு செய்து, உருவாக்கி, அதன் தரத்தை அதிகரிக்கவும் மற்றும் நவீனப்படுத்தவும் செய்யப்படும் செலவுகள்.

## 13.7. தொகுத்தறிவோம்

ஒரு நிறுவனத்தின் வெற்றியானது அங்கு பணிபுரியும் பணியாட்களின் தரம், குணம் மற்றும் திறமையினை வெகுவாக சார்ந்துள்ளது என்பது பெரும்பாலானோர் ஏற்றுக் கொண்ட உண்மை. ஆனால், இந்த முக்கியத்துவமானது 1960 வரை கணக்கியல் வல்லுநர்களால் நிராகரிக்கப்பட்டது. 1960ம் ஆண்டுதான் பல்வேறு வல்லுனர்களின் கணக்கியல் மற்றும் நிதி சார்ந்த ஆய்வுகளின் விளைவாக கணக்கியியலின் புதிய கிளையாக மனித வளக் கணக்கியியல் உருவானது. மனித வளத்தை மதிப்பீடு செய்வது, மதிப்பீட்டை பதிவது மற்றும் நிதிப்பட்டியியலில் இவ்விபரங்களை வெளியிடுவது போன்றவை கணக்கியலில் அடங்கும். அடிப்படையில் இரு வகைகளில் மனித வளம் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அவை 1). மனித வள அடக்க விலை கணக்கியியல், 2). மனித வள மதிப்பீட்டு கணக்கியியல். மனித வள அடக்க விலை கணக்கியியல் என்னது மனிதர்களை தேர்ந்தெடுத்து, மேம்படுத்தி, பதவியில் அமர்த்துவது போன்றவற்றிக்கு ஆகும் செலவுகளை அளவிட்டு அறிவித்தலேயாகும். மனிதவள மதிப்பீட்டுக் கணக்கியியலானது அடக்க விலை கணக்கிடுதலுக்குப் பதிலாக, மனிதர்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால மதிப்பைக் கருத்தில் கொள்கின்றனர். இந்தியக் கம்பெனிச் சட்டம் பிரிவு 217 (2A)ன் படி ஒவ்வொரு நிறுமமும் நிதியாண்டு முழுவதும் பணிபுரிந்து ரூ.6 இலட்சத்திற்கு மேல் ஊதியம் வாங்கும் பணியாட்களின் விபரங்களை இயக்குனர் அறிக்கையில் வெளியிட வேண்டும். இதைத் தவிர எவ்வகையிலும் மனித வள கணக்கியியல் விபரங்களை கோருவதில்லை.

## 13.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

**I. சரியா / தவறா?**

அ). சரி, ஆ). சரி, இ). தவறு, ஈ). தவறு உ). தவறு, ஊ). சரி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1). அ 2). ஆ, 3). ஆ 4). இ

## 13.9. மாதிரி வினாக்கள்

1). மனித வளக் கணக்கியியலை விளக்குக. அதன் முக்கியத்துவத்தைக் கூறுக.

2). பின்வரும் அணுகுமுறைகளின் வேறுபாட்டைக் கூறுக.

அ). வரலாற்கு அடக்கவிலை அணுகுமுறை மற்றும் மறு அமைவு அடக்கவிலை அணுகுமுறை.

ஆ). நிகர மதிப்பு மற்றும் தர சமமான நிகர மதிப்பு மாதிரி.

இ). சந்தர்ப்பத்தை அடக்கவிலை அணுகுமுறை மற்றும் தர அடக்கவிலை அணுகுமுறை.

3). இந்திய மனிதவளக் கணக்கியியல் பற்றி குறிப்பு வரைக.

குறிப்பு

# பாடம் 14

# குத்தகைக்கான கணக்கு

கட்டமைப்பு

14.0. அறிமுகம்

14.1. கற்றல் நோக்கங்கள்

14.2. குத்தகைகள்

14.3. குத்தகையின் நன்மைகள்

14.4. குத்தகை முறையின் கேடுகள்

14.5. குத்தகைக்கான கணக்கு

14.6. அருஞ்சொற்கள்

14.7. தொகுத்தறிவோம்

14.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

14.9. மாதிரி வினாக்கள்

## 14.0. அறிமுகம்:

நமக்கு தொடர்ந்து பால் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும் பொழுது எதற்காக தேவையில்லாமல் ஒரு பசு மாட்டை வீட்டில் வளர்க்க வேண்டும். அது தேவையில்லாத முதலீடு தானே! இதுதான் குத்தகையின் அடிப்படை. இன்றைய உலகில், ஒரு தொழில் தொடங்க நிலை மூலதனம் மற்றும் நடைமுறை மூலதனம் என்று இரண்டு வகை மூலதனங்கள் தேவைப்படுகின்றன. இவற்றில் நிலை மூலதனத்தின் தேவை அதிகம். மேலும் இதில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் நீண்ட காலம் முடக்கப்படும். இன்று தொழில் முனைவோர்கள் தவறாக தன்வசம் உள்ள பணத்தின் பெரும்பகுதியில் நிலை முதலில் ஈடுபடுத்திவிட்டு, பின்பு நடைமுறை முதல் இல்லாமல் அவதிப்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கையை தவிர்க்கும்

பொருட்டு தேவையான நிலம், கட்டிடம், இயந்திரம் மற்றும் தளவாடங்களை சொந்தமாக வாங்காமல், குத்தகைக்கு எடுப்பதால், இந்த மிச்சமான பணத்தை நடைமுறையில் ஈடுபடுத்தலாம்.

## 14.1. கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப் பிரிவை படித்த பின்பு நீங்கள்

— குத்தகையின் சிறப்பம்சத்தை புரிந்து கொள்ள முடியும்.

— குத்தகையின் பல்வேறு வகைகளை அறிந்துகொள்ள முடியும்.

— குத்தகை தருபவர் ஏட்டில் கணக்குகள் தயாரிக்க முடியும்.

நிலம், கட்டடம் இயந்திரம் போன்ற நிலைத்த சொத்துகளில் போடப்படும் பணம் மூலதன முதலீடு (Capital Investment) ஆகும். இவற்றை பொதுவாக விற்று பணமாக்குவதில்லை. அந்த வகையில் இதை மூழ்கிப் போன முதலீடு எனலாம். எனவே, நிலைத்த சொத்துக்களில் முதலீடு செய்ய நிறுவனங்கள் மிகவும் யோசிக்கின்றன. இதற்கு மாற்று வழி ஒன்ற உண்டு. அது, இத்தகைய நிலைத்த சொத்துக்களை குத்தகைக்கு (Lease) எடுத்து பயன்படுத்துவதாகும்.

"ஒரு சொத்தின் உரிமையாளர் (குத்தகை தருபவர்) அதை ஒரு குத்தகை தொகைக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பயன்படுத்திக் கொள்ள இன்னொருவருக்கு (குத்தகைதாரர்) அனுமதிக்கும் ஒப்பந்தம்" என்பதைக் குத்தகை ஒப்பந்தம் எனலாம். வேறு வார்த்தைகளில் கூறினால் குத்தகை ஒப்பந்தமானது ஒருவருக்குச் சொந்தமான சொத்தை இன்னொருவர் அனுபவிக்க வாய்ப்புத் தருகிறது. ஆக சொத்து உடமையாகக் கொண்டிருப்பது வேறு, அதே சொத்தை பயன்படுத்திக் கொள்வது வேறு என்று பிரித்துப் பார்க்கப்படுகிறது. குத்தகை நடவடிக்கையில் கீழ்வரும் அம்சங்கள் உண்டு—

குறிப்பு

1. குத்தகைதாரர் (Lessee) தனக்கு வேண்டிய சொத்தைத் தீர்மானிக்கிறார்.
2. குத்தகைதாரர் ஓர் ஒப்பந்தததை குத்தகை தருபவரோடு (Lessor) போடுகிறார். அதில் கீழ்வரும் கூறுகள் இருக்கலாம்—
   i. குத்தகைக்காலம்
   ii. குத்தகைத்தொகை
   iii. குத்தகையைப் புதுபித்துக் கொள்ள அல்லது குத்தகை கால முடிவில் சொத்தை வாங்கிக் கொள்ள வாய்ப்புத் தருதல். இத்தகைய வாய்ப்பு இல்லையென்றால் குத்தகைக் கால முடிவில் குத்தகை தருபவர் சொத்தை எடுத்துக் கொள்வார்.
   iv. சொத்தை பராமரிப்பது தொடர்பான விபரங்கள். உதாரணமாக, பழுதுபார்த்தல், வரி, ஈட்டுறுதி போன்றவை. 'நிகர குத்தகை ஒப்பந்தம்' எனப்படுவதில் குத்தகை தருபவர் இந்தச் செலவுகளைச் செய்வார்.
3. குத்தகை தருபவரிடம் அந்தக் குறிப்பிட்ட சொத்து இருந்தால் ஒப்பந்தம் கையெழுத்தானதும் அதை குத்தகைதாரரிடம் ஒப்படைத்து விடுவார். இல்லையெனில் அந்தச் சொத்தை உற்பத்தி செய்யம் ஒருவரிடமிருந்து வாங்கி குத்தகைதாரரிடம் தருவார். உற்பத்தியாளரையே நேரடியாகச் சொத்தை குத்தகைக்காரரிடம் ஒப்படைக்க சொல்வதும் உண்டு.

கீழ்வரும் அட்டவணை இந்தக் கட்டங்களை உணர்த்தும்—



## 14.2. குத்தகைகள்

### 1. மூலதனக் குத்தகை

மூலதனக் குத்தகை (Capital Lease) எனப்படுவது நீண்ட கால ஒப்பந்தமாகும். இதை ஒப்புக் கொள்ளப்பட்ட அடிப்படைக் காலத்திற்கு நடுவே முறித்துக் கொள்ள முடியாது. கீழ்வரும் கூறுகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதை இத்தகைய குத்தகை ஒப்பந்தம் பெற்றிருக்கும்.

i. குத்தகைக் காலம் முடிந்ததும் குத்தகைதாரருக்கு அந்தச் சொத்தை குத்தகை தருபவர் விற்று விடுவார்.

ii. பேர விலையில் அந்தச் சொத்தை வாங்கிக் கொள்ளும் உரிமை குத்தகைதாரருக்கு தரப்பட்டிருக்கும்.

iii. சொத்தின் பொருளாதார ஆயுட்காலத்தில் 75% அல்லது அதற்கும் அதிகமான காலத்தை குத்தகை ஒப்பந்தம் பெற்றிருக்கும்.

iv. குத்தகை துவங்கும் காலத்தில், சொத்தின் மதிப்பில் 90% அல்லது அதற்கும் அதிகமாக குறைந்தபட்ச குத்தகைத் தொகைகளின் தற்போதைய மதிப்பு இருக்கும்.

இந்த வகை ஒப்பந்தத்தில் சொத்தை பராமரிக்கும் செலவுகள் அனைத்தும் மற்றும் சொத்தைப் பயன்படுவதில் உள்ள சிரமங்கள் அனைத்தும் குத்தகைதாரைச் சார்ந்தவை. அதாவது, உடமை உரிமை தவிர சகல உரிமைகளும் மாற்றித் தரப்பட்டிருக்கும். அனேகமாக, சொத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகை முழுமையும், அதற்குரிய ஆதாயத்தோடு குத்தகை தருபவருக்கு குத்தகை காலத்திற்குள் வந்து சேர்ந்து விடுவது போல சகலமும் தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதனால் இதற்கு "கிட்டத்தட்ட முடிந்து போகும் குத்தகை" (Close-end Lease) என்கிற பெயரும் உண்டு.

### 2. வழமையான குத்தகை

மூலதன குத்தகையில் சொல்லப்பட்ட அந்தச் சிறப்பு அம்சங்கள் இல்லையென்றால் அது வழமையான குத்தகை (Operating Lease) ஆகும்.

வரையறுக்கப்பட்ட ஒரு காலத்திற்கு மட்டுமே குத்தகைதாரர் அந்தச் சொத்தைப் பயன்படுத்த முடியும். பராமரிப்புச் செலவு மற்றும் இதர செலவுகளை குத்தகை தருபவர் பார்த்துக் கொள்வார். மேலும், குத்தகைதாரர் ஒப்பந்தத்தை எந்த நேரத்திலும் உரிய அறிவிப்புத் தந்து முறித்துக் கொள்ள முடியும். ஆகவே, இதற்கு ‘எப்போதும் முறித்துக் கொள்ளக்கூடிய குத்தகை’ (Open End Lease) என்கிற பெயரும் உண்டு. சொத்து எந்த நேரத்திலும் காலாவதியாகக் கூடிய தன்மை உடையது என்றாலும், குத்தகைதாரர் ஒரு தற்காலிக நெருக்கடியைச் சமாளிக்க ஒரு ஏற்பாடு என்கிற சூழலில் இத்தகைய ஒப்பந்தத்தை தேர்வு செய்கிறார்.

**3. விற்றதையே மீண்டும் குத்தகைக்கு**

இந்த வகைக் குத்தகையில் (Sale and Lease Back) ஒரு நிறுவனமானது தனது சொத்தை இன்னொருவருக்கு விற்றுவிட்டு, பின்னர் அதையே அவரிடமிருந்து குத்தகைக்கு எடுத்துப் பயன்படுத்தும். இங்கே இருதரப்பினருக்கும் பலன் கிடைக்கிறது. சொத்தை விற்றதால் ஒரு பெரும் தொகை கிடைக்கிறது நிறுவனத்திற்கு. அதே நேரத்தில் சொத்து கையை விட்டு போகவில்லை. அதற்கு குத்தகை பணம் கொடுத்தால் மட்டும் போதும். சொத்தை வாங்கியவருக்கோ அது உடமையாகிப் போகிறது. அதே நேரத்தில் குத்தகைத் தொகையும் கிடைக்கப் போகிறது.

**4. கடன் ஏற்பாட்டுடனான குத்தகை**

இந்த வகை குத்தகை (Leveraged Leasing) தற்பொழுது பிரபலமாகி வருகிறது. அதிக முதலீடு தேவைப்படும் சொத்துக்கு இது பயன்படுத்தப்படுகிறது. இங்கே மூன்று தரப்பார் இருப்பார்கள் — குத்தகைதாரர், குத்தகை தருபவர், கடன் கொடுப்பவர் (Lender). குத்தகைதாருக்கும் குத்தகை தருபவருக்கும் இடையில்தான் குத்தகை ஒப்பந்தம். இங்கே குத்தகைதாரர் நிலையில் மாறுதல் இல்லை. ஆனால் குத்தகை தருபவர் அந்தச் சொத்தை த்னது சொந்தப் பணத்தால் மட்டும் வாங்கியிருக்க மாட்டார். அதில் பெரும் பகுதியை வேறு ஒருவர் அல்லது

ஒரு குழுவினர் கடனாகக் கொடுத்திருப்பார்கள். ஆகவே தன் பெயரில் வாங்கப்பட்ட அந்தச் சொத்தை குத்தகை தருபவர் அந்தக் கடன் கொடுப்பவருக்கு ஈடாக (Mortgage) ஆக்கித் தந்திருப்பர். தான் பெறும் குத்தகைத் தொகையில் ஒரு பகுதியை அந்தக் கடன் கொடுத்தவர்களுக்கு குத்தகை தருபவர் தர வேண்டியிருக்கம்.

## 14.3. குத்தகையின் நன்மைகள்

1. அதிக அளவுக்கு நிதியை முதலீடு செய்யாமலேயே சொத்தைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை இது தருகிறது. காலம்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு குத்தகை தொகை கொடுத்தால் போதும். எனவே, கையில் உள்ள நிதியை வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியும். குறிப்பாக நடைமுறை மூலதனத்தை அதிகரிக்க முடியும்.
2. குத்தகைச் சொத்தைத் தருபவர்கள் அல்லது தரும் நிறுவனங்கள் மிகவும் சாதகமான அம்சங்களுடன் தர முன் வருகிறார்கள். இது குத்தகைதாரருக்கு பயன்தருவதாகும்.
3. ஒரு சொத்து – குறிப்பாக பெரும் இயந்திரம் — நவீன தொழில் நுட்ப வளர்ச்சியால் எதிர்பாராதவிதமாகக் காலாவதியாகிவிடக் கூடும். அத்தகைய சொத்தைக் கொள்முதல் செய்வதை விட குத்தகைக்கு எடுப்பது பாதுகாப்பானதாகும். காலாவதியானால் குத்தகையை ரத்து செய்து கொள்ளலாம்.
4. சிறு தொழில்களுக்கு இந்த முறை ஒரு வரப்பிரசாதமாகும். அதிக மூலதனம் போடாமலேயே ஒரு பெரும் சொத்தைக் கையாள முடியும்.
5. ஒரு விதமான வரிச் சலுகை குத்தகைதாரர்களுக்கு கிடைக்கக் கூடும். குத்தகை தருபவர் வரி கட்டுபவராக இருந்தால் அந்தச் சொத்தினால் தனக்கு கிடைக்கக் கூடிய வரிச் சலுகையில் ஒரு பகுதியை குறைவான குத்தகைத் தொகையை நிர்ணயிப்பதன் மூலம்

குத்தகைதாரருக்கு மாற்றித் தரமுடியும். மேலும் குத்தகைதாரர் குத்தகை தொகையை செலவாகக் காண்பித்தும் வரிச் சலுகை பெற முடியும்.

## 14.4. குத்தகை முறையின் கேடுகள்

1. சொத்து குத்தகைதாருக்குச் சொந்தமில்லை. பயன்படுத்தலாமே தவிர நல்ல விலை கிடைக்கும் போது விற்றுக் காசாக்க முடியாது.
2. சொத்து குத்தகை தருபவருக்குச் சொந்தம் என்பதால் அதை அவர் திரும்ப எடுத்துக் கொள்ளக்கூடும். குறிப்பாக குத்தகைத் தொகையை கட்டத் தவறினால் இந்த விபரீதம் நடக்கலாம். சொத்து போய்விட்டால் முழு நிறுவனத்தின் செயல்பாடும் நின்று போய்விடும். நிறுவனம் மூழ்கிப் போகலாம்.
3. சொத்தில், குறிப்பாக இயந்திரத்தில் ஏதேனும் தொழில் நுட்பக் கோளாறு ஏற்பட்டால் அதைத் தயாரித்தவரிடம் சரி செய்யுமாறு உரிமையோடு கேட்க குத்தகைதாரரால் முடியாது. இவருக்காக குத்தகை தந்தவரே அவரோடு பேச முடியும். கால தாமதமும், மன மாச்சரியங்களும் ஏற்படலாம்.

## 14.5. குத்தகைக்கான கணக்கு

குத்தகைக் கணக்கு பற்றி மேலை நாடுகளில் காராசாரமான விவாதம் நடந்து வருகிறது. கீழ்வரும் விஷயங்கள் அதில் அடிபடுகின்றன—

1. குத்தகை நடவடிக்கைகள் பற்றிய விபரங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் நிதிநிலை அறிக்கையில் வெளியிடத்தான் வேண்டுமா?
2. அப்படியே வெளியிடுவதாக இருந்தால் அதை அடிக்குறிப்பாக வெளியிடுவதா அல்லது ஆண்டு இறுதிக் கணக்குகளின் ஒரு பகுதியாக வெளியிடுவதா?

3. அப்படியே வெளியிடுவதாக இருந்தால் அதை அடிக்குறிப்பாக மட்டும் வெளியிடுவது நல்லதல்லவா, இதனால் குறைந்தபட்ச விபரங்கள் மட்டுமே வெளியிடப்படும். கணக்கில் முழுமையாகக் காட்டப்படாத நிதிமுறை என்ற விதத்தில் சில நிறுவனங்களை இது ஈர்க்கலாம் அல்லவா?

இப்படி விவாதம் நடக்கிற போதிலும் கணக்குகளின் ஒரு பகுதியாகக் குத்தகை நடவடிக்கையைத் தருவது என்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது. அதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் முடிவுக் கணக்கில் அது இடம் பெறும் விதத்தையும் கீழ்வரும் எடுத்துக்காட்டு விளக்கும்—

**எடுத்துக்காட்டு 1**

எவரெஸ்ட் குத்தகை லிமிடெட் எனும் நிறுவனம் தனது சொத்து ஒன்றை நியூ இந்தியா லிமிடெட் எனும் நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் குத்தகைக்கு கொடுத்தது—

சொத்தின் அடக்க / நியாய மதிப்பு = ரூ.1,00,000

குத்தகை காலம் = 1.1.2001 முதல் 4 ஆண்டுகள்

சொத்தின் மிச்ச மதிப்பு (Residual Value) = பூஜ்யம்

சொத்தின் அதிகாரப்பூர்வ மதிப்பு = 40%

குத்தகைத் தொகை = ரூ.35,740 – ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் தரப்பட வேண்டும்.

தருக: 1. குத்தகை தருபவர் ஏட்டில் ஒவ்வொரு ஆண்டுக்கான குறிப்பேட்டுப் பதிவுகள்

2. இந்தக் குத்தகை சம்பந்தமாக ஒவ்வொரு ஆண்டு இலாபநட்டக் க/கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பில் வரும் விபரங்கள்

**விடை**

முதலில் இந்தக் குத்தகை நடவடிக்கையில் உள்ளார்ந்து இருக்கக்கூடிய வட்டி விகிதத்தைக் கண்டறிய வேண்டும். இதற்கு "தற்போதைய மதிப்பு

அட்டவணை" (Present Value Table) அல்லது ஒரு நிதி கணக்கீட்டு இயந்திரத்தின் (Financial Calculator) உதவியை நாட வேண்டும்.

$$ரூ. \; 1{,}00{,}000 = \frac{35{,}740}{(1+1)} + \frac{35{,}740}{(1+1)} + \frac{35{,}740}{(1+1)} + \frac{35{,}740}{(1+1)} = 16\%$$

**நிதி வருமானத்தைக் கணக்கிடுதல்**

| 1<br>ஆண்டு | 2<br>குத்தகை<br>(ரூ.) | 3<br>நிகர<br>முதலீடு<br>(ரூ.) | 4<br>நிதி<br>வருமானம்<br>(ரூ.) | 5<br>குத்தகைக்கட்டணம்<br>(2—4) |
|---|---|---|---|---|
| 2001 | 35,740 | 1,00,000 | 16,000 | 19,740 |
| 2002 | 35,740 | 80,260 | 12,842 | 22,898 |
| 2003 | 35,740 | 57,362 | 9,178 | 26,562 |
| 2004 | 35,740 | 30,800 | 4,940* | 30,800 |
| | 1,42,960 | | 42,960 | |

* நான்காம் ஆண்டுக்கு சரியான தொகை ரூ.4,928 என்ற போதிலும் கடைசி ஆண்டு என்பதால் வித்தியாசத் தொகை மட்டும் குறிக்கப்படுகிறது.

**குத்தகை சமன் செய்யும் கட்டணம் கணக்கிடுதல்**

**(Lease Equalisation Charge)**

| 6<br>ஆண்டு | 7<br>குத்தகைக்<br>கட்டணம் (5)<br>ரூ. | 8<br>அதிகாரப்பூர்வ<br>தேய்மானம்<br>40%<br>ரூ. | குத்தகை<br>சமன்<br>செய்தல் (8—7) ரூ. | குத்தகை<br>சரிக்கட்டல் க/கு<br>ரூ. |
|---|---|---|---|---|
| 2001 | 19,740 | 40,000 | (வ) 20,260 | (ப) 20,260 |
| 2002 | 22,898 | 24,000** | (வ) 1,102 | (ப) 21,362 |
| 2003 | 26,562 | 14,400 | (ப) 12,162 | (ப) 9,200 |
| 2004 | 30,800 | 8,640 | (ப) 22,160 | (வ) 12,960 |
| | 1,00,000 | 87,040 | | 12,960 |

குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**I. சரியா / தவறா?**

அ).குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் ஆயுள் காலத்தில் 75%க்கு மேல் குத்தகை காலம் இருக்கும் பட்சத்தில் அது மூலதன குத்தகை எனப்படும்.

ஆ).தன்னுடைய சொத்தை விற்றுவிட்டு பின்பு அதையே குத்தகைக்கு எடுப்பது வழமையான குத்தகை எனப்படும்.

இ). குத்தகை தருபவர் தன் ஏட்டில் இலாப நட்டக் கணக்கிட, குத்தகை சமன் செய்தல் மற்றும் சரிக்கட்டல் கணக்குகள் தயாரிக்க வேண்டும்.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ).வழமையான குத்தகைக்கு ........ குத்தகை என்ற பொருளும் உண்டு.

ஆ). குறைந்த பட்ச குத்தகைத் தொகையின் மதிப்பு, சொத்தின் மதிப்பில்.......... % இருந்தால் அது மூலதனக் குத்தகையாகும்.

இ). கடன் ஏற்பாட்டுடனான குத்தகையில்..........., ............... மற்றும் ........ ஆகிய மூன்று தரப்பார் இருப்பார்கள்.

31 டிசம்பர் ............. வோடு முடியும் ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| விபரம் | 2001 ரூ. | 2002 ரூ. | 2003 ரூ. | 2004 ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| வரவுகள்: | | | | | |
| மொத்த வருமானம் (குத்தகைத் தொகை) | 35,740 | 35,740 | 35,740 | 35,740 | 1,42,960 |
| கூட்டுக: குத்தகை சமன் | 20,260 | 1,102 | (12,162) | (22,160) | (12,960) |
| | 56,000 | 36,842 | 23,578 | 13,580 | 1,30,000 |
| பற்றுகள்: அதிகாரப்பூர்வ தேய்மானம் | 40,000 | 24,000 | 14,400 | 8,640 | 87,040 |
| நிகர வருமானம் (குத்தகை தொடர்பாக) | 16,000 | 12,842 | 9,178 | 4,940 | 42,960 |

** தேய்மானம் குறைந்து செல் மதிப்பின் மீது கணக்கிடப்பட்டுள்ளது.

31 டிசம்பர் ..... தேதியிலான இருப்புநிலைக் குறிப்பு

| விபரம் | 2001 ரூ. | 2002 ரூ. | 2003 ரூ. | 2004 ரூ. |
|---|---|---|---|---|
| சொத்துப்பகுதி: | | | | |
| குத்தகைக்கு விடப்பட்ட சொத்து | 1,00,000 | 1,00,000 | 1,00,000 | 1,00,000 |
| கழி : தேய்மானம் | 40,000 | 64,000 | 78,400 | 87,040 |
| | 60,000 | 36,000 | 21,600 | 12,960 |

| | | | | |
|---|---|---|---|---|
| கூட்டுக: | | | | |
| குத்தகைச் சரிகட்டல் க/கு | 20,260 | 21,362 | 9,200 | (12,960) |
| | 80,260 | 57,362 | 30,800 | —— |
| ரொக்க இருப்பு | 35,740 | 71,480 | 1,07,220 | 1,42,960 |
| | 1,16,000 | 1,28,842 | 1,38,020 | 1,42,960 |
| பொறுப்புப்பகுதி: | | | | |
| சாதாரணப்பங்கு | 1,00,000 | 1,00,000 | 1,00,000 | 1,00,000 |
| காப்பு | 16,000 | 28,842 | 38,020 | 42,960 |
| | 1,16,000 | 1,28,842 | 1,38,020 | 1,42,960 |

## குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 2001 ஜன 1 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்து க/கு ப.<br>வங்கி க/கு<br>(சொத்து வாங்கியதற்காக) | | 1,00,000 | 1,00,000 |
| டிச 31 | வங்கி க/கு ப.<br>குத்தகைத்தொகை க/கு<br>(குத்தகை தொகை பெற்றதற்காக) | | 35,740 | 35,740 |
| | இலாப நட்டக் க/கு ப.<br>தேய்மான க/கு<br>(40% தேய்மானம் தந்தற்காக) | | 40,000 | 40,000 |
| | குத்தகை சரிகட்டல் க/கு ப.<br>குத்தகை சமன் செய் க/கு<br>(குத்தகை கட்டணத்திற்கும் அதிகார பூர்வ தேய்மானத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை மொத்த வருமானத்தில் சரிகட்டுவதற்காக) | | 20,260 | 20,260 |

குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| | குத்தகை சமன் செய் க/கு ப.<br>குத்தகை தொகை க/கு ப.<br>இலாப நட்ட க/கு<br>(இருப்புகளை இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியதற்காக) | | 20,260<br>35,740 | <br><br>56,000 |
| 2002 டிச 31 | வங்கி க/கு ப.<br>குத்தகைத் தொகை க/கு | | 35,740 | <br>35,740 |
| | இலாப நட்ட க/கு ப.<br>தேய்மானம் க/கு | | 24,000 | <br>24,000 |
| | குத்தகை சரிகட்டல் க/கு ப.<br>குத்தகை சமன் செய் க/கு | | 1,102 | <br>1,102 |
| | குத்தகை சமன் செய் க/கு ப.<br>குத்தகைத்தொகை க/கு ப.<br>இலாப நட்ட க/கு | | 1,102<br>35,740 | <br><br>36,842 |
| 2003 டிச 31 | வங்கி க/கு ப.<br>குத்தகைத் தொகை க/கு | | 35,740 | <br>35,740 |
| | இலாப நட்டக் க/கு ப.<br>தேய்மானம் க/கு | | 14,400 | <br>14,400 |
| | குத்தகை சமன் செய் க/கு ப.<br>குத்தகை சரிகட்டல் க/கு | | 12,162 | <br>12,162 |
| | குத்தகைத் தொகை க/கு ப.<br>இலாப நட்ட க/கு | | 35,740 | <br>35,740 |
| | இலாப நட்டக் க/கு ப.<br>குத்தகை சமன் செய் க/கு | | 12,162 | <br>12,162 |
| 2004 டிச 31 | வங்கி க/கு ப.<br>குத்தகைத் தொகை க/கு | | 35,740 | <br>35,740 |
| | இலாப நட்ட க/கு ப.<br>தேய்மானம் க/கு | | 8,640 | <br>8,640 |
| | குத்தகை சமன் செய் க/கு ப.<br>குத்தகை சரிகட்டல் க/கு | | 22,160 | <br>22,160 |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலாப நட்டக் க/கு ப.<br>குத்தகை சமன் செய் க/கு | | 22,160 | <br>22,160 |
| | குத்தகைத் தொகை க/கு ப.<br>இலாப நட்ட க/கு | | 35,740 | <br>35,740 |

## 14.6. அருஞ்சொற்கள்

**மூலதன குத்தகை:**

இந்த குத்தகை ஒப்பந்தத்தின் மூலம் குத்தகை தருபவருக்கு சொத்தின் மதிப்பின் பெருமளவும், இலாபமும், குத்தகை காலத்திற்குள் குத்தகை பணமாக கிடைத்துவிடும்.

## 14.7. தொகுத்தறிவோம்

இன்றைய தொழில் உலகில், குத்தகை ஒரு வரப்பிரசாதமாகும். தன்னுடைய கைவசம் உள்ள முதல் பணத்தில் பெருமளவு நிலைச் சொத்தில் முடக்காமல், நடைமுறை சொத்தில் ஈடுபடுத்தி, நல்ல முறையில் தொழிலை நடத்த முடிக்கின்றது. மேலும் நமது தேவைக்கேற்றாற் போல் குத்தகையை மூலதன மற்றும் வழமையான, தேர்ந்தெடுக்கலாம். ஒரு முக்கியமான அம்சம், என்னவென்றால், பணத்தை முதலீடு செய்து வாங்கிய இயந்திரம் மற்றும் கட்டிடம், இன்று நமக்கு பெரும் பணம் புரட்டுவதற்கு தடையாக இருக்கும் பட்சத்தில், அவற்றை விற்று, பெரும்தொகையை பெற்றுப் பிற தேவைகளில் அதை பயன்படுத்தலாம். மேலும் விற்ற சொத்தையே, நாம் குத்தகை அடிப்படையில் பெற்று பயன்படுத்திக் கொள்ளலாம். குத்தகை சம்மந்தமான கணக்குகளை வெளியிடுவது பற்றியும், இலாப நட்டம் கணக்கிடுவது பற்றியும் கணக்காளர்கள் மற்றும் தணிக்கையாளர்கள் மத்தியில், பல விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

## 14.8. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

**I. சரியா / தவறா?**

அ). சரி, ஆ). தவறு, இ). சரி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ). எப்போதும் முறித்துக் கொள்ளக்கூடிய ஆ). 90%

இ). குத்தகை தருவர், குத்தகை ஏற்பவர், கடன் கொடுப்பவர்

## 14.9. மாதிரி வினாக்கள்

1). குத்தகை என்றால் என்ன? பல்வகை குத்தகை முறைகளை உதாரணத்துடன் விளக்குக.

2). குத்தகையின் நன்மை, தீமைகளை விவரிக்கவும்.

# பாடம் 15

# சமூகக் கணக்கு

கட்டமைப்பு

15.0 அறிமுகம்:

15.1 கற்றல் நோக்கங்கள்:

15.2. தொழில் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புகள்

15.3. சமூகச் செலவு மற்றும் பயன்பாடு கண்ணோட்டம்

15.4. தொகுத்தறிவோம்

15.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

15.6. மாதிரி வினாக்கள்

## 15.0 அறிமுகம்:

இன்றைய உலகில் எந்தத்துறையும் தனியாக இயங்க முடியாது. எல்லாம் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளது. மேலும் ஒரு தொழிலானது இலாப நோக்கில் இயங்கினாலும், அதற்கென சில சமூகக் கடமைகள் உள்ளது. அதாவது ஒரு சமூக அமைப்பிற்குள் தான் தொழிற்சாலைகள் இயங்குகின்றது. அந்த சமூகத்திற்கு அது நன்மை செய்யாவிட்டாலும், தீமைகள் செய்யக்கூடாது. எதிர்கால சந்ததியர்களை பாதிக்கும் எந்தக் காரியத்திலும் ஈடுபடக் கூடாது. எனவே கனிம வளங்களை எடுப்பதிலும், மாசு உருவாக்குவதிலும், நீரை மாசுபடுத்துவதிலும், இரைச்சல் மற்றும் அசுத்தங்களை ஏற்படுத்துவதிலும், தொழில் துறை பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த செயலில் ஈடுபடும் அவர்கள் தாங்கள் செய்யும் இத்தகைய பாதிப்பான நடவடிக்கைகளை சமுதாயத்திற்கு அது அதிகமான பயன்களை தந்து ஈடு செய்ய வேண்டும் என்பதே சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

## 15.1 கற்றல் நோக்கங்கள்:

இந்தப் பாடப் பிரிவை படித்த பின்பு நீங்கள்

— தொழில் நிறுவனத்தின் சமூக பொறுப்புகளை புரிந்துகொள்ள முடியும்.

— சமூக கணக்கின் முக்கியத்துவத்தை தெரிந்துகொண்டு, செலவு மற்றும் பயன்பாட்டு கணக்கினை தயாரிக்க இயலும்.

— ஒரு சமூகத்தில் உள்ள பல்வேறு அங்கங்களை புரிந்துகொண்டு, இந்த தகவல்களை நன்முறையில் இளைய தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க இயலும்.

ஒரு தொழில் நிறுவனத்தின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் இலாபம் ஈட்டுவது அவசியமே. இதனால் அதை மதிப்பீடு செய்யம் போது அதன் இலாபம் ஈட்டும் திறனுக்கு பிரதான முக்கியத்தும் தரப்பட்டது. எனினும் ஒரு தொழில் நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அரசியல் மற்றும் சமூகக் சூழலில் இயங்குகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த அம்சம் அந்த நிறுவனத்தைப் பற்றி மதிப்பிடும் போது புறக்கணிக்கப்பட்டே வருகிறது.

ஒரு தொழில் நிறுவனமானது ஒரு சமூகக் கூறும் ஆகும். இதன் செயல்பாடுகள் சமூகத்தை, அதன் உறுப்பினர்களைப் பாதிக்கிறது. சமூகம் தன்னத்தே கொண்டுள்ள ஆதாரங்களையே தொழில் நிறுவனம் பயன்படுத்துகிறது. அந்த சமூகத்திற்காகவே தனது பொருட்களை உற்பத்தி செய்கிறது. இந்த இருவகையிலும் அது சமூகத்தின் மீது விரிவான, ஆழமான தாக்கத்தை உருவாக்குகிறது. மேலும், இந்தத் தொழில் நிறுவனம் இயங்குவதற்குத் தேவையான போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதும் சமூகமே. அத்தகைய சமூகம் அந்தத் தொழில் நிறுவனமானது தனக்கு கேட்டை விளைவிக்கக் கூடாது, மாறாகத் தனது இதர உறுப்புகளைப் போல நன்மைகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

குறிப்பு

## 15.2. தொழில் நிறுவனத்தின் சமூகப் பொறுப்புகள்

ஒரு தொழில் நிறுவனத்திற்கு இருக்கக்கூடிய அல்லது இருக்க வேண்டிய சமூகப் பொறுப்புகள் பல கோணங்களிலிருந்து காணலாம்.

### 1. விரயம் செய்யாமை

கனிவளம், மனிதவளம் போன்ற தொழிலுக்கான ஆதாரங்களைப் பயன்படுத்தும் போது ஒரு தொழில் நிறுவனத்திற்கு சமூகப் பொறுப்பு இருக்க வேண்டும். கனிவளம் உள்ளிட்ட இயற்கை வளம் வரம்புக்கு உட்பட்டதே. அதை விபரம் செய்யக்கூடாது. தேவையில்லாமல் பயன்படுத்தக்கூடாது. உதாரணம், மரம், எரிபொருள் போன்றவற்றை பயன்படுத்துவது. இவற்றில் ஏற்படும் விரயம் அந்தக் குறிப்பிட்ட தொழில் நிறுவனத்திற்கு மட்டுமல்லாது இந்த நாட்டிற்கே நட்டமாகும். அதுமட்டுமல்ல, சுற்றுச்சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தும். கனிவளத்தைப் பயன்படுத்துவதிலும் எச்சரிக்கை வேண்டும். முரட்டுத்தனமான அணுகுமுறை தொழிலாளர் பிரச்சனைகளை உருவாக்கும். சட்டம் ஒழுங்கு பிரச்சனையாகக்கூட மாறக்கூடும். இப்போது அது அரசின் பிரச்சனையாக மாறிப் போகும். ஆகவே, செல்வாதரங்களைப் பயன்படுத்துவதில் சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்த வேண்டும்.

### 2. தேவை நோக்கில் உற்பத்தி

வெகு மக்களுக்கு மிகவும் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வது அந்தத் தொழில் நிறுவனத்திற்கு நல்லது மட்டுமல்லாது, ஒரு சமூக சேவையாகவும் ஆகிவிடுகிறது. குறைவாக உற்பத்தி செய்து அதிக இலாபம் சம்பாதிப்பதை விட, ஒரு சிறு பகுதியினரின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதை விட, அதிகமாக உற்பத்தி செய்து அதிக இலாபம் சம்பாதிப்பது, விரிந்து மக்கள் திரளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது சாலச் சிறந்ததாகும்.

### 3. நுகர்வோர் நலன்

தொழில் நிறுவனம் தயாரிக்கும் பொருள் தரமானதாக இருந்தால் அதுவே ஒரு சமூகப் பொறப்புணர்வுதான். கலப்படப் பொருள்

நிறுவனத்திற்கு அதிக இலாபம் தரலாம். ஆனால் மக்களுக்கு நோய் நொடிகளைக் கொண்டு வரும். சீக்குப் பிடித்த சமூகம் முடிவில் நாட்டுக்கே கெடுதலாகிப் போகும். தரமான பொருளை நியாயமான விலையில் நிறுவனம் தந்தால் அதுவும் ஒரு சமூக சேவையே.

**4. தொழிலாளர் நலன்**

தொழிலாளர்களிடமிருந்து வேலை வாங்குகிற உரிமை தொழில் நிறுவனங்களுக்கு உண்டு. அதுபோல அவர்களுக்கு உரிய கூலி தர வேண்டிய கடமையும் உண்டு. அதிகபட்ச உழைப்பை வாங்கி குறைந்தபட்ச கூலியைத் தரலாம். ஆனால், வெகு சீக்கிரத்திலேயே தொழிலாளர்களுக்கு உழைக்கிற உற்சாகம் போய்விடும். சோம்பேறி மனிதர்களை அல்லது உழைப்பது போல பாவனை செய்கிற மனிதர்களை இது உருவாக்கி விடும். ஒட்டுமொத்த சமுதாயத்திற்கே இது கேடு பயக்கும். கூலி மட்டுமல்லாது, இதர நியாயமான வசதிகளைத் தொழிலாளர்களுக்குச் செய்து தருவதன் மூலம் நிறுவனமானது சமூகக் கடமையை நிறைவேற்ற முடியும்.

**5. பங்குதாரர்கள் நலன்**

ஒரு பொதுக் கம்பெனியில் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பங்குதாரர்கள் இருக்கலாம். கம்பெனி நிலவரம் குறித்த உண்மைகளை அவர்களுக்குச் சொல்வது என்பதும் சமூகப் பொறுப்புணர்வே. உண்மை நிலவரங்களை மூடி மறைத்து விட்டு, கடைசியில் மூழ்கும் நேரத்தில் தெரிவிப்பது பங்குதாரர்களிடையே பதட்டத்தை உருவாக்கும். இது சமூகப் பதட்டத்திற்கு இட்டுச் செல்லலாம்.

**6. பொதுவான சமூக நலன்**

சமூகத்தின் ஓர் அங்கம் என்ற முறையில் அதன் பொது நலனிலும் ஒரு தொழில் நிறுவனம் ஈடுபாடு காட்டலாம். ஒரு கிராமத்தை தத்தெடுத்து அதை வளர்த்தெடுக்கலாம். அல்லது கல்வி நிறுவனம், மருத்துவமனை போன்றவற்றை நிறுவனம் இயங்கும் பகுதியில் பொதுமக்களுக்கு கட்டித் தரலாம். தற்சமயம் புதிய சிந்தனை ஒன்றும் எழுகிறது. அதாவது அரசுப்

பணிகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு இருப்பது போல தனியார் துறை நிறுவனங்களிலும் இருக்க வேண்டும் என்கிற கோரிக்கை எழுகிறது. தனது பணியாளர்களில் சமூகத்தின் பல்வேறு பிரிவனர்களும், ஆண் பெண் இரு பாலரும் இருப்பது அந்த நிறுவனத்தின் வளர்ச்சியில் புதிய உத்வேகத்தைச் சேர்க்கக்கூடும். நிறுவனத்தின் மீது புது மரியாதையை சமூகத்தில் ஏற்படுத்தக்கூடும்.

**சமூகக்கணக்கு என்றால்...**

சமூகக்கணக்கு (Social Acconting) என்பது அண்மைக்காலமாகப் பேசப்படுவது. இதற்கு சமூகத் தணிக்கை, சமூகப் பொருளாதாரக் கணக்கு, சமூகத் தகவல் முறை, சமூகப் பொறுப்பு கணக்கு என்கிற வேறு பெயர்களும் உண்டு. தொழில் நிறுவனங்களின் வணிக மதிப்பீடு என்பது அதன் சமூக மதிப்பீட்டையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதே இதன் உட்கருத்து.

"ஒரு நிறுவனமும் அதன் நடவடிக்கைகளும் சமுதாயத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை அளந்து வெளிப்படுத்துவதே சமூகக் கணக்கு" என்று ரால்ஃப் ஏட்ஸ் (Ralph Eates) தந்துள்ள வரையறை பொதுவாக ஏற்கத்தக்கதே.

## 15.3. சமூகச் செலவு மற்றும் பயன்பாடு கண்ணோட்டம்

ஒரு தொழில் நிறுவனம் செய்யும் சமூகச் செலவுகளையும் அவற்றால் ஏற்படும் பயன்பாடுகளையும் பணமாக அளவிடுவது மிகச் சிரமமான காரியம். எனினும் சமூகச் செலவு மற்றும் பயன்பாடு கண்ணோட்டம் (Social Cost and Benefit Approach) என்பதைப் பிரயோகித்துப் பார்க்கலாம். குறைந்த சமூகச் செலவுகள் செய்து நிறைந்த பயன்பாட்டைத் தரும் நிறுவனம் சிறந்தது எனலாம். சமூகச் செலவுகள் என்பதில் பணம் சார்ந்த மற்றும் பணம் சாராத செலவுகள் அனைத்தும் சேர்க்கப்படும். அவ்வாறே சமூகப் பயன்பாடு எனும் போது பொருளாதார மற்றும்

பொருளாதாரம் சாராத பயன்கள் அனைத்தும் சேர்க்கப்படும். சமூகச் செலவு மற்றும் பயன்பாட்டை கணக்கு வடிவத்தில் தரலாம். உதாரணமாக—

பணியாளர்கள் கணக்கு

| | |
|---|---|
| 1. வாழ்வதற்கு தேவையான கூலிக்கும் குறைவான கூலி<br>2. முறையான நடவடிக்கைகளால் ஏற்படும் மன அழுத்தங்கள்<br>3. அநீதிப் போக்குகள்<br>4. இருப்பு (வ)—சமூகக் கணக்கு மாற்றப்பட்டது. | 1. வாழ்வதற்கு தேவையான கூலிக்கும் அதிகமான கூலி<br>2. திறமை வளர்ச்சி<br>3. வேலையில் திருப்தி மற்றும் மகிழ்ச்சி<br>4. இருப்பு (ப) — சமூகக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. |

ப. சமூகக்கணக்கு வ.

| | |
|---|---|
| 1. பணியாளர்கள் கணக்கிலிருந்து மாற்றப்பட்ட இருப்பு (ப.) | 1. பணியாளர்கள் கணக்கிலிருந்து மாற்றப்பட்ட இருப்பு (வ.) |
| 2. அனுமதிக்கப்பட்ட அளவை காட்டிலும் நீரில் கூடுதலான மாசு | 2. மாசு கட்டுப்பாட்டிற்கு உரிய ஏற்பாடு |
| 3. பாதுகாப்பாற்ற அல்லது கெடுதலான பொருட்களால் ஏற்பட்ட தீமை | 3. பாதுகாப்பான புதிய பொருட்கள் உற்பத்தி |
| 4. தொடர் வண்டி வசதி, சாலை வசதி போன்றவற்றிற்கு நிறுவனம் தரும் கூடுதல் மான்யம் | 4. தேசிய வருமானத்திற்கு நிகரமாக நிறுவனம் வழங்கியது. |
| 5. கல்வி, சுகாதாரம் போன்ற சமுதாயம் இலவசமாக வழங்கிய வசதிகள் | 5. துப்புரவு போன்ற பணிகளுக்கு நிறுவனம் கூடுதலாகத் தந்த தொகை |
| 6. இருப்பு (வ)—சமூகத்திற்கு நிறுவனத்தின் பங்களிப்பு | 6. இருப்பு (ப)—நிறுவனத்திற்கு சமூகத்தின் பங்களிப்பு |

### அறிக்கை வடிவில்

மேலே குறிப்பிடப்பட்ட இனங்களுக்கு பண மதிப்பைக் கண்டறிவது கடினம். எனவே இதற்குப் பதிலாக அறிக்கை வடிவில் இவற்றைத் தரலாம். கம்பெனியின் இயக்குனர்கள் தங்களின் ஆண்டு அறிக்கையில் கீழ்வரும் விஷயங்களைச் சேர்த்துச் சொல்லலாம்—

1) மாசுக் கட்டுபாடு
2) வேலைவாய்ப்பு அதிகரிப்பு
3) புதுப் பொருள்கள் உருவாக்கும்
4) அந்நியச் செலாவணி சேமிப்பு
5) நுகர்வோருக்கு கூடுதல் திருப்தி
6) மின் சக்திப் பயன்பாடு குறைப்பு போன்றவை.

சமூகச் செலவு மற்றும் பயன்பாடு விபரத்தை ஒரு கம்பெனி தர வேண்டும் என்பது இந்தியாவில் சட்டப்பூர்வக் கட்டாயம் இல்லை. எனினும், சில நிறுவனங்கள் ஆண்டு கணக்குகளோடு கூடுதல் விபரங்களாக இதைத் தருகின்றன.

**எடுத்துக்காட்டு:1**

சிமிண்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா எனும் நிறுவனத்தின் 1983—84 ஆண்டு அறிக்கையிலிருந்து கீழ்வரும் விபரங்கள் தரப்படுகின்றன. சமூகக் கணக்கு என்பது பற்றிய ஒரு தெளிவை இதன் மூலம் பெறலாம்—

குறிப்பு

## ச[illegible]க் கணக்குகள்
## சமூக வருமான அறிக்கை

| | (ரூபாய் லட்சத்தில்) | |
|---|---|---|
| | 1983—84 | 1982—83 |
| I. பணியாளர்களுக்கான சமூகப் பயன்பாடுகள் மற்றும் செலவுகள் | | |
| அ) சமூகப் பயன்பாடுகள் | | |
| 1) மருத்துவ வசதிகள் | 79 | 59 |
| 2) கல்வி வசதிகள் | 10 | 7 |
| 3) உணவக வசதிகள் | 14 | 12 |
| 4) பொழுதுபோக்கு வசதிகள் | 9 | 7 |
| 5) வீட்டு வசதிகள் | 194 | 189 |
| 6) குடிநீர், மின்சக்தி, போக்குவரத்து | 54 | 44 |
| 7) பயிற்சி மற்றும் பதவி உயர்வு | 17 | 13 |
| 8) வருங்காலக் காப்பு நிதி, கிராஜீட்டி, போனஸ் மற்றும் ஈட்டுறுதி | 181 | 159 |
| 9) விடுமுறை, விடுப்பை பணமாக்குவது மற்றும் விடுப்புடன் கூடிய பயணம் | 284 | 198 |
| 10) இதர வசதிகள் | 11 | 10 |
| மொத்தம் | 853 | 698 |
| ஆ) சமூகச் செலவுகள் | | |
| 1) வேலையாள் குறைப்பு மற்றும் கட்டாய வெளியேற்றம் | — | — |
| 2) தாங்களாகவே கூடுதல் நேரம் வேலை பார்த்த அதிகாரிகள் | 29 | 21 |
| மொத்தம் | 29 | 21 |
| பணியாளருக்கு நிகர சமூக வருமானம் (அ—ஆ) | 824 | 677 |
| II. சமூகப் பயன்பாடுகள் மற்றும் செலவுகள் | | |
| அ) சமூகப் பயன்பாடுகள் | | |
| 1) பஞ்சாயத்து/நகராட்சிக்கு செலுத்தப்பட்ட வரிகள் | 1 | 1 |
| 2) சுற்றுச்சூழல் மேம்பாடு | 32 | 26 |
| 3) வேலைவாய்ப்பு உருவாக்கம் | 1,105 | 898 |

| | | |
|---|---|---|
| 4) தொழில் உருவாக்கம் | 173 | 140 |
| மொத்தம் | 1,311 | 1,065 |
| ஆ) சமூகச் செலவுகள் | | |
| 1) சிமிண்ட் ஆலைகளின் காரணமாக அந்த பகுதியில் கூடிய வாழ்க்கைச் செலவு | 316 | 263 |
| சமுதாயத்தின் நிகர வருமானம் (அ—ஆ) | 995 | 802 |
| III. பொதுமக்களுக்கான சமூகப் பயன்பாடுகள் மற்றும் செலவுகள் | | |
| அ) சமூகப் பயன்பாடுகள் | | |
| 1) மாநில அரசுக்குத் தரப்பட்ட வரிகள் | 2,372 | 1,872 |
| 2) மத்திய அரசுக்குத் தரப்பட்ட வரிகள் | 7,094 | 53,741 |
| மொத்தம் | 9,466 | 7,268 |
| ஆ) சமூகச் செலவுகள் | | |
| 1) மாநில அரசு வழங்கிய மின்வசதி | 1,542 | 1,301 |
| 2) மத்திய அரசு வழங்கிய தொலைபேசி, தபால் மற்றும் வங்கி வசதிகள் | 32 | 27 |
| மொத்தம் | 1,574 | 1,328 |
| பொதுமக்களுக்கான நிகர சமூகப் பயன்பாடு (அ—ஆ) | 7,892 | 5,940 |
| பணியாளர் சமுதாயம் பொதுமக்கள் ஆகியோருக்கான நிகர சமூக வருமானம் (I + II + III) | 9,711 | 7,419 |

குறிப்பு

**உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்கள்**

**I. சரியா / தவறா?**

அ). ஒரு தொழில் நிறுவனத்தின் மதிப்பு, அதன் இலாபம் ஈட்டும் திறமையை வைத்து மட்டும், வெளிப்படும்.

ஆ). ஒரு தொழிற்சாலை செலுத்தும் மாநில வரிகள், மற்றும் மத்திய அரசு வரிகள் பணியாளர்களுக்கான சமூக பயன்பாடுகள் என்ற தலைப்பில் எடுத்துக் கொள்ளப்படும்.

இ). ஒரு தொழில் நிறுவனம், ஏற்படுத்திக் கொடுத்த வேலை வாய்ப்பு உருவாக்கம், சமூக பயன்பாடாகக் கருதப்படும்.

ஈ). நிகர சமூக வருமானம் என்பது, பணியாளர், சமுதாயம் மற்றும் பொது மக்களுக்கான பயன்பாட்டின் கூட்டுத் தொகையாகும்.

## சமூக இருப்புநிலைக்குறிப்பு

| | ரூபாய் லட்சத்தில் | | | ரூபாய் லட்சத்தில் | |
|---|---|---|---|---|---|
| பொறுப்புகள் | 31.3.84 | 31.3.83 | சொத்துக்கள் | 31.3.84 | 31.3.84 |
| I. அமைப்பின் பங்குமுதல் | 1,234 | 1,123 | I. சமூக முதலீடு | | |
| II. சமூகத்தின் பங்குமதல் பணியாளர்களின் பங்களிப்பு | 8,042 | 6,654 | 1. நகரிய நிலம் | 37 | 37 |
| | | | 2. கட்டடம் | 898 | 722 |
| | | | i) வீடுகள் | 18 | 13 |
| | | | ii) உணவகம் | | |

குறிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 3. நகரிய குழாநீர் மற்றம் சாக்கடை வசதி | 148 | 140 |
| | | | 4. நகரியம் — பாதைகள் | 47 | 39 |
| | | | 5. நகரியம் — மின்வசதி | 38 | 35 |
| | | | II. இதர சமூகச் சொத்துக்கள் | | |
| | | | 1. மருத்துவமனை கருவிகள் | 2 | 2 |
| | | | 2. மருத்துவமனை பேருந்துகள் | 13 | 8 |
| | | | 3. பள்ளிக்கூட கருவிகள் | 3 | 3 |
| | | | 4. கிளப் உபகரணங்கள் | 2 | 1 |
| | | | 5. விளையாட்டு மைதானம் / பூங்கா | 2 | 1 |
| | | | 6. பள்ளி பேருந்துகள் | 22 | 50 |
| | | | 7. இதர வகை | 5 | 1 |
| | | | III. மனிதச் சொத்துக்கள் | 8,041 | 6,755 |
| | 9,276 | 7,777 | | 9,276 | 7,777 |

## 15.4. தொகுத்தறிவோம்

சமுதாயக் கணக்கு என்பது ஒரு தொழில் நிறுவனம் தான் சார்ந்துள்ள சமுதாயத்தில் உள்ள பணியாளர், சமூகம், மற்றும் மக்களுக்கு ஆற்றிய சேவையை பதிந்து, நிகரமாக அதன் மதிப்பை கண்டுபிடிப்பதாகும். ஒரு தொழில்நிறுவனம் விலை மதிப்பில்லாத, திரும்ப உருவாக்க முடியாத கனிவளங்களை விரயம் செய்யாமலும், நுகர்வோருடைய தேவைக்கேற்பவும், நலன் காக்கவும், தொழிலாளர்கள் நலன் காக்கவும்,

உதவி செய்திட வேண்டும். ஒரு தொழில் நிறுவனத்தின் மதிப்பு, அது ஆற்றிய தொழிலாளர், சமுதாய, மக்கள் பயன்பாட்டிற்காக சேவைகளின் கூட்டுத் தொகையாகும்.

## 15.5. உங்கள் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பயிற்சி வினாக்களின் விடைகள்

**I. சரியா / தவறா?**

அ). தவறு, ஆ). தவறு, இ). சரி, ஈ). சரி

## 15.6. மாதிரி வினாக்கள்

1). ஒரு தொழில்நிறுவனம் தன்னுடைய சமூகப் பொறுப்புகள் எந்தெந்த வகையில் வெளிப்படுத்தலாம் என்பதை விவரிக்கவும்.

2). சமூக செலவு மற்றும் பயன்பாட்டு கணக்கின் மாதிரி படிவத்தை, ஒரு உதாரணத்துடன் விளக்கவும்.

குறிப்பு

# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

## எம்.காம் இரண்டாம் ஆண்டு

### உயர் கணக்கியல்

### மே 2006 வினாத்தாள்

நேரம் : மூன்று மணி அதிகபட்சம் 100 மதிப்பெண்

ஒரு பிரிவிலிருந்து மூன்றுக்கு மேல் தேர்ந்தெடுக்காமல் எந்த ஐந்து வினாக்களுக்காகிலும் பதில் தரவும்.

அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்

### பிரிவு A

1. நொடிப்பு நிலை எய்திய ஒரு தனிமனிதனின் விபர அறிக்கை மற்றும் பற்றாக்குறை கணக்கிற்கான மாதிரிப் படிவத்தை தரவும்.
2. பதிவுக்கு முந்திய இலாபங்கள் எவை? இவற்றை கணக்கிடும் முறையை விளக்கவும்.
3. இரட்டைக் கணக்கு முறையின் தன்மைகளைக் கூறுக. கீழ்வருபவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் எவை—

   அ) இரட்டைக்கணக்கு மற்றும் இரட்டைப் பதிவு முறை

   ஆ) இரட்டைக் கணக்கு மற்றும் ஒற்றைக் கணக்கு முறை
4. பங்கு என்றால் என்ன? கடன் பத்திரம் என்றால் என்ன? அவற்றின் வகைகள் யாவை? ஒன்றிலிருந்து மற்றொன்று எப்படி வேறுபடுகிறது?
5. குறிப்புகள் தருக.

   அ) கழிவு பெறப்பட்ட உண்டியல்கள் மீது ரிபேட்

   ஆ) குறை உற்பத்தி

   இ) மனித வளக்கணக்கு

   ஈ) நன்மதிப்பைக் கணக்கிடும் முறைகள்

## பிரிவு B

6. ஒரு லிமிடெட் கம்பெனியின் 31.12.2002 வரையிலான இருப்புகளின் குறிப்பு கீழ்வரும் விபரத்தை தந்தது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| முழுவதும் செலுத்தப்பட்ட ஒன்று ரூ.10லான மூலதனம் | 4,00,000 | நிலைத்த சொத்துக்கள்<br>நடைமுறைச் சொத்துக்கள் | 5,00,000<br>2,00,000 |
| காப்புகள் | 90,000 | நன்மதிப்பு | 4,000 |
| இலாப நட்டக்க/கு | 20,000 | | |
| 5% கடன் பத்திரங்கள் | 1,00,000 | | |
| நடைமுறை பொறுப்புகள் | 1,30,000 | | |
| | 7,40,000 | | 7,40,000 |

31.12.2002ல் நிலைத்த சொத்துக்களை சுயேச்சையாக மதிப்பிட்டதில் அவற்றின் மதிப்பு ரூ.3,50,000 மற்றும் நன்மதிப்பு ரூ.50,000.

மூன்று ஆண்டுகளுக்கான நிகர இலாபங்கள்: 2000 — ரூ.51,600, 2001 — ரூ.52,000, 2002 — ரூ.51,650. இதில் 20% காப்பாக வைக்கப்பட்டது. இந்தக் கம்பெனின இயங்கும் தொழில் துறையை நோக்கும் போது இது நியாயமாக இருந்தது. மேலும் அங்கே மூலதனத்தின் மீதான ஆதாயம் 10% ஆக எடுத்துக் கொள்ளப்பட்டது. கம்பெனியில் பங்குகளின் மதிப்பு அ) சொத்து முறை மற்றும் ஆ) ஆதாய (Yield) முறை ஆகியவற்றில் கணக்கிடவும்.

7. 31.3.2001ல் H லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் ஒன்று ரூ.100 முழுவதும் செலுத்தப்பட்ட 12% சேர்ந்து கொண்டு போகும் 5000 முன்னுரிமை பங்குகள் | 5,00,000 | நன்மதிப்பு<br>இயந்திரம்<br>மனைத்துணைப் பொருட்கள்<br>கண்டுபிடிப்பு உரிமை | 40,000<br>7,00,000<br>2,00,000<br>1,50,000 |
| ஒன்று ரூ.10 முழுவதும் செலுத்தப்பட்ட 1,50,000 சாதாரணப் பங்குகள் | 15,00,000 | சரக்கிருப்பு<br>கடனாளிகள்<br>வங்கி | 4,90,000<br>2,55,000<br>5,000 |
| 10% கடன் பத்திரங்கள் | 3,00,000 | தொடக்கச் செலவுகள் | 8,000 |
| கடனீந்தோர் முன்னுரிமை இலாப ஈவு | 2,00,000 | கடன் பத்திர வெளியீட்டுத் தள்ளுபடி | 12,000 |
| மூன்றாண்டு பாக்கி | | இலாப நட்ட க/கு | 2,80,000 |
| | 25,00,000 | | 25,00,000 |

கீழ்வரும் வெளி மறு அமைப்பு திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அ) ஒன்று ரூ.10 மதிப்புள்ள சாதாரணப் பங்குகளைக் கொண்ட ரூ.32,50,000 அனுமதித்த மூலதனத்தைக் கொண்ட J லிமிடெட் எனும் கம்பெனி உருவாக்கப்படும்.

ஆ) பழைய கம்பெனியில் உள்ள ஒவ்வொரு சாதாரணப் பங்கிற்கும் புதிய கம்பெனியின் ரூ.5 செலுத்தப்பட்ட ஒரு சாதாரணப் பங்கு ஒதுக்கப்படும்.

இ) பழைய கம்பெனியில் உள்ள ஒவ்வொரு முன்னுரிமை பங்கிற்கும் புதிய கம்பெனியின் ரூ.5 செலுத்தப்பட்ட இரண்டு சாதாரணப் பங்குகள் ஒதுக்கப்படும்.

ஈ) முன்னுரிமை இலாப ஈவு பாக்கி நீக்கப்படும்.

உ) கடன் பத்திரதாரர்களுக்கு புதிய கம்பெனியின் 30,000 சாதாரணப் பங்குகள் தரப்படும்.

ஊ) கடனீந்தோர்கள் புதிய கம்பெனியால் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

எ) இன்னும் பாக்கியுள்ள பங்குகள் இயக்குநர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டு முழுப்பணம் தருவார்கள்.

ஏ) கண்டுபிடிப்பு உரிமையைத் தவிர இதர சொத்துக்களைப் புதுக்கம்பெனி ஏற்றக் கொள்ளும். ஆனால் இயந்திரம் ரூ.2,90,000க்கும், சரக்கிருப்பு ரூ.60,000க்கும் மதிப்பு குறைக்கப்படும். கண்டுபிடிப்பு உரிமையை H லிமிடெட் விற்றதில் கிடைத்தது ரூ.10,000.

H லிமிடெட்டின் ஏடுகளில் முக்கியமான பேரேட்டுக் கணக்குகளைத் தரவும். குறிப்பேட்டுப் பதிவுகள் மூலம் J லிமிடெட்டின் ஏடுகளைத் துவக்கி அதன் ஆரம்ப இருப்புநிலைக் குறிப்பைத் தரவும். J லிமிடெட்டின் செலவுகள் ரூ.10,000.

8. மாடர்ன் மேனுபேக்ஷரிங் கம்பெனி லிமிடெட்டின் 2000 ஜீன் 30 தேதியிலான இருப்புச் சோதனை வருமாறு—

| | ரூ. |
|---|---|
| 30—6—1999ல் சரக்கிருப்பு | 7,500 |
| விற்பனை | 35,000 |
| கொள்முதல் | 24,500 |
| உற்பத்திக்கூலி | 5,000 |
| தள்ளுபடி(ப) | 700 |
| தள்ளபடி(வ) | 500 |
| சம்பளம் | 750 |

| | |
|---|---|
| வாடகை | 495 |
| பொதுச்செலவுகள் | 1,705 |
| இலாப நட்ட கணக்கு 30—6—1999(வ) | 1,503 |
| இலாப ஈவு தரப்பட்டது ஆகஸ்டு 1999 | 500 |
| இடைக்கால இலாப ஈவு தரப்பட்டது பிப்ரவரி 2000 | 400 |
| ஒன்று ரூ.1 முழுவதும் செலுத்தப்பட்ட 10,000 முதல் | 10,000 |
| கடனாளிகள் | 3,750 |
| கடனீந்தோர் | 1,750 |
| இயந்திரம் | 2,500 |
| கையில் மற்றும் வங்கியில் ரொக்கம் | 1,620 |
| காப்பு | 1,550 |
| நிர்வாக இயக்குனருக்கு டன் | 325 |
| வராக்கடன் | 158 |
| இதர நடைமுறை : சொத்துக்கள் | 400 |
| 30—6—2000த்தில் சரக்கிருப்பு | 8,200 |

30—6—2000த்தில் முடியும் ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அதே தேதியிலான இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க. கீழ்வருவதை கவனத்தில் கொள்க—

அ) இயந்திரத்தை ஆண்டுக்கு 10% தேய்மானம் செய்க.

ஆ) கடனாளிகள் மீது 5% தள்ளுபடிக் காப்பு

இ) கடனீந்தோர் மீது 2½ % தள்ளுபடிக் காப்பு

ஈ) நிர்வாக இயக்குனருக்கான கமிஷனைக் கழிப்பதற்கு முன்பான நிகர இலாபத்தில் 15% கமிஷன் தருக அவருக்கு.

உ) ஜீன் 30ல் ஒரு மாத வாடகையாகிய ரூ.45 பாக்கியிருந்தது.

ஊ) பொதுச்செலவில் சேர்க்கப்பட்டிருந்து ஈட்டுறுதி ஆண்டுக்கு ரூ.75 எனும் அடிப்படையில் ஆறு மாதத்திற்கு முன்கூட்டியே செலுத்தப்பட்டிருந்து.

9. மொத்தம் ரூ.5,60,000த்துக்கு 1—1—2000த்தில் S லிமிடெட்டில் இருந்த இருவகைப் பங்குகளிலும் 80 சதவீதத்தை H லிமிடெட் வாங்கியது. 31—12—2000த்தில் இரு கம்பெனிகளின் இருப்புநிலைக்குறிப்புகள் — தணிக்கை செய்யப்பட்டது—வருமாறு:

H லிமிடெட்டின் இருப்புநிலைக்குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் ஒன்று ரூ.50 என்று முழுவதும் செலுத்தப்பட்ட 15,000 பங்குகள் | 7,50,000 | நிலம் மற்றும் கட்டடம்<br>இயந்திரம்<br>கடனாளிகள் | 5,15,000<br>1,50,000<br>1,40,000 |
| கடனீந்தோர் (அ) | 75,000 | சரக்கிருப்பு (ஆ) | 1,70,000 |
| பொதுக்காப்பு | 4,75,000 | S லிமிடெட்டில் முதலீடு | 5,60,000 |
| இலாப நட்டக் க/கு (இ) | 4,00,000 | வங்கியில் ரொக்கம் | 1,65,000 |
| | 17,00,000 | | 17,00,000 |

அ) S லிமிடெட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட ரூ.30,000 அடங்கியுள்ளது. அதில் அந்தக் கம்பெனி ரூ.7,500 இலாபம் பார்த்திருந்தது.

ஆ) S லிமிடெட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட ரூ.15,000 இதில் உள்ளது. இது அங்கிருந்து கொள்முதல் செய்யப்பட்ட ரூ.30,000த்தில் (பார்க்க குறிப்பு அ) ஒரு பகுதியாகும்.

இ) S லிமிடெட்டிலிருந்து ஆண்டுக்கு 10% வீதமான இலாப ஈவும் சேர்ந்துள்ளது. இலாப ஈவு 1999ம் ஆண்டுக்கானது.

S லிமிடெட் இருப்புநிலைக்குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் ஒன்று ரூ.100 என்று முழுவதும் செலுத்தப்பட்ட 6% முன்னுரிமைப் பங்குகள் 1000 | 1,00,000 | நிலம் மற்றும் கட்டடம்<br>இயந்திரம்<br>சரக்கிருப்பு<br>கடனாளிகள் | 1,50,000<br>1;35,500<br>1,01,000<br>79,000 |

| | | | |
|---|---|---|---|
| ஒன்று ரூ.5 வீதமான 30,000 சாதாரணப் பங்குகள் | 1,50,000 | வங்கியில் ரொக்கம் | 55,000 |
| 1.1.2000த்தில் பொதுக்காப்பு | 10,000 | | |
| இலாப நட்டக் க/கு (ஈ) | 1,80,000 | | |
| கடனீந்தோர் | 80,500 | | |
| | 5,20,500 | | 5,20,500 |

ஈ) 1.1.2000த்தில் இலாபநட்டக் கணக்கு இருப்பு ரூ.80,000 அதிலிருந்து 16% இலாப ஈவு சாதாரணப் பங்குகளுக்கு வழங்கப்பட்டது. முன்னுரிமைப் பங்குகளைப் பொறுத்தவரை 2000 ஆண்டுக்கு இன்னும் இலாப ஈவு வழங்கப்பட வேண்டியுள்ளது.

31.12.2000 தேதியிலான H லிமிடெட் மற்றும் S லிமிடெட்டின் ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலைக்குறிப்பைத் தயாரிக்கவும்.

10. சேமிப்பு இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கீழ்வரும் இருப்புகளிலிருந்து 31.3.2001லான

அ) தீ வருவாய் கணக்கு

ஆ) கடல் வருவாய் கணக்கு மற்றும்

இ) இலாப நட்டக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்கவும்.

| | ரூ. |
|---|---|
| வராக்கடன் (தீ) | 10,000 |
| வராக்கடன் (கடல்) | 24,000 |
| தணிக்கையாளர் கட்டணம் | 6,000 |
| இயக்குநர் கட்டணம் | 6,400 |
| பங்கு மாற்று கட்டணம் | 160 |
| வராக்கடன் மீட்கப்பட்டது | 2,400 |
| காப்பு (1.4.2000த்தில் தீ) | 5,00,000 |

| | |
|---|---|
| காப்பு (1.4.2000த்தில் கடல்) | 16,40,000 |
| கோரிக்கைகள் (Claims) செலுத்தப்பட்டதும், செலுத்த வேண்டியதும் (தீ) | 3,80,000 |
| கோரிக்கைகள் செலுத்தப்பட்டதும் செலுத்த வேண்டியதும் (கடல்) | 7,60,000 |
| கமிஷன் தரப்பட்டது (தீ) | 1,80,000 |
| கமிஷன் தரப்பட்டது (கடல்) | 2,16,000 |
| கூடுதல் காப்பு (1.4.2000த்தில் தீ) | 1,00,000 |
| தேய்மானம் | 70,000 |
| வட்டி பெறப்பட்டது | 28,000 |
| மாற்றியதில் (In Exchange) வித்தியாசம் (வ) | 600 |
| பற்பல பெறுதல்கள் | 10,000 |
| நிலம் விற்றதில் இலாபம் | 1,20,000 |
| மறு ஈட்டுறுதிகள் (Re-insurances) போக மீதி தீ பிரிமியம் | 12,00,000 |
| மறு ஈட்டுறுதிகள் போக மீத கடல் பிரிமியம் | 21,60,000 |
| நிர்வாகச் செலவு (தீ) | 2,90,000 |
| செலவுகள் (கடல்) | 8,00,000 |
| மறுஈட்டுறுதி நீக்கப்பட்டதில் (Ceded) சம்பாதிக்கப்பட்ட கமிஷன் (தீ) | 60,000 |
| மறு ஈட்டுறுதி நீக்கப்பட்டத்தில் சம்பாதிக்கப்பட்ட கமிஷன் (கடல்) | 1,20,000 |

வழக்கமான காப்புகளோடு, தீ ஈட்டுறுதிக்கான கூடுதல் காப்பு நிகர பிரிமியத்தில் 5% அதிகரிக்கப்பட வேண்டும்.


87593,00
1348,00
21231,00
23553,00
64322,00
87593,00